ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

2049

திருமங்கையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய

பெரிய திருமொழி.

௬, ௫, ௯, ௭ பத்துக்கள்.

இந்த க்ரந்தம்

பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்த

வ்யாக்யாநத்துடனும்,

அப்பு அரும்பதத்துடனும்,

உரையுடனும்,

தர்க்க தீர்த்தரான ஸ்ரீமான்

சிங்கப்பெருமாள்கோவில்-மாடபூசி-ராமாநுஜாசார்யராலும்,

ஸ்ரீமான் புதுப்பட்டு-திருவேங்கடாசார்யராலும்,

நாநாதேசாந்த்ர அநேக கோசங்களின் ஸஹாயத்தினால்

பரிசோதிப்பிக்கப்பட்டு,

ஸ்ரீவைஷ்ணவ க்ரந்த முத்ராபக ஸபையாரால்,

பராங்குச திருவவதாராதி ௪௦௧௦-வது ஸம்வத்ஸரமான

ஸௌம்யஸம்வத்ஸரத்தில்

காஞ்சீபுரம்.

ஸ்ரீஇந்த்ராசார்ய அச்சுக்கூடத்தில்,

அச்சிட்டு ப்ரசுரம் செய்யப்பட்டது.

1909.

விஜயதேதராம்.

http://acharya.org

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

பெரியதிருமொழி - நாலாம்பத்து - க - ம் திருமொழி

முதற்பாட்டு போதலர்ந்த வ்யாக்யாநம்.

ப்ரவேசம்.—†தனக்கஸாதாரணரான ஸ்ரீவைஷ்ணவர்களுடையப்ரதிபந்தகத்தைப் போக்கி அவர்கள்பக்கலிலே ப்ரஸாதத்தைப் பண்ணுகைக்காக அரிமேயவிண்ணகரிலே ஸந்நிஹிதனானொன்றார்; அவ்வளவன்றிக்கே, ப்ரயோஜநாந்தரபரரான ப்ரஹ்மாதிகளுக்கும் திருப்பாற்கடலிற்போலே அபிமதங்களைக்கொடுக்கைக்காக ஸர்வேஶ்வரன்வந்து வர்த்திக்கிறதேசம் †திருத்தேவனார்தொகை யென்கிறார். ... *

அரு.—போதலர்ந்தப்ரவேசம்.—கீழ்த்திருமொழியில் - முதற்பாட்டில் "அருவினைகள் போயகல வடியவர்கட்கென்றுமருள்நடந்து" என்றத்தையும், இத்திருமொழியில் - "இந்திரனு மிமையவரும்" என்கிற பாட்டையும்கடாக்ஷித்து ஸங்கதியருளிச்செய்கிறார் (தனக்கித்யாதி). (திருத்தேவனார்தொகை) என்றவநந்தரம், நெஞ்சே! அங்கேசென்றநுபவி என்று கூட்டுவது. ... ...

மூ.—போதலர்ந்தபொழில்சோலைப்புறமெங்கும்பொருதிரைகள்
தாதுதிர வந்தலைக்கும் தடமண்ணித் தென்கரைமேல்
மாதவன்றானுறையுமிடம் வயல் நாங்கை வரி வண்டு
தேதெனவென்றிசைபாடும் திருத்தேவனார்தொகையே. (க)

பதம்.	உரை.
போது	பூக்கள்
அலர்ந்த	விகஸியாநின்ற
பொழில்சோலை	நெருங்கின தோட்டங்களினால்நிறைந்த
புறம்எங்கும்	ப்ரதேசங்கள் முழுதும்
தாது	பூக்களின்தாதுகள்
உதிர	உதிரும்படியாக
பொரு	ஒன்றோடொன்று பொராநின்ற
திரைகள்வந்து	அலைகளானவைவந்து
அலைக்கும்	எறியாநின்ற

பதம்.	உரை.
தடம்	பரந்த
மண்ணி	மண்ணியென்னும் ஆற்றினுடைய
தென்கரைமேல்	தெற்குக்கரையின்மேல்
மாதவன்தான்	ஸ்ரிய:பதியான ஸர்வேஶ்வரன்
உறையும்	நித்யவாஸம் பண்ணு[கிற
இடம்	ஸ்தாநமானது;
வயல்	கழனிகள்சூழ்ந்த
நாங்கை	திருநாங்கூரில்
வரி	ரேகைகளையுடைய

http://acharya.org

வண்டு	வண்டுகள் [று	பாடும்	பாடாநின்ற
தேதென	தென்னதென்ன என்	திருத்தேவனா	திருத்தேவனார் தொ
இன்இசை	இனிமையான பாட்டை	ர்தொகை	கையென்னும் திவ்யதேசமாம். (௧)

வ்யா.— முதற்பாட்டு. (போதலர்ந்த) காலத்திலே யலர்ந்தவென்னுதல்; பூக்களலர்ந்தவென்னுதல். (பொழில்சோலைப்புறமெங்கும்)†செறிந்தபொழிலை யுடைத்தான பர்யந்தங்களெங்கும், தன்னில் தான்பொராநின்றுள்ள திரைகளானவை, அப்பொழிலில் தாது உதிரும்படியாகவந்து அலையெறிகிற தடமண்ணித்தென்கரைமேல்.(மாதவன்றானுறையுமிடம்) ரஸிகனானவன் நித்யவாஸம் பண்ணுகிறதேசம்; பிராட்டியும்தானுமாகத் திருச்சித்திரகூடத்திலே †வர்த்தித்தாற்போலே. வயலையுடைத்தான திருநாங்கூரில், வரியையுடைத்தான வண்டானது மதுபாநத்தைப்பண்ணி, முக்தர் ஸாமகாநம்பண்ணுமாபோலே தேதென என்று இசைபாடாநின்றுள்ள திருத்தேவனார்தொகை. (தேதென) "தென்ன, தென்ன" என்று இங்ஙனேசொல்லக்கடவது. ஆளத்திவைக்கையைச் சொன்னபடி. ... ... (௧)

அரு.—முதற்பாட்டு. (போதித்யாதி). "பொழில்" என்றும் "சோலை" என்றும் பர்யாயமாகையாலே, பொழில் பொழிலாயிருக்கிறப்ரதேசமெல்லாமென்று விவக்ஷித்து, பலிதார்த்தமருளிச்செய்கிறார் (செறிந்தவித்யாதி). (வர்த்தித்தாற்போலே - ரஸிகனானவன்) என்று கீழோடே அந்வயம். (௧)

மூ.—யாவருமா யாவையுமா யெழில் வேதப் பொருள்களுமாய்
மூவருமாய் முதலாய மூர்த்தி யமர்ந்துறையுமிடம்
மாவரும் திண் படை மன்னைவென்றிகொள்வார்மன்னுநாங்கைத்
தேவரும்சென்றிறைஞ்சு பொழில் திருத்தேவனார்தொகையே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
யாவருமாய்	சேதநரெல்லாரையும் தனக்கு ப்ரகாரமாகவுடையனாய்	பொருள்களுமாய்	வஸ்துக்களை ப்ரகாரமாகவுடையனாய்
யாவையுமாய்	அசேதநங்களெல்லாவற்றையும் ப்ரகாரமாகவுடையனாய்	மூவருமாய்	ஸ்ருஷ்டிஸம்ஹார கர்த்தாக்களானப்ரஹ்மருத்ரர்களுக்கு அந்தர்யாமியாகவும் அவர்கள்நடுவில் ஸ்திதி கர்த்தாவான விஷ்ணுவவதாரமுமானவனாய்
எழில்	அழகுபொருந்திய		
வேதம்	வேதங்களில் ப்ரதிபாதிக்கப்பட்ட		

முதலாய	அந்த ப்ரஹ்மருத்ரர்களுக்குக் காரணபூதனாய்	வென்றிகொள்வார்	ஜயிக்கவல்லரான ப்ராஹ்மணர்
		மன்னு	பொருந்தி வர்த்திக்கிற
மூர்த்தி	ப்ரதாநனான ஸர்வேஶ்வரன்	நாங்கை	திருநாங்கூரில்
		தேவரும்	இந்த்ராதி தேவர்களும்
அமர்ந்து	பொருந்தி	சென்று	கிட்டி
உறையும்	நித்யவாஸம்செய்கிற	இறைஞ்சும்	ஆஶ்ரயிக்கும்படியிருப்பதாய்
இடம்	ஸ்தாநமானது,		
மா	குதிரைமேலேறி	பொழில்	சோலைகளையுடையதுமான
வரும்	வருகிற		
திண்	த்ருடமான	திருத்தேவனார்தொகை	திருத்தேவனார் தொகையென்னும் திவ்யதேசம். (௨)
படை	ஆயுதங்களையுடைய		
மன்னை	ராஜகுலத்தை		

வ்யா.—இரண்டாம்பாட்டு. (யாவருமாயாவையுமாய்) †ப்ரத்யக்ஷ யோக்யமாயிருக்கிற †சேதநாசேதநங்களடங்கத் தான் என்கிற சொல்லுக்குள்ளே யடங்கும்படி இவற்றை ப்ரகாரமாகக்கொண்டு தான் ப்ரகாரியாயிருப்பானுமாய். (எழில்வேதப் பொருள்களுமாய்) †தேஹாதிரிக்தமான ஆத்மவஸ்து, காரணவஸ்த்தமான சிதசித்துக்கள், கல்யாணகுணங்கள், †பகவத்ஸ்வரூபம், இவற்றைப்ரதிபாதிக்கக்கடவ வேதைகஸமதிகம்யமான அர்த்தங்களும் தானாய். (மூவருமித்யாதி). ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களுக்குக் கடவரான ப்ரஹ்மாதிகளுக்கந்தராத்மாவாய்ப் புக்குநின்று அவ்வவ கார்யங்களை நடத்திக்கொடுத்தும் ஸ்வேநரூபேணநின்று பாலநத்தை நடத்தியும் போருகையாலே மூவருமாய் நிற்கிறான் தானேயென்றுசொல்லலாம்படியாய், †அவர்களுக்கும் காரணபூதனாய் †ப்ரதாநனானவன்வந்து நித்யவாஸம் பண்ணுகிறதேசம்.

(மாவித்யாதி) மாவின்மேலே வரும் - குதிரைமுதுகிலேவருவாராய், திண்ணிய ஆயுதத்தையுடையராயிருக்கிற ராஜலோகத்தை எதிரே புறப்பட்டோடி வெற்றிகொள்ளக்கடவராயிருக்கிற †ப்ராஹ்மணர் வர்த்திக்கிற திருநாங்கூரில். (க) "ஒண்டிறல்தென்னனோட வடவரசோட்டங்கண்ட, திண்டிறலாளர்" என்னக்கடவதிறே அவ்வூரிலுள்ளாரை. உடையபிள்ளை என்கிறவன் "அங்குந்தை ஆலயத்

(க) ச-டு-௬.

தைக்கவிபாட" என்றுவர, அவனையெதிரேசென்றடித்தோட்டி பின்னை பாடப்பெறுதேபோந்தான் என்றொரு ப்ரஸித்தியுண்டிறே.(தேவரித்யாதி) தேவர்களும் தந்தாமுடைய அதிகாரார்த்தமாக வந்தாச்ரயிக்கு நிற்பதாய், பொழிலையுடைத்தான திருத்தேவனார்தொகை. ... (௨)

அந.—இரண்டாம்பாட்டு. (யாவருமித்யாதி). நிழல்வாய்ப்பும் நீர்வாய்ப்புமான தேசமென்று பரமரஸிகன் வர்த்திக்கிறதேசமென்கிறார் கீழ்; அவ்வளவன்றிக்கே, ஸர்வவ்யாபகனானவன் ஆச்ரயணீயனாகைக்காக விருக்கிற விடமென்றநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

"எழில்வேதப் பொருள்களுமாய்" என்றத்தோடு பௌநருக்த்யம் வாராமைக்கு கோபலீவர்த்தந்யாயேந பிரித்தருளிச் செய்கிறார் (ப்ரத்யக்ஷத்யாதி). (சேதநாசேதநங்கள்) என்றது- தேவாதிஶரீராவிஷ்டங்களையும் கடாதிகளையும் சொல்லுகிறது. அதீந்த்ரியார்த்த ப்ரதிபாதகத்வமே எழில் என்று சொல்லாநின்றுகொண்டு, அவற்றுக்கும் ப்ரகாரியென்னுமிடம் சொல்லுகிறதென்கிறார்(தேஹேத்யாதி). (பகவத்ஸ்வரூபம்)என்றது- ஸ்வாஸாதாரணவிக்ரஹமென்கை. (அவர்களுக்கும்) ப்ரஹ்மருத்ரர்களுக்கும். * மூர்த்திரூப்தம் - ஸ்வரூபவாசியாய், அத்தால் பலித்த ப்ராதாந்யத்தை விவக்ஷித்து (ப்ரதாநனானவன்) என்றது; "முதலாயமூர்த்தி" என்று ஸ்வரூபத்தையநுஸந்தித்த ஆழ்வார்க்குக் காரணத்வப்ரயுக்த ப்ராதாந்யம் விவக்ஷிதமென்று திருவுள்ளம்.

"அருமறையோர்" என்று - மேற்பாட்டில் ப்ராஹ்மணர் ப்ரஸ்துதராகையாலே, "வென்றிகொள்வார்" என்றும்- அவர்களைச்சொல்லுகை உசிதமென்றருளிச்செய்கிறார்(ப்ராஹ்மணர்)என்று; (க) "ధిక్బలం క్షత్రియ బలం బ్రహ్మతేజో బలం బలమ్ - திக்பலம் க்ஷத்ரியபலம் ப்ரஹ்மதேஜோபலம் பலம்" என்று மதிக்கும்படியான ப்ராஹ்மணருண்டென்று திருவுள்ளம்.

மூ.—வானாடும் மண்ணாடும் மற்றுள்ள பல்லுயிரும்
தானாய வெம்பெருமான் தலைவனமர்ந்துறையுமிடம்
ஆனாத பெருஞ் செல்வத்தருமறையோர் நாங்கைதன்னுள்
தேனாரும் மலர்ப் பொழில் சூழ் திருத்தேவனார்தொகையே.(௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வான்நாடும்	பரமாகாசத்திலுள்ள பரமபதமும்	மற்றுஉள்ள	அதுக்குமேலே அவ்வலோகங்களிலுள்ள [த்மாக்களும்
மண்நாடும்	பூலோகத்தோடு கூடிய லீலாவிபூதியும்	பல்உயிரும்	பலவகைப்பட்டஜீவா

(க) ரா-பா-நி-சு-உ-௩.

தான்ஆய	(இவையெல்லாம்) தனக்கு ப்ரகாரமாய் இவற்றுக்குத்தான் அந்தராத்மாவா யி	மறையோர்	வேதங்களைப் பூர்ணமாக அத்யயநம் பண்ணின ப்ராஹ்மணர்வர்த்திக்கிற
தலைவன்	ப்ரதாநனை [ருக்கிற	நாங்கைதன்னுள்	திருநாங்கூரில்
எம்பெருமான் ஸர்வேஶ்வரன்			
அமர்ந்து உறையுமிடம்,		தேன்ஆரும்	தேன்நிறைந்த
ஆறாத	அழிவில்லாத	மலர்	பூக்களையுடைய
பெரும்	அபரிச்சிந்நமான (ய்	பொழில்	சோலைகளினால்
செல்வத்து	ஸம்பத்தையுடையரா	சூழ்	சூழப்பட்ட
அரு	கற்கவரிதான		திருத்தேவனார்தொகை. (௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (வானுடும்மண்ணுடும்) பரமபதமும், ஸம்ஸாரமும், அவ்வவதேசங்களேயன்றிக்கே அவற்றிலுண்டான பலஆத்மாக்களும், தான் என்கிற சொல்லுக்குள்ளே தனக்கு ப்ரகாரமாயடங்கும்படியிருக்கிற ஸர்வேஶ்வரன்.† தானும் குடும்பமுமாய் கலநெல் ஜீவிப்பானொருவனை "உனக்கென்னவேணும்" என்றால், "எனக்குக்கலநெல்வேணும்" என்னுமிறே தன்னபிமாநத்துக்குளே யடங்குகையாலே; அப்படியே, தானேயிதுக்கெல்லா மபிமாநியாயிருக்கிற ஸர்வேஶ்வரன். (தலைவனமர்ந்துறையுமிடம்) ஸவ்வ்யதிரிக்த ஸமஸ்த வஸ்துக்களும் தனக்கு ப்ரகாரமாய் புறம்பொருவரின்றிக்கே உபயவிபூதியும் தன்னிழலிலேயொதுங்கும்படி யிருக்கையாலே தலைவனை, வன்வர்து நித்யவாஸம்பண்ணுகிறதேசம்.

(ஆறாதவித்யாதி) அழியாத நிரவதிக ஸம்பத்தையுடையராயிருக்கிற ப்ராஹ்மணர் வர்த்திக்கிற திருநாங்கூரில். தேன்மிக்கிருந்துள்ளவென்னுதல். வண்டுகள்நெருங்கியிருந்துள்ளவென்னுதல்.(௩)

அரு.—மூன்றாம்பாட்டு. (வானுடுமித்யாதி). கீழ்ப்பாட்டில் - ஸ்தூல ஸூக்ஷ்மசிதசித்ப்ரகாரபாவத்தை யருளிச்செய்தார்; இனி இப்பாட்டில் - நித்யவிபூதிக்கும் அங்குள்ளநித்யமுக்தர்க்கும் ப்ரகாரத்வத்தை விசிஷ்ய வருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

இங்கு "மண்ணுடும்" என்றது-த்ருஷ்டாந்தார்த்தம். நிர்வாஹ்ய நிர்வாஹகபாவத்தைப்பற்ற ஸாமாநாதிகரண்ய மென்றருளிச்செய்கிறார் (தானுமித்யாதி).

http://acharya.org

"ஆன" என்றதுக்கு-மாண்டுபோனவென்று பதார்த்தமாய், அப்படி ஆகாததானதாய், அத்தால் பலித்தது (அழியாத) என்றது. ... (௩)

மூ.—இந்திரனுமிமையவரும்முனிவர்களுமெழிலமைந்த
சந்தமலர்ச் சதுமுகனும் கதிரவனும் சந்திரனும்
எந்தையெமக்கருளென நின்றருளுமிடமெழில்நாங்கை
சுந்தர நற்பொழில் புடை சூழ் திருத்தேவனார்தொகையே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
இந்திரனும்	தேவேந்த்ரனும்	எமக்கு	எங்கள்விஷயத்தில்
இமையவரும்	(மற்றுமுள்ள) தேவர்களும் [ளும்	அருளென	க்ருபைபண்ணி யருளவேணுமென்று ப்ரார்த்திக்க,
முனிவர்களும்	(ஸநகாதி) மஹர்ஷிக		
எழில்அமைந்த	(எப்போதும் வேதாத்யயநத்தினு லுண்டான) அழகுபொருந்தி யிருப்பானாய்	நின்றருளும் இடம்	(அவர்களபீஷ்டத்தைக் கொடுக்கைக்காக) எழுந்தருளியிருக்கிற ஸ்தாநம்,
சந்தம்	வேதங்களை (ஸம்பூர்ணமாகக்) கற்றவனாய்	எழில்	அழகுபொருந்திய
		நாங்கை	திருநாங்கூரில்
மலர்	தாமரைமலரைப் பிறப்பிடமாக வுடையனாய் [ற்றமாவும்	சுந்தரம்	ஸுந்தரமாய்
		நல்	விலக்ஷணமான
		பொழில்	சோலைகளாலே
சதுமுகனும்	நான்முகனுமான ப்ர	புடை	பக்க ப்ரதேசங்களெங்கும்
கதிரவனும்	ஸூர்யனும்		
சந்திரனும்	சந்த்ரனும் [வனே!	சூழ்	சூழப்பட்ட
எந்தை	எமக்கு ஸ்வாமியான		திருத்தேவனார்தொகை. (௪)

வ்யா.—நாலாம்பாட்டு. (இந்திரனித்யாதி) இந்த்ரனும், தேவர்களும், ஸநகாதிகளும், எழிலமைந்திருப்பானாய் ச(ஞ்)ந்தஸ்ஸையுடையனாய் தாமரைமலரைப் பிறப்பிடமாக வுடையனான சதுர்முகனும். †வேதத்தை எப்போதுமொக்க அத்யயநம் பண்ணுதல் கொடுத்தல் செய்யக்கடவனாயிருக்குமிறே. கதிரவனும், சந்திரனும். விபூதியில் †தலைவலித்தாரடங்கலும், "எங்களுக்கு ஸ்வாமியானநீ எங்கள்பக்கலிலே ப்ரஸாதத்தைப்பண்ணி யருளவேணும்" என்ன; அவர்களுடைய அதிகாரங்களை நடத்திக்கொடுக்கைக்காகவந்து நின்றருளுகிறதேசம்.

http://acharya.org

(எழிலிஷித்யாதி) இப்படியொரு கார்யப்பாட்டாலன்றிக்கே, சோலைவாய்ப்புக்கண்டு விடாதே வர்த்திக்கிறதேசமாய்த்து. ... (ச)

அரு.—நாலாம்பாட்டு. (இந்திரனித்யாதி). இப்படி உபயவிபூதிநாதன் இங்கார்க்காக வர்த்திக்கிறுனென்னவருளிச்செய்கிறுரென்று ஸங்கதி.

எழிலேதென்னவருளிச்செய்கிறுர் (வேதத்தையித்யாதி). (தலைவலித் தார்)என்றது - சாடு; பெருந்தலையாரென்னுதல், தந்தாமதிகாரத்துக்கு பாதக(ஶ)முள்ளவரென்னுதல். ... ... (ச)

மூ.—அண்டமுமிவ்வலைகடனுமவனிகளும் குலவரையும்
உண்டபிரானுறையுமிடமொளி மணி சந்தகில் கனகம்
தெண்டிரைகள் வரத் திரட்டும் திகழ்மண்ணித் தென்கரைமேல்
திண்டிறலார் பயில் நாங்கைத் திருத்தேவனர்தொகையே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அண்டமும்	ஆகாசமும்	கனகம்	ஸுவர்ணங்களையும்
அலை	அலையெறிகிற	தெள்	தெளிந்து நிர்மலமான
இக்கடலும்	இந்தஸமுத்ரங்களும்	திரைகள்	அலைகளினுடைய
அவனிகளும்	(ஜம்பூத்வீபம் முதலிய) த்வீபங்களும்	வர	வரவிலே
குலவரையும்	(ஹிமவான் முதலிய ஏழு) குலபர்வதங்களும்	திரட்டும்	ராசிராசியாகக் குவியாநின்றதாய்
உண்ட	(ஆகிய இவற்றை ப்ரளயகாலத்திலே)அமுதுசெய்த	திகழ்	விளங்காநின்ற
பிரான்	உபகாரகன்	மண்ணி	மண்ணியாற்றினுடைய
உறையும் இடம்,		தென்கரை மேல்	தெற்குக்கரையின்மேலேயிருப்பதாய்
ஒளி	காந்தியையுடைய	திண்	த்ருடமான
மணி	ரத்நங்களையும்	திறலார்	பலமுடையவர்கள்
சந்து	சந்தநமரங்களையும்	பயில்	நெருங்கிவாஸம் செய்யுமிடமான
அகில்	தேவதாருக் கட்டைகளையும்	நாங்கை	திருநாங்கூரில்
		திருத்தேவனர் தொகை.	(ரு)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (அண்டமித்யாதி) ஆகாசும், கடல்கள், த்வீபங்கள், குலகிரிகள், இவையெல்லாவற்றையும், ப்ரளயபத்திலே திருவயிற்றிலேவைத்துநோக்கின உபகாரகன் வர்த்திக்கிறதேசம்;—ஒளியையுடைத்தானமணிகள், சந்தநம், அகில், பொன் இவற்

றை, தெளிந்த திரைகள் வரத்திரட்டுகிற திகழ்மண்ணித்தென்கரைமேல். (திண்டிறலார்) "ஸிம்ஹம்வர்த்திக்கும்†முழுஞ்சு" என்னுமாபோலே - ஒருவரால் ஜயிக்கவொண்ணாத பெருமிடுக்கையுடையராயிருக்கிறவர்கள் நெருங்கி வர்த்திக்கிற. ... ... (௫)

அரு.—அஞ்சாம்பாட்டு. (அண்டமித்யாதி). தேவர்கள் தந்தாமதிகாரங்களை நடத்துமென்று ஆஸ்ரயிக்கைக்கு இவன் ஆபத்ஸகனோவென்ன; அத்தையருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

(முழஞ்சு) லதாக்ருஹம். ... ... (௫)

மூ.—ஞாலமெல்லாமமுதுசெய்து நான்மறையும் தொடாத
பாலகனாயாலிலையில் பள்ளிகொள்ளும் பரமனிடம்
சாலிவளம் பெருகிவரும் தடமண்ணித் தென்கரைமேல்
சேலுகளும் வயல்நாங்கைத் திருத்தேவனார்தொகையே. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நால்மறையும்	ப்ரமாணதமமாய் நா	பரமன்	ஸர்வாதிகன்
	லுவகைப்பட்டிருந்து	இடம்	நித்யவாஸம் பண்ணு
	ள்ளவேதங்களாலும்		கிறஸ்த்தாநமானது,
தொடாராத	அநுஸரித்துப் பேச	தடம்	விசாலமான
	ப்போகாத பெரு	மண்ணித்தென்கரைமேல்	
	மையை யுடையனு	சாலி	செந்நெற்பயிரினுடை
	ன [கொண்டு	வளம்	செழுமை [ய
பாலகனாய்	இளம் பிள்ளையாய்க்	பெருகிவரும்	மிக்குவாராநிற்பதாய்
ஞாலம்எல்லாம்	பூமியைமுழுதும்	சேல்	சேலென்னும் மத்ஸ்ய
அமுதுசெய்து	விழுங்கி	உகளும்	துள்ளாநின்ற [ங்கள்
ஆல்இலையில்	ஆலந்தளிரில்	வயல்	கழனிகளை யுடைத்தா
பள்ளிகொள்	கண்வளர்ந்தருளுகிற		ன
ளும்		நாங்கைத் திருத்தேவனார் தொகை.	

வ்யா.—ஆறாம்பாட்டு. (ஞாலமெல்லாமமுதுசெய்து) பூமிப்பரப்படையவமுதுசெய்து. (நான்மறையித்யாதி)†"ஸர்வேஸ்வரன் அபரிச்சேத்யன்" என்றறியக்கடவ வேதங்களுக்கு மெட்டவொண்ணாதபடியான அதிமாநுஷசேஷ்டிதத்தை யுடையனாய், ஒருபவனை ஆலிலையிலே கண்வளர்ந்தருளுகிற ஸர்வாதிகன் வர்த்திக்கிறதேசம்.

(சாலியித்யாதி)†தடமண்ணித்தென்கரைமேல்-சாலிவளம்பெருகாநிற்பதாய், சேல் உகளாநிற்பதான வயலையுடைத்தான திருநாங்கூரில்.

http://acharya.org

அரு.—ஆரும்பாட்டு. (ஞாலமித்யாதி). கீழ்ச்சொன்ன ஆபத்ஸகத்வந்தன்னை வேதங்களும் பேசியளவிடமாட்டாதென்று, அதுதன்னையே மீளவு மநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

"நான்மறையும்" என்ற சகாரம்-ப்ராதாந்யத்தைச்சொல்லுகிறதாய், அது தானும் - இவன் சிறுவடிவால் பெரியவற்றை வயிற்றிலேவைத்திருக்கிறபடியைப் பேசமாட்டாதென்று தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸர்வேஸ்வரனித்யாதி).

அந்வயமுகேந வர்த்தமருளிச்செய்கிறார் (நடமித்யாதி). ... (௬)

மூ.— ஓடாத வாளரியி னுருவாகி யிரணியனை
வாடாத வள்ளுகிரால் பிளந்தளைந்த மாலதிடம்
ஏடேறு பெருஞ்செல்வத் தெழில்மறையோர் நாங்கைதன்னுள்
சேடேறு ‡பொழில் தழுவு திருத்தேவனார்தொகையே. (எ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஓடாத	(நாட்டில்) நடையாடாத(அபூர்வமான)	பெரும்	அபரிச்சிந்நமா யிருக்கிற
ஆள் அரியின்	நரஸிம்ஹத்தினுடைய	செல்வத்து	ஸம்பத்தையுடையராய்
உருவாகி	வடிவை யுடையனாய்க்கொண்டு, [ன)தாய்	எழில்	பகவத்ஸ்வரூபதிப்ரதிபாதகமாகிற அழகையுடைய
வாடாத	வளையாத (த்ருடமா		
வள்	கூர்மைமிக்க		
உகிரால்	நகங்களினால்	மறையோர்	வேதங்களுக்கு நிர்வாஹகரான ஸ்ரீவைஷ்ணவர்கள் நித்யவாஸம்செய்கிற
இரணியனை	ஹிரண்யாஸுரனை		
பிளந்து	கிழித்து		
அளைந்த	(அவ்வவயவங்களைக் கைகளால்) கலக்கிக்கொண்டிருந்த	நாங்கை தன்னுள்	திருநாங்கூரில்
மாலது	ஆஸ்ரித வ்யாமோஹமுள்ள ஸர்வேஸ்வ[ரனுடைய	சேடு	இளமை
இடம்,		ஏறு	வளராநின்றதாய்
		மலர்	பூக்களையுடைய
ஏடு	புஸ்தகத்தில்	பொழில்	சோலைகளினால்
ஏறு	ஏறிட்டு (எழுதி)க் காணவேண்டும்படி,	சூழ்	சூழப்பட்ட
		திருத்தேவனார்தொகை.	(எ)

‡ (பா) மலர்ப்பொழில்சூழ்.

http://acharya.org

வ்யா.—ஏழாம்பாட்டு. (ஓடாதவித்யாதி) நாட்டில் நடையாடாத நரஸிம்ஹவேஷத்தைப் பரிக்ரஹித்து, ஹிரண்யனுடைய முராட்டுடலிலே வ்யாபரியாநிற்கச்செய்தேயும் †வாடக்கடவதல்லாத கூரியதிருவுகிராலே, (பிளந்தளந்தமாலதிடம்)†ஒன்றுசெய்தானுய் விடுகையன்றிக்கே (க)"உதிரமளைந்த கையோடிருந்தானை" என்கிறபடியே சிறுக்கன்மேலே சீறினவன்பக்கல் தனக்குச் சீற்றம்மாறுமையாலே பிளந்து, பின்னை யளைந்திருந்த வ்யாமோஹத்தையுடையவன் வர்த்திக்கிறதேசம்.

(ஏடேறித்யாதி)† அவ்வூரில் ப்ராஹ்மணருடைய ஸம்பத்தைக் கண்டு விடுமதன்றிக்கே புத்தகத்திலே யெழுதிப்பார்க்க வேண்டும்படியாய்த்திருப்பது ஸ்ரீராமாயணம்போலே. ஏறுகை - போகை, ஏடு - குற்றம்; குற்றமற்ற பெரிய வைஶ்வர்யம். அன்றிக்கே, ஏடு ஏறிப்போம்படியான வைஶ்வர்யம். ஏடேறுகையாவது - ஏடு மாண்டுபோகை. (சேடேறுபொழில்தழுவு) இளமைமிக்க பொழில் தழுவியிருந்துள்ள. அன்றிக்கே, (சேடேறுமலர்ப்பொழில்சூழ்) மலரையுடைத்தான பொழிலாலே சூழப்பட்ட; (உ)†"வளரிளம்பொழில்" என்னுமாபோலே. ... ... (எ)

அரு.—ஏழாம்பாட்டு. (ஓடாதவித்யாதி). ஸகலலோகங்களுக்கும் வந்த வாபத்தைப் பாலனுமொருபடியாலே யுதவினனென்கிறார்; அவ்வளவன்றியே, ஓரர்ப்பகனுக்காக இருபடியாலுதவின நரஸிம்ஹத்தினுடைய ஆபத்ஸகத்வத்தை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

(வாடக்கடவதல்லாத) வளையக்கடவதல்லாத. "அளைந்த" என்றதுக்கு ஸம்வாதபூர்வகம் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஒன்றுசெய்தானுயித்யாதி).

ஏட்டிலேயெழுதிப்பார்க்கவேண்டும்படியான வைஶ்வர்யமென்றும், குற்றமற்றவைஶ்வர்யமென்றும், ஏட்டிலெழுதினாலும் முடியாதவைஶ்வர்யமென்றும், மூன்றர்த்தமடைவே யருளிச்செய்கிறார் (அவ்வூரித்யாதி). சேடானது - இளமையானது, ஏறிவருமோவென்ன; ஸம்வாதமருளிச்செய்கிறார் (வளரித்யாதி); வளரவளர இளமை மிகும்பொழிலென்றாரிறே ஆழ்வாரென்று திருவுள்ளம். ... ... (எ)

மூ.—‡வாராரு மிளங்கொங்கை மைதிலியை மணம் புணர்வான்
காரார் திண் சிலையிறுத்த தனிக்காளை கருதுமிடம்

(க) பெரி-திரு-ச-க-க. (உ) தி-வாய்-உ-கO-க. ‡ (பா) வாராரும்.

ஏராரும் பெருஞ்செல்வத்தெழில் மறையோர்நாங்கைதன்னுள்
சீராரும் மலர்ப்பொழில் சூழ் திருத்தேவனார்தொகையே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வார்	கச்சாலே	கருதும் இடம்	விரும்பி வர்த்திக்கிற ஸ்தாநமானது,
ஆரும்	தாங்கப்படுமதாய்	ஏர் ஆரும்	அழகுமிக்கிருந்துள்ள
இளம்கொங்கை	இளம்பருவத்தை யுடைய ஸ்தநங்களை யுடையளான	பெரும்	நிரவதிகமான
மைதிலியை	மிதிலாதிபனுடைய பெண்ணான பிராட்டியை	செல்வத்து	ஐச்வர்யத்தை யுடையராய்
மணம்புணர்வான்	விவாஹம்செய்துகொள்ளுகைக்காக,	எழில் மறையோர்	அழகிய வேதங்களைப் பரிசீலநம் பண்ணு நின்ற ஸ்ரீவைஷ்ணவர்கள் நிறைந்திருக்கிற
கார் ஆர்	கருமைமிக்க (முற்றி	நாங்கைதன்னுள்	திருநாங்கூரில்
திண்	த்ருடமான [ன]தாய்	சீர் ஆரும்	அழகுவிஞ்சியிருக்கிற
சிலை	வில்லை	மலர்	பூக்களையுடைய
இறுத்த	முறித்தவனாய்	பொழில்	சோலைகளாலே
தனி	அத்விதீயமான	சூழ்	சூழப்பட்ட
காளை	யௌவநப்பருவத்தை யுடையனான சக்ரவர்த்தித் திருமகன்		திருத்தேவனார்தொகை. (அ)

வ்யா.—எட்டாம்பாட்டு. (வாராரித்யாதி) தோற்றுகிறபோதே வாராலே தாங்கவேண்டும்படியான முலையையுடைய ஸ்ரீஜநகராஜன் திருமகளை மணம்புணருகைக்காக, † வயிரம்பற்றி ஒருவரால் சலிப்பிக்கவொண்ணாதிருக்கிற வில்லைமுறித்த உபமாநரஹிதமான பருவத்தையுடையவன் விரும்பி வர்த்திக்கிறதேசம்.

அழகு மிக்கிருந்துள்ள நிரவதிக ஸம்பத்தையுடைய ப்ராஹ்மணர் வர்த்திக்கிற நாங்கைதன்னில். (சீராரித்யாதி) அழகுமிக்க மலரையுடைத்தான பொழிலாலே சூழப்பட்ட. ஊரில் ஸம்பத்தைக்கோட்சொல்லிக்கொடுக்குமாய்த்து சோலை. ... ... (அ)

அரு.—எட்டாம்பாட்டு. (வாராரித்யாதி). ஓராண்பிள்ளைக்குதவினவளவன்றியே, (க) "పతిసంయోగసులభం వయోదృష్ట్వాచ మే పితా । చిన్తార్ణవగతః పారం నాససాదాప్లవోయథా - பதிஸம்யோகஸுலபம் வயோ

(க) ரா-அயோத்யா-ககஅ-ருக-ருக.

த்ருஷ்ட்வாசமேபிதா । சிந்தார்ணவகதஃ பாரம் நாஸஸாதாப்லவோயதா” என்கிறபடியே-கொடியைக்கொள்கொம்பிலே சேர்க்கவேண்டும்படியான பருவத்திற்பெண்பிள்ளைக்குதவவந்து சிலைமுறித்த உதவியை யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

“காரார்” என்றது - கருமைமிக்கதென்று ஸப்தார்த்தமாய், அதை இப்போதுசொல்லுகைக்கு ப்ரயோஜநமருளிச்செய்கிறார் (வயிரமித்யாதி).

மூ.—கும்ப மிகு மத யானை பாகனொடும் குலைந்து வீழக்
கொம்பதனைப் பறித்தெறிந்த கூத்தனமர்ந் துறையுமிடம்
வம்பவிழும் செண்பகத்தின் மணங்கமழும் நாங்கைதன்னுள்
செம்பொன்மதிள்பொழில்புடைசூழ்திருத்தேவனார்தொகையே

பதம்.	உரை.	பதம்.	உரை.
மிரு	பெருத்த [தாய்	உறையுமிடம்,	
கும்பம்	மஸ்தகத்தை யுடைய	செண்பகத்தி	செண்பகப் பூவினு
மதம்	கொழுப்பேறி யிருக்	ன்	டைய
	கிற	வம்பு	புதுமையிலே
யானை	குவலயாபீடமானது	அவிழும்	அலராகின்ற
பாகனோடும்	(தன்னுடைய) பாக	மணம்	பரிமளமானது
குலைந்து	நடுங்கி [னோடுகூட	கமழும்	வாஸியாகின்ற
வீழ	விழும்படி	நாங்கைதன்னுள்,	
அதன்கொம்	அதினுடைய தந்தத்	செம்பொன்	சிவந்த பொன்னாலே
பை	தை		செய்யப்பட்ட
பறித்து	பிடுங்கி	மதிள்	ப்ராகாரங்களும்
எறிந்த	வீசிப்பொகட்ட	பொழில்	தோப்புக்களும்
கூத்தன்	அழகிய திவ்யசேஷ்டி	புடை	தனக்குள்ளே யடங்கு
	தங்களையுடையக்ரு	சூழ்	பரந்திருக்கிற [ம்படி
அமர்ந்து	பொருந்தி [ஷ்ணன்	திருத்தேவனார்தொகை. (௯)	

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (கும்பமித்யாதி) பெரியமஸ்தகத்தை யுடைத்தான மத்தகஜம் பாகனோடேகூட † நட்டாற்றில் கோரைபோலே நடுங்கி விழும்படியாக அதின்கொம்பைக் குப்பைக்கீரைபோலே அநாயாஸேந பிடுங்கிப்பொகட்ட மநோஹாரியான சேஷ்டிதத்தையுடையவன் வர்த்திக்கிறதேசம்.

†செவ்வியிலே யலருகிற செண்பகத்தின் மணங்கமழுகிற நாங்கைதன்னில், மதிளையும் அத்தை வளைந்த சோலையையும் †உள்ளடக்கியிருக்கிற ... ... (௯)

http://acharya.org

அ௫.—ஒன்பதாம்பாட்டு. (ரும்பமித்யாதி). ஒரு பெண்கொடிக்காக மூச்சுவிட்ட வசேதநமான வில்லை முறித்ததிலுங்காட்டிலும், மதுரையில் பெண்கொடிகளுக்கெல்லா முதவும்படி மத்தகஜத்தின் கொம்பைமுறித்து அவர்களுக்குதவினமையை யநுஸந்திக்கிருரென்று ஸங்கதி.

(௧) “నగరశ్రీకలాలాపమధు శ్రోత్రేణ పాస్యతి-நகரஸ்த்ரீகலாலாப மதுப்ரோத்ரேணபாஸ்யதி” என்று சொல்லுகிறபடியிறே அவர்களுக்காய் இவன் களிறுதருபுணர்ச்சி கொடுத்தது. “குலேந்து” என்றதினர்த்தம் (நட்டாற்றிலித்யாதி).

வம்பு-புதுமையாய், அத்தால் பலிசார்த்தம் (செவ்வியிலே) என்றது. புடையிலே - தன்னுள்ளேயாம்படி, சூழ்ந்ததிருத்தேவனார்தொகை என்று எல்லைப்பரப்பைச்சொல்லிற்றென்று விவக்ஷித்தருளிச்செய்கிருர் (உள்ளடக்கியிருக்கிற) என்று. ... ... (௯)

மூ.— காரார்ந்த திருமேனிக் கண்ணனமர்ந் துறையுமிடம்
சீரார்ந்த பொழில் நாங்கைத் திருத்தேவனார்தொகைமேல்
கூரார்ந்த வேல் கலியன் கூறு தமிழ் பத்தும் வல்லார்
ஏரார்ந்த வைகுந்தத் திமையவரோ டிருப்பாரே. (௧௦)

திருமங்கையாழ்வார்திருவடிகளேசரணம்.

—ooo—

பதம்.	உரை.	பதம்.	உரை.
கார்	மேகத்தோடு	வேல்	வேலாயுதமுடைய
ஆர்	ஸத்ருசமான	கலியன்	திருமங்கையாழ்வார்
திருமேனி	திவ்யவிக்ரஹத்தை யு	கூறு	அருளிச்செய்த
கண்ணன்	க்ருஷ்ணன் [டைய	தமிழ்	த்ராவிடரூபமான திவ்
அமர்ந்து	பொருந்தி		யப்ரபந்தத்தில்
உறையும்	வர்த்திக்கிற	பத்தும்	(இந்தப்) பத்துப்பா
இடம்	தேசமாய்,		ட்டையும்
சீர் ஆர்ந்த	எழில்நிறைந்த	வல்லார்	அப்யஸித்தவர்கள்
பொழில்	சோலைகளையுடைய	ஏர் ஆர்ந்த	நன்மைமிக்க
நாங்கை	திருநாங்கூரிலுள்ள	வைகுந்தத்து	ஸ்ரீவைகுண்டத்தில்
திருத்தேவனா	திருத்தேவனார் தொ	இமையவ	நித்யஸூரிகளுடன்கூ
ர் தொகை	கையென்னும் திவ்	ரோடு	டி
மேல்	யதேச விஷயமாக,	இருப்பார்	நித்யவாஸம் பண்ணு
கூர் ஆர்ந்த	கூர்மைமிக்க		வர்கள். (௧௦)

(௧) வி-பு-ரு-௧அ-௧௪.

http://acharya.org

வ்யா.—பத்தாம்பாட்டு. (காரார்ந்தவித்யாதி) மேகம்போலே ஶ்ரமஹரமான வடிவையுடைய க்ருஷ்ணன்விரும்பி வர்த்திக்கிறதேசமான அழகுமிக்க பொழிலேயுடைத்தான திருநாங்கூரில் திருத்தேவனார்தொகைமேல்.

(கூரார்ந்த) †ஶத்ருக்கள்பக்கல் வேல்கொண்டு வ்யாபரிக்குமிடத்தில் தலைமைபெற்றிருக்குமாபோலேயாய்த்துக் கவிபாட்டிலும் தலையாயிருக்கும்படி. இப்பத்தையு மப்யஸிக்கவல்லவர்கள், நன்மைக்கவதியின்றிக்கே யிருக்கிற ஸ்ரீவைகுண்டத்திலே திருவடி திருவநந்தாழ்வாரோடே ஒருகோவையாய், (க) "நசபுநராவர்த்ததே - நசபுநராவர்த்ததே" என்கிறபடியே ஒருநாளும்பிரியாதே யிருக்கப்பெறுவர்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

—∘∘⊱⊰∘∘—

அரு.—பத்தாம்பாட்டு. (காரார்ந்தவித்யாதி) இப்படி ப்ரபந்தகர்த்ருத்வத்தை ஆப்த்யர்த்தம் சொல்லும்போது "கூரார்ந்தவேல்கலியன்" என்னவேணுமோவென்ன வருளிச்செய்கிறார் (ஶத்ருக்களித்யாதி). (க0)

ஜீயர் திருவடிகளே சரணம்.

—∘∘⊱⊰∘∘—

நாலாம்பத்து முதல்திருமொழி முடிந்தது.

(க) சாந்தோ-அ-கரு.

http://acharya.org

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

பெரியதிருமொழி - நாலாம்பத்து - உ - ம் திருமொழி

முதற்பாட்டு கம்பமாகடல் வ்யாக்யானம்.

ப்ரவேசம்.—†ப்ரஹ்மாதிகளுக்கு †உத்பாதகனுமாய், அவர்கள் தாங்கள் தங்களுக்கு அநர்த்தத்தைச் சூழ்த்துக்கொள்ளுமன்று அவற்றைப்போக்கிரக்ஷிக்கும்ஸ்வபாவனுமாய்,†அவர்கள்தாங்கள்‡†அஸுரர்களோடேகூடிவருமன்றும் அவர்களைஜயித்து ஜகத்தை†ரக்ஷிக்குமவன் வந்தெழுந்தருளியிருக்கிறதேசம் வண்புருடோத்தமமென்று அத்தேசத்தினுடைய வைலக்ஷண்யத்தை யநுஸந்தித்து அத்தைப்பேசி யநுபவிக்கிறார். ... ... *

அரு.— கம்பமாகடலின் ப்ரவேசம்.— திருநாங்கூர் திருப்பதிகளுக்கெல்லாம் ஸங்கதி பூர்வமுக்தமாகையாலே, திருமொழியில் ப்ரமேயத்தை உபந்யஸிக்கிறார் (ப்ரஹ்மாதியித்யாதி). “இந்துவார்சடை” என்கிற ஒன்பதாம்பாட்டைக் கடாக்ஷித்தருளிச்செய்கிறார் (உத்பாதகனுமாய்) என்று. “வாளையார்” என்கிற எட்டாம்பாட்டில் ப்ரமேயம் (அவர்கள்தாங்களித்யாதி). “ஈசன்தன்” இத்யாதியைப்பற்ற வருளிச்செய்கிறார் (அஸுரர்களோடித்யாதி). மற்ற எல்லாப்பாட்டிலும் பலித்தவர்த்தம்(ரக்ஷிக்குமவன்) என்றது. ... ...

மூ.— கம்ப மா கடலடைத்திலங்கைக்குமன் கதிர் முடியவைபத்தும்
அம்பினாலறுத்தரசவன் தம்பிக்களித்தவனுறைகோயில்
செம் பலா நிரை செண்பகம் மாதவி சூதகம் வாழைகள் சூழ்
வம்புலாங்கமுகோங்கிய நாங்கூர் வண்புருடோத்தமமே. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கம்பம்	சலியாநின்ற (அலைகளை யுடைத்தான)	கதிர்	ஒளிவிடாநின்றுள்ள
		அவை	அப்படிப்பட்ட
மா	பெரிய	முடிபத்தும்	சிரங்கள்பத்தையும்
கடல்	ஸமுத்ரத்தை	அம்பினால்	பாணங்களினால்
அடைத்து	அணைகட்டி,	அறுத்து	சே(ச்)தித்து,
இலங்கைக்கு	லங்காநகரத்துக்கு	அவன்தம்பிக்கு	அந்தராவணன் தம்பியான விபீஷணாழ்வானுக்கு
மன்	ஸ்வாமியான ராவணனுடைய		

---

‡ அஸுரர்களோடே கூடிவருகை- பாணாஸுர யுத்தத்திலே ருத்ரன் கூடிவந்தது.

http://acharya.org

அரசுஅளித்த வன்	ராஜ்யத்தை க்ருபை செய்த சக்ரவர்த்தி த்திருமகன்	வாழைகள்	வாழைமரங்களும்(ஆகிய இவற்றால்)
உறை	பொருந்தி வர்த்திக்கிற	சூழ்	சூழப்பட்டதாய்
தேசம்	ஸ்த்தாநமானது,	வம்பு	பரிமளம்
பலா	பலாமரங்களுடைய	உலா	வ்யாபியாநின்ற(வீசாநின்ற)
செம்	சிறந்த	கமுகு	பாக்குமரங்கள்
நிரை	வரிசைகளும்	ஓங்கிய	உயர்ந்திருப்பதான
செண்பகம்	செண்பகமரங்களும்	நாங்கூர்	திருநாங்கூரில்
மாதவி	குருக்கத்தியும்	வண்புருடோத்தமம்	வண் புருடோத்தமமென்கிறதிவ்யதேசமாம். (க)
சூதகம்	மாமரங்களும்		

வ்யா.—முதற்பாட்டு.(கம்பமித்யாதி)†இட்டதடையைக் கரைந்துபோம்படி அலையெறியாநின்றுள்ள பெரியகடலை யணைசெய்து,"அரனுடைத்தானலங்கைக்கு நான் நிர்வாஹகனல்லேனோ" என்று அத்தாலே துர்மாநத்தைப்பண்ணியிருக்கிற ராவணனுடைய. (கதிர்முடியவைபத்தும்)†திக்விஜயம்பண்ணிச்சூடினமுடியையுடைத்தான தலைபத்தையும். (அம்பினாலறுத்து) ப்ரஹ்மாஸ்த்ராதிகளுக்கும் கேளாதபடி வரபலத்தாலே பூண்கட்டியிருக்கிற தலைகளை க்ஷத்ரியத்வத்துக்கேகாந்தமான அம்பாலே யழியச்செய்து. (அரசித்யாதி) "ராக்ஷஸருடைய ஐஶ்வர்யத்தை நம்முடையானொருவன் கடவனாகப்பெற்றோமிறே" என்று அந்த ஐஶ்வர்யத்தை அவன்தம்பியான விபீஷணனுக்குக்கொடுத்தருளினவன் வந்து நித்யவாஸம் பண்ணுகிறதேசம்.

(செம்பலாவித்யாதி)*பலாக்களுடைய செவ்வியநிரை, செண்பகம், குருக்கத்தி, தேமா, வாழைகள் இவை சூழ்ந்திருக்குமாய்த்து புறச்சோலைகள். உட்சோலைகளிருக்கும்படி, (வம்புலாங்கமுகோங்கிய) எப்போது மொக்கப் பாளைநாற்றத்தை, யுடைத்தான திருநாங்கூரில். ... ... (க)

அரு.—முதற்பாட்டு. (கம்பமித்யாதி) "கம்பம்" என்று சலநமாய், அத்தால் அலையைச்சொல்லிற்றாய், இப்படி விசேஷித்ததாலே அணைசெய்கை துஷ்கரமென்று தோற்றத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (இட்டதித்யாதி). கதிர்முடிகள் பத்துமென்ன வமைந்திருக்க "அவை" என்றதாலே தோற்றுகிற உத்கர்ஷந்தன்னை யருளிச்செய்கிறார் (திக்விஜயமித்யாதி). அவன்தலையறுத்து அவன்தம்பிக் கரசளிக்கக் காரணமென்னெ

http://acharya.org

ன்னவருளிச்செய்கிறுர் (ராக்ஷஸருடையவித்யாதி). ராக்ஷஸராஜ்யம் நரவாநரஜாதிக் கநர்ஹமாகையாலே அராஜகமாய்ப் போகாதே ஸ்வாதீநமாக ஒருநல்லவரக்க னுண்டாவதே! என்று கொடுத்தமைதோற்ற "அவன் தம்பி" என்று விசேஷித்தாரென்று திருவுள்ளம். ... ... (க)

மூ.—பல்லவம் திகழ் பூங்கடம்பேறி யக்காளியன் பண வரங்கில்
ஒல்லைவந்துறப்பாய்ந்தரு நடஞ்செய்தவும்பர்கோனுறைகோயில்
நல்ல வெந்தழல் மூன்று நால்வேத மைவேள்வியோடாறங்கம்
வல்ல வந்தணர் மல்கிய நாங்கூர் வண்புருடோத்தமமே. (௨)

பதம்.	உரை.
ப்லவம்	தளிர்கள்
திகழ்	விளங்காநின்ற
பூ	பூத்த
கடம்பு	கடம்பென்னும் மரத்தின் மேலே
ஏறி	ஏறி
அ காளியன்	அப்படிப்பட்ட காளியனுடைய
பணம்	படங்களாகிற
அரங்கில்	ரங்க (நர்த்தந) ஸ்தாநத்தில்,
உற	அவன்சேரும்படி (தப்பிப்போகாதபடி)
வந்து	கிட்டிவந்து [யாக
ஒல்லை	சீக்ரமாக
பாய்ந்து	குதித்து
அரு	அருமையான
நடம்	நர்த்தநங்களை

பதம்.	உரை.
செய்த	பண்ணின [ன்
உம்பர்கோன்	தேவாதிநாதனுனவ
	உறைகோயில்,
நல்ல	கர்மாநுஷ்டாநயோக்யமான நன்மையை யுடையதாய்
வெம்	வெப்பத்தையுடைய
தழல்மூன்று	த்ரேதாக்நிகளையும்
நால்வேதம்	சதுர்வேதங்களையும்
ஐ வேள்வி	பஞ்சமஹா யஜ்ஞங்களையும்
ஆறுஅங்கம்	(வேதங்களினுடைய) ஷடங்கங்களையும்
வல்ல	பிறர்க்குக்கற்பிக்கவல்லரான
அந்தணர்	ப்ராஹ்மணர்
மல்கிய	நிறைந்திருக்கிற
	நாங்கூர்வண்புருடோத்தமம். (௨)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (பல்லவமித்யாதி) காளியனுடைய விஷத்தாலே தக்த (ரூ) மாய்க்கிடந்து திருவடிகளின் ஸ்பர்சத்தாலே தளிரும் பூவுமாய்த் தழைத்ததாய்த்து. தளிர் விளங்கா நிற்பதாய்ப் பூத்த கடம்பின்மேலே யேறி காளியனுடைய பணங்களாகிற ரங்கத்தின்மேலே †அவன் தப்பாதபடியாக நினைவின்றிக்கே யிருக்கச்செய்தே வந்து கடுகப்பாய்ந்து. (அருநடஞ்செய்த) அந்த ந்ருத்தத்திலே வன்மைக் கூத்தென்றும் மென்மைக் கூத்தென்றும் சிலவுண்டு, †அவ

அ டு

http://acharya.org

ற்றை யடையப்பண்ணின* அயர்வறு மமரர்க ளதிபதியானவன் வந்து வர்த்திக்கிற கோயில்.

(நல்ல வித்யாதி) அக்நித்ரயம், நாலுவகைப்பட்ட வேதம், பஞ்சமஹாயஜ்ஞம், அங்கங்க ளாறும் இவற்றைத் தாங்கள் வருந்தியநுஷ்டித்தார்களாகையன்றிக்கே பிறரையு மநுஷ்டிப்பிக்கைக்கு க்ஷமரான ப்ராஹ்மணர் வர்த்திக்கிற தேசம் ... ... (உ)

அரு.—இரண்டாம்பாட்டு.(பல்லவமித்யாதி). ரணரங்கத்தில் தச(ஜ்ஷ) கண்டன் பத்துத்தலையறுத்தத்திலும் விஷகண்டன் நூற்றொருதலையிலும் அடியிட்டபடியை யநுஸந்திக்கிறரென்று ஸங்கதி.

"உற வந்து ஒல்லை பாய்ந்து" என்றந்வயித்து அர்த்தமருளிச்செய்கிறார் (அவனித்யாதி). (அவற்றை) அருநடங்களை. ... ... (உ)

௩.—அண்டரானவர்வானவர்கோனுக்கென்றமைத்தசோறதுவெல்லா
முண்டுகோனிரைமேய்த்தவை காத்தவனுகந்தினிதுறை கோயில்
கொண்டலார்முழவில் குளிர்வார்பொழில் குலமயில்நடமாட
வண்டுதானிசைபாடிடு நாங்கூர் வண்புருடோத்தமமே. (௩)

பதம்.	உரை.
அண்டரான வர்	இடையர்கள்
வானவர் கோனுக்கு என்று	தேவேந்த்ரனுக்குப் பலி யிட வேணுமென்று
அமைத்த	சமைத்த
அது சோறு	அந்த சோற்றை
எல்லாம்	முழுதும்
உண்டு	அமுது செய்து
கோ நிரை	பசுக் கூட்டங்களை
மேய்த்து	மேயச் செய்து
அவை	அப்பசுக்களை
காத்தவன்	ரக்ஷித்த க்ருஷ்ணன்
உகந்து	ஸந்தோஷித்து
இனிது	இனிமை யுடனே

பதம்.	உரை.
	உறை கோயில்,
கொண்டல்	மேகங்களி னுடைய
ஆர்	நிறைந்த
முழவு	கர்ஜநங்களை யுடையதும்
குளிர்	ஶிசிரமநோஹரமானதுமாய்
வார்	பெருகி யிருக்கிற
பொழில்	தோப்புகளில்
மயில் குலம்	மயில் களினுடைய ஸமூஹமானது
நடம் ஆட	நர்த்தநம் செய்ய
வண்டு தான்	வண்டுகள்
இசை	கானத்தை
பாடிடும்	பாடாநின்ற
நாங்கூர்வண்புருடோத்தமம்.	

வ்யா.—மூன்றாம்பாட்டு. (அண்டரித்யாதி) பசுக்களுக்கும்நம
கும் முகந்தோற்றநின்று வர்த்திக்கிற† இவனுக்கு மேல்பட ஒரு தே
வதை†யுண்டோவென்று கண்டதுக் கவ்வருகறியாதபடி †செவ்வியா

http://acharya.org

யிருக்கிற இடையரானவர்கள், தேவஜாதிக்கெல்லாம் நியாமகனுய்ப் போந்தவனுன இந்த்ரனுக்கென்று சமைத்த சோற்றையெல்லாம் தா னமுதுசெய்து. (கோ நிரைமேய்த்து) அநந்தரம் அவற்றினுடைய ரக்ஷணமும் தனக்கே பரமாகையாலே அவற்றை மேய்த்து அவற்றினுடைய ஆபத்தைப் போக்கி ரக்ஷிக்கிறவன். (உகந்தினி துறைகோயில்) இன்னமு மிப்படி ரக்ஷிக்கைக்குப் பாங்கான தேசமென்று அவனுகந்து நித்யவாஸம்பண்ணுகிற தேசம்.

(கொண்டலித்யாதி) மேகங்களினுடைய மிக்க கோஷமான துவே வாத்யமாக ஸ்ரமஹரமாய்ப் பரந்திருந்துள்ள பொழிலின் நடுவே மயிலினுடைய ஸங்கமானது ஆட, அங்கே மதுபாநம்பண்ணுகிற வண்டுகளானவை இவற்றினுடைய காலுக்கீடாக இசைபாடா நின்றுள்ள ... ... (௩)

அநு.—மூன்ரும்பாட்டு. (அண்டரித்யாதி) எதிரிட்ட திர்யக்ஜாதியனை யடக்க வடியிட்டவளவன்றியே, "தேவஜாதிக்காகக்கடவன்" என்றிருப்பானைக் கையோயப்பண்ணின அதிமாநுஷசேஷ்டிதத்தை யநுபவிக்கிருரென்று ஸங்கதி.

(இவனுக்கு) கோவர்த்தநாபிமாநியானவனுக்கு. (செவ்வியராய்) கவட றியாராய். (உண்டோவென்று) என்றதுக்கு (தானமுதுசெய்து) என்றத் தோடந்வயம். யத்வா (இவனுக்கு) என்றது-வர்ஷமுகேந முகங்காட்டின இந்த்ரனுக்கென்கை. இப்போது தூராந்வயமில்லை. ... ... (௩)

மூ.—பருங்கையானையின் கொம்பினைப்பறித்ததன்பாகனைச் சாடிப்புக்
கொருங்கமல்லரைக்கொன்று பின் கஞ்சனையுதைத்தவனுறை
கரும்பினூடயர்சாலிகள் விளைதருகழனியில் மலிவாவி [கோயில்
மருங்கெலாம்பொழிலோங்கிய நாங்கூர்வண்புருடோத்தமமே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
பரும்	பருத்திருக்கிற	சாடி	கொன்று,
கை	துதிக்கையை யுடைத்தான	புக்கு	உள்ளே நுழைந்து
		ஒருங்க	ஏகீபவித்துவந்த
ய		மல்லரை	சாணூர முஷ்டிகர்களை
யானையின்	குவலயாபீடத்தினுடை	கொன்று	அழியச்செய்து
கொம்பினை	தந்தங்களை	பின்	அநந்தரம்
பறித்து	பிடுங்கி	கஞ்சனை	கம்ஸனை
அதன் பாகனை	அந்த யானையை நடத்த வல்லவனுன பாகனை	உதைத்தவன்	உதைத்த க்ருஷ்ணன்

http://acharya.org

	உறை கோயில், [டைய	மலி	ஸம்ருத்தமாயிருக்கிற
கரும்பின்	கருப்பஞ் சோலையினு	வாவி	இணறுகளுடைய
ஊடு	நடுவிலே	மருங்கெலா	பக்கங்களிலெங்கும்
உயர்	ஓங்கி வளராநின்ற	ம்	
சாலிகள்	செந்நெல் பயிர்கள்	ஓங்கிய	உயர்ந்து வளராநின்ற
விளைதரு	விளையாநின்ற	பொழில்	தோட்டங்களை யுடைய
கழனியில்	கழனிகளில்		நாங்கூர்வண்புருடோத்தமம். (௪)

வ்யா.—நாலாம்பாட்டு. (பருங்கையித்யாதி) பெரிய துதிக்கையை யுடைத்தான, குவலயாபீடத்தினுடைய கொம்பை முறித்து, அது முடிந்தாலும் நடத்தவல்ல சக்தியையுடைத்தான பாகனை யழியச்செய்து, அநந்தரம் சாணூர முஷ்டிகாதி மல்லவர்க்கத்தை யழியச்செய்து, உள்ளேபோய்ப் புக்குக் கம்ஸன் தலைமயிரைப்பிடித்து முகங் கீழ்ப்படவலித்துத் திருவடிகளாலே யுதைத்து முடித்தவன், இன்னு மிப்படிப்பட்ட விரோத்யம்சத்தைப் போக்குகைக்காக நித்ய வாஸம் பண்ணுகிற தேசம்.

(கரும்பித்யாதி) கரும்பினுள்ளே அத்தோடொத்து இசலி†வளராநின்றுள்ள செந்நெலை யுடைத்தான வயலிலே மிக்க பொய்கைகளில் பரிஸரமெல்லாம், ஆகாசாவகாசம் வெளி யடையும்படி ஓங்கின பொழிலாய்க் கிடக்குமாய்த்து ... ... (௪)

அ௫.—நாலாம்பாட்டு. (பருங்கையித்யாதி) பசிக்கோபத்தாலே வந்த வனைக் கை ஓய்ந்துபோகப்பண்ணின வளவன்றிக்கே, கைவிஞ்சின கைம்மாவையும் எதிரிட்ட முருடரையும் ஜந்மஶத்ருவான கம்ஸனையுமொருநாளிலே வென்றவிஜயத்தைப்பேசி யநுஸந்திக்கிறுரென்று ஸங்கதி.

இசலி - ஸ்பர்த்தைபண்ணி. ... ... (௪)

மூ.—சாடுபோய்விழத்தாள்நிமிர்த்தீசன் தன்படையோடுங்கிளையோடு
மோடவாணனையாயிரம் தோள்களும் துணித்தவனுறைகோயில்
ஆடுவான்கொடியகல் விசும்பணவிப்போய்ப் பகலவனொளிமறைக்கும்
மாடமாளிகைசூழ்தரு நாங்கூர்வண்புருடோத்தமமே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
சாடு	அஸுராவிஷ்டமான சகடமானது	தாள்	திருவடிகளை
		நிமிர்த்து	நீட்டி
போய்	தூரத்திலே போய்	ஈசன்	ருத்ரன்
விழ	விழுந்து முடியும்படியாக	தன் படையோடும்	தன்னுடைய ஸேநைகளோடும்

இளையோடும்	ஷண்முகன் கணபதி	கொடி	த்வஜங்கள்
	முதலிய மற்று முள்	அகல்	பரந்த
	ள பரிகரங்களோடும்	விசும்பு	ஆகாசத்தை
	கூட [ய்து	அணவி	தழுவிக்கொண்டு
ஓட	தோற்றோடும்படி செ	போய்	உயரக்கிளம்பிப்போய்
வாணனை	பாணாஸுரனுடைய	பகலவன்	ஸூர்யனுடைய
ஆயிரம்தோ	ஆயிரம் புஜங்களையும்	ஒளி	கிரணங்களை [ன்ற
ள்களும்	[க்ருஷ்ணன்	மறைக்கும்	காணாதபடி மறையாநி
துணித்தவன்	வெட்டிப் போகட்ட	மாடம்	மண்டபங்களாலும்
	உறை கோயில்,	மாளிகை	க்ருஹங்களாலும்
ஆடு	அசையாநின்ற	சூழ்தரு	சூழப்பட்ட
வான்	பெரிய		நாங்கூர்வண்புருடோத்தமம். (ரு)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (சாடித்யாதி) முலைவரவு தாழ்த்த ஸமயத்திலே சகடாஸுரன்வந்து கிட்ட, அவன் முடியும்படியாகத் திருவடிகளை நிமிர்த்து, ஈஶ்வராபிமாநியான ருத்ரன், (க)* முண்டனீறன் தொடக்கமான பரிகரத்தோடே வந்தெதிரிட்டு, பின்னை யவற்றை யடையக்கொண்டு கெட்டோட, இதர ஸமாஶ்ரயணம் பண்ணின பாணனுடைய ஆயிரம் தோளையும் துணித்தவன், இன்னும் ஆஶ்ரிதருடைய விரோதிகளைப் போக்குகைக் கிடாகவந்து வர்த்திக்கிறதேசம்.

(ஆடித்யாதி) அசையாநின்றுள்ள பெரிய கொடிகளானவை, பரப்புடைத்தான ஆகாசத்தைத் தழுவிக்கொண்டுபோய், ஆதித்ய கிரணங்களை மறையாநின்றுள்ள மாடங்களாலும் மாளிகைகளாலும் சூழப்பட்ட... ... ... (ரு)

அரு.—அஞ்சாம்பாட்டு. (சாடித்யாதி) இவன் விரோதி நிரஸந சீலனானது அடிதொடங்கி ஸித்தமென்று கொண்டு, ஈஶ்வராபிமாநியாயும் துர்மாநியாயு மிருக்கிற இந்த்ர கம்ஸாதி நிரஸநங்களைப் பண்ணினவளவன்றிக்கே, அந்த ஈஶ்வராபிமாநிகளில் தலையானவனும் கைவிஞ்சின துரபிமாநியும் கூடி எதிரிட, கெட்டோடவும் கைகழியவும் பண்ணின பெருமிடுக்கனென்றநுஸந்திக்கிறரென்று ஸங்கதி ... ... (ரு)

மூ.—அங்கையாலடிமூன்று நீரேற்றயனலர் கொடுதொழுதேத்தக்
[illegible]ாதரக்கால் நிமிர்த்தருளியகண்ணன் வந்துறைகோயில்
கொங்கை கோங்கவைகாட்ட வாய்குமுதங்கள்காட்ட மாபதுமங்
மங்கைமார்முகங்காட்டிடு நாங்கூர்வண்புருடோத்தமமே. [கள்

(க) கி-ச-வி-எக.

பதம்.	உரை.	பதம்.	உரை.
மூன்று அடி	மூன்றடி நிலத்துக்காக	கோங்கு	கோங்கு மரத்தினரும்
அம்	அழகிய	அவை	புகளானவை
கையால்	திருக் கையினால் [ன்பு)	மங்கைமார்	(அவ்வூரிலுள்ள) பெண்களுடைய
நீர் ஏற்று	தாநஜலத்தைவாங்கி, (பி	கொங்கை	ஸ்தநங்களை
அயன்	ப்ரஹ்மாவானவன்	காட்ட	தர்சிப்பியாநிற்க
அலர்கொடு	புஷ்பங்களை ஸம்பாதித்துக்கொண்டு	குமுதங்கள்	செவ்வாம்பல்களானவை
தொழுது	ஆஸ்ரயித்து	வாய்காட்ட	அதரங்களைக் காட்டாநிற்க
ஏத்த	ஸ்தோத்ரம் பண்ணும்படி யாகவும்	மா	அழகிய [வை
கங்கை	கங்காநதியானது	பதுமங்கள்	தாமரைப் பூக்களான
போதர	புறப்படும்படி யாகவும்	முகம்	முகத்தை
கால்	திருவடிகளை	காட்டிடும்	காட்டாநின்றுள்ள (அவ்வவ அவயவங்கள் போல் தோற்றுநின்ற கோங்கு முதலியவைகளையுடைய)
நிமிர்த்தருளிய	நீட்டின		
கண்ணன்	ஸர்வேஸ்வரன்		
வந்து	(இன்னும்) ஆஸ்ரித ரக்ஷணார்த்தமாகவந்து		
உறை கோயில்,		நாங்கூர்வண்புருடோத்தமம். (கூ)	

வ்யா.—ஆறும்பாட்டு. (அங்கை இத்யாதி) (க) "కోసహస్ర ప్రదాతారమ్- கோஸஹஸ்ரப்ரதாதாரம்" என்கிறபடியே கொடுத்து வளர்ந்த அழகிய கையைக்கொண்டு மூவடியை நீரேற்று, திருக்கையிலே நீர் விழுந்த வநந்தரம் வளர்ந்தருளுகிறபோது ப்ரஹ்மபதத்தளவும் சென்று அவன்கையிலே திருவடிகளிருக்க, அவன் புஷ்பார்த்யுபகரணங்களைக் கொண்டு ஆஸ்ரயிக்கும்படியாகவும், கங்கை புறப்படும்படியாகவும் திருவடிகளை நிமிர்த்தருளின ஸர்வேஸ்வரன் நித்யவாஸம் பண்ணுகிற தேசம்.

(கொங்கை இத்யாதி) அங்குத்தைக் கோங்குகளினுடைய அரும்புகளானவை அவ்வூரில் ஸ்த்ரீகளுடைய ஸ்தநங்களைக்காட்ட, அங்கே அலர்ந்துநிற்கிற அரக்காம்பலானவை அவர்களுடைய அதரத்தைக்காட்ட, †செவ்விபெற வலர்ந்த செந்தாமரைப்பூக்கள் முகங்களைக் காட்டாநிற்குமாய்த்து. † இத்தால் சொல்லிற்றாய்த்த தென்னென்

(க) ரா-யு-உக-எ.

http://acharya.org

னில், ஊருக்கும் வயலுக்கும் வாசி தெரிந்து ப்ரதிபத்தி பண்ணுகை அரிதாயிருக்கு மென்றபடி. ... ... (௬)

அ௫.—ஆறும்பாட்டு. (அங்கையாலித்யாதி)கீழ்ப்பாட்டில். ஈஶ்வராபிமாநியான ருத்ரனையும் அவனைப்பற்றின தேவதாந்தர பரனையு மடக்கின படி சொன்னார்; இதில், அவருக்குங்கூட ஜநகனாயிருக்கிற ப்ரஹ்மா தன்னீஶ்வராபிமாநம் கொலைந்து தொழும்படியையும், எல்லாரையு மடிக்கீழிட்டபடியையு மநுஸந்தித்து, த்ரிவிக்ரமாபதாநத்தை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதி. அன்றிக்கே, "சாடுபோய் விழத்தாள் நிமிர்த்து" என்று ப்ரஸ்துதமான தாள் நிமிர்த்தபடியை த்ரிவிக்ரமாபதாநத்திலும் காண்கையாலே அத்தை யநுபவிக்கிறாரென்னுதல் ஸங்கதி கண்டு கொள்வது.

"மா" என்று சோபா (ஶோபா) நிசயமாய், அத்தை யருளிச்செய்கிறார் (செவ்வியித்யாதி). திவ்யதேசத்துக்குச் சிறப்பு சொல்லவேண்டிற்றாகில் வேறே சில சொல்லவேண்டாவோ, வீதராகரான இவர் மங்கைமார்களை இப்படி வர்ணிக்கவேணுமோ வென்னும் ப்ரஶ்நத்தை யநுவதித்துப் பரிஹரிக்கிறார் (இத்தாலித்யாதி). இவர்க்கு திவ்யதேசத்திலுள்ள மரங்களோடு மங்கைமாரோடு வாசியில்லை, அங்குள்ளதெல்லாம் ததீயமாகையாலே அவற்றில் பரஸ்பர ஸாரூப்யத்தைக்கண்டு பேசுகிறாரென்று பரிஹாரத்துக்குக் கருத்து... ... ... (௬)

மூ.—உளையவொண்டிறல் பொன்பெயரோன் தனதுரம்பிளந்துதிரத்
யளையும் வெஞ்சினத்தரிபரிகீறியவப்பன் வந்துறைகோயில் [தை
இளையமங்கையரிணையடிச் சிலம்பினோடெழில்கொள்பந்தடிப்போ
வளையில்நின்றொலிமல்கிய நாங்கூர்வண்புருடோத்தமமே. [ர்கை

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஒள்	அதிகமான	வெம்	க்ரூரமான [னை
திறல்	பலத்தையுடைய	சினத்து	கோபத்தை யுடைய
பொன் பெயரோன்	ஹிரண்ய னைவன் [யாக	அரி	நரஸிம்ஹனாய், [யை
		பரி	குதிரையாய்வந்த கேசி
உளைய	மனம் வருந்தும்படி	கீறிய	கிழித்துப்பொகட்டவனை
(அவன்)தனது	அவனுடைய	அப்பன்	உபகாரகன்
உரம்	மார்வை		வந்து உறை கோயில்,
பிளந்து	கிழித்து	இளைய மங்கையர்	சிறுப்பெண்கள் (ஆடும்போது)
உதிரத்தை	ரக்தத்தை		
அளையும்	கைகளினால் கலக்காநின்றவனாய்	இணை அடி	இரண்டு கால்களிலு மணிந்த

http://acharya.org

சிலம்பிஞெ தண்டைச் சிலம்பி ஞெ டு லியோடு கூட	கைவளேயில் கைகளிலணிந்த வளேக நின்று ளில் நின்றும் புறப்ப
எழில்கொள் அழகுடைத்தான	ஒலி கோஷமானது [டாநின்ற
பந்து அடிப் பந்தடிப்பவர்களுடைய போர்	மல்கிய அதிசயித்திருக்கிற நாங்கூர்வண்புருடோத்தமம். (எ)

வ்யா.—ஏழாம்பாட்டு. (உளேய) †ஒருநாளு மச்சமிருக்கும்படி புதியதுண்டறியாதாளுய் மிக்க மிடுக்கையுடையஞ யிருக்கிற ஹிரண் யனுனவன் நெஞ்சுளேயும்படியாக †அவன் மார்வை இருகூறும்படி பிளந்து. (உதிரத்தையளேயும் வெஞ்சினத்தரி) அவன் முடிந்துபோ கச்செய்தேயும், சிறுக்கன் பக்கலுண்டான வாத்ஸல்யத்தாலே சீற் றம் மாருதே ருதிரவெள்ளத்தை வெண்ணெய்போலே யளேந்த நர ஸிம்ஹம். எல்லாருமொக்க அஞ்சும்படி வந்து தோற்றின கேசிவா யைக் கிழித்துத் தன்னேத்தந்த மஹோபகாரகன் வர்த்திக்கிறதேசம்.

அவ்வூரில் பா (ஊ) லிகளான ஸ்த்ரீகளாடுகிற காலில் சிலம்பினு டைய த்வநியோடேகூட அழகிய பந்துகளே யடியாநின்றுள்ளார் கை களிலாபரணங்களுடைய த்வநியானது மிக்கு மற்றுமுண்டான நகர கோ(ஞூ)ஷத்தை அபிபவித்துத் தான் மேற்படநிற்குமாய்த்து... (எ)

அரு.—ஏழாம்பாட்டு. (உளேய வித்யாதி) த்ரிவிக்ரமாவதாரம் பண் ணி எங்கும் வ்யாபித்த படியை யநுஸந்தித்தவாறே (க) "எங்குமுளன் கண்ணன்" என்கிறபடியே அந்தர்யாமித்வம் ப்ரத்யபிஜ்ஞாவிஷயமாய், அத்தை இசையாத வன்னெஞ்சனை பொன்னன் நெஞ்சிடந்த கேசவனே அநுபவிக்கிருரென்று ஸங்கதி.

"ஒண்டிறல் பொன் பெயரோன், உளேய, அவன் றனது உரம்பிள ந்து" என்று கூட்டி யர்த்த மருளிச்செய்கிருர் (ஒருநாளுமித்யாதி). பிள ந்திருக்கச் செய்தேயும் அளேயவேண்டுவா னென்னென்ன வருளிச்செய் கிருர் (அவனித்யாதி). ... ... (எ)

மூ.—வாளேயார்தடங்கணுமைபங்கன் வன்சாபமற்றதுநீங்க [யில்
மூளேயார்சிரத்தைய முன்னளித்தவெம்முகில் வண்ணனுறைகோ
பாளேவான்கமுகூடுயர்தெங்கின் வன்பழம்விழவெருவிப்போய்
வாளேபாய்தடம்சூழ்தரு நாங்கூர் வண்புருடோத்தமமே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வாள்	ஒளியானது	தடம்	விசாலமான
ஆர்	நிறைந்திருக்கிற	கண்	கண்களேயுடைய

(க) தி-வா-உ-அ-கூ.

http://acharya.org

உமை	பார்வதியை		உறை கோயில்,
பங்கன்	(தன் சரீரத்தில்) ஒரு பக்கத்தி லுடையனை ருத்ரனுடைய	பாளை	பாளைகளை யுடைத்தாய்
		வான்	ஆகாசத்தில் ஓங்கி வளர்ந்திருக்கிற
வன்	க்ரூரமான	கமுகு	பாக்கு மரங்களுடைய
சாபம்	சாபமானது	ஊடு	நடுவில்
நீங்க	தொலைந்துபோம்படி	உயர்	உயர்ந்திருக்கிற
அது	அந்தச்சாபத்துக்கீடான பாபமானது	தெங்கின்	தென்னை மரங்களுடைய
அற்று	தீரும்படியாக,	வன்	பெரிதான
மூளை	எலும்பானது	பழம்	பழமானது
ஆர்	பூர்ணமாயிருக்கிற	விழ	(குளத்தில்) விழ
சிரத்து	(அவன் கையிலொட்டிய) ப்ரஹ்ம கபாலத்தில்	வாளை	(அங்குள்ள) மத்ஸ்யமானது
		வெருவி	பயந்து
ஐயம்	பிச்சையை	போய்	அவ்விடத்தை விட்டுப் போய்
முன்	முற்காலத்திலே		
அளித்த	இட்டவனை	பாய்	மற்றோரிடத்தில் குதித்துச் சேராநின்ற
எம்	எமக்கு உபகாரகனாய்		
முகில் வண்ணன்	மேகம்போன்ற ஸ்வபாவத்தை யுடையனை ஸர்வேஶ்வரன்	தடம்	தடாகங்களினால்
		சூழ்தரு	சூழப்பட்ட
			நாங்கூர்வண்புருடோத்தமம். (அ)

வ்யா.—எட்டாம்பாட்டு. (வாளையித்யாதி) †மிக்க ஒளியையுடைத்தாய்ப் பரந்திருந்துள்ள கண்களையுடைய தேவிக்குத் தன்னுடம்பிலே ஒரு பார்ஶ்வத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கிற தேவனுடைய வலிய சாபமானது நீங்க, லோககுருவுமாய் பிதாவுமாயிருக்கிறவனுடைய தலையை ஒரு ஹேதுவின்றிக்கே யிருக்க அறுக்கையாலே, ஒன்றால் பரிஹரிக்கவரிதாம்படியான பாதகமானது அவனைவிட்டுப் போம்படி, ரக்தஸ்பர்சமொன்று மின்றிக்கே வெறும் அஸ்த்தி(மஜ்ஜை)யேயாயிருக்கிற தலையோட்டில் பிக்ஷையை முன்பருளின மஹோதாரனானவன், வர்த்திக்கிற தேசம்.

(பாளையித்யாதி) பாளையையுடைத்தாய் ஆகாசாவகாச மிடமடையும்படி ஓங்கின கமுகின்நடுவே யுண்டான தெங்குகளினுடைய பெரிய பழங்களானவை, பொய்கைக்கும் தெங்குக்குமுண்டான †அண்ணுமையாலே பொய்கையிலேவந்துவிழ, தன்னை யுத்தேசித்து

http://acharya.org

விழுகிறதாகக்கொண்டு வாளையானது அவ்விடத்தைவிட்டுத் தனக்கு அரணுடைத்தா யிருப்பதொரு ப்ரதேசத்தை யடையாநிற்கு மாயித்து ... ... (அ)

அரு.—எட்டாம்பாட்டு. (வாளையித்யாதி) சிறுக்கன் பக்கல்வாத்ஸல்யத்தாலே உதிரமளைந்த கையோடிருந்தபடியை யநுஸந்தித்தவாறே, இதிற்காட்டில் அதிசயித குணமாகையாலே மஹா பாதகியானவனுக்குக் கை ஓடுகழிய உதிரத்தைக் கொடுத்த கையோடிருந்த படியை யநுஸந்திக்கிறுரென்று ஸங்கதி.

ஐகாரம் அவ்யயமாய், வாளார்தடங்கணுமையைப் பக்கத்திலே யுடைத்தான ருத்ரனுடைய வன் சாபம்நீங்க, அது-சாப ஹேதுவான பாதகமானது, அற்று - தீரும்படியாக, மூளை - எலும்பானது, ஆர் - பூர்ணமாயிருக்கும்படியான, சிரத்தில், ஐயத்தை - உதிரத்தைக் கொடுக்கையாகிற பிச்சையைக் கொடுத்து முகில்போன்ற ஸ்வபாவத்தை யுடையவனென்று சப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறுர் (மிக்கவித்யாதி).
(அண்ணுமையாலே) ஸாமீப்யத்தாலே... ... ... (அ)

மூ.—இந்துவார்சடையீசனைப்பயந்த நான்முகனைத்தன்னெழிலாரும்
உந்திமாமலர் மீமிசைப்படைத்தவனுகந்தினிதுறை கோயில்
குந்திவாழையின் கொழுங்கனிநுகர்ந்துதன் குருளையைத்தழுவிப்போய்
மந்திமாம்பணைமேல்வைகுநாங்கூர்வண் புருடோத்தமமே,

பதம்.	உரை.	பதம்.	உரை.
இந்து	சந்த்ரனை யுடைத்தா		உறைகோயில்,
வார்	நீண்டிருக்கிற [ய்	மந்தி	பெண் குரங்கானது
சடை	ஜடையையுடைய	வாழையின்	வாழை மரத்தினுடை
ஈசனை	ருத்ரனை	கொழு	ஸம்ருத்தமான [ய
பயந்த	ஸ்ருஷ்டித்த	கனி	பழங்களை
நான்முகனை	ப்ரஹ்மாவை	குந்தி	கால்களைக் குந்திக்
தன்	தன்னுடைய தாய்		கொண்டு
எழில்	அழகு	நுகர்ந்து	புஜித்து
ஆரும்	நிறைந்திருக்கிற	தன்	தன்னுடைய
உந்தி	திரு நாபியிலுள்ள	குருளையை	குட்டியை
மா	பெரிய	தழுவி	அணைத்துக்கொண்டு
மலர்	கமலப்பூவினுடைய	போய்	அங்கு நின்றும்போய்
மீமிசை	மேலே [ஸ்வரன்	மாம்பணைமே	மாமரத்தின் கிளைக
படைத்தவன்	ஸ்ருஷ்டித்த ஸர்வே	ல்	ளின்மேல்
உகந்து	களித்து	வைகு	உறங்காநின்ற
இனிது	விருப்பத்துடன்	நாங்கூர்வண்	புருடோத்தமம், (௯)

http://acharya.org

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (இந்து வித்யாதி) சந்த்ரனையுடைத்தான ஜடையையுடைய ருத்ரனை ஸ்ருஷ்டித்த சதுர்முகனைத் தன்னுடைய அழகு மிக்கிருந்துள்ள திருவுந்தியில் பெரிய மலரின்மேலே ஸ்ருஷ்டித்தவன், தன்னாலே ஸ்ருஷ்டனான சதுர்முகனாலே ஸ்ருஷ்டமான ஜகத்தென்று அதினுடைய ரக்ஷணத்துக்குறுப்பாக, அவன் விரும்பி வர்த்திக்கிற தேசம்.

அங்குண்டான வாழைகளானவை தரையிலே தட்டப்பழுத்துக் கிடந்தபடியாலே, அங்குண்டான மந்திகளுண்டு பெண்குரங்கு, "இது அணித்திறே" என்று, வாராக்கிட்டத்தொடங்கும்; அதுதான் பின்னையும் தனக்கெட்டாதே ஓங்கி நிற்கையாலே காலைக்குந்தி அதினுடைய அழகிய ப(ஃ)லங்களை புஜித்து, அநந்தரம் தன் குட்டியை யணைத்துக்கொண்டுபோய் மாம்பழங்களை புஜிப்பதாக உத்யோகித்த விது, அந்தக் குட்டியினுடைய ஸ்பர்சத்தாலும் புக்கத்ரவ்யம் ஸாத்மிக்கைக்காகவும் மாம்பணைகளிலே உறங்காநின்றுள்ள. (௯)

அரு.—ஒன்பதாம்பாட்டு. (இந்துவித்யாதி) கீழ்ப்பாட்டில், அரன் சாபம் தீர்க்கைக்கடி ஏதென்னு மாகாங்க்ஷை பேரனை முறையாலே யென்னுமிடம் தோற்ற அஜ்ஜநகத்வத்தை யநுஸந்திக்கிறார் என்றுஸங்கதி. (௯)

மூ.—மண்ணுளார்புகழ்வேதியர் நாங்கூர் வண் புருடோத்தமத்துள்
அண்ணல்சேவடிக் கீழடைந்துய்ந்தவனொலிமனருள்மாரி
பண்ணுளார்தரப்பாடிய பாடலிப்பத்தும் வல்லாருலகில்
எண்ணிலாதபேரின்பமுற்றிமையவரோடும் கூடுவரே. (௧௦)

திருமங்கையாழ்வார்திருவடிகளேசரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
மண்ணுள்	பூலோகத்தில்	நாங்கூர்	திரு நாங்கூரிலுள்ள
ஆர்	அதிசயித்திருக்கிற	வண்புருடோத்தமத்துள்	வண் புருடோத்தமமென்ற திவ்யதேசத்தில் எழுந்தருளி யிருக்கிற
புகழ்	கீர்த்தியையுடையராய்		
வேதியர்	வேதாத்யயநம் பண்ணுவதே ஸ்வபாவமாக வுடையரான ஸ்ரீ வைஷ்ணவர்கள் வர்த்திக்கிற	அண்ணல்	ஸ்வாமியான ஸர்வேச்வரனுடைய
		சே	ஸுந்தரமான
		அடிக்கீழ்	திருவடிகளின் கீழே

http://acharya.org

அடைந்து	சேர்ந்து	பாடல்	பாசுரமான [டையும்
உய்ந்தவன்	உஜ்ஜீவித்தவராய்	இப்பத்தும்	இந்தப் பத்துப்பாட்
ஆலி	திருவாலியி லுள்ளா	வல்லார்	அப்யஸித்தவர்கள்,
மன்	ராஜாவாய் [ர்க்கு	உலகில்	இந்த லோகத்தில்
அருள்மாரி	க்ருபாவர்ஷியான	எண் இலாத	அஸங்க்யேயமான
	மேகமாயிருக்கிற	பேர் இன்பம்	மஹாநந்தத்தை
	திருமங்கையாழ்	உற்று	அடைந்து(அநந்தரம்)
பண்ணுள்	காநத்திலே [வார்	இமையவரோடும்	நித்ய ஸூரிகளோடு
ஆர்தர	பூர்ணமாயிருக்கும்		
பாடிய	கிர்த்தித்த [படி	கூடுவர்	சேரப்பெறுவர்கள்.

வ்யா.—பத்தாம்பாட்டு. (மண்ணுளாரித்யாதி) மண்ணுள் ஆர் புகழ் வேதியர் என்னுதல், மண்ணுளார் புகழ்என்னுதல்.—†பூமியிலே மிக்க புகழையுடையராயிருக்கிற ப்ராஹ்மணரென்னுதல்; பூமியிலுள்ளாரால் புகழப்பட்டவென்னுதல். †ஸர்வேஶ்வரன் திருவடிகளிலே கிட்டி (க) "ஶஸ்த்ரௌவ ஸம்ப்ரதி-அஸந்நேவ. ஸபவதி" என்னும் நிலை தவிர்ந்து உஜ்ஜீவிக்கப்பெற்றவர். (ஆலிமன்) திருவாலியிலுள்ளார்க்குப் ப்ரதாநரான ஆழ்வார். (அருள்மாரி) ஆஶ்ரிதர்க்கு ப்ரஸாதத்தைப் பண்ணுமிடத்தில் மேகம்போலே மஹோதாரரான ஆழ்வார், பண்ணிலே ஆரும்படியாகப் பாடிய பாடலிப்பத்தையும் வல்லவர்கள், லோகத்திலே நிரவதிகமான ஆநந்தத்தை யுடையராய், அநந்தரம் நிரவதிக ப்ரீதியுக்தரான நித்ய ஸூரிகளோடு ஒரு கோவையாகப் பெறுவர். ... ... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

அரு.—பத்தாம் பாட்டு. (மண்ணித்யாதி) யதாக்ரமமிரண்டு நிர்வாஹத்தையும் விவரிக்கிறார் (பூமியிலே மிக்க வித்யாதி). "அண்ணல்" இத்யாதிக் கர்த்தம் (ஸர்வேஶ்வரனித்யாதி). ... ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

நாலாம்பத்து இரண்டாம்திருமொழி முடிந்தது.

(க) தை-ஆந-ரு-௬.

http://acharya.org

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

நாலாம்பத்து - மூன்றாம் திருமொழி

பேரணிந்து ப்ரவேசம்.

வ்யா.—†ஜ்ஞாநாநந்த ஸ்வரூபனாய் †நிரதிசய போக்யனாய் †என்று மொக்கவுளனாயிருக்கிற ஸர்வேஶ்வரன் †தன்னை யாஶ்ரயிக்குமிடத்தில் புருஷகாரமாம் பிராட்டிமாரோடே கூடவந்து நித்யவாஸம்பண்ணுகிற செம்பொன் செய்கோயிலினுள்ளே நான் காணப்பெற்றேனென்று தாம் பெற்ற பேற்றை யநுபவித்தினியராகிறார். ... *

அரு.—பேரணிந்தின் ப்ரவேசம்.—"பேதியா வின்பவெள்ளத்தை" என்றத்தைக் கடாக்ஷித்து (ஜ்ஞாநாநந்த ஸ்வரூபனாய்) என்றது. "ஏழிசையின் சுவைதன்னை" "உள்ளத்து ளூறியதேனை" இத்யாதியைப்பற்ற (நிரதிசய போக்யனாய்) என்றது. "இறப்பெதிர் காலக்கழிவுமானானை." என்றத்தை யுட்கொண்டு (என்று மொக்கவுளனாய்) என்றது. முதற்பாட்டைத் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (தன்னை யித்யாதி). ... ... *

மூ.—பேரணிந்துலகத்தவர்தொழுதேத்தும்பேரருளாளனெம்பிரானை
வாரணிமுலையாள்மலர்மகளோடு மண்மகளுமுடன்நிற்ப
சீரணிமாடநாங்கை நன்னடுவுள்செம்பொன்செய்கோயிலினுள்ளே
காரணிமேகம்நின்றதொப்பானைக்கண்டுகொண்டுய்ந்தொழிந்தேனே.

பதம்.	உரை.
உலகத்தவர்	லோகத்திலுள்ளாரனைவரும்
பேர்அணிந்து	பெருங் கூட்டமாகக் கூடி
தொழுது	ஆஶ்ரயித்து
ஏத்தும்	ஸ்துதிக்கும்படியிருப்பாய்
பேர் அருளாளன்	(அவர்கள் விஷயத்தில்) நிரவதிகமான க்ருபையைப் பண்ணுமவனாய் [டாய்
கார்	மழைகாலத்திலுண்
அணிநின்றது	அழகியதாயிருக்கிற

பதம்.	உரை.
மேகம் ஒப்பானை	மேகத்தோடு ஸத்ருசனாயிருப்பானாய்
எம்பிரானை	எமக்கு உபகாரகனானவனை,
வார் அணி	கச்சைபூண்ட [ளாய்
முலையாள்	ஸ்தநங்களையுடைய
மலர் மகளோடு	புஷ்பத்திலவதரித்தவளாய் நித்ய யுவதியான பெரிய பிராட்டியாரோடு கூட
மண் மகளும்	ஸ்ரீ பூமிப்பிராட்டியும்
உடன் நிற்ப	கூட நிற்கச்செய்தே,

http://acharya.org

சீர்	ஸம்பத்தை யுடைத் [தாய்	செம்பொன் செய்கோயி லினுள்ளே	செம்பொன் செய் கோயிலென்கிற தி வ்ய தேசத்திலே
அணி	அழகியதான	கண்டு கொ ண்டு	கண்களாலநுபவித்து
மாடம்	மாடங்களை யுடைய	உய்ந்து	உஜ்ஜீவித்து
நாங்கை	திரு நாங்கூரில்	ஒழிந்தேன்	க்ருதார்த்தனானேன்.
நல் நடுவுள்	நன்றான மத்யப்ரதே சத்தி லிருக்கிற		

வ்யா. — முதற்பாட்டு. (பேரணிந்தித்யாதி) †லௌகிகரடங்க ளும் திரண்டு †என்றுமவன் திருவடிகளிலேவிழுந்து திருநாமத்தைச் சொல்லி ஸ்தோத்ரம்பண்ணி யாஶ்ரயிக்க, அவர்களாஶ்ரயணத்தள வல்லாதபடி ப்ரஸாதத்தை யவர்கள் பக்கலிலேபண்ணி அப்படி யெ னக்கு உபகாரகனானவனை. நித்யமான யௌவநத்தையுடையளாய், அத்தாலே ஸர்வேஶ்வரன் திருவுள்ளத்தைத் தன்பக்கலிலே துவக்கி ஆஶ்ரிதருடைய குற்றத்தை (க) "𑌨 𑌕𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌨𑌾𑌪𑌰𑌾𑌧𑍍𑌯𑌤𑌿- நகஶ்சிந்நாபரா த்யதி" என்னும் பெரிய பிராட்டியாரோடேகூட, †"முதல் தன்னிலே குற்றத்தைக் காண்கிறதென், பொறுத்தோமென்று தலை துலுக்குகிற தென்" என்று இவ்வழியாலே அவன்றனக்குங்கூடப் பொறைக்கு உவாத்தாயிருக்கும் ஸ்ரீ பூமிப்பிராட்டியும் கூடநிற்க.

(சீரித்யாதி) முதல் தன்னிலே, லோகத்திற்காட்டில் ஐஶ்வர்யம் விஞ்சி யிருக்குமாய்த்து அவ்வூரில், அதனையடைத் தோற்றும்படி தர்ச நீயமான மாடங்களையுடைய திருநாங்கூரில் நன்றான நடுவுள் செம் பொன்செய்கோயிலினுள்ளே. (காரணியித்யாதி) கார்காலத்திலே வர்ஷோந்முகமாய்க் கொண்டு அழகிய வடிவையுடைத்தாயிருப்ப தொரு மேகம்போலே யிருக்கிறவனைக் கண்ணாலேகண்டநுபவிக்கப் பெற்று (உ) "𑌅𑌸𑌨𑍍𑌨𑍇𑌵-அஸந்நேவ" என்னும் நிலைதீர்ந்து, (உ) "𑌸𑌨𑍍𑌤𑌮𑍇𑌨𑌂-ஸந்தமேநம்" என்கிறபடியே உஜ்ஜீவித்து க்ருதார்த்தனானே னென்கிறார். ... ... (க)

அரு.—முதற்பாட்டு. (பேரணிந் தித்யாதி) பேரணிந்து - பெருக்கத் திரண்டு என்று சப்தார்த்தமாயருளிச்செய்கிறார் (லௌகிக ரித்யாதி). (எ ன்றும்) என்றது "தொழுதேத்தும்" என்கிற வர்த்தமான பலிதார்த்தம். மலர்மகளோடு மண்மகளுடன் நிற்ப என்ன வமைந்திருக்க, "மண்மகளு ம்" என்கிற சகாரத்துக்கு ப்ராதாந்ய மர்த்தமாய், அத்தை யருளிச்செய்கி றார் (முதல் தன்னிலேயித்யாதி). ... ... (க)

(க) ரா-யு-௧௧௬-௪௪. (உ) தை-ஆந-௬.

http://acharya.org

மூ.—பிறப்பொடு மூப்பொன்றில்லவன்றன்னைப்
பேதியா வின்பவெள்ளத்தை
இறப்பெதிர்காலக்கழிவுமானானை
யேழிசையின்சுவைதன்னைச்
சிறப்புடைமறையோர்நாங்கைநன்னடுவுள்
செம்பொன்செய்கோயிலினுள்ளே
மறைப்பெரும்பொருளை வானவர்கோனைக்
கண்டு நான் வாழ்ந்தொழிந்தேனே. (௨)

பதம்.	உரை.
பிறப்பொடு	ஜநநமும்
மூப்பு	வார்த்தகமும் (முதலான விகாரங்கள்)
ஒன்று	சிறிதும்
இல்லவன் தன்னை	இல்லாதவனாய்
பேதியா	ந்யூநாதிக பா(ஞு)வமாகிற பேத (ஷீஜ) மில்லாத (எப்போதுமொருபடிப்பட்ட)
இன்ப வெள்ளத்தை	ஆநந்தத்துக்கு ஸமுத்ரம்போல் நிலையிடமானவனாய்
இறப்பு	பூதகாலத்திலும்
எதிர்காலம்	பவிஷ்யத்காலத்திலும்
கழிவும்	வர்த்தமான காலத்திலும் (காலத்ரயத்திலும்)
ஆனானை	வர்த்திக்குமவனாய்,

பதம்.	உரை.
ஏழ்இசையின்	ஸப்தஸ்வரங்களினுடைய
சுவை தன்னை	ரஸம்போல் போக்யபூதனாய் [ன
மறை	வேதப்ரதிபாத்யமா
பெரும் பொருளை	ப்ரதாநார்த்தமானவனாய்
வானவர்கோனை	நித்யஸூரிகளுக்குத்தலைவனை ஸர்வேச்வரனை,
சிறப்பு உடை	ஆதிக்யத்தை யுடைய
மறையோர்	ப்ராஹ்மணோத்தமர்கள் நித்யவாஸம் பண்ணுகிற
நாங்கைநல் நடுவுள் செம்பொன் செய்கோயிலினுள்ளே,	
நான் கண்டு	நான் கண்களாலநுபவித்து
வாழ்ந்து	உஜ்ஜீவித்து
ஒழிந்தேன்	க்ருதார்த்தனானேன்.

வ்யா.—இரண்டாம்பாட்டு. (பிறப்பித்யாதி) பிறப்பது மூப்பதாகைக்கு ஹேதுவில்லாமையாலே ஜந்மஜராதிகளாகிற ப்ரஸங்கமுமின்றிக்கே யிருக்கிறவனை, பிறப்பது மூப்பதாகா நிற்கச்செய்தே ஒரு ப்ரஹ்மகல்பமாத்ரமிருந்து முடிகிறத்தைக் கொண்டு, பிறப்பும் மூப்புமில்லையென்று சொல்லாநின்றதிறே ப்ரஹ்மாதிகளை; முதலிலே அவ்விடையாட்டமும் சொல்லவொண்ணாதிருக்கிறவனை, (பே

http://acharya.org

தியா வின்பவெள்ளத்தை) பேதியாத ஆநந்தஸமுத்ரத்தை. (க)"ஆநந்த மயஃ - ஆநந்தமயஃ" என்னக்கடவதிறே. ஆநந்தப்ராசுர்யத்தைச் சொல்லுகிறது. ஜீவாத்மாவினுடைய ஸ்வரூபமும் நித்யமாய், தர்ம பூதஜ்ஞாநமும் நித்யமாயிருக்கச்செய்தேயும், ஜ்ஞாநப்ரஸரத்வாரத்தி னுடைய ஸங்கோசவிகாஸத்தைப் பற்ற ஜ்ஞாநத்துக்கு உதயாஸ்த மய வ்யவஹாரம் பண்ணுகின்றதிறே. அவ்வோபாதி ஸ்வரூபமும் நித்யமாயிருந்ததேயாகிலும் கர்மநிபந்தநமாக உண்டான அசித்ஸம் ஸர்க்க வியோகங்களால் "பிறந்தான்," "முடிந்தான்," என்கிற வ்யப தேசத்துக்கு அர்ஹமாகா நின்றதிறே; அப்படியிருப்பதொரு கர்ம மில்லாமையாலே ஒருநாளும் பேதிக்கக்கடவதன்றிக்கே என்று மொ க்க ஏகரூபமான ஸ்வரூபத்தை யுடையவனை.

இப்படி யிருக்கையாலே, காலத்ரயத்திலு முள்ளவனை. இறந்த வென்கிறவிது-பூதகாலத்தை; எதிர் - பவிஷ்யமானகாலத்தை; கழிவு- வர்த்தமாநகாலத்தை; காலத்ரயத்திலு முளனானவனை. ஜந்மஜராதிகளை யுடையவனன்றிக்கே, என்றுமொக்க ஏகரூபமான ஸ்வரூபத்தை யுடையனாய்க்கொண்டு காலத்ரயத்திலு முளனானவனை. (ஏழிசை யின் சுவைதன்னை) ஸப்தஸ்வரங்களிலுமுண்டான ரஸவஸ்துதானொ ரு வடிவுகொண்டாப்போலே நிரதிசய போக்யபூதனா யிருந்துள்ள வனை. (பேதியா வின்பவெள்ளம்) என்றவிடம் ஸ்வரூபத்தினுடைய போக்யதை சொல்லிற்று; இங்கு, குணயோகத்தால்வந்த போக்யதை சொல்லுகிறது.

(சிறப்பித்யாதி) சிறப்பால், மிகுதியைச்சொல்லுகிறது. ஆக, ப்ராஹ்மண்யத்தால் வந்த ஆதிக்யத்தையுடைய ப்ராஹ்மணருடைய திருநாங்கூரில் நன்றான நடுவுள். (செம்பொன்செய் கோயிலினுள் ளே) பரமபதத்திலே போயன்றிக்கே. (மறைப்பெரும்பொருளை) மறைக்குப் பொருளாயிருப்பர்களிறே ஜீவாத்மாக்களும், ப்ரஹ்மாதி களும்; அவர்களைப்போலன்றிக்கே, ஸ்வேதர ஸமஸ்தவஸ்துக்களும் தனக்குப்ரகாரமாய்த் தான் ப்ரகாரியாயிருக்கையாலே வேதத்துக்கு ப்ரதாந தயா வாச்யபூதனாயுள்ளவனை. (உ)"வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்யஃ - வேதைஶ்ச ஸர்வை ரஹமேவவேத்யஃ." (ங) "ஸர்வே வேதா யத்பத மாமநந்தி - ஸர்வேவேதா யத்பத மாமநந்தி." (வானவர்கோனை) இப்படியிரு

(க) தை-ஆந-டு. (உ) கீதை. (ங) கடோப-உ-கடு.

http://acharya.org

க்கிறவன் றான் *அயர்வறுமமரர்களதிபதியாய்த்து; இனி வேதந்தா னும், (௧) "ஜிஹ்ராஸ் விபந்யவோ ஜாக்ருவாம்ஸ ஸமிந்ததே - தத்விப்ராஸோ விபந்யவோ ஜாக்ருவாம்ஸஸ் ஸமிந்ததே" என்றிறே ஓதுவது; இப்படி யிருக்கிறவனை, வேதைகஸமதிகம்யனைக் கேட்கையன்றிக்கே கண்ணாலே காணப்பெற்று. (வாழ்ந்தொழிந்தேன்) இனி வாழுகைக்கு ஒரு தேசவிசேஷம் தேடிப் பொதிசோறு கட்டி அறுகாதப்பயணம் போகவேண்டாதே க்ருதார்த்தனைப் பெற்றேனென்கிறார். ... (௨)

அரு.—இரண்டாம்பாட்டு. (பிறப்பித்யாதி) கீழ்ப்பாட்டில் திவ்ய மங்கள விக்ரஹத்தை யநுபவித்தார்; இதில், அதுக்குள்ளீடான திவ்யாத்மஸ்வரூப வைலக்ஷண்யத்தை யநுபவித்து ஹ்ருஷ்டராகிறாரென்று ஸங்கதி.

மூப்பில்லை என்ன வமையாதோ, "ஒன்றில்லை" என்று விசேஷிப்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (பிறப்பது மூப்பதாகாகிற்க வித்யாதி). "பேதியா" என்கைக்கு, பேதிக்கிற வின்பத்தையுடைய தொரு வஸ்துவுண்டோவென்ன வருளிச்செய்கிறார் (ஜீவாத்மாவினுடைய வித்யாதி).

வேதப்ரதிபாத்யன் வானவர்கோனேவென்ன வருளிச்செய்கிறார், (இனி வேதந்தானு மித்யாதி). ... ... (௨)

மூ.—திடவிசும்பெரி நீர் திங்களும் சுடரும்
செழு நிலத்துயிர்களும் மற்றும்
படர் பொருள்களுமாய் நின்றவன்றன்னைப்
பங்கயத்தயனவனனைய
திடமொழி மறையோர் நாங்கை நன்னடுவுள்
செம்பொன்செய்கோயிலினுள்ளே
கடல்நிறவண்ணன்றன்னை நானடியேன்
கண்டுகொண்டுய்ந்தொழிந்தேனே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
திடம்	த்ருடமான	நிலத்து	பூமியிலுள்ள
விசும்பு	ஆகாசமும்	உயிர்களும்	ப்ராணிகளும்
எரி	அக்நியும்	மற்றும்	இன்னுமுள்ள
நீர்	ஜலமும்	படர்	விஸ்த்ருதமான
திங்களும்	சந்த்ரனும்	பொருள்களும்	பதார்த்தங்களும் (ஆகிய இவற்றுக்கு)
சுடரும்	ஸூர்யனும்	ஆய்	அந்தராத்மாவாய்க் கொண்டு
செழு	வளம் மிக்க		

(௧) புருஷஸூ.

http://acharya.org

நின்றவன்தன்	இருக்குமவனாய்னை	திடம்	அவிசால்யமான
கடல்	ஸமுத்ரத்தினுடைய	மொழி	உக்தியையுடையனான
நிறம்	வர்ணத்தோடொத்த	அயன் அனைய	ப்ரஹ்மாவோடொத்த
வண்ணன்	மேனியையுடையனானவனை,	மறையோர்	ப்ராஹ்மணோத்தமர் வஸிக்கிற
தன்னை		நாங்கைநல் நடுவுள் செம்பொன் செய் கோயிலினுள்ளே,	
பங்கயத்து	திருநாபிகமலத்தில் பிறந்தவனாய் [னாய்	அடியேன்	தாஸபூதனான
அவன்	அப்படி ப்ரஸித்த	நான்	நான்
		கண்டுகொண்டுய்ந் தொழிந்தேன்.	

வ்யா.—மூன்றாம்பாட்டு. (திடவிசும்பு) †லோகாயதிகன், முதலிலே "ஆகாசமென்றொரு தத்வமில்லை" என்றான், அவனுடைய மதத்தை நிரஸிக்கைக்காக வைதிகப்ரக்ரியையின்படியே (க) "ஆகாஶாத்வாயுஃ - ஆகாசாத்வாயுஃ" என்கிற க்ரமத்திலே அல்லாதவை யெல்லாமுண்டாவதுக்கு முன்னே யுண்டாவதுமாய், அவையழிந்தாலும் சில நாள் நின்றழியுமதுவுமாயிருக்கையாலும்,(திடவிசும்பு) என்கிறானாகவுமாம். †அன்றிக்கே, பதார்த்தங்களுக்கெல்லாம் ஒரோஸ்வபாவம் நியதமாயிருக்கையாலே வ்யவஸ்த்திதஸ்வபாவமான பூதபஞ்சகத்தைச்சொல்லுதல். †இம்மூன்றும் அஞ்சுக்குமுபலக்ஷணமாய்; இது தன்னில் ஒன்றில் சொன்னஸ்வபாவம் மற்றை நாலினு மேறக்கடவதாயிருக்குமாய்த்து. (திங்களும்சுடரும்)கார்யவர்க்கத்துக்கெல்லா முபலக்ஷணம். கார்யகோடியில் சந்த்ரஸூர்யர்களும், பூமியில்மநுஷ்யர்களும், மற்றும் அநுக்தமான தேவ திர்யக் ஸ்த்தாவரங்களுமாய்க்கொண்டு விஸ்த்ருதனாய் நின்றவனை. (உ) †"தத்ஸ்ருஷ்ட்வா-தத்ஸ்ருஷ்ட்வா" இத்யாதியிற்படியே இவற்றையடையவுண்டாக்கி, இவற்றினுள்ளே தானநுப்ரவேசித்து, அத்தாலே இவையெல்லாம் தானென்னலாம்படி நிற்கிறவனை. (௩) "தத்த்வமஸி - தத்வமஸி" (௪) "அயமாத்மா ப்ரஹ்ம - அயமாத்மாப்ரஹ்ம" (௫) "ப்ரஹ்மதாஶாঃ - ப்ரஹ்மதாஶாঃ" என்றும் சொல்லுகிற படியே.

(பங்கயமித்யாதி) திருநாபிகமலத்தைப் பிறப்பிடமாகவுடைய ப்ரஹ்மாவைப்போலே, பழுதுபோகாதவார்த்தையை யுடையராயிருப்பார்கள். † தானென்றைச்சொன்னால் தன்னானுமது பேதிக்கப்போ

(க) தை-ஆந-க. (உ) தை-ஆந-௬. (௩) சாந்தோ-௬-அ-எ.
(௪) ப்ரு-உ-ப-௬-௪-௫. (௫)

காதே வேறே யதுக்கொரு போக்கடிதேடவேணுமிறே. நீசொன்னது பழுதுபோகாமையாலே நாங்கள் †மிறுக்குப்படாநின்றோமிறே என்றார்கள் தேவர்கள். (கடலித்யாதி) காணவே தாபத்ரயமாறும்படி ஸ்ரமஹரமான வடிவையுடையவனைக் கண்டநுபவித்து நான் உஜ்ஜீவிக்கப் பெற்றேனென்கிறார். ... ... (௩)

அந.—(திடமித்யாதி) கீழ்ப்பாட்டில் அநுஸந்தித்த திவ்யாத்ம ஸ்வரூபத்தினுடைய ஸர்வவ்யாபக சீலதையை யநுஸந்தித்து இனியராகிறாரென்று ஸங்கதி.

எரி, நீர், இவற்றுக்கு விசேஷணமிடாமல், *விசும்பொன்றுக்கும் "திடம்" என்று விசேஷிப்பானென் னென்ன வருளிச்செய்கிறார் (லோகாயதிக னித்யாதி). இப்போது பரமதநிரஸநத்துக்கு ப்ரஸக்தியில்லாமையாலே, இப்பதம் எல்லாவற்றுக்கும் விசேஷணமென்று யோஜநாந்தர மருளிச்செய்கிறார் (அன்றிக்கே யித்யாதி). "திடம்" என்றது, வ்யவஸ்தித ஸ்வபாவமா யிருக்கையைச் சொல்லுமென்கை. மற்றை யிரண்டுக்கும் இது விசேஷணமாகைக்குப் பதங்களில்லையே யென்ன வருளிச்செய்கிறார் (இம்மூன்று மித்யாதி). நின்றவனை என்ன வமைந்திருக்க, "தன்னை" என்றதால் தோற்றின காரணத்வ நிபந்தநமான அதிசயத்தை யுபபாதிக்கிறார் (தத்ஸ்ருஷ்டவேத்யாதி). தாசா: - சம்படவர்களும், ப்ரஹ்ம-ப்ரஹ்மமென்றபடி.

இவ்வூரில் ப்ராஹ்மணர்க்குப் போலியாகச் சொல்லுகைக்கு ப்ரஹ்மாதான் திடமொழியோ வென்ன வருளிச்செய்கிறார் (தானொன்றை யித்யாதி). ஒன்றைச் சொல்லுகை - ராவணாதிகளுக்கு வரம் கொடுக்கை. (மிறுக்குப்பட) என்றது, ராவணாதிகளாலே பீடைபட வென்றபடி. இத்தால். ப்ரஹ்மாவைப்போலே அங்குள்ள ப்ராஹ்மணர் வரப்ரதாந ஸமர்த்தமான வசந தார்ட்யமுடையராயிருப்பரென்றதாய்த்து. ... (௩)

ரு.—வசையறுகுறளாய் மாவலிவேள்வியில்
மண்ணளவிட்டவன்றன்னை
அசைவறு மமரரடியிணை வணங்க
வலைகடல் துயின்ற வம்மானைத்
திசைமுகனனையோர் நாங்கைநன்னடுவுள்
செம்பொன்செய்கோயிலினுள்ளே
உயர்மணிமகுடஞ்சூடி நின்றானைக்
கண்டுகொண்டுய்ந்தொழிந்தேனே. (ச)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வசை	தோஷம்	கடல்	திருப்பாற்கடலில்
அறு	அற்ற	துயின்ற	கண்வளர்ந்தருளின
குறளாய்	வாமநனாய்க்கொண்டு	அம்மானே	உபகாரகனாய்
மாவலி	மஹாபலியினுடைய	உயர்	ச்லாக்யமான [த
வேள்வியில்	யாகத்தில்	மணி	மாணிக்கங்களிழைத்
மண்	பூமியை	மகுடம்	திருவபிஷேகத்தை
அளவிட்டவன் தன்னை	அளந்தவனாய்	சூடி	அணிந்து [வனே,
		நின்றானை	எழுந்தருளியிருக்கிற
அசைவு	சாஞ்சல்யம்	திசைமுகன்	சதுர்முகனோடு
அறும்	அற்றிருக்கிற	அனையோர்	ஒத்தப்ரபாவமுடையரான ப்ராஹ்மணருடைய
அமரர்	நித்யஸூரிகள்		
அடி இணை	ஸ்ரீபாதத்வந்த்வத்தில்		
வணங்க	ஆஸ்ரயித்து அடிமை செய்யும்படியாக	நாங்கைநல் நடுவுள்செம்பொன்செய் கோயிலினுள்ளே	
அலை	அலையெறிகிற	கண்டுகொண்டுய்ந்தொழிந்தேன்.	

வ்யா.—நாலாம்பாட்டு. (வசையறுகுறளாய்) வாமநவேஷத்தைப்பரிக்ரஹிக்கிற விடத்தில்† ஒருகுறை சொல்லவொண்ணாதபடியான குறள்வடிவை யுடையனாய், மஹாபலியுடைய யஜ்ஞவாடத்திலே பூமிப்பரப்படைய வளந்தவன்றன்னை. (அசைவித்யாதி) †ப்ராஹ்மாதிகள் திருப்பாற்கடலிலே சென்று கூப்பிட்டால், இக்கரையிலேநின்று கூப்பிடுகையொழிய உள்ளுப்புக்கு ஒருபரிசர்யைபண்ணவொண்ணாதபடியிருக்கையாலே, அஸ்ப்ருஷ்டதோஷகந்த(ர்)ரான நித்யஸூரிகள் வந்தடிமைசெய்யும்படி அலையெறியாநின்றுள்ள திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளினவனை. அசைவறுகையாவது - ஒருநாளுத்க்ருஷ்டராகா ஒருநாளாகத் தாழ்ச்சிசெய்யுமதன்றிக்கேயிருக்கை.

(திசைமுகனித்யாதி) தனித்தனியே ஸ்ருஷ்டிக்ஷமராயிருக்கிற ப்ராஹ்மணர்வர்த்திக்கிற. (உயர்) பசுக்களையுமிடையரையும் நோக்குகைக்காகக் கோவிந்தாபிஷேகம்பண்ணி நின்றாப்போலே, ஸம்ஸாரிகளுடைய ரக்ஷணத்துக்காக முடிசூடிநிற்கிறவனை. ... ... (௪)

அ௫.—நாலாம்பாட்டு. (வசையித்யாதி) கீழ்ப்பாட்டில் அந்தர்யாமித்வத்தை யநுஸந்தித்தவர், இப்பாட்டில் விபவத்தையும் அதுக் கடியான வ்யூஹத்தையு மநுஸந்தித்து உகக்கிறாரென்று ஸங்கதி.

*“வசை” என்றதினர்த்தம் (ஒருகுறை) என்றது; வாமநவ(டு)வாய் நடந்தவிடத்தில் அதுக்கு விரோதியான ஸ்ரீயஃபதித்வாதி லிங்கங்களால்

ஈஶ்வரத்வ சங்கைபண்ண வொண்ணாதபடியாயிருக்கை என்று கருத்து. அசைவு - சாஞ்சல்யமாய், அதுதானும் சேஷத்வம் போகையாய், அதில்லாதாரென்று விசேஷித்ததுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (ப்ரஹ்மாதிக ளித்யாதி). ... ... (ச)

மூ.-தீமனத்தரக்கர்திறலழித்தவனேயென்று
சென்றடைந்தவர்தமக்குத்
தாய்மனத்திரங்கி யருளினைக் கொடுக்கும்
தயரதன்மதலையைச்சயமே
தேமலர்ப்பொழில்சூழ் நாங்கை நன்னடுவுள்
செம்பொன்செய்கோயிலினுள்ளே
காமனைப்பயந்தான் றன்னைநானடியேன்
கண்டுகொண்டுய்ந்தொழிந்தேனே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தீ	துஷ்டமான	தயரதன்	தசரதனுடைய
மனத்து	மநஸ்ஸையுடைய	மதலையை	புத்ரனானவனாய்
அரக்கர்	ராக்ஷஸர்களுடைய	காமனை	மந்மதனை
திறல்	பலத்தை	பயந்தான் தன்னை	பெற்றவனான ஸர்வேஶ்வரனை,
அழித்தவனே	நாசம் செய்தவனே!	சயம்	ஸமூஹமாகச் சூழ்ந்திருப்பதாய்
என்று	என்றுசொல்லிக்கொண்டு	தே	தேன்நிறைந்த
சென்று	கிட்டி	மலர்	புஷ்பங்களை யுடைத்தான
அடைந்தவர்தமக்கு	அநந்ய கதிகளாய் ஆஶ்ரயித்தவர்கள் விஷயத்தில்	பொழில்	சோலைகளாலே
தாய்மனத்து	மாதாவினுடைய மநஸ்ஸுபோலே	சூழ்	சூழப்பட்ட
இரங்கி	கரைந்து	நாங்கைநல்நடுவுள் செம்பொன்செய் கோயிலினுள்ளே,	
அருளினை	க்ருபையை	அடியேன் நான் கண்டுகொண்டுய்ந் தொழிந்தேன்.	(ரு)
கொடுக்கும்	செய்யாநின்ற		

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (தீமனத்தித்யாதி) தண்ணியநெஞ்சையுடைய ராக்ஷஸருடைய. †ஜநநி என்று வாசிவைத்து ப்ரதிபத்திபண்ணமாட்டாத பொல்லாத நெஞ்சையுடைய ராக்ஷஸர்மிடுக்கைப்போக்கினவனே! என்று. (சென்றடைந்தவர்தமக்கு) "அப்படியே எங்கள் ப்ரதிபந்தகத்தைப் போக்கி ரக்ஷிக்கவேணும்" என்று கிட்டினவர்களுக்கு, தாயினுடைய நெஞ்சின்படியே இரங்கி, †"புறம்பொரு புகலின்

http://acharya.org

றிக்கே நம்பக்கலிலேவந்து கிட்டினவர்களிறே!" என்று ப்ரஸாதத்தைப் பண்ணியருளும் சக்ரவர்த்தித்திருமகனை.

(சயமே) ஸ்வயமென்றபடியாய், அவன் தானேவந்து வாதநாக கிறவென்னுதல்; அன்றிக்கே, ஜயஶப்தமாய், சொன்னசொன்னவிஜயங்களெல்லாம் பொறுக்கும்படி யிருக்கிற திருநாங்கூரென்னுதல்; (சயமேதேமலர்ப்பொழில்)†ஸமூஹமானதேமலர்ப்பொழிலையுடையவென்னுதல். (காமனைப்பயந்தான்றன்னை) நாட்டிலழகுக்குத்தன்னை மதிக்கும்படி திரிவான்காமனிறே; அவனுக்குங்கூட உத்பாதகனானவனை, சேஷபூதனான நான்கண்டுகொண்டு. ... ... (௫)

அ௫.—அஞ்சாம்பாட்டு. (நீமனத்தித்யாதி) கீழ்ப்பாட்டில் விபவத்திலே நெஞ்சு செல்லுகையாலே, விபவந்தான் பலபடி யிருக்கையாலே அவற்றில் ராமக்ருஷ்ணாவதாரங்களைப் பேசி யநுபவித்துக் களிக்கிறார் என்று ஸங்கதி.

கீழ்ச்சொன்ன நெஞ்சின்தண்மையை விவரிக்கிறார் (ஜநநியித்யாதி). அடைந்தவர்க்கு என்னாதே, "தமக்கு" என்கையாலே ஆகிஞ்சந்யாநந்யகதித்வங்களாகிற தானான தன்மை தோற்றுகையாலே, அத்தை யுட்கொண்டருளிச்செய்கிறார் (புறம்பித்யாதி).

"சயம்" என்றது-ச (ஸ) யசப்தமாக மூன்றும்யோஜனை யருளிச்செய்கிறார் (ஸமூஹமான வித்யாதி). ... ... (௬)

மூ.—மல்லை மா முந்நீரதர்பட மலையா

லணைசெய்து மகிழ்ந்தவன்றன்னை

கல்லின்மீதியன்றகடிமதி ளிலங்கை

கலங்க வோர்வாளி தொட்டானைச்

செல்வநான்மறையோர் நாங்கை நன்னடுவுள்

செம்பொன்செய்கோயிலினுள்ளே

அல்லிமாமலராள்தன்னொடுமடியேன்

கண்டுகொண்டல்லல் தீர்ந்தேனே. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மல்லை	ஸம்ருத்தமான	மகிழ்ந்தவன்த	ஸந்தோஷித்தவனாய்
மா	ஸம்பத்தையுடைய	ன்னை	[லையின்மேலே
முந்நீர்	ஸமுத்ரமானது	கல்லின்மீது	த்ரிகூடமென்கிற ம
அதர்பட	வழிபடும்படியாக	இயன்ற	கட்டப்பட்ட
மலையால்	பர்வதங்களினால்	கடி	ரக்ஷையான
அணைசெய்து	அணைகட்டி	மதிள்	ப்ராகாரத்தையுடைய

http://acharya.org

இலங்கை — லங்்கையானது
கலங்க — வ்யாகுலமாகும்படி
ஓர் — அத்விதீயமான
வாளி — பாணத்தை
தொட்டானை — ஸ்பர்சித்து விட்டவனை,
செல்வம் — ஸம்பத்தையுடைய
நால்மறையோர் — நாலுவேதங்களையுமோதின ப்ராஹ்மணருடைய
நாங்கைநல்நடுவுள் செம்பொன்செய்கோயிலினுள்ளே,
அல்லி — இதழ்களையுடைய
மா — ஶ்லாக்யமான
மலராள் தன்னொடும் — கமலப்பூவில் வாஸம் செய்கிற பெரியபிராட்டியோடு கூட
அடியேன் கண்டுகொண்டு
அல்லல் — துஃகமானது
தீர்ந்தேன் — தீரப்பெற்றேன். (௬)

வ்யா.—ஆறும்பாட்டு. (மல்லையித்யாதி) நிரவதிகமான ஸம்பத்தையுடைத்தாய்ப் பரந்திருந்துள்ள, முந்நீருண்டு-கடல், அதுவழிபடும்படியாக, †ரத்நாதிகளால் குறைவற்றிருக்குமிறே. நீரிலேயாழக்கடவமலையாலே மல்லைமாமுந்நீரதர்படவணைசெய்து, †லீலாரஸமநுபவித்து ஹ்ருஷ்டனானவனை. த்ரிகூடசிகரத்திலேயிறே லங்கை; அதுக்கு மேலே, அரணாகப்போரும்படி மதிளையுடைத்தான லங்கை †ஒருவர் கூறை எழுவருடுக்கும்படி, கைக்கெட்டிற்றோரம்பை விட்டவனை.

நிரவதிகமான ஸம்பத்தையுடைய ப்ராஹ்மணருடைய. (அல்லியித்யாதி) அவர்களைஶ்வர்யத்துக்கு நிதாநபூதையான பெரியபிராட்டியாரோடேகூடக் காணப்பெற்று, ஸாம்ஸாரிக ஸகல துரிதங்களும் தீரப்பெற்றேன்.... ... ... (௬)

அரு.—ஆறும்பாட்டு. (மல்லையித்யாதி) தீமனத்தரக்கர்திற லழித்தப்ரகாரந் தன்னை யநுஸந்தித்து மகிழ்கிறுரென்று ஸங்கதி.

கடலுக்கு ஸம்பத்தென்னென்ன வருளிச்செய்கிறுர் (ரத்நாதிகளாலித்யாதி). "தன்னை" என்றத்தால் பலிதம் (லீலாரஸ மநுபவித்து) என்றது. "கலங்க" என்றதினர்த்தம் (ஒருவர் கூறையித்யாதி). ... (௬)

மூ.—வெஞ்சினக்களிறும் வில்லொடுமல்லும்
வெருண்டிறுத்தடர்த்தவன் றன்னைக்
கஞ்சனைக்காய்ந்த காளை யம்மானைக்
கருமுகில் திருநிறத்தவனைச்
செஞ்சொல் நான்மறையோர் நாங்கைநன்னடுவுள்
செம்பொன்செய்கோயிலினுள்ளே
அஞ்சநக்குன்றம் நின்ற தொப்பானைக்
கண்டுகொண்டல்லல்தீர்ந்தேனே. (எ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வெம்	க்ரூரமான	கரு	நீலவர்ணமான
சினம்	கோபத்தையுடைய	முகில்	மேகம் போன்ற
களிறு	குவலயாபீடத்தை	திருநிறத்தவனை	ஶ்லாக்யமான மேனியை யுடையனாய்
வெகுண்டும்	கோபித்தும்	அஞ்சனக்குன்றம்	மைமலை யானது
வில்	தநுஸ்ஸை	நின்றது ஒப்பானை	நின்றாற்போல் ப்ரகாசியாநின்றவனை,
இறுத்தும்	முறித்தும்	செம் சொல்	அழகிய (யதார்த்தமான) சொல்லையுடையரான
மல்லும்	மல்லர்களையும்		
அடர்த்தவன் தன்னை	நெருக்கினவனுமாய்		
கஞ்சனை	கம்ஸனை		
காய்ந்த	கோபித்து நிரஸித்த		
காளை	யுவாவான		
அம்மானை	ஸ்வாமியாய்		

நான்மறையோர் நாங்கைநல் நடுவுள்
செம்பொன்செய் கோயிலினுள்ளே
கண்டுகொண் டல்லல்தீர்ந்தேன்.

வ்யா.—ஏழாம்பாட்டு. (வெம்சினமித்யாதி) வெவ்விய சினத்தை யுடைத்தாயிருக்கிற குவலயாபீடத்தையும், அதுக்கவ்வருகே யிட்டு வைத்த வில்லையும், அதுக்குள்ளாக நிறுத்தின மல்லவர்க்கத்தையும்; குவலயாபீடத்தைச் சீறி; வில்லை முறித்து, மல்லை யடர்த்தவன்றன்னை; அதுக்குள்ளே நின்ற கம்ஸனை நிரஸித்த காளை. பருவம்நிரம்பாத வளவிலேயாய்த்து ஈஶ்வரன் செய்ததத்தைச்செய்தது. கம்ஸனை நிரஸித்து, "ஆஶ்ரிதவிரோதி போகப்பெற்றோம்" என்று ஹர்ஷ ப்ரமஹாமான வடிவோடே நின்றவனை.

(செஞ்சொலித்யாதி) செவ்வியசொல்லையுடையராய்த்து அவ்வூரில் ப்ராஹ்மணரிருப்பது. கண்டபடியே சொல்லக்கடவராய், பூதஹிதமே சொல்லக்கடவரான ப்ராஹ்மணர். (அஞ்சநம்) கண்டார்கண் குளிரும்படி ஓரஞ்ஜநகிரி நின்றாற்போலே நிற்கிறவனை. ... (௭)

அரு.— ஏழாம்பாட்டு. (வெஞ்சினமித்யாதி) "காமனைப்பயந்தான்" என்று ப்ரஸ்துதமாய், அந்தக்ருஷ்ணாவதாரத்தில பதாநபரம்பரைகளிலே திருவுள்ளம் மூண்டு, மேல் மூன்றுபாட்டிலும் அநுஸந்தித்து ஹ்ருஷ்டராகிறாரென்று ஸங்கதி.

"அம்மானை" என்றதுக்குத் தாத்பர்யம் (பருவமித்யாதி).... (௭)

மூ.—அன்றியவாணனாயிரந்தோளும்
துணியவன்றாழி தொட்டானை
மின்திகழ்குடுமி வேங்கடமலைமேல்
மேவிய வேத நல் விளக்கைத்

தென்திசைத் திலதமனையவர் நாங்கைச்
செம்பொன்செய்கோயிலி னுள்ளே
மன்றது பொலிய மகிழ்ந்து நின்றானை
வணங்கி நான் வாழ்ந்தொழிந்தேனே. (௮)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அன்றிய	கோபித்த (கலஹித்த)	விளக்கை	தீபம்போலேஸ்வயம்
வாணன்	பாணாஸுரனுடைய		ப்ரகாசனாய் [யில்
ஆயிரம் தோ	ஆயிரம் தோள்களும்	மன்று	(பாகவத) கோஷ்டி
ளும்		அது	அந்த கோஷ்டியா
துணிய	அறுந்துவிழும்படி		னது [க
அன்று	அக்காலத்திலே	பொலிய	ஸம்ருத்த மாம்படியா
ஆழி	ஸுதர்சநத்தை	மகிழ்ந்து	ஸந்தோஷித்து
தொட்டானை	ஸ்பர்சித்து ப்ரயோகி	நின்றானை	எழுந்தருளி யிருக்கு
	த்தவனாய்		மவனை,
மின்	ஒளி	தென்திசை	தென்திக்குக்கு
திகழ்	விளங்காநின்ற	திலதமனையவர்	திலகம்போலே ப்ர
குடுமி	சிகரங்களையுடைய		காசகரான ப்ரா
வேங்கடமலை	திருவேங்கடமென்னு		ஹ்மணோத்தமரு
மேல்	ம் திருமலையின்		டைய
	மேல் [கிறவனாய்	நாங்கைச்செம்பொன்செய்கோயிலி	
மேவிய	நித்யவாஸம் பண்ணு	னுள்ளே,	
வேதம்	வேதப்ரதிபாத்யனாய்	வணங்கி	ஆஸ்ரயித்து
நல்	விலக்ஷணமான	நான்வாழ்ந்தொழிந்தேன்.	(௮)

வ்யா.—எட்டாம்பாட்டு. (அன்றியவித்யாதி) †தன்போனோடே பகைத்த பாணனுடைய தோள்களாயிரமும் கழியும்படி அன்று திருவாழியை ஸ்பர்சித்தவனை, “இன்னமும் பாணன்போல்வார் விரோதிகள்வந்து முளைக்கில் செய்வதென்?” என்று, மின்விளங்காநின்றுள்ள சிகரத்தையுடைத்தான திருமலையிலே நித்யவாஸம் பண்ணுகிற வேதைகஸமதிகம்யனாய், ஸ்வயம்ப்ரகாசமான ஸ்வரூபத்தை யுடையனாயுள்ளவனை.

தெற்குத்திக்குக்குத் திலகம்போலேயிருக்கிறவர்களுடைய, (மன்றதுபொலியமகிழ்ந்துநின்றானை) எல்லாரும் திரளுமிடத்திலே, அவ்விடம் ஸம்ருத்தமாம்படியாகப் பரமபதவிபூதியிற்போலே நிரவதிகப்ரீதியுக்தனாயுள்ளவனை. ... ... (௮)

http://acharya.org

அரு.—எட்டாம்பாட்டு. (அன்றியவித்யாதி) பாலோடு சர்க்கரையைச் சேர்த்துப் பருகுவாரைப்போலே, க்ருஷ்ணாவதாரானுபவத்தில் திருவேங்கடமுடையானையும் சேர்த்தநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

“அன்றிய” சீறிய என்றாய், அருளிச்செய்கிறார் (தன்னித்யாதி). (அ)

மூ.—களங்கனிவண்ணா கண்ணனே என்றன்
கார்முகிலே என நினைந்திட்டு
உளங்கனிந்திருக்குமடியவர் தங்க
ளுள்ளத்துளூறிய தேனைத்
தெளிந்த நான்மறையோர் நாங்கை நன்னடுவுள்
செம்பொன்செய்கோயிலினுள்ளே
வளங்கொள் பேரின்பம் மன்னி நின்றானை
வணங்கி நான் வாழ்ந்தொழிந்தேனே. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
களங்கனி	களாப்பழம்போன்ற	உள்ளத்துள்	ஹ்ருதயத்தில் [இற
வண்ணா	வர்ணத்தையுடையவனே!	ஊறிய	ஊற்றுமாறாதே யிருக்
		தேனை	தேன்போலே போக்யபூதனாய்
கண்ணனே	க்ருஷ்ணனே! [நின்ற		
என்றன்	எனக்கு ப்ரகாசியா	வளம்கொள்	அழகையுடைத்தாய்
கார்முகிலே	வர்ஷாகால மேகம் போல் ஶ்ரமஹரமான வடிவை யுடையவனே!	பேர் இன்பம்	அபரிச்சிந்நமான ஆநந்தத்தை
		மன்னி	அடைந்து [ந்தத்தை
		நின்றானை	எழுந்தருளி யிருக்குமவனை,
என	என்று	தெளிந்த	தத்வார்த்த நிஶ்சயமுடையரான
நினைந்திட்டு	த்யாநித்து	நான்மறையோர் நாங்கை நன்னடுவுள் செம்பொன்செய் கோயிலினுள்ளே	
உளம்	ஹ்ருதயமானது		
கனிந்திருக்கும்	பக்வமாயிருக்கிற		
அடியவர்தங்கள்	ஶேஷபூதருடைய	நான்வணங்கிவாழ்ந்தொழிந்தேன்.	

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (களங்கனியித்யாதி) சிவந்திருத்தல் வெளுத்திருத்தல் செய்கையன்றிக்கே கண்ணுக்குக்குளிர்ந்து களாப்பழப்போலேயிருக்கிற வடிவையுடையவனே!, க்ருஷ்ணனே! ஶ்ரமஹரமான வடிவை எனக்கு முற்றூட்டாக்கினவனே! என்று நினைந்து, ஹ்ருதயமானது பக்வமாயிருக்கும் சேஷபூதருடைய ஹ்ருதயத்திலே யூறின தேன்போலே நிரதிசயபோக்யனானவனை.

(தெளிந்த) ஒருகால் "ஸர்வேஸ்வரன்ரக்ஷகன்" என்றிரா, மற்றொருபோது "வேறொன்று ரக்ஷகம்" என்றிருக்கை யன்றிக்கே, என்று மொக்க "ஸர்வேஸ்வரனே நமக்கு ரக்ஷகன்" என்று தெளிந்திருக்கிற ப்ராஹ்மணர். அழகியதாய் நிரவதிகமான ஆநந்தத்தை யுடையவனாய் நிற்கிறவனே. ... ... (௯)

அ௫.—ஒன்பதாம்பாட்டு. (களங்கனியித்யாதி) பாலும் சர்க்கரையு மநுபவித்தவன் அதில் ரஸ்யதாதிசயத்தைக் கொண்டாடுமாபோலே, தமக்கினிதாகையாலே எல்லார்க்கும் ரஸித்தவனென்றுகொண்டு, இப்படி பரமபோக்யத்தைப் பெறுகையாலே க்ருதார்த்தராய் ஆநந்திக்கிறு ரென்று ஸங்கதி. ... ... (௯)

மூ.—தேனமர் சோலை நாங்கை நன்னடுவுள்
செம்பொன்செய்கோயிலினுள்ளே
வானவர்கோனைக் கண்டமை சொல்லும்
மங்கையார் வாள் கலிகன்றி
ஊனமில் பாடலொன்பதோடொன்று
மொழிவின்றிக் கற்று வல்லார்கள்
மான வெண் குடைக்கீழ் வையகமாண்டு
வானவராகுவர் மகிழ்ந்தே. (௧௦)

திருமங்கையாழ்வார்திருவடிகளேசரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
தேன்	வண்டுகள்	சொல்லும்	ப்ரதிபாதியா நின்ற
அமர்	நிறைந்த [தான		வராய்
சோலை	பொழில்களையுடைய	மங்கையார்	திருமங்கையிலுள்ளார்க்கு ரக்ஷகமான
நாங்கை	திருநாங்கூரில்		
நல்	அழகியதான [லுள்ள	வாள்	வலிய வாளையுடையரான
நடுவுள்	மத்யப்ரதேசத்தி		
செம்பொன் செய் கோயிலினுள்ளே	செம்பொன் செய் கோயிலென்கிற திவ்யதேசத்திலே	கலிகன்றி	ஆழ்வாருடைய
		ஊனம் இல்	லக்ஷணங்களில்குறை
		பாடல்	பாசுரமான [வற்ற
வானவர்	நித்யஸூரிகளுக்கு	ஒன்பதோடு ஒன்றும்	(இப்)பத்துப்பாட்டுக்களையும்
கோனை	ஸ்வாமியான ஸர்வேஸ்வரனை [யை	ஒழிவு இன்றி	பதவாக்யங்களொன்றும் தவறுமல்
கண்டமை	ஸாக்ஷாத்கரித்த படி.		

கற்று வல்லார்கள்	அப்யஸிக்க வல்லவர்கள்,	ஆண்டு	பரிபாலநம் பண்ணி (பின்பு)
மானம்	ப்ரப்பை யுடைத்தாய்	மகிழ்ந்து	ப்ரீதியுக்தராய்
வெண்	வெண்மையான [து	வானவர் ஆகுவர்	நித்ய ஸூரிகளோடொருவராகப்பெறுவர். (௧௦)
குடைக்கீழ்	குடையின்கீழேயிருந்		
வையகம்	பூமியை		

வ்யா.—பத்தாம்பாட்டு. (தேனித்யாதி) வண்டுகள் நெருங்கியிருந்துள்ள சோலையையுடைத்தான திருநாங்கூரிலே செம்பொன்செய் கோயிலினுள்ளே †*அயர்வறுமமரர்களதிபதியைக் கண்டமையாய்த்து சொல்லிற்று. திருமங்கையிலுள்ளார்க்கு மிடுக்கான வாளை யுடையரான ஆழ்வார், லக்ஷணங்களில் குறையறச் சொன்னபத்தும், †ஒன்றும் ‡வழுவவிடாதே அப்யஸிக்கவல்லவர்கள், †பரப்பையுடைத்தான வெண்கொற்றக் குடைக்கீழே, பூமியையடைய பாகவதசேஷமாக்குகைக்காக நிர்வஹித்து, அநந்தரம் நிரவதிக ப்ரீதியுக்தராய், நித்யஸூரிகளோடே ஒரு கோவையாகப்பெறுவர். ... ... (௧)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

அரு.—பத்தாம்பாட்டு. (தேனமரித்யாதி) முதற்பாட்டில் "பேரருளாளனெம்பிரானை" என்று உபக்ரமித்து நிகமத்தில் "வானவர்கோனை" என்று உபஸம்ஹரிக்கையாலே, தேவராஜாபிதா(ஷிதா)நமுடைய தேவப்பெருமானைத் தாம் செம்பொன்செய் கோயிலில் கண்டாராக வருளிச்செய்தாரென்று திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (அயர்வறுமித்யாதி). போ(ஹ)கமண்டபத்தை "நலமுடையவன்" என்றும், *அருள்கொடுக்கும்படிக்கேழில்லாப்பெருமானை "அருளினன்" என்றும், கோயில் திருமலைகளி லெம்பெருமானை யநுஸந்தித்த வநந்தரம், பெருமாள்கோயில் தேவராஜனை "அயர்வறு மமரர்களதிபதி" என்றருளிச்செய்தாரிறே என்று திருவுள்ளம்; இங்ஙனன்றாகில், "கண்டமையாய்த்து சொல்லிற்று" என்னவொண்ணாது; பரமபதநாதனைச் சொல்லிற்றென்றால், கண்ணாலே காணவும் கூடாது, "தொழுது" என்னவும் கூடாதிறே தேசவிப்ரகர்ஷத்தால்; ஆகையால் இங்ஙனே நிர்வஹிக்க வடுக்கும், "உய்ந்தொழிந்தேனே" "வா

‡ (பா) விழவிடாதே.

http://acharya.org

ழ்ந்தொழிந்தேனே" "அல்லல் தீர்ந்தேனே" என்கிற ஒன்பதுபாட்டு மொருதட்டும், ப(ஃ)லஶ்ருதியான விப்பாட்டு ஒருதட்டுமாகத் திருவுள்ளம் பற்றி "ஒன்பதோடொன்றும்" என்கிறாரென்று திருவுள்ளம்பற்றி யருளிச் செய்கிறார் (ஒன்றும் வழுவவிடாதே) என்று. இத்தால் இத்திருமொழி யெல்லாம் ஹர்ஷப்ரகர்ஷத்தால் சொன்னதாகையாலே எல்லாமநுஸந்திக்கத்தக்கதென்றதாய்த்து. "மானம்" என்று அளவாய் (பரப்பை யுடைத்தான) என்றது. (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

நாலாம்பத்து மூன்றாம்திருமொழி முடிந்தது.

http://acharya.org

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

நாலாம்பத்து - நாலாம் திருமொழி

மாற்றரசர் ப்ரவேசம்.

வ்யா.—ஆஸ்ரிதவிரோதி நிரஸநசீலனாய் ஸர்வரக்ஷகனாயிருக்கிற ஸர்வேஸ்வரன் திருத்தெற்றியம்பலத்திலே நம்முடைய விரோதியைப்போக்கி †நம்மையடிமை கொள்ளுகைக்காக வந்து நின்றானென்று ஹ்ருஷ்டராகிறார். ... ... *

அநு.—மாற்றரசர் ப்ரவேசம் (நம்மை யடிமைகொள்ளுகைக்காக வந்து நின்றானென்று ஹ்ருஷ்டராகிறார்) என்றது - "என்செங்கண்மால்" என்று பாட்டுத்தோறும் சொன்னத்தைப்பற்ற. ... ... *

மூ.—மாற்றரசர் மணி முடியும் திறலும் தேசும்
மற்றவர்தம் காதலிமார் குழையும் தந்தை
கால் தளையு முடன்கழல வந்து தோன்றிக்
கதநாகம் காத்தளித்த கண்ணர்கண்டீர்
நூற்றிதழ்க்கொளரவிந்தம் நுழைந்த பள்ளத்
திளங்கமுகின் முதுபாளை பகுவாய் நண்டின்
சேற்றளையில் வெண்முத்தம் சிந்து நாங்கூர்த்
திருத்தெற்றியம்பலத்தென் செங்கண்மாலே. (க)

பதம்.	உரை.	பதம்	உரை.
பள்ளத்து	பள்ளத்திலே முளைத்த [யுடைய	வெண்முத்தம்	வெளுத்தமுத்துக்களை
நூறு இதழ் கொள்	அநேகம் இதழ்களை [வை	சிந்து	இறையாநின்ற
அரவிந்தம்	தாமரைப் பூக்களான	நாங்கூர்	திருநாங்கூரிலுள்ள
நுழைந்த	ப்ரவேசித்த	திருத்தெற்றி யம்பலத்து	திருத்தெற்றியம்பலமென்கிற திவ்யதேசத்திலெழுந்தருளியிருக்கிற
பகுவாய்	பெரியவாயையுடைய	என்	எனக்கு ஸ்வாமியாய்
நண்டின்	நண்டினுடைய	செங்கண் மால்	சிவந்த கண்களையுடையனான ஸர்வேஸ்வரன்,
சேறுஅளையில்	சேற்றை யுடைத்தான வளையிலே	மாற்று அரசர்	சத்ருக்களான துர்யோதநாதிகளுடைய
இளங்கமுகின்	இளையதான பாக்கு மரங்களுடைய		
முதுபாளை	முற்றின பாளையானது		

http://acharya.org

மணி	மாணிக்கங்களிழைத்	கால்	காலிலேகட்டப்பட்ட
முடியும்	கிரீடங்களும் [த	தளையும்	விலங்கும்
திறலும்	ப(ப)லமும்	உடன்	ஒருபொழுதே
தேசும்	மதிப்பும்	கழல	கழன்று விழும்படி யாக
மற்று	அதுக்குமேலே		
அவர்தம்	அந்த துர்யோதநாதி களுடைய	வந்து	பரமபதத்தில் நின்றும் வந்து
காதலிமார்	ஸ்த்ரீகளின்	தோன்றி	அவதரித்தவனுமாய்
குழையும்	காதணியோடுகூடின	கதம்	கோபத்தையுடைய
	மங்கள ஸூத்ராதி	நாகம்	கஜேந்த்ராழ்வானை
	களும்	காத்து	ரக்ஷித்து
தந்தை	(தன்) தகப்பனாரான	அளித்த	க்ருபைபண்ணின
	வஸுதேவருடை	கண்ணர்	தயாவானான க்ருஷ்
	ய	கண்டீர்	ணன் கிடீர். (௧)

வ்யா.—முதற்பாட்டு. (மாற்றரசரித்யாதி) (௧)† "द्विषदन्नं न भोक्तव्यं द्विषन्तं नैव भोजयेत् -த்விஷதந்நம் நபோக்தவ்யம் த்விஷந்தம் நைவ போஜயேத்" என்று பாண்டவர்களுக்கு சத்ருக்களான துர்யோதநாதிகளை "நீங்களெனக்கு சத்ருக்கள்; உங்கள் சோறுமெனக்குண்ணலாகாது, உங்களுக்கு என்னை (ஷ)புஜிப்பிக்கவுமாகாது" என்றருளிச்செய்தபடியே, தனக்கு மாற்றாரான துர்யோதநாதிகளுடைய, ரத்நங்களாலே சமைக்கப்பட்ட முடியும், மிடுக்கும், திக்விஜயம் பண்ணிப்பெற்ற மதிப்பும். (மற்றவரித்யாதி) (௨) †‡"சந்தமர்குழலாள்"என்னும்படியே - அவர்கள் ஸ்த்ரீகளுடைய மங்களஸூத்ரமும். (தந்தை கால்தளையுமுடன் கழலவந்துதோன்றி) ஸ்ரீவஸுதேவர்காலில்தளையும், இவையெல்லாம் போம்படியாக வந்தவதரித்து. (கதநாகம்) சீற்றத்தையுடைய ஆனையை ரக்ஷித்த கண்ணர்கிடீர். †சீற்றமாவது- முதலையாலே யிடர்பட்டவளவிலேவந்து உதவிற்றிலன் என்று "எனக்கு நான் கடவேனாயிடர்பட்டேனே, ஒருவரில்லாதாரைப்போலே † இடர்படுவதே!" என்று.

†"நாற்றிதழ்க்கொள்"என்று பாட்டைமுடியச்சொல்லி†;†பள்ளத்திலே அநேகமிதழ்களை யுடைத்தாயிருந்துள்ள தாமரையிலே நுழைந்த பகுவாய்நண்டினுடைய சேற்றளையிலே இளங்கமுகினுடைய முதுபாளையானது வெண்முத்தைச் சிந்தாநின்றுள்ள திருநாங்கூர்.

(௧) பார-உத்யோ. (௨) ௧௦-௭-டு. ‡ (பா) சந்தமல்.

http://acharya.org

†அன்றிக்கே,(பகுவாய் இளங்கமுகின்முதுபாளை) பக்வமான வாயையுடைத்தாயிருந்துள்ள இளங்கமுகினுடைய முதுபாளை என்று கமுகுக்கு விசேஷணமாய், நண்டினுடைய சேற்றளையிலே என்னவுமாம். †அன்றிக்கே, பள்ளத்திலே யுண்டாயிருந்துள்ள நாற்றிதழ்க் கொளரவிந்தமானது நுழைந்த பகுவாய் நண்டின் சேற்றளையிலே; †தாமரையானது நண்டினுடைய சேற்றளையிலேநுழைந்து அலர்ந்து தன் பரிமளத்தைக்கொடுக்க, இளங்கமுகின் முதுபாளை வெண்முத்தைச் சிந்துகிற திருநாங்கூரென்னவுமாம்... ... ... (க)

அரு.—முதற்பாட்டு. (மாற்றரசரித்யாதி) (க) “ந மே த்³வேஷ்யோ(அ)ஸ்தி - நமே த்வேஷ்யோஸ்தி”என்ற கண்ணனுக்கு மாற்றருண்டோவென்ன வருளிச்செய்கிறார் (த்விஷந்நமித்யாதி). மற்று-அது ஒழிய வென்று சப்தார்த்தமாய், அவர் தம் காதலிமாருண்டு-அந்த துர்யோதநாதிகளுடைய ஸ்த்ரீகள், குழை-காதுப்பணியும்; அது உபலக்ஷணமாய், மங்கள ஸூத்ரமுமென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (சந்தமலித்யாதி).“சந்தமல் குழலாளலக்கண் நூற்றுவர்தம் பெண்டிரு மெய்தி நூலிழப்ப” என்றதில், “நூலிழப்ப” என்றதிலே நோக்கு. முதலையின்மேல் சீற்றமென்றால் காத்தளிக்கைக்கு ஹேதுவாகாமையால், சீற்றத்தை விவரிக்கிறார் (சீற்றமித்யாதி). (படுவதே) என்ற வநந்தரம், உண்டாமது என்று சேஷம்.

அந்வயப்ரகாரத்தை தர்சிப்பிக்கிறார் (நாற்றிதழித்யாதி). (சொல்லி) என்ற வநந்தரம், அந்வயித்துக்கொள்வது என்று சேஷம். தமக்கநுபா(ஷா)வ்யரான் திருத்தெற்றியம்பலத்தி லெம்பெருமானுக்கு விரோதி நிரஸநசீலதை முதலான குணங்களை அநுஸந்திக்கைக்காக இவற்றை யநுஸந்திக்கையாலே உத்தேஸ்யம் முன்னாக வநுஸந்திக்கவேணுமென்று திருவுள்ளம்பற்றி, பூர்வார்த்தம் பின்பநுஸந்திப்பதென்று மருளிச்செய்ததென்று கொள்வது.“பள்ளத்து-நாற்றிதழ்க் கொளரவிந்தத்திலே நுழைந்த, பகுவாய்-பெரிய வாயையுடைய, நண்டினுடைய சேறுடையவளையிலே - இளங்கமுகின் முதுபாளை-வெண்முத்தம் சிந்து நாங்கூர்” என்று முதலொரு யோஜநை யருளிச்செய்கிறார் (பள்ளத்திலே யித்யாதி). இத்தால்-பகவச்சரணாரவிந்தங்களிலே புக்க ஜந்துவின் ஸம்பந்திகளிடத்தில் பஞ்ச விம்சதி வார்ஷிகரான ஸூரிகள் ப்ரஸாதத்தைப் பண்ணுவரென்று ஸ்வாபதேசம் த்வநிக்கும். “பகுவாய்-இளங்கமுகின் முதுபாளை-பள்ளத்து-நாற்றிதழ்க்கொளரவிந்தத்தில் நுழைந்த-நண்டின் சேற்றளையில் வெண்முத்தம் சிந்துநாங்கூர்” என்று யோஜநாந்தர மருளிச்செய்கிறார் (அன்றிக்கே பகுவாயித்யாதி). த்வந்யர்த்தம்-பூர்வவத். “பள்ளத்து-நாற்றிதழ்க் கொளரவிந்

(க) கீதை-கூ-உகூ.

தமானது தாள் நுழைந்த-பருவாய் நண்டின் சேற்றளையில் - இளங்கு
கின் முதபாளையானது - வெண்முத்தம் சிந்து நாங்கூர்" என்று மூன்றும்
யோஜனையருளிச்செய்கிறார் (அன்றிக்கே பள்ளத்திலே யித்யாதி). இப்
போது பகவச்சரணாரவிந்த திவ்யபரிமளம் யாதொரு ஜந்துவிடத்திலுண்
டாகிறது, அங்கு ஸூரிகள் ப்ரஸாதமும் குறைவற வுண்டாமென்று த்வநி.
அரவிந்தமலையில் நுழைந்தமை பாளைமுத்துச் சொரிகைக்கு ஹேதுவென்
னு மிடத்தைக் காட்டுகிறார் (தாமரையான தித்யாதி). ... ... (௧)

மூ.—பொற்றொடித் தோள் மடமகள் தன் வடிவுகொண்ட
பொல்லாத வன் பேய்ச்சி கொங்கை வாங்கிப்
பெற்றெடுத்த தாய் போல் மடுப்ப வாரும்
பேணா நஞ்சுண்டுகந்த பிள்ளைகண்டீர்
நெற்றொடுத்த மலர் நீலம் நிறைந்த சூழ
லிருஞ்சிறைய வண்டொலியும் நெடுங்கணார்தம்
சிற்றடிமேல் சிலம்பொலியும் மிழற்று நாங்கூர்த்
திருத்தெற்றியம்பலத்தென் செங்கண்மாலே. (௨)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நெல்	நெல்கதிர்களின் மே	ஒலியும்	சப்தமும் [கின்ற
	லே [கட்டப்பட்ட	மிழற்று	அவ்யக்தமாக ஒலியா.
தொடுத்த	வரிசை வரிசையாகக்		நாங்கூர்த்திருத்தெற்றியம்பலத்
நீலம் மலர்	கருநெய்தல் புஷ்பங்க		தென் செங்கண்மால்,
	ளாலே	பொன்	ஸ்வர்ணமயமான
நிறைந்த	பரிபூர்ணமான	தொடி	முன்கை வளைகளையு
சூழல்	பர்யந்த ப்ரதேசங்க		டைய
	ளிலே	தோள்	புஜங்களையுடையளா
இரும்	அழகியதான [னா		ய்
சிறைய	சிறகுகளை யுடைத்தா	மடம்	ஆத்மகுண ஸம்பந்
வண்டு	வண்டுகளினுடைய		நையான
ஒலியும்	சப்தமும்	மகள் தன்	யசோதையினுடைய
நெடும்	தீர்க்கமான	வடிவு	ரூபத்தை
கணார்தம்	கண்களை யுடையரா	கொண்ட	பரிக்ரஹித்துக்கொ
	ன ஸ்த்ரீகளுடைய		ண்டு வந்தவளாய்
சிறு	சிறிதான [த	பொல்லாத	துஷ்டையாய்
அடிமேல்	பாதங்கள் மேலணிந்	வன்	க்ரூரஹ்ருதயையான
சிலம்பு	தண்டைச் சிலம்பினு	பேய்ச்சி	பூதனையானவள்
	டைய	கொங்கை	(தன்) ஸ்தநத்தை

வாங்கி	கச்சையில் நின்றும் வெளியிலே யெடுத்து	ஆரும்	ஒருவரும்
		பேணா	ஆதரியாத
		நஞ்சு	(அந்த ஸ்தநத்திலுண்டான) விஷத்தை
பெற்றெடுத்த	பெற்றெடுத்த		
தாய்போல்	மாதாவைப்போலே	உண்டு	அமுதுசெய்து
மடுப்ப	(இவன்வாயில்) கொடுக்க, (அப்பொழுது)	உகந்த	ஸந்தோஷித்த
		பிள்ளைகண்டீர்	பாலன் கிடீர். (௨)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (பொற்றொடி) பொன்னாலேபண்ணப்பட்ட முன்கையில் வளையையுடைய தோளையுடையளாய், ஆத்மகுணோபேதையாயிருந்துள்ள யசோதைப்பிராட்டி "பிள்ளைமநஸ்ஸுவாடும்"என்று மாறுதேயொப்பித்த வொப்பனையை யநுகரித்த.(வடிவுகொண்ட பொல்லாதவன்பேய்ச்சி)†எவ்வடிவை எவ்வடிவுடையவளநுகரிக்கிறாள்!. †பொல்லாதவன்பேய்ச்சி-தான்; அவள் - பொற்றொடித்தோள்மடமகள். (கொங்கைவாங்கிப் பெற்றெடுத்ததாய்போல்மடுப்ப) தன்முலையைப்பிடித்துப்பெற்றெடுத்த தாய்போல் கொடுக்க. (ஆரும்பேணாநஞ்சுண்டுகந்தபிள்ளைகண்டீர்) ஒருத்தரும் விரும்பாத நஞ்சையுண்டு அறிவு குடிபுகுராமையாலே யுகந்தபிள்ளைகண்டீர். அறிவுநடையாடில் செய்யுமதன்றிறே.

(நெற்றொடுத்த)நெல்லின்மேலே தொடுத்த பூக்களையுடைத்தான குவளையானது†நிறைந்த சூழலிலே,அழகிய சிறகையுடைத்தான வண்டினுடைய ஒலியும், விலக்ஷணமான கண்ணையுடையரான ஸ்த்ரீகளுடைய சிற்றடிமேல் சிலம்பொலியும். (மிழற்றுநாங்கூர்) இரண்டும், எழுத்தும் சொல்லும் பொருளும் தெரியாத நிரம்பா மென்சொற்களாகையாலே, சிலம்பொலிக்கும் வண்டினுடைய ஒலிக்கும் வாசி தெரிக்கப்போகிறதில்லை. ... ... (௨)

அந.—இரண்டாம்பாட்டு. (பொற்றொடியித்யாதி) பூபா (ভূভা) ரநிரஸநார்த்தமாக வஸுதேவர் காலில் விலங்கு கழல வந்தவதரித்தபடியை யருளிச்செய்து, இனிஇவளர்ந்தவிடத்தில் செய்த வபதாநங்களில் ப்ரதமம்செய்த பூதநாநிரஸநத்தின் படியை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

மடமகள் வடிவுகொண்ட என்ன வமைந்திருக்க, "தன்" என்றத்தாலே-அவளுக்கஸாதாரணமான வேஷங்கொள்ளுகை எங்ஙனே என்னு ஆழ்... ...க்கு எடுபாட்டமிலே திருவுள்ளமென்று அத்தைக் காட்டுகிறார் (எவ்

http://acharya.org

வடிவை யித்யாதி). கீழ்வாக்ய விவரணம் (பொல்லாத வித்யாதி). (நிறைந்த சூழலிலே) என்றது-புஷ்பங்கள் நிறைந்த பர்யந்தங்களிலே என்றபடி. ... ... (௨)

மூ.—படலடைத்த சிறு குரம்பை நுழைந்து புக்குப்
பசு வெண்ணெய் பதமாரப் பண்ணை முற்றும்
அடலடர்த்த வேற்கண்ணார் தோக்கை பற்றி
யலந்தலைமை செய்துழலு மையன்கண்டீர்
மடலெடுத்த நெடுந்தெங்கின் பழங்கள் வீழ
மாங்கனிகள் திரட்டுருட்டா வரு நீர்ப் பொன்னி
‡திடலெடுத்து மலர் சுமந்தங்கிழியுநாங்கூர்த்
திருத்தெற்றியம்பலத்தென் செங்கண்மாலே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மடல் எடுத்த	பாளைகளாலே மிகுந்ததாய்	நாங்கூர்த் திருத்தெற்றி யம்பலத்தென் செங்கண்மால்,	
நெடு	உயர்ந்திருந்துள்ள	பசுவெண்ணெய்	அப்போது கடைந்து வைத்த வெண்ணெயை
தெங்கின்	தென்னை மரங்களில் நின்றும்	பதம்	பக்வமாக (பக்வமழிவதற்கு முன்னே)
பழங்கள்	பழங்களானவை	ஆர	அமுதுசெய்கைக்காக
வீழ	(தன்மேல்) விழ (அதினாலே உதிர்ந்த)	படல்அடைத்த	தட்டி யடைத்துவைத்த
மாங்கனிகள்	மாம்பழங்களை	சிறு	சிறிதான
திரட்டு	கும்பலாகச் சேர்த்து	குரம்பை	குடிசைகளில்
உருட்டா	உருட்டிக்கொண்டு	நுழைந்து	ப்ரவேசித்து
வரு	வாராநின்ற	புக்கு	உள்ளொங்கும் ஆராய்ந்துகொண்டு புகுந்து
நீர்	ஜலத்தையுடைய	அடல்அடர்த்த	யுத்தோந்முகமான
பொன்னி	காவேரியானது	வேல்	வேல்போலே தீக்ஷ்ணமான
திடல்	மேடுகளை		
எடுத்து	எடுத்துவிட்டு		
அங்கு	முன் மேடாயிருந்த அந்த ப்ரதேசங்களிலே		
மலர்	புஷ்பங்களை [வந்து		
சுமந்து	வஹித்துக்கொண்டு		
இழியும்	இழியாநின்ற		

‡ (பா) திடரெடுத்து.

http://acharya.org

கணார்	கண்களையுடையரான இடைச்சிகளு டைய	செய்து	பண்ணி
		பண்ணைமுறும்	இடைச்சேரி யெங்கும்
தோக்கை	மூன்றானையை	உழலும்	திரியாநின்ற
பற்றி	பிடித்து (இழுத்து)	ஐயன்கண்டீர்	ஸ்வாமி கிடீர். (௩)
அலந்தலைமை	அலமாப்பை		

வ்யா.—மூன்றாம்பாட்டு. (படலித்யாதி) இடைச்சிகள் சிறு குடில்களின் வாசலில் படலைத்திருக்கிவைத்துப்போனால், படலைத் திறந்து நுழைந்துபுக்கு. இவனுக்கு நுழைந்து புகுகையாகையிறே குடிலினுடைய †பெருமை. (பசுவெண்ணெய்பதமார) அன்று கடைந்தவெண்ணெய் செவ்வியழியாமலமுது செய்கைக்காக. ‡(பண்ணை-இடைச்சேரி) (அடலடர்த்த) யுத்தோந்முகமான வேல்போன்ற கண்ணையுடையவர்கள். ஓராளுமொருநோக்கும் நேரான கண்ணை யுடையவர்களுடைய. (பண்ணைமுற்றும்) திரள்களடங்கலும். (தோக்கை பற்றி) அவர்கள் கண்ணாலே †யொடியெறிவர்கள். மூன்றானையைப்பற்றி. (அலந்தலைமை)† ஓரூராக ஒருவர்கூறை யெழுவருடுக்கப் பண்ணுமவன் கிடீர்.

(மடலெடுத்த) ஓங்கினமடல்களை யுடைத்தான நெடியதெங்கினுடைய பழம் மாவிலேவிழ, மாம்பழங்களெல்லாமுதிர, அவற்றை வாரித் திரளவிட்டு உருட்டிக்கொண்டுவருகிற நீரையுடைத்தான பொன்னியானது† திடர்களையெடுத்துப் பொகட்டுப் பூக்களைப் பரப்பாநின்றுள்ள திருநாங்கூர். ... ... (௩)

அ௩.—மூன்றாம்பாட்டு. (படலித்யாதி) கீழ்ப்பாட்டில் நஞ்சுண்டபடியை யருளிச்செய்த வநந்தரம், அவ்வூரில் வெண்ணெயுண்டபடியை யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

(பெருமை) என்றது-வ்யதிரேகலக்ஷணயா சிறுமையைச் சொல்லுகிறது. (ஒடியெறிவர்கள்) போகவொட்டாமல் தகைவர்கள். "அலந்தலைமை" அலமாப்பாய், தாத்பர்ய மருளிச்செய்கிறார் (ஓரூராக வித்யாதி). (திடர்களை) மேடுகளை. ... ... (௩)

௪.—வாராரும் முலைமடவாள் பின்னைக்காகி
வளைமருப்பில் கடுஞ்சினத்து வன்றாளார்ந்த
காரார்திண் விடையடர்த்து வதுவையாண்ட
கருமுகில்போல் திருநிறத்தென்கண்ணர்கண்டீர்

---

‡ குண்டலிதம் க்வாசித்கம்.

http://acharya.org

ஏராரும்மலர்ப்பொழில்கள தழுவி யெங்கு
மெழில்மதியைக் கால் தொடர விளங்குசோதிச்
சீராருமணிமாடம் திகழு நாங்கூர்த்
திருத்தெற்றியம்பலத்தென் செங்கண்மாலே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஏர் ஆரும்	பூர்ணமான அழகை	பின்னைக்காகி	நப்பின்னைப்பிராட்டி
	யுடைய [தான		க்காக
மலர்	புஷ்பங்களை யுடைத்	வளை	வளைந்த
பொழில்கள்	சோலைகளிலே [லும்	மருப்பில்	கொம்புகளை யுடைய
எங்கும்	எல்லா ப்ரதேசங்களி		தாய்
தழுவி	அணைந்துவந்து	கடும்	க்ரூரமான
எழில்	அழகை (பரிமளத்	சினத்து	கோபத்தை யுடைய
	தை) யுடைத்தான		தாய்
கால்	காற்றானது	வன்	பலிஷ்டமான
மதியை	சந்த்ரனை	தாள் ஆர்ந்த	கால்களையுடையதாய்
தொடர	போகவொட்டாமல்	கார் ஆர்	(யௌவநத்தினால்) க
	கால்கட்ட		றுத் திருந்துள்ள
விளங்கு	(அதினால்) விளங்கா	திண்	த்ருடமான
	நின்ற	விடை	ருஷபங்களை
சோதி	தேஜஸ்ஸை யுடைத்	அடர்த்து	நெருக்கி நெரித்து
	தாய் [மாய்	வதுவை ஆ	விவாஹ மங்களத்தை
சீர் ஆரும்	ஸம்பத்தினால் பூர்ண	ண்ட	நிர்வஹித்தவனாய்
மணிமாடம்	ரத்நங்களா லிழைத்த	கருமுகில்	காளமேகம்போலே
	மாடங்களாலே	போல்	
திகழும்	விளங்காநின்றதான	திருநிறத்து	அழகிய ஸௌந்தர்யத்
நாங்கூர்த் திருத்தெற்றி யம்பலத்தெ			தை யுடையனாய்
ன் செங்கண்மால்,	[ட்ட	என்	அவ்வடிவைக் காட்டி
வார் ஆரும்	கச்சாலே தாங்கப்ப		என்னை அடிமை
முலை	ஸ்தநங்களை யுடைய		கொண்ட
	ளாய் [ளான	கண்ணர்கண்	க்ருஷ்ணன்கிடீர்.(௪)
மடவாள்	மடப்பத்தை யுடைய	டீர்	

வ்யா.—நாலாம்பாட்டு. (வாராரும்) ப்ராப்தயௌவநையாகை யாலே வாராலே தாங்கப்பட்ட முலையையுடைய நப்பின்னைப்பிராட்டிக்காக, வளைந்த கொம்புகளை யுடைத்தாய் கடிய சினத்தை யுடைத்தாய் வலியதாள்களையுடைத்தாய் கறுப்பு ஆர்ந்து திண்ணிதான ருஷ

பங்களைபடர்த்து விவாஹமங்களத்தை நிர்வஹித்த கருமுகில்போல் திருநிறத்தென்கண்ணர்.

(ஏரார்) அழகார்ந்திருந்துள்ள பூக்களையுடைத்தான பொழிலெங்கும் தழுவி பரிமளத்தை யெறட்டிக்கொண்டு காற்று சந்த்ரனைக்†காற்கட்ட, விளங்காநின்றுள்ள ஜ்யோதிஸ்ஸை யுடைத்தாய் ஸம்பத்து ஆர்ந்து மாணிக்கங்களாலே யலங்கரிக்கப்பட்ட மாடங்கள் திகழுகிற திருநாங்கூர். ... ... (௪)

அரு.—நாலாம்பாட்டு. (வாரித்யாதி) கீழ்ப்பாட்டிலே * வேற்கணூரான இடைப்பெண்களெல்லா மொருதட்டும் நப்பின்னை யொருதட்டு மாகையாலே, அவளுக்காக இவன் தன்னைப் பேணுதே விடைகொண்டபடியை யநுஸந்திக்கிறுரென்று ஸங்கதி.

(காற்கட்ட) என்றது-பரிமளத்தில் நச்சிப் போக மாட்டாமல் கிடக்கும்படி பண்ணவென்றபடி. ... ... (௪)

மூ.—கலையிலங்குமகலல்குல் கமலப்பாவை
கதிர்முத்த வெண்ணகையாள் கருங்கணுய்ச்சி
முலையிலங்குமொளி மணிப்பூண் வடமும் தேய்ப்ப
மூவாத வரை நெடுந்தோள் மூர்த்திகண்டீர்
மலை யிலங்கு நிரைச் சந்தி மாடவீதி
யாடவரை மடமொழியார் முகத்திரண்டு
சிலைவிலங்கி மனம் சிறை கொண்டிருக்கு நாங்கூர்த்
திருத்தெற்றியம்பலத்தென் செங்கண்மாலே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மலை இலங்கு	மலைகள்போலே விளங்காநின்றதாய்	இரண்டு சிலை	இரண்டு விற்கள்போன்ற புருவங்களானவை
நிரை	வரிசை வரிசையாக	விலங்கி	வளைந்து
சந்தி	ஒன்றோடொன்று ஸம்பந்தித்திருக்கிற	ஆடவரை	நாயகர்களுடைய
மாடம்	க்ருஹங்களை யுடைத்தான	மனம் சிறை கொண்டு இருக்கும்	மனஸ்ஸைக் காவலிலே வைத்திருக்கிற
வீதி	வீதிகளிலே	நாங்கூர்த்திருத்தெற்றி யம்பலத்தென் செங்கண்மால்,	
மடம்	அவ்யக்த மதுரமான	கலை	மேகலையினுல்
மொழியார்	சொற்களையுடைய ஸ்த்ரீகளுடைய	இலங்கும்	விளங்காநின்றதாய்
முகத்து	முகத்திலே விளங்காநின்ற	அகல்	விசாலமான

http://acharya.org

அல்குல்	நிதம்பப்ரதேசத்தை யுடையளாய்	ஒளிமணி	காந்தியையுடைய மாணிக்கங்களாலே செய்யப்பட்ட
கதிர்	கிரணங்களையுடைய		
முத்த	முத்துப்போலே	பூண்	கண்டாபரணமும்
வெண்	வெளுத்த [யளான	வடமும்	முத்துமாலையும்
நகையாள்	தந்தபங்க்திகளையுடை	தேய்ப்ப	(மார்பிலே) உரசாநிற்க (அதினாலே)
கமலப்பாவை	பெரியபிராட்டியி னுடையவும் [ய	மூவாத	முறுகுத - (செவ்வியமுழியாத)
கருங்கண்	கறுத்தகண்களையுடை		
ஆய்ச்சி	நப்பின்னைப்பிராட்டி யினுடையவும்	வரை	மலைபோன்ற
		நெடும்	தீர்க்கமான
		தோள்	புஜங்களையுடைய
முலை	ஸ்தநங்களிலே	மூர்த்திகண்டீர்	ஸ்வாமிகிடீர். (ரு)
இலங்கும்	விளங்காநிற்பதாய்		

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (கலையிலங்கும்) கலைகளிலங்காநின்றுள்ள அகன்ற நிதம்பப்ரதேசத்தை யுடையளாய், ஒளியை யுடைய முத்துப்போலே வெளுத்த தந்தபங்க்தியையுடைய பெரியபிராட்டியார். (கருங்கணாய்ச்சி) அவன் திருமேனியைப் பார்த்தபடியே யிருக்கையாலே திருமேனியில் கறுப்பு கண்ணிலே யூறின நப்பின்னைப்பிராட்டி. (முலையிலங்கும்) இருவருடைய முலைகளிலும் விளங்காநின்றுள்ள வொளியை யுடைத்தான மாணிக்கங்களாலே சமைக்கப்பட்ட ஹாரமானதுவும் த்ரிஸரம் பஞ்சஸரமான முத்துவடமும் உரச, அத்தாலே †மூவாதேயிருக்கிற மலைபோன்ற நெடுந்தோள்மூர்த்தி கண்டீர்.

மலைபோலே யிலங்காநின்ற, நிரையாய் ஒன்றோடொன்று சந்தித்துச் செறிந்திருந்துள்ள மாடங்களை யுடைத்தாயிருந்துள்ள வீதியிலே, மடமொழியார் முகத்திலேநின்ற சிலைகள், ஆடவரை-காந்தரை, விலங்கி, மநஸ்ஸைச் சிறையிட்டுவைக்கிற திருநாங்கூர். சந்தி என்று-ஸாயம்ஸமயத்துக்குப் பேராய், ஸாயம்ஸமயத்திலே காந்தருடைய மநஸ்ஸைச் சிறையிட்டுவைக்கிற திருநாங்கூரென்னவுமாம். சிலைவிலங்கி என்றது - புருவம் வளைகை. ... ... (ரு)

அரு —அஞ்சாம்பாட்டு. (கலையிலங்கித்யாதி) கீழ்ப்பாட்டில் ப்ரஸ்துதையான நப்பின்னைப்பிராட்டி இடைக்குலத்துக்கடுத்த தேவியாகையாலே அவள் ப்ரஸ்துதையானவாறே, யதுகுலத்துக்கடுத்த தேவியான ருக்மிணிப் பிராட்டியைத் திருமணம்புணர்ந்ததும் திருவுள்ளத்திலோடி, இருவரோடும் ஸம்ஶ்லேஷித்தபடியை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

http://acharya.org

(க) ‟ நீலாகுலேன ஸத்ருசீ தவ ருக்மிணீச - நீளாகுலேந ஸத்ருசீ தவ ருக்மிணீச” என்னக்கடவதிறே.

‟நகை” என்றது - தந்தபங்க்தியை லக்ஷிக்கிறது. (மூவாதே) முற்றிப்போகாதே, இளகிப்பதிக்கிற வென்றபடி. ... ... (௫)

மூ.—தான்போலுமேன்றெழுந்தான் தரணியாளன்
அதுகண்டு தரித்திருப்பானரக்கர்தங்கள்
கோன்போலுமேன்றெழுந்தான் குன்றமன்ன
விருபதுதோளுடன் துணித்த வொருவன்கண்டீர்
மான்போலுமென்னோக்கிற் செய்ய வாயார்
மரதகம்போல் மடக்கிளியைக் கைமேற்கொண்டு
தேன்போலுமென்மழலை பயிற்று நாங்கூர்த்
திருத்தெற்றியம்பலத்தென் செங்கண்மாலே. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மான்போலும்	மானோடொத்த	எழுந்தான்	எதிரிட்டுவந்தான்
மெல்	ம்ருதுவான	என்று	என்றிப்படி எளிதாக எண்ணி
நோக்கில்	பார்வையையும்		
செய்ய	சிவந்த [ஸ்த்ரீகள்	அதுகண்டு	அந்த எளிமையைக் கண்டு
வாயார்	அதரத்தையு முடைய		
மரதகம்போல்	மரகதமணி போன்ற பசுமையை யுடைத்தாய்	தரித்திருப்பான்	நிர்ப்பயனா யிருப்பானாய்
மடம்	மௌக்த்யத்தை யுடையதான	அரக்கர்தங்கள்	ராக்ஷஸர்களுடைய
கிளியை	கிளியை		
கைமேல்கொண்டு	தங்கள் கைகள்மேலே வைத்துக்கொண்டு	கோன்போலும்	ராஜாவைப்போலே (தன்னை மதித்து)
தேன்போலும்	தேனோடொத்து	என்று	நினைந்து
மெல்	இனிதாய்	எழுந்தான்	எதிரிட்டுவந்த ராவணனுடைய
மழலை	ம்ருதுவானபேச்சை		
பயிற்றும்	கற்பியாநின்ற	குன்றமன்ன	மலைகள்போலே யிருக்கிற
நாங்கூர்த்திருத்தெற்றியம்பலத் தென்செங்கண்மால்,		இருபதுதோள்	இருபதுபுஜங்களையும்
தரணியாளன்	பூபதியான சக்ரவர்த்தித் திருமகன்	உடன்	ஏககாலத்திலே
		துணித்த	அறுத்துப்பொகட்ட
தான்போலும்	க்ஷத்ரியனைப்போலே	ஒருவன்கண்டீர்	அத்விதீயன்கிடீர். (௬)
என்று	நினைந்து		

(க) ஸுந்தர-ஸ்த-௧௦எ.

வ்யா.—ஆறும்பாட்டு. (தான்போலும்) †ஆப்பான் திருவழுந்தூரரையரும் மற்றுமுள்ள முதலிகளுமாக "இப்பாட்டிற் சொல்லுகிறதென்?" என்று பட்டருக்கு விண்ணப்பஞ்செய்ய; ஒருகால் †இயலைக் கேளா, "ராவணன்வார்த்தைகாண்" என்றருளிச்செய்தார். (தான்போலும்) ஒரு க்ஷத்ரியன்போலே எதிரி என்றுவந்தான். (அதுகண்டித்யாதி) அதுகண்டு தரித்திருப்பான், ராக்ஷஸராஜனும் என்று கிளர்ந்தெழுந்த ராவணனுடைய, மலைபோலேயிருக்கிற விருபதுதோளையும் துணித்த தனிவீரன்கிடீர்.

(மான்போலும்) †ஒருகிளியை ஒருகிளி கற்பித்தாப்போலேயிருக்கிறது. †கற்ற கிளியினுடைய பேச்சிற்காட்டில் கற்பிக்கிறவள் பேச்சு இனிதென்கை. மான்போலே ம்ருதுவான நோக்கையும் சிவந்தவதரத்தையு முடையவர்கள், மரதகம்போன்று மடப்பத்தை யுடைத்தான கிளியைக் கைமேலேகொண்டு, தேன்போலே இனிதாய் ம்ருதுவான பேச்சைப் பயிற்றுகிற திருநாங்கூர்... ... (கூ)

அரு.—ஆறும்பாட்டு. "தரணியாளன் - தான்போலும்" என்று-ராஜாதான்போலே வந்தானென்றால், ராஜாவன்றென்று தோற்றுமாபோலே, எம்பெருமானிடத்தில் தாழ்மையும், அதுகண்டு - அந்தத் தாழ்மையைக் கண்டு நிர்ப்பயனாகை, அரக்கர் தங்கள் கோன்போலே எதிர்ந்து வந்தானென்று - அவனிடத்தில் ராஜாவைப்போல் வந்தானென்றாப்போலே உத்கர்ஷமும்தோற்ற ஆழ்வார் சொல்லக்கூடுமோ, சொன்னால்தான் மேலே "தோள் துணித்த ஒருவன்" என்கிற ஸ்துதிக்குச்சேராதே என்கிற சங்கையைப் பரிஹரிக்கைக்காக, பூர்வத்தில் ப்ரஸ்நப்ரதிவசநங்களை யருளிச்செய்கிறார் (ஆப்பானித்யாதி). இத்தால் "தான்போலும்" என்றவிடத்தில் ஸ்வரத்தாலும் "தான்" என்கிற பதத்தாலும்-தாழ்மைதோற்றும்; "கோன்போலும்" என்றவிடத்தில் ஸ்வரத்தாலும், * கோன்பதத்தாலும் - உத்கர்ஷமும் தோற்றுமென்று முதலிகளுக்குக் கருத்து; அப்படியேயானாலுமொருகுறையில்லை; ராவணனுடைய கருத்து - "ராஜ்யத்தில் துறப்பட்ட தாபஸர்த்தனைபோக்கி தரணியாளரோ" என்று தன் துர்மாநத்தாலே எண்ணி யிருக்குமத்தை யநுவதித்தாராழ்வாரென்று பட்டர்க்குக் கருத்தென்றதாய்த்து. "தரணியாளன்-தான்போலுமென்றெதிர்ந்தான்" என்று, அதுகண்டு தரித்திருப்பானாய், ராக்ஷஸராஜாவைப்போலே யெண்ணிக் கொண்டுவந்த ராவணனுடைய தோளைத்துணித்த வொருவனென்று அத்யாஹரித்துக்கொண்டு அர்த்தம் கண்டுகொள்வது. (இயலைக்கேளா) இயலைக் கேட்கவே.

http://acharya.org

சொல்லுப்பயிற்று மென்னுதே "மென்மழலை பயிற்றும்" என்கையா ல் - இவர்கள் வார்த்தையும் அவ்யக்தமதுரம் என்றத்தால் பலித்தவர்த் தத்தை யருளிச்செய்கிறார் (ஒருகிளியையித்யாதி). "மென்மழலை" என் றத்தால் அவ்யக்தமதுரம் தோற்றுமே, "தேன்போலும்" என்று விசே ஷிப்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (கற்றவித்யாதி). (௬)

மூ.—பொங்கிலங்கு புரிநூலும் தோலும் தாழப்
பொல்லாத குறளுருவாய்ப் பொருந்தா வாணன்
மங்கலம்சேர் மறை வேள்வியதனுட்புக்கு
மண்ணகலம் குறையிரந்த மைந்தன்கண்டீர்
கொங்கலர்ந்த மலர்க்குழலார் கொங்கை தோய்ந்த
குங்குமத்தின் குழம்பளைந்த கோலந்தன்னால்
செங்கலங்கல் வெண்மணல்மேல் தவழு நாங்கூர்த்
திருத்தெற்றியம்பலத்தென் செங்கண்மாலே. (எ)

பதம்.	உரை.
கொங்கு	பரிமளமானது
அலர்ந்த	பரவாநின்ற
மலர்	பூக்களைமுடித்த
குழலார்	கேசங்களை யுடையரான பெண்களுடைய
கொங்கை	ஸ்தநங்கள்மேல்
தோய்ந்த	படிந்திருக்கிற
குங்குமத்தின்	குங்குமத்தினுடைய
குழம்பு	சேற்றோடு
அளைந்த	கலந்திருக்கிற
கோலந்தன்னால்	அழகாலே
செம்	சிவந்திருக்கிற
கலங்கல்	காலுஷ்யத்தை யுடைத்தான ப்ரவாஹமானது
வெண்	வெளுத்த [மேலே
மணல்மேல்	மணற் குன்றுகள்
தவழும்	மெள்ளமெள்ளப் பாயாநின்ற

பதம்.	உரை.
நாங்கூர்த்திருத்தெற்றி யம்பலத்தென் செங்கண்மால்,	
பொங்கு	அபிவ்ருத்தமான காந்தியை யுடையதா [ய்
இலங்கு	விளங்காநின்ற
புரி	புரிகளை யுடைய
நூலும்	யஜ்ஞோபவீதமும்
தோலும்	க்ருஷ்ணாஜிநமும்
தாழ	தொங்காநிற்க
பொல்லாத	ஸுந்தரமான
குறள் உருவாய்	வாமந வேஷத்தையுடையனாய்,
பொருந்தா	தன்னோடொவ்வாத ஜந்மத்தை யுடையனான
வாணன்	மஹாபலியினுடைய
மங்கலம்	மங்களங்கள் [ய்
சேர்	பொருந்தி யிருப்பதா
மறை	வேதகோஷத்தை யுடையதான
வேள்வியதனுள்	யாகத்தில்

http://acharya.org

புக்கு ப்ரவேசித்து [ருந்த	இரந்த யாசித்த
குறை தனக்குக் குறையாயி	மைந்தன் க பாலன்கிடீர் (எ)
மண் அகலம் பூமியை	ண்டீர்

வ்யா.—ஏழாம்பாட்டு. (பொங்கிலங்கு) மிக்கிலங்காநின்ற- ஒளி விடாநின்ற திருயஜ்ஞோபவீதமும், க்ருஷ்ணாஜிநமும் தாழ. (பொல்லாதகுறளுருவாய்) "அழகிது" என்னில் நாட்டார் கண்ணெச்சில்படுவர் என்று, விபரீதலக்ஷணையாலே சொல்லிற்றாகவுமாம்; †அன்றிக்கே, வைரூப்யத்தாலே வைத்தகண் வாங்கப்போகாதபடி யிருக்குமென்னவுமாம். (பொருந்தாவாணன்) (க) "ஐஸுரம் பாவமாஸ்ரிதா:" - ஆஸுரம் பாவமாஸ்ரிதா:" என்று ஹ்ருதயம் தண்ணிதாகை யன்றிக்கே ஜந்மமே தண்ணிதானவாணன். (மங்கலம்சேர்) ஸர்வேஸ்வரன் செல்லும்படியான யாகமிறே; மங்களங்கள் சேரத்தட்டில்லையிறே. (மண்ணகலம்) மஹாபலி உடையவனாய் தான் குறைவாளனாயிரந்த. (மைந்தன்கண்டீர்) †என்ன பிள்ளைத்தான்.

(கொங்கலர்ந்தவித்யாதி) பரிமளம் மாறாதேயிருந்துள்ள மலரையுடைத்தான குழலையுடைய ஸ்த்ரீகளுடைய கொங்கைதோய்ந்த குங்குமத்தினுடைய குழம்பையளைந்த கோலந்தன்னாலே, செங்கலங்கல் வெண்மணலிலே தவழுநாங்கூர்; தாரை †ஸ்க்கலித்து நடந்தாப்போலே (க) "ஸாப்ரஸ்க்கலந்தீ" - ஸாப்ரஸ்க்கலந்தீ" என்னும்படியே... (எ)

அரு.—ஏழாம்பாட்டு. (பொங்கித்யாதி) கீழ்ப்பாட்டில்-பிராட்டிக்காக ராவணனைக் கைகழியவிட்டானென்றார்; அப்படிப்பட்ட பிராட்டியையும் க்ருஷ்ணாஜிநத்தில் மறைத்துக்கொண்டு இந்த்ரனுக்காகக் கையேற்றான், அதிமாத்ர ப்ரதிகூலரை யழியச்செய்யவும் அநுகூலாபாஸரை உபாயத்தாலே வெல்லவும் வல்லனென்று வாமநாவதாரத்தை யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

குறளாயிருக்கிற வைரூப்யந்தானே ஆகர்ஷகமாகையாலே - ஸ்தாஸ்துதியென்று அர்த்தாந்தரமருளிச் செய்கிறார் (அன்றிக்கேயித்யாதி). "மைந்தன்" என்றத்தை விவரிக்கிறார் (என்னபிள்ளைத்தான்) என்று, (பிள்ளை) பிள்ளைத்தனம்.

*மாங்கனிகள் திரட்டுருட்டாவருநீர்ப்பொன்னியிலே அவ்வூரில் ஸ்த்ரீஜநங்கள் நீராட, அக்குங்குமத்தை யளைந்தத்தாலே சிவந்த கலக்கலான

(க) கீதை எ-௧டு. (க) ரா-கி-௩௩-௩அ.

வெள்ளமானது மெள்ளவருகைக்கு த்ருஷ்டாந்த மருளிச்செய்கிறார் (தாரையித்யாதி). ... ... (௭)

மூ.—சிலம்பினிடைச்சிறுபரல்போல்பெரியமேரு
திருக்குளம்பில் கணகணப்பத்திருவாகாரம்
குலுங்க நிலமடந்தைதனை யிடந்து புல்கிக்
கோட்டிடை வைத்தருளிய வென்கோமான் கண்டீர்
இலங்கிய நான்மறையனைத்துமங்கமாறு
மேழிசையும் கேள்விகளுமெண்டிக்கெங்கும்
சிலம்பிய நற்பெருஞ்செல்வம் திகழுநாங்கூர்த்
திருத்தெற்றியம்பலத்தென் செங்கண்மாலே. (௮)

பதம்.	உரை.
இலங்கிய	விளங்காநின்ற
நால்மறை யனைத்தும்	நாலுவகைப்பட்ட ஸமஸ்த வேதங்களும்
அங்கம் ஆறும்	வ்யாகரணாதி ஆறங்கங்களும்
ஏழிசையும்	ஸப்தஸ்வரங்களும்
கேள்விகளும்	இதிஹாஸாதிகளும் (ஆகிய இவை)
எண் திக்கு	எட்டுத்திக்குகளில்
எங்கும்	எல்லா ப்ரதேசங்களிலும்
சிலம்பிய	சப்தியாநிற்பதாய்
நல்	விலக்ஷணமாய்
பெரும்	அபரிச்சிந்நமான
செல்வம்	ஸம்பத்து
திகழும்	விளங்காநின்ற
நாங்கூர்த்திருத்தெற்றி யம்பலத்தென் செங்கண்மால்,	
சிலம்பினிடை	தண்டைச் சிலம்பினுடைய நடுவிலிட்ட
சிறுபரல்போல்	சிறிய பருக்கைபோல்

பதம்.	உரை
பெரிய மேரு	மிகவும் உயர்ந்து பெருத்திருக்கிற மேருமலையானது
திருக்குளம்பில்	அழகிய குளம்பிலே
கணகணப்ப	கணகணவென்று சப்திக்கும்படியாகவும்
திரு	(மார்பிலெழுந்தருளியிருக்கும்) பிராட்டியினுடைய
ஆகாரம்	ஸந்நிவேசமானது
குலுங்க	அசையும்படியாகவும்
இடந்து	(பூமியை) குத்தியெடுத்து
நிலமடந்தைதனை	பூமிப்பிராட்டியை
புல்கி	தழுவிக்கொண்டு
கோட்டிடை	தந்தத்தின்மேல்
வைத்தருளிய	எழுந்தருளுவித்துக்கொண்ட
என் கோமான் கண்டீர்	என்னுடைய ஸ்வாமி கிடீர். (௮)

வ்யா.—எட்டாம்பாட்டு. (சிலம்பினிடையித்யாதி) சிலம்பினிடையிட்ட சிறுபரல்போல் பெரிய மஹாமேருவானது திருக்குளம்

பிலே (௧) " மேருஃகணகணுயதே - மேருஃகணகணுயதே" என்னும்படியே கணகணப்ப. (திருவாகாரம்குலுங்க) (௨) *"அகலகில்லேனிறையும்" என்று பிராட்டியிருக்குமிருப்புக் குலுங்கும்படிக்கீடாக. (நிலமடந்தை) பூமியையிடந்து அதுக்கபிமாநிநியான ஸ்ரீபூமிப்பிராட்டியைப்புல்கி, கோட்டிடையிலே நீலமணியழுத்தினுப்போலே வைத்த செயலாலே †யென்னையடிமைகொண்டவன்கிடீர்.

(இலங்கியவித்யாதி) ப்ராமாண்ய ப(ப)லத்தாலே யொளிவிடாநின்றுள்ள வேதங்கள்ாலும், ஆறங்கமும், ஸப்தஸ்வரங்களும், இதிஹாஸபுராணங்களும், எட்டுத்திக்குக்களும். (சிலம்பிய நற்பெருஞ்செல்வம் திகழுநாங்கூர் †(சப்திக்கக்கடவதாய் நன்றாய்ப்பெரியசெல்வம். ... ... (அ)

அரு.—எட்டாம்பாட்டு. (சிலம்பித்யாதி) கீழ்ப்பாட்டுக்களிலே-நீளைக்காகச் செய்த செயலையும் பெரிய பிராட்டியார்க்காகச் செய்த செயலையும் சொல்லி, அவற்றோடொக்க இத்தின் கார்யத்தைச் செய்தமையை ப்ராஸங்கிகமாகச் சொன்னார்; ஸ்ரீ பூமிநீளைகளில் மத்யஸ்த்தையான பூமிப்பிராட்டி யிடையாட்டத்தில் செய்த சேஷ்டிதத்தையு மநுஸந்திக்கிறரென்று ஸங்கதி. அன்றிக்கே, மண்ணுளந்த செயல்தானே மண்ணிடந்த செயலுக்கு ஸ்மாரகமாய் அத்தை யநுஸந்திக்கிறரென்னவுமாம்.

"என்கோமான்" என்றதின் கருத்தை யருளிச்செய்கிறர் (என்னையடிமைகொண்டவன்) என்று.

"சிலம்பிய" என்றதினர்த்தம், (சப்திக்க) என்றது. ... (அ)

௯.—ஏழுலகும் தாள்வரையுமெங்குமூடி
யெண்டிசையுமண்டலமுமண்டியண்டம்
மோழைபெழுந்தாழிமிகுமூழிவெள்ளம்
முன்னகட்டிலொடுக்கிய வெம்மூர்த்திகண்டீர்
ஊழிதொறுமூழிதொறுமுயர்ந்தசெல்வத்
தோங்கிய நான்மறையனைத்தும் தாங்குநாவர்
சேருயர்ந்த மணிமாடம் திகழு நாங்கூர்த்
திருத்தெற்றியம்பலத்தென் செங்கண்மாலே. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஊழிதொறும்	காலங்கள் செல்லும் தோறும்	உயர்ந்த	அபிவ்ருத்த(த்த)மான
ஊழிதொறும்		செல்வத்து	ஸம்பத்தை யுடையதாய்

(௧) (௨) தி-வாய்-௬-௧௦-௧௦.

http://acharya.org

ஓங்கிய	கீர்த்தியை யுடைத்தான
நால்மறை யனைத்தும்	நாலுவகைப்பட்ட ஸமஸ்த வேதங்களை
தாங்கும்	தரியாநின்ற [யும்
நாவர்	நாவையுடைய ப்ராஹ்மணரை யுடையதாய் [கிற
செழுஉயர்ந்த	மிகவும் உயர்ந்திருக்
மணி	மணிமயமான
மாடம்	க்ருஹங்களாலே
திகழும்	விளங்காநின்ற
நாங்கூர்த்திருத்தெற்றி யம்பலத்தென் செங்கண்மால்,	[லும்
ஏழ்உலகும்	ஸப்தத்வீபங்களி
தாள்	பர்யந்த பர்வதங்களை யுடைய
வரையும்	மலைகளிலும் [லும்
எங்கும்	எல்லா ப்ரதேசங்களி
ஊடு	ஏறிப்பாய்ந்து [லும்
எண்திசையும்	எட்டுத்திக்குக்களி
மண்டலமும்	எல்லா ப்ரதேசங்களிலும்
அண்டம்	ப்ரஹ்மாண்டத்திலும்
மண்டி	அதிசயித்து
மோழை எழுந்து	மோழைகிளம்பி
ஆழி	ஸமுத்ரமானது
மிகும்	பொங்காநின்ற
ஊழிவெள்ளம்	ப்ரளயகாலத்தில் வெள்ளத்தை
முன்	முற்காலத்தில்
அகட்டில்	திருவுதரத்தில்
ஒடுக்கிய	அடக்கின
எம்மூர்த்தி கண்டீர்	எங்கள் ஸ்வாமிகிடீர். (௯)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (ஏழுலகம்)ஸப்தத்வீபங்களும் †தாள்களையுடைத்தான மலைகளும் எங்குமேறி, எட்டுத்திக்குக்களும் மண்டலமும் அண்டமும் †மிக்கு மோழையெழுந்து, ஆழியானது மிக்கிருந்துள்ள ஊழிவெள்ளத்தைப்பண்டு திருமேனியி லேகதேசத்திலே யடக்கின ஸர்வேஶ்வரன்கிடீர்.

(ஊழிதொறுமித்யாதி) காலம் செல்லச்செல்லக் குறைந்து காட்டாதே (க) "కలౌకృతయుగంతస్య - கலௌக்ருதயுகம்தஸ்ய" என்னும்படியே உயர்ந்தசெல்வத்தை யுடையராய், ஓங்கியிருந்துள்ள நான்மறையை நாவாலே தாங்கவல்ல ப்ராஹ்மணரை யுடைத்தாய், ஆகாசத்திலேதட்ட உயர்ந்த மணிமாடங்களை யுடைத்தான திருநாங்கூர். (௯)

அ௫.—ஒன்பதாம் பாட்டு. (ஏழுலகு மித்யாதி) கீழ்ச்சொன்ன அ[illegible]தாரங்களெல்லா மொருதட்டும், ஹரவிரிஞ்சி முக ப்ரபஞ்சமெல்லாம் கீழ் வயிற்றிலே வைத்த அபதானமொருதட்டுமாம்படி அத்புதமாகையாலே, அத்தை யநுஸந்திக்கிறரென்று ஸங்கதி.

(க)

http://acharya.org

(தாள்களையுடைத்தான) என்றது - (௧) "పాదాః ప్రత్యన్త పర్వతాః - பாதா꞉ப்ரத்யந்த பர்வதா꞉" என்கிறபடியே பர்யந்த பர்வதங்களையுடைத்தான வென்றபடி. "மண்டி" என்றதினர்த்தம், (மிக்கு) என்றது... (௯)

மூ.—சீரணிந்த மணிமாடம் திகழுநாங்கூர்த்
திருத்தெற்றியம்பலத்தென்செங்கண்மாலைக்
கூரணிந்த வேல் வலவனாலிநாடன்
கொடியாட மங்கையர்கோன் குறையலாளி
பாரணிந்த தொல் புகழான் கலியன் சொன்ன
பாமாலையிவை யைந்துமைந்தும் வல்லார்
சீரணிந்த வுலகத்து மன்னராகிச்
சேண்விசும்பில் வானவராய்த் திகழ்வர்தாமே. (௧௦)

திருமங்கையாழ்வார்திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.
சீர்	ஸம்பத்தானது
அணிந்த	அடைந்திருக்கிற
மணி	மணிமயமான
மாடம்	க்ருஹங்கள்
திகழும்	விளங்காநின்ற
நாங்கூர்	திருநாங்கூரி லுள்ள
திருத்தெற்றியம்பலத்து	திருதெற்றியம்பலமென்கிற திவ்யதேசத்திலெழுந்தருளியிருக்கிற
என்	எனக்கு ஸ்வாமியான
செம்கண்	சிவந்த திருக்கண்களையுடைய
மாலை	ஸர்வேஶ்வரன் விஷயமாக,
கூர் அணிந்த	கூர்மையையுடைய
வேல்	வேலாயுதத்தை
வலவன்	ஆளுமவராய்
ஆலிநாடன்	திருவாலிநாட்டுக்கு நிர்வாஹகராய்

பதம்.	உரை.
கொடி	த்வஜங்களையுடைய
மாடம்	க்ருஹங்கள்நிறைந்த
மங்கையர்	திருமங்கையி லுள்ளா
கோன்	ராஜாவாய் [ர்க்கு
குறையல்	திருக்குறையலூரை
ஆளி	பரிபாலநம் பண்ணுமவராய்
பார் அணிந்த	பூமியெங்கும் வ்யாப்தமான
தொல்	ஸ்வாபாவிகமான [ன
புகழான்	கீர்த்தியை யுடையரா
கலியன்	ஆழ்வார்
சொன்ன	அருளிச்செய்த
பாமாலை	பாசுரங்களுடைய ஸந்தர்ப்பரூபமான
இவை ஐந்துமைந்தும்	இப்பத்துப் பாட்டையும் [கள்
வல்லார்	அப்யஸிக்க வல்லவர்
சீர் அணிந்த	ஸம்பத்தை யுடையதான

(௧) அமரகோசம்-௨-௩௫.

http://acharya.org

உலகத்து	இந்த லோகத்தில்	வானவராய்	நித்யஸூரிகளோடு ஒரு கோஷ்டியில் அந்வயமுடையவர்களாய்
மன்னர் ஆகி	ராஜாக்களாயிருந்து (அநந்தரம்)	திகழ்வர்	விளங்கப் பெறுவர் [கள்.
சேண்விசும்பில்	பரமபதத்தில்		

வ்யா.— பத்தாம்பாட்டு. (சீரணிந்த) ஐச்வர்யமணிந்த மணிமயமான மாடத்தையுடைய திருநாங்கூர்த் திருத்தெற்றியம்பலத்திலே நிற்கிற †புண்டரீகாக்ஷனை ஸர்வேச்வரனை. (கூரணிந்த) †வேலில் கூர்மைபோலேயிருக்கும் கவிபாட்டில் கூர்மை என்கை. திருவாலிக்கு நிர்வாஹகரானவர், கொடிகளையுடைத்தான மாடங்களையுடைய திருமங்கைக்கு ராஜாவானவர், குறையலாளி. (பாரணிந்த) ‡இட்டளத்தில் வெள்ளம்போலே பூமியெல்லாம் நெருங்கின புகழையுடைய ஆழ்வாரருளிச்செய்த† பாமாலை யிவையைந்துமைந்தும் வல்லார். (சீரணிந்தவித்யாதி) ஐஹிகத்தி லைச்வர்யமும் குறைவற புஜித்து, பரமபதத்திலே நித்யஸூரிகளோடொரு கோவையாய் விளங்குவர். (க௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—பத்தாம்பாட்டு. (சீரணிந்தவித்யாதி) அணிந்த-அலங்கரித்த.(புண்டரீகம்) ரக்தாப்ஜம். வேலின்கூர்மை சொன்னதுக்குக் கருத்து (வேலிலித்யாதி). "குறையலாளி" என்றது-திருக்குறையலூரை யாளுமவரென்றபடி. க்ருஷ்ணவதாரா பதாநங்களுக்கு ப்ரதிபாதகங்களாந்தும், அது கலசாத வைந்துமாக வொரு சேர்த்தி திருவுள்ளமென்னு மிடந்தோன்ற மூலஸ்த்தபதங்களையே யருளிச்செய்கிறார் (பாமாலை யித்யாதி). ... (க௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

நாலாம்பத்து நாலாம்திருமொழி முடிந்தது.

‡ இட்டளம்-நெருங்கினவிடம்.

http://acharya.org

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

நாலாம்பத்து - அஞ்சாந் திருமொழி

தூம்புடை ப்ரவேசம்.

வ்யா.—†ஸர்வநிர்வாஹகனாய், †ஸர்வாபேக்ஷிதப்ரதனாய், ஆஶ்ரித †விரோதி நிரஸநசீலனாய், விரோதியைப் போக்குமிடத்தில் தானே வந்தவதரித்துப் போக்குமவன் திருமணிக்கூடத்தில் நின்றானென்று, க்ருதஜ்ஞராகையாலே இவையெல்லாம் தமக்குச்செய்கைக்கு வந்திருக்கிறானென்று ஹ்ருஷ்டராகிறார்... ... ... *

அரு.—தூம்புடையின் ப்ரவேசம்.-"குன்றமும்" "சங்கையும்" "பாவமும்" என்கிற மூன்றுபாட்டில் ப்ரமேயத்தை யருளிச்செய்கிறார் (ஸர்வநிர்வாஹகனாய்) என்று. "கெண்டையும்" என்கிறபாட்டில் அவதாரபல (ஃல) மான ஸர்வரக்ஷகத்வத்தைப்பற்ற வருளிச்செய்கிறார் (ஸர்வாபேக்ஷித ப்ரதனாய்) என்று. இரண்டாம்பாட்டு முதல் நாலுபாட்டின் ப்ரமேயம் (விரோதி நிரஸநசீலனாய்) என்றது. ... ...

மூ.—தூம்புடைப் பனைக்கை வேழம் துயர்கெடுத்தருளி மன்னு
காம்புடைக் குன்ற மேந்திக் கடு மழை காத்த வெந்தை
பூம்புனல்பொன்னி முற்றும் புகுந்து பொன்வரண்ட வெங்கும்
தேம்பொழில் கமழு நாங்கூர்த் திருமணிக்கூடத்தானே. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தூம்புஉடை	துளைகளையுடைத்தாய்	ஏந்தி	குடையாகவேந்தி
பனை	பனைமரம்போலே பெருத்திருக்கிற	கடு	க்ரூரமான
		மழை	கல்மாரியை [ரக்ஷித்த
கை	துதிக்கையையுடைய	காத்த	தடுத்து கோகுலத்தை
வேழம்	கஜேந்த்ராழ்வானு	எந்தை	என்னுடைய ஸ்வாமி
துயர்	துக்கத்தை [டைய		யானவன்,
கெடுத்தருளி	போக்கியும்	பூ	அழகியதான
மன்னு	(பூமியிலே) பொருந்தி (வேர்பாய்ந்து) இருக்கிற	புனல்	ஜலத்தையுடைய
		பொன்னி	திருக்காவேரியானது
		முற்றும்	எல்லாவிடங்களிலும்
காம்பு உடை	மூங்கில்களையுடைய	புகுந்து	ப்ரவேசித்து
குன்றம்	கோவர்த்தநமலையை	பொன்	(அங்குள்ள) ஸுவர்ணங்களை

http://acharya.org

வரண்ட	தள்ளிக்கொண்டுவர,	நாங்கூர்	திருநாங்கூரிலுள்ள
எங்கும்	எல்லாப்ரதேசங்களிலும் [ளானவை	திருமணிக்கூடத்தான்	திருமணிக் கூடத்தில் எழுந்தருளி யிருக்கிறன். (க)
தேம்பொழில்	நீர்நிறைந்த சோலைக		
கமழும்	பரிமளம் வீசாநின்ற		

வ்யா.—முதற்பாட்டு. (தூம்புடையித்யாதி) துளையை யுடைத்தாய், (க) "பனைத்தாள்மதகளிறு" என்னுமாபோலே பனைபோலே இருந்துள்ள கையையுடைய ஆனையினுடைய துயர்கெடுத்தருளி. (பணைக்கை) என்று பாடமாய்த்ததாகில் †அகப்பட்டாரை †யிடையற வீசும் கையையுடைய ஆனை. இத்தால் - என்றும் மதித்துப்போந்த வித்தனை; பரிபவப்பட்டறியாத ஆனையென்று கருத்து. (மன்னுவித்யாதி) பூமியிலே வேர்பாய்ந்த †மூங்கிலையுடைத்தான மலையை ஏந்தி, பரிஹரிக்கப்போகாத மழையைக்காத்த வென்ஸ்வாமி.

(பூம்புனலித்யாதி) பூத்தபுனலையுடைத்தான பொன்னியானது. அழகியவென்றுமாம். (முற்றம்புகுந்து) ஒருகாலால் புகுருகையன்றிக்கே அடையப்பரந்துபுகுந்து. (முற்றம்) என்று பாடமாய்த்ததாகில், வெளியுள்ளவிடமெல்லாம் புகுந்து. (பொன்வரண்டவெங்கும்) †கிடக்தபொன்னை எல்லாமுருட்டிக்கொண்டு தள்ள. (தேம்பொழிலித்யாதி) நீர்மாறுதே பாய்கையாலே பொழிலானது பரிமளம் கமழாநின்ற திருநாங்கூர். ... ... (க)

அரு.—முதற்பாட்டு. (தூம்பித்யாதி) "பணைக்கை" என்று - தழைக்கை; அத்தால் - பருமனைச்சொல்லுகிறதென்று விவக்ஷித்து பலிதார்த்தமருளிச்செய்கிறார் (அகப்பட்டாரையித்யாதி). (இடையற) நடுவொடிய. "காம்பு" என்றதினர்த்தம் (மூங்கில்) என்றது.

"வரண்ட" கொழிக்கவென்று சப்தார்த்தமாயருளிச்செய்கிறார் (கிடந்த வித்யாதி) ... ... (க)

மூ.—கவ்வைவாளெயிற்றுவன்பேய்க்கதிர்முலைசுவைத்திலங்கை
மன்னிய விடும்பை தீரக் கடுங்கணை துரந்த வெந்தை
கொவ்வைவாய்மகளிர் கொங்கைக்குங்குமம் கழுவிப்போந்த
தெய்வநீர்க் கமழு நாங்கூர்த் திருமணிக்கூடத்தானே. (உ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கவ்வை	பேரொலியை யுடையளாய்	எயிறு	பற்களையுடையளாய்
வாள்	வாள்போன்ற	வன்	க்ரூரசித்தையான
		பேய்	பூதனையினுடைய

(க) திருவாய். ச-க-ச.

http://acharya.org

கதிர்	(விஷம்மிக்கு) ஒளிவிடாநின்ற	கொவ்வை	கோவைப்பழம்போன்ற.
முலை	ஸ்தநத்தை	வாய்	அதரத்தையுடையரான
சுவைத்து	அமுதுசெய்தும்		
இலங்கை	லங்கையினுடைய	மகளிர்	ஸ்த்ரீகளுடைய
மன்னிய	நித்யமான	கொங்கை	ஸ்தநங்களின்மேல் பூசப்பட்ட
இடும்பை	துர்வர்க்க ஸம்பந்தமாகிற தாரித்ர்யமானது	குங்குமம்	குங்குமச்சேறுகளை
		கழுவி	அலம்பிக்கொண்டு
தீர	துலையும்படி	போந்த	ப்ரவஹியாநின்ற
கடும்	க்ரூரமான (கொல்ல	தெய்வம்	விலக்ஷணமான
கணை	பாணங்களை [வல்ல)	நீர்	ஜலமானது
துரந்த	விட்டவனுமான	கமழும்	பரிமளியாநின்ற
எந்தை	என்னுடைய ஸ்வாமியானவன்,	நாங்கூர்த் திருமணிக்கூடத்தானே. (க)	

வ்யா.—இரண்டாம்பாட்டு. (கவ்வையித்யாதி) †யசோதைப்பிராட்டி விக்ருதையாய் வாயாலே ஏத்துமென்றுகொண்டு அவளை யநுகரித்து ஆர்ப்பரவத்தையுடையளாய், வாள்போலே யிருந்த வெயிற்றையுடைய திண்ணிய பேய்ச்சியுடைய, விஷத்தாலே விம்மிப் புகரையுடைய முலையைச்சுவைத்து. (இலங்கைமன்னியவிடும்பைதீர) லங்கைக்கு நித்யமாயிருப்பதொரு தாரித்ர்யமுண்டு - புற்று பாம்புறுதாயிருக்குமாபோலே துர்வர்க்கமான ராக்ஷஸஜாதி மாறாதே யிருக்கையாகிற தாரித்ர்யம் தீர. †ஒருருக்கு நன்மையாவது-வஸ்துபூதர்வர்த்திக்கை; ஊருக்குக் ‡கீழ்மையாவது - அவஸ்துக்கள் வர்த்திக்கை. (கூர) என்று பாடமாய்த்ததாகில்-இடும்பைமிக, அத்தை அம்பாலே போக்கின வெந்தை. (கடுங்கணைதுரந்தவெந்தை) ப்ரதிபக்ஷத்தின்மேலே கண் பாராதே அம்பைவிட்டவென்ஸ்வாமி. (வவ்வியவிடும்பைதீர) என்று பாடமாய்த்ததாகில் - லங்கையைப்பற்றின துக்கமானது போம்படியாக. ராவணஸம்பந்தத்தால்வந்த துக்கம் போம்படியாக.

(கொவ்வையித்யாதி) கோவைப்பழம்போலே யிருக்கிற வாயையுடையரான ஸ்த்ரீகளுடைய கொங்கையிற்குங்குமத்தைக் கழுவிக்கொண்டுபோந்து †அப்ராக்ருதமான நீரானது பரிமளத்தைப் புறப்பட விடாநின்றுள்ள திருநாங்கூர். ... ... (உ)

அரு.—இரண்டாம்பாட்டு. (கவ்வையித்யாதி) ஆஸ்ரிதனை ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கும் ஆய்ச்சியர்க்கும் பசுக்களுக்கும் வந்தவாபத்தைப்போக்கினவளவன்றியே, தனக்கும் தன்தேவியான வைதேவிக்கும் வந்தவா

‡ (பா) தீமையாவது.

பத்தைப் போக்கி எனக்கு அச்சேர்த்தியை யநுபவிக்கத்தந்த உபகாரக னென்று அநுஸந்திக்கிருரென்றுஸங்கதி.

கவ்வை - ஆர்ப்பரவமாய், அதுதானும் - ஒரு விக்ருதியாலே சப்தித்துக்கொண்டு வருகையாய், அத்தாலே - பிள்ளையிடத்தில் பரிவாலேவந்த விக்ருதியால் பிறந்த சப்தமாய், இது இவன் முலை சுவைக்கைக்கு ஹேதுவென்று விவக்ஷித்துத் தாத்பர்யமருளிச்செய்கிருர் (யசோதைபித்யாதி). ராக்ஷஸர்மாருதே யிருக்கை ரிக்ததாரூபமான தாரித்ர்யமாமோவென்னவருளிச்செய்கிருர் (ஓளருக்கித்யாதி). (க) "ஸந்தேஹம் ததோவிதுஃ - ஸந்தமேநம் ததோவிதுஃ" என்கிறபடியே ப்ரஹ்மஜ்ஞாநிகள் வர்த்திக்கையில்லாமையாலே, அவஸ்துக்களிருந்தாலும் (உ) "நேயமஸ்தி புரீ லங்கா - நேயமஸ்தி புரீ லங்கா" என்னுமாபோலே ரிக்தமான ஸ்த்தலமென்னலாமே என்று கருத்து.

(ந) "காவேரீ விரஜா ஸேயம் - காவேரீ விரஜா ஸேயம்" என்றருககையாலே (அப்ராக்ருதமான) என்றது. ... ... (உ)

மூ.—மாத்தொழில்மடங்கச் செற்று மருதிற நடந்து வன்தாள் [சே
சேத்தொழில்சிதைத்துப் பின்னைசெவ்விதோள் புணர்ந்தவெந்
நாத்தொழில் மறைவல்லார்கள் நயந்தறம் பயந்த வண்கைத்
தீத்தொழில் பயிலு நாங்கூர்த் திருமணிக்கூடத்தானே. (ந)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மா	கேசியென்னும் அஸுரனுடைய	பின்னை	நப்பின்னைப்பிராட்டி
தொழில்	வ்யாபாரமானது	செவ்வி	அழகியதான[யுடைய
மடங்க	முடங்கும்படி	தோள்	புஜங்களோடு [மான
செற்று	நிரஸித்தும்,	புணர்ந்த	ஸம்ஶ்லேஷித்த வனு
மருது	மருதமரங்கள்	எந்தை	என்னுடைய ஸ்வாமியானவன்,
இற	முறியும்படியாக	நா தொழில்	நாவினுடைய வ்யாபாரமான அத்யயநம்பண்ணப்பட்ட
நடந்து	அவற்றின் நடுவே போயும்		
வன்	த்ருடமான	மறை	வேதங்களை
தாள்	கால்களையுடைத்தான	வல்லார்கள்	நிர்வஹிக்கவல்ல ப்ரஹ்மணர்கள்
சே	ருஷபங்களுடைய		
தொழில்	வ்யாபாரத்தை	நயந்து	ஆதரித்து
சிதைத்து	அழித்து	அறம்	தர்மத்தை

(க) தை-ஆந- (உ) ரா-ஸு-சந-உ௫. (ந)

http://acharya.org

ப்பயந்த	உத்பாதித்த (செய்ய	தீ தொழில் அக்நிகர்மங்களை
வண்	உதாரமான [வல்ல)	பயி லும் அநுஷ்டிப்பாநின்ற
கை	கைகளினாலே	நாங்கூர்த்திருமணிக் கூடத்தானே

வ்யா.—மூன்றாம்பாட்டு. (மாத்தொழிலித்யாதி) கேசியுடைய வ்யாபாரமடங்கும்படி நிரஸித்து, நடைகற்கிறபோதே மருதுகளிற் றப்போம்படி நடைகற்று, வலிய தாளையுடைத்தாயிருக்கிற சேக்களுடைய வ்யாபாரத்தை †மணற்கொட்டகமழிக்குமாபோலே யழித்து, நப்பின்னைப்பிராட்டியுடைய செல்வியையடைக்கான கோனோடே புணர்ந்தவென்ஸ்வாமி.

நாவுக்குத் தொழிலான மறைவல்லவர்கள், ஆதரித்துக்கொண்டு தர்ட்த்தையுத்பாதித்த உதாரமான கையைக்கொண்டு தீத்தொழில்பயிலாநிற்பர்களாய்த்து. †"'வ்ருத்த (த்ரு) வானுய்ப்போந்தவன் வ்ருத்த (த்ரு) ஹீநனானன்' என்னுமாபோலே, தீத்தொழில் என்ற த்வநிவிசேஷத்தைப்பற்றச் சொன்னவார்த்தை†" என்றருளிச்செய்தார். தீயினுடைய தொழிலென்றபடி. †அத்யயநத்தைப்பண்ணி, அத்யயநத்தாலே விதேயமாயிருக்கிற கர்மங்களையு மநுஷ்டியாநிற்பர்களாய்த்து. †அத்யயநத்தைப்பண்ணி, ஆந்ருசம்ஸ்ய ப்ரதாநராகையாலே ஆர்த்த (ர்) விஷயங்களிலே யிரக்கத்தையுடையராய், தர்மங்களை யுத்பாதிக்கிற உதாரமான கையைக்கொண்டு ‡அக்நித்ரயங்களையும் அநுஷ்டியாநிற்பர்கள் †அவ்வூரிலுள்ளார்க்கு அத்யயநமும் அநுஷ்டாநமும் யாத்ரையாயிருக்குமாபோலே யாய்த்து அவனுக்கு விரோதிநிரஸநம் யாத்ரையாயிருக்கும்படி. ... ... (௩)

அரு.—மூன்றாம்பாட்டு. (மாத்தொழிலித்யாதி) தன்மேல்வந்த விரோதியையும் பெரிய பிராட்டியார்க்கு வந்த விரோதியையும் போக்கினவளவு மன்றிக்கே, திர்யக் ஸ்த்தாவரங்களுங்கூட தனக்கும் நப்பின்னைக்கும் ப்ரதிபந்தகங்களாக அவற்றை அநாயாஸேந நிரஸித்து நப்பின்னையும் தானுமாயிருக்கிற சேர்த்தியை எனக்குத்தந்த வென்னை என்கிறுரென்று ஸங்கதி.

(க) "சிற்றில் சிதைத்து" என்றாப்போலே யிருக்க, "சிதைத்து" என்கையாலே யருளிச்செய்கிறார் (மணலித்யாதி).

"அறம் பயந்த" என்று சொல்லிவைத்து "தீத்தொழில்" என்னும்போது, வ்ருத்தவானென்று சொல்லிவைத்து வ்ருத்தஹீநனென்றாப்போ

(க) பெரி-திரு-௩-உ-உ. ‡ (பா) அக்நி ஹோத்ரங்களையும்.

லே பரஸ்பர வ்யாஹதம்போலே யிருக்கிறதே என்னும் சங்கையைப் பரி ஹரிக்கிருர் (வ்ருத்தவாஞ யித்யாதி). (சொன்னவார்த்தை) என்ற வாக்யம், அல்ல என்ருெருபதம் கூட்டுவது. நீதான தொழிலென்றர்த்தமல்லவாகிலும், நீயினுடைய தொழில் என்றபோதும் தாஹகத்வாதி குணஹீநதை ஸ்ப்புரியாதோ,"அறம் பயந்த" என்றத்தோடே விருத்தமன்ருே வென்ன வருளிச்செய்கிருர் (அத்யயநத்தை யித்யாதி). திருமணிக்கூடத்திலிருக்கும் வேதார்த்த வித்துக்கள் பகவத்பாரதந்த்ர்ய ஜ்ஞாநவான்களாயிருக்க, வேத விதேயங்களான கர்மங்களை யநுஷ்ட்டிக்கைக்கு ப்ரயோஜநமென்னென்ன வருளிச்செய்கிருர் (அத்யயநத்தைப் பண்ணி ஆந்ருசம்ஸ்யேத்யாதி). ஆந்ருசம்ஸ்யப்ரதாநராய் லோகோஜ்ஜீவநார்த்தம் அநுஷ்ட்டிப்பர்களென்று கருத்து. எம்பெருமானுடைய வபதாநங்களிலே யீடுபட்ட விவர் அவர்களுடைய வநுஷ்ட்டாந விசேஷத்தைச் சொல்லுகைக்குக் கருத்தென்னென்ன வருளிச்செய்கிருர் (அவ்வூரி லித்யாதி). இத்தால் - இவர்களைப்போலே எம்பெருமான் ஆஶ்ரிதர்க்காகவே தங்களுடைய விரோதிகளைப் போக்கிஞனென்று பரார்த்ததை தோற்றுகைக்கருளிச்செய்தா ரென்றதாய்த்து ... ... (௩)

மூ.—தாங்கரும் சினத்து வன்தாள் தடக்கை மா மருப்பு வாங்கிப்
பூங்குருந்தொசித்துப் புள்வாய்பிளந்தெருதடர்த்த வெந்தை
மாங்கனிநுகர்ந்து மந்தி வந்து வண்டிரிய வாழைத்
தீங்கனி நுகரு நாங்கூர்த் திருமணிக்கூடத்தானே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தாங்கு அரும்	(ஒருவராலும்) பொறுக்க வரிதான	பூம்	பூத்திருக்கிற
		குருந்து	குருந்தமரத்தை
சினத்து	கோபத்தை யுடையதாய் [யதாய்	ஒசித்து	முறித்தும்
		புள்	பகாஸுரனுடைய
வன் தாள்	வலிய கால்களையுடை	வாய்	வாயை
	பெருத்த துதிக்கையை யுடையதுமான குவலயாபீடத்தினுடைய	பிளந்து	கிழித்தும்
		எருது	ருஷபங்களை
		அடர்த்த	நெருக்கி ஸம்ஹரித்தவனுமான
மா	பெரிதான	எந்தை	என்னுடைய ஸ்வாமியானவன்,
மருப்பு	கொம்பை		
வாங்கி	பிடுங்கியும்	மாங்கனி	மாம்பழங்களை

http://acharya.org

நுகர்ந்த	புஜித்த	இரிய	சிதறியோடும்படியாக
மந்தி	பெண்குரங்கானது	வாழை	வாழையினுடைய
வந்து	அங்குநின்றும் வந்து	தீ	இனிதான
வண்டு	(மதுபானார்த்தமாக இழிந்த) வண்டுகளானவை	கனி	பழங்களை
		நுகரும்	புஜியாநின்ற
			நாங்கூர்த்திருமணிக் கூடத்தானே.

வ்யா.—நாலாம்பாட்டு. (தாங்கித்யாதி) ஒருவரால் தாங்கவரிதான சினத்தையுடைத்தாய், வலியதாளையுடைத்தாய், பெரியகையையுமுடைத்தாயிருக்கிற குவலயாபீடத்தினுடைய பெரியகொம்புகளை அநாயாஸேந குப்பைக்கீரைபோலேவாங்கி, அடியேபிடித்துத் தலையளவும் செல்லப்பூத்து தர்சநீயமாம்படிநின்ற குருந்தை முறித்து, பகாஸுரன் வாயைக்கிழித்து, எருதுகளேழையுமடர்த்த வென்ஸ்வாமி.

(மாங்கனி) மாம்பழத்தை புஜித்த மந்தியானது, "இனிரஸாந்தரத்தாலே போதுபோக்கவேணும்" என்றுபார்த்து, மதுபாநத்துக்காகப் புகுந்த வண்டுகளானவை சிதறிப்போம்படியாக, வாழையினுடைய இனியகனியை புஜியாநின்றுள்ள. † அவன் விரோதிநிரஸநத்தாலல்லது போதுபோக்க மாட்டாதாப்போலே யாய்த்து இவையும் ரஸாநுபவத்தாலல்லது போதுபோக்கமாட்டாதே யிருக்கும்படியும். ... (ச)

அரு.—நாலாம்பாட்டு. (தாங்கரு மித்யாதி) தனக்கும் நப்பின்னைக்கு முள்ள விரோதிகளை நிரஸித்தமை பின்னுமிட்டச் செய்தே, மதுரையிற் பெண்களுக்குதவினமையு மருளிச்செய்கிறுரென்று ஸங்கதி.

"நுகரும்" என்கிற வர்த்தமாநார்த்தத்தை ஸத்ருஷ்டாந்த முபபாதிக்கிறுர் (அவனித்யாதி). ... ... (ச)

மூ.—கருமகளிலங்கையாட்டி பிலங்கொள்வாய்திறந்து தன்மேல்
வருமவள் செவியும் மூக்கும் வாளினால் தடிந்த வெந்தை
பெருமகள்பேதைமங்கை தன்னொடும் பிரிவிலாத
திருமகள்மருவு நாங்கூர்த் திருமணிக்கூடத்தானே. (௫)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கருமகள்	சண்டாள ஸ்த்ரீபோல் அதி நீசையாய்	தன்மேல்	தன்னுடையமேலே
இலங்கையாட்டி	லங்கைக்கு நிர்வாஹகையாய்	வருமவள்	வந்தவளான சூர்ப்பணகையினுடைய
பிலங்கொள்	குஹைபோன்ற[ண்டு	செவியும்	காதையும்
வாய்திறந்து	வாயைத் திறந்துகொ	மூக்கும்	நாஸிகையையும்
		வாளினால்	வாளாயுதத்தினால்

தடிந்த	அறுத்துப் போகட்ட	மங்கை	பூமிப்பிராட்டியும்
எந்தை	என்னுடைய ஸ்வாமியானவன்,	தன்னொடும்	தன்னோடு
பெருமகள்	நிருபாதிக ஸ்த்ரீத்வத்தை யுடையவளாய்	பிரிவு இலாத	விச்லேஷத்தை யுடையளாகாத (எப்போதும் ஸம்ச்லிஷ்டையான)
பேதை	ஆச்ரித தோஷத்தில் அஜ்ஞாநமுடையளான	திருமகள்	ஸ்ரீதேவியும் [இற
		மருவும்	நித்யவாஸம் பண்ணு
		நாங்கூர்த்திருமணிக் கூடத்தானே.	

வ்யா:—அஞ்சாம்பாட்டு. (கருமகள்) †தண்ணிய ஸ்த்ரீ, †ராவணனுடன் பிறந்தாளாகையாலே லங்கையிலுள்ளாரடையக் கொண்டாடும்படி யிருக்கிறவள், பிலம்போலே யிருக்கிற வாயைத்திறந்து. (தன் மேல்வருமவள்) †அநந்யையானவளை நோக்கி வந்தபடியாலே தன்மேலே வந்ததாயிருந்தபடி. (செவி) †ஏறிட்டுக்கொடுவந்த துர்மாநத்தைப் போக்கித் †தானானபடியே யாக்கிவிட்டபடி. †இவளை புஜிக்கைக்கு விரோதியிவளிறே என்று பிராட்டியை நலிவதாக வாயையங்காந்து கொண்டு வந்தாளாய்த்து; அவளுடைய செவியையும் மூக்கையும் வாளாலே யறுத்தவென்ஸ்வாமி.

(பெருமகள்) நிருபாதிக ஸ்த்ரீத்வத்தையுடையவள். (பேதைமங்கை) பிறர்குற்றமறிகைக்கு அறிவில்லாதபடி யிருக்கிறவள். ஸ்ரீபூமிப்பிராட்டியைச் சொன்னபடி. (தன்னொடும்பிரிவிலாததிருமகள்) (௧) "அகலகில்லேனிறையும்" என்கிறபடியே - ஒருகாலும் பிரியக்கடவளன்றிக்கேயிருக்கிற பெரியபிராட்டியார். † ஸ்ரீபூமிப்பிராட்டியும் பெரியபிராட்டியாரும் நித்யவாஸம் பண்ணுகின்றுள்ள. ... (௫)

அரு.—அஞ்சாம்பாட்டு. (கருவித்யாதி) இரண்டாம்பாட்டில் *இலங்கை வவ்விய விடும்பைகூரக் கடுங்கணை துரந்ததுக்குக் காரணமான சூர்ப்பணகையின் துர்மாநத்தைப் போக்கின செயலைச்சொல்லி, இத்தால்-அநந்யரை யநாதரித்துத் தன்னை யாசைப்பட்டார்க்கு முகங்கொடாதவனென்னு மர்த்தத்தை எனக் கறிவித்தவனென்கிருரென்று ஸங்கதி.

(தண்ணியஸ்த்ரீ) சண்டாளியென்றபடி. இலங்கையாட்டி-மண்டோதரியன்றோ; இவள் நிர்வாஹகையோ வென்ன வருளிச்செய்கிருர் (ராவண வித்யாதி). பிராட்டிமேலென்ன வேண்டாவோ வென்ன வருளிச்

---

(௧) தி-வாய்-௬-௧௦-௧௦.

http://acharya.org

செய்கிறார் (அநந்யையானவளை யித்யாதி). (ஏறிட்டுக்கொடுவந்த தூர்மாநத்தை) என்றது - காமரூபையாய்வந்து, "எனக்கெதிரில்லை" என்றிருந்த தூர்மாநத்தை யென்றபடி. (தானானபடியே) முன்புத்தை ராக்ஷஸவேஷத்துக்கடுத்த வைரூப்யம் ப்ரகாசிக்கும்படியே.

விவரணம் (இவனை யித்யாதி) தொகுத்தவர்த்தம் (ஸ்ரீபூமி யித்யாதி) ... ... (௫)

அவ. — ஆறும்பாட்டு. (கெண்டையித்யாதி) தனக்குப் போராத ஜந்மங்களிலே பிறந்து ரக்ஷகனானவன் தானான நிலையிலே காணலாம்படி திருமணிக் கூடத்திலே வந்து ஸந்நிஹிதனானானென்கிறார். ... ... *

மூ.—கெண்டையும் குறளும் புள்ளும் கேழலு மரியு மாவும்
அண்டமும் சுடரு மல்லா வாற்றலுமாய வெந்தை
ஒண்டிறல் தென்னனோட வடவரசோட்டங் கண்ட
திண்டிறலாளர் நாங்கூர்த் திருமணிக்கூடத்தானே. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கெண்டையும்	மத்ஸ்யமும்	ஒண்திறல்	மிக்க பலத்தை யுடையனாய்
குறளும்	வாமநனும்	தென்னன்	தென்தேசத்துக் கரசனான பாண்ட்யனானவன்
புள்ளும்	பக்ஷியான ஹம்ஸமும்	ஓட	ஓடும்படியாகவும்
கேழலும்	வராஹமும்	வடவரசு	பாண்ட்ய தேசத்துக்கு வடக்கிலுள்ள சோள தேசத்துக்கு ராஜாவான சோழனை
அரியும்	நரஸிம்ஹமும்	ஓட்டங்கண்ட	தோற்றோடும்படி யாகவும் பண்ணின
மாவும்	ஹயக்ரீவனும் (ஆகிய இவ்வவதாரங்களை யுடையனாய்)	திண்திறலாளர்	த்ருடமான பலத்தை யுடையரான ப்ராஹ்மணருடைய
அண்டமும்	ப்ரஹ்மாண்டமும்		நாங்கூர்த்திருமணிக் கூடத்தானே.
சுடரும்	ஸூர்ய சந்த்ரர்களும்		
அல்லா	மற்றுமுண்டான		
ஆற்றலும்	ஶ்ரேஷ்ட்ட வஸ்துக்களும்		
ஆய	தனக்குப்ரகாரமாம்படி யெழுந்தருளியிருப்பவனுமான		
எந்தை	என்னுடைய ஸ்வாமியானவன்,		

வ்யா.—(கெண்டையும்) மத்ஸ்யமும், ஸ்ரீவாமநனும், அன்னமும், ஸ்ரீவராஹமும், நரஸிம்ஹமும், ஹயக்ரீவமும், விபூதியும்,

http://acharya.org

அது தனக்கு ப்ரகாசத்தைப்பண்ணக்கடவ சந்த்ரஸூர்யர்களும், மற்றும், (க) "யத்யத்விபூதிமத்ஸத்வம் ஸ்ரீமதூர்ஜிதமேவவா - யத்யத் விபூதிமத்ஸத்வம் ஸ்ரீமதூர்ஜிதமேவவா" என்கிறபடியே - விபூதியில் உச்ச்ரிதயான பதார்த்தங்களுமெல்லாம் தானென்று சொல்லலாம்படியிருக்கிறவன். (ஆற்றலுமாய) வலியுடைத்தாய் நித்யமானபதார்த்தங்களாய் நின்றவென்ஸ்வாமி.

(ஒண்டிறலித்யாதி) ஒள்ளியதிறலையுடைய பாண்ட்யனோடொப்படியாக, வடவரசான ராஜாவையோட்டங்கண்ட திண்ணியமிடுக்கையுடைய ப்ராஹ்மணர் வர்த்திக்கிற. அவனவதரித்துச் செய்ததெல்லாம் தாங்களேசெய்ய வல்லராயாய்த்து அவ்வூரிலுள்ளாரிருப்பது. (சு)

அரு — ஆரும்பாட்டு. (கெண்டையித்யாதி) கீழெல்லாம் ராமக்ருஷ்ணாவதார சரித்ரத்திலே மண்டினவர்க்கு, அவன் ஸர்வாபேக்ஷித ப்ரதஜ்ஞைக்காக மத்ஸ்யாத்யவதாரங்களைச் செய்தபடியைப் பார்க்கவே, அவையிரண்டும் பரத்வத்தோடொக்குமென்று தோன்றுகையாலே அவற்றை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதியை ஸ்ப்புரிப்பிக்கிறார் (தன்கித்யாதி). (பேராத) தகாத.

ராஜாக்களா யிருப்பாரை ப்ராஹ்மணராயிருப்பார் ப்ராஜிதராம்படியடிக்கைக்கு ஹேதுவென்னென்ன; அவர்களங்யாயம் பண்ணி பகவத்வேஷிகளாகில் (க) "அறுப்பதே கருமம்" என்கிறபடியே வெல்லவல்ல மிடுக்குடையரா யிருப்பரென்னு மத்தை ஸத்ருஷ்டாந்த முபபாதிக்கிறார் (அவனித்யாதி). ... ... (சு)

அவ. — ஏழாம்பாட்டு. (குன்றமித்யாதி) பரார்த்தமான பதார்த்தங்களுக்கு நியந்தாவான ஸர்வேஶ்வரனிங்கேவந்து வர்த்தியாநின்றானென்கிறார் ... ...

மூ. — குன்றமும் வானும் மண்ணும் குளிர்புனல் திங்களோடு
நின்ற வெஞ்சுடரு மல்லா நிலைகளுமாய வெந்தை
மன்றமும் வயலும் காவும் மாடமும் மணங்கொண்டெங்கும்
தென்றல் வந்துலவு நாங்கூர்த் திருமணிக்கூடத்தானே (எ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
குன்றமும்	மலைகளும்	குளிர்	சைத்யத்தையுடைய
வானும்	ஆகாசமும்	புனல்	ஜலமும்
மண்ணும்	பூமியும்	திங்களோடு	சந்த்ரனும்

(க) கீதை-அ-௩௧. (க) திருமாலை-அ.

http://acharya.org

நின்ற	நிலைநின்றவனும்	காவும்	தோட்டங்களும்
வெம்சுடரும்	உஷ்ண கிரணனுமான ஸூர்யனும்	மாடமும்	க்ருஹங்களும் (ஆகிய இவற்றி லுண்டான)
அல்லா நிலைகளும்	மற்றுமுண்டான நக்ஷத்ரங்களும் (ஆகிய இவற்றை)	மணம்	பரிமளத்தை
		கொண்டுவந்து	க்ரஹித்துக் கொண்டுவந்து
ஆய	தனக்கு ப்ரகாரமாக வுடையனுன [வன்,	எங்கும்	எல்லா ப்ரதேசங்களிலும்
எந்தை	எனக்கு ஸ்வாமியான	தென்றல்	மலய மாருதமானது
மன்றமும்	பெரிய வீதிகளும்	உலவும்	ஸஞ்சரியாநின்ற
வயலும்	கழனிகளும்	நாங்கூர்த் திருமணிக் கூடத்தானே.	

வயா.—(குன்றம்) சேதநர்க்கு போக்ய போகோபகரண போகஸ்த்தாநங்களைப் பண்ணிக்கொடுக்கக் கடவதான மலைகளும், அவர்களுக்கு அவகாசப்ரதாநம்பண்ணுகிற ஆகாசமும், போக்யங்களைத் தரக்கடவதான பூமியும், சைத்யத்தைப்பண்ணக்கடவதான ஜலமும், சந்த்ரனும், அவனுல்வந்தவவ்வலே ஆற்றுமாதித்யனும், சேதநருடைய ஜீவநத்துக் குறுப்பான நன்மை தீமைகளைத் தெரிவியாநின்றுள்ள நக்ஷத்ரங்களுமாய் நின்ற.

(மன்றமும்) மன்றிலேதானே சோலையுண்டாயிருக்குமே, வயலிலே பொய்கைகளுமுண்டாயிருக்குமே, சோலையிலும், மாடங்களிலே ஸ்த்ரீகளிருப்பர்களே, அவ்வோவிடங்களிலுண்டான பரிமளத்தைக் கொண்டுவந்தெங்கும் தென்றலுலாவாநின்றுள்ள வென்னுதல்; எங்குமுண்டான பரிமளத்தைக் கொண்டுவந்துலாவாநின்றுள்ள வென்னுதல் ... ... (எ)

அந—ஏழாம்பாட்டு. (குன்றமித்யாதி) "அண்டமும் சுடரும்" என்று கீழ்ப்பாட்டில் ப்ரஸ்துதமான ஸர்வநிர்வாஹகத்வத்தை, மேல் மூன்றுபாட்டிலே யருளிச்செய்கிறரென்று திருவுள்ளம்பற்றி, அதில், இதில் சொல்லுகிற அம்சத்தை யருளிச்செய்கிறர் (பரார்த்தமான வித்யாதி).

"நிலைகள்" சேதநருடைய ஸ்த்திதிகளாய், அவற்றுக்கு ஜ்ஞாபகங்களான நக்ஷத்ரங்களை சந்த்ர ஸூர்ய ஸமபிவ்யாஹார பலத்தாலே சொல்லலாமென்றருளிச்செய்கிறர் (சேதநருடைய வித்யாதி).

http://acharya.org

காவில் பரிமளம் சொல்லலா மித்தனை போக்கி, மன்றிலும் வயலி லும் மாடத்திலும் பரிமளப்ரஸக்தி எங்ஙனே யென்ன வருளிச்செய்கிருர் (மன்றிலே யித்யாதி). ஸ்த்ரீகள் ஸ்வதஃ பத்மகந்திநிகளா யிருப்பரென்று கருத்து. (எங்குமுண்டான) என்றது-மன்று முதலானவிவற்றி லெங்கு முண்டான வென்றபடி... ... ... (எ)

அவ.—எட்டாம்பாட்டு. (சங்கையும்) த்யாஜ்யமாயும் உபாதேய மாயும் பௌதிகமாயுமுள்ள பதார்த்தங்களுக்கு நியந்தாவானவனிங் கே வந்து வர்த்தியாநின்ருனென்கிருர். ... ... *

மூ.—சங்கையும் துணிவும் பொய்யும் மெய்யு மித்தரணியோம்பும்
பொங்கிய முகிலு மல்லாப் பொருள்களு மாய வெந்தை
பங்கய முகுத்த தேறல் பருகிய வாளை பாயச்
செங்கயலுகளு நாங்கூர்த் திருமணிக்கூடத்தானே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
சங்கையும்	ஸம்சயமும்	எந்தை	என்னுடைய ஸ்வாமி
துணிவும்	நிஸ்சயமும்		யானவன், [றும்
பொய்யும்	அஸத்யமும்	பங்கயம்	தாமரைப்பூவில் நின்
மெய்யும்	ஸத்யமும்	உகுத்த	பெருகாநின்ற
இத்தரணி	இந்தபூமியை	தேறல்	தேனை
ஓம்பும்	ரக்ஷிக்கத்தக்கதாய்	பருகிய	பாநம்பண்ணின
பொங்கிய	அபிவ்ருத்தமாகா	வாளை	பெரியமீனானது [கு)
முகிலும்	மேகமும் [நின்ற	பாய	துள்ளாநிற்க, (அதுக்
அல்லா	மற்றுமுண்டான	செம்	சிவந்த
பொருள்க ளும்	வஸ்துக்களும் (ஆகிய இவற்றை)	கயல்	சிறுமீனானது [நின்ற
		உகளும்	(அஞ்சி)குதித்து ஓடா
ஆய	நியமிக்க வல்லவனான	நாங்கூர்த்திருமணிக் கூடத்தானே.	

வ்யா.—(சங்கையும்) (க) "ஸம்ஶயாத்மா விநஶ்யதி-ஸம்சயாத்மா விநஶ்யதி" என்கிறபடியே - விநாசத்தைப் பண்ணக்கடவதான ஸம்ச யமும், துணிவும்-(உ) "வ்யவஸாயாத்மிகா பு³த்³தி⁴:- வ்யவஸாயாத்மிகாபுத் திரேகா" என்கிற துணிவும், பொய்யும் - ப்ரயோஜநநிரபேக்ஷமாகச் சொல்லும் அஹிதமான பொய்யும், ஹிதரூபமான மெய்யும். (இத்த ரணியித்யாதி) ப்ரயோஜந நிரபேக்ஷமாக பூமியை ரக்ஷிக்கக்கடவதாய் விஸ்த்ருதமாயிருக்கிற மேகங்களும், மற்றும் இடி மின் தொடக்கமா னவை எல்லாவற்றுக்கும் நியந்தாவான ஸர்வேஶ்வரன்.

(க) கீதை-௪-௪௦. (உ) கீதை-உ-௪க.

http://acharya.org

(பங்கயமித்யாதி) தாமரைப்பூவானது நிறைந்து உகுத்த தேனை ப்பருகின வாளையானது களிப்பாலேபாய, சிவந்த கயலானது அஞ்சி ஸ்வஸ்த்தாநத்தில்நின்றும் போராநின்றுள்ள. ... ... (அ)

அரு.—எட்டாம்பாட்டு. (சங்கையு மித்யாதி) பரார்த்தமான பதா ர்த்தங்களுக்கெல்லாம் நிர்வாஹகனுகில், லோகத்தில் இவ்வர்த்தத்தில் ஸம் சயிப்பார் சிலர், நிஸ்சயிப்பார் சிலர், பொய்யும் மெய்யும் சொல்லிக்கொ ண்டு திரிவாராய் கேவல தைவிகமான வ்ருஷ்ட்யாதிகளில் ஜீவிப்பாரும் முடிவாருமாய், இப்படி நாடு கிடப்பானென்னென்கிற சங்கைக்குப் பரி ஹாரமாக, சேதநகர்மாநுஸாரியாய் அவனே நிர்வஹிக்கிறுனென்று ஸங் கதியை ஸ்ப்புரிப்பிக்கிருர் (த்யாஜ்யமாயு மித்யாதி).

"ஓம்பும்" என்றதினர்த்தம் (ரக்ஷிக்கக் கடவதாய்) என்றது. உகுத் த-ப்ரவஹித்த. வாளை-பெரியமீன். கயல்-சிறுமீன். ... ... (அ)

அவ. — ஒன்பதாம்பாட்டு. (பாவமுமித்யாதி) நிஷித்தாநுஷ்ட் டாநம், விஹிதாநுஷ்ட்டாநம், மோக்ஷம், மோக்ஷத்துக்கு உபயோகி யான ஆத்மகுணங்கள், அதுக்கு விரோதியான அநாத்ம குணங்கள், இவற்றுக்கெல்லாம் நியந்தாவானவன் இங்கே வந்து வர்த்தியாநின்ற னென்கிருர் ... ... *

௯௰.—பாவமு மறமும் வீடு மின்பமும் துன்பந்தானும்
கோவமு மருளு மல்லாக் குணங்களு மாய வெந்தை
மூவரி லெங்கள் மூர்த்தி யிவனென முனிவரோடு
தேவர் வந்திறைஞ்சு நாங்கூர்த் திருமணிக்கூடத்தானே. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பாவமும்	பாபமும்	மூவரில்	ப்ரஹ்ம விஷ்ணு ருத் ரர்களில்
அறமும்	புண்யமும்		
வீடும்	மோக்ஷமும்	எங்கள்	எங்களுக்கு ஆஸ்ரய ணீயனுன
இன்பமும்	ஸுகமும்		
துன்பந்தானும்	துக்கமும்	மூர்த்தி	ஸ்வாமியானவன்
கோவமும்	க்ரோதமும்	இவன் என	இந்த விஷ்ணுவே என்று தெளிந்து
அருளும்	அநுக்ரஹமும்		
அல்லா	மற்றுமுள்ள	முனிவரோடு	ஸநகாதி ருஷிகளோ டு கூட [கள்
குணங்களும்	ஸத்வாதி குணங்களு ம் (ஆகிய இவற் றை) [னை	தேவர்	இந்த்ராதி தேவதை
		வந்து	கிட்டி [ருக்கிற
ஆய	நிர்வஹிக்க வல்லவ	இறைஞ்சும்	ஆஸ்ரயிக்கும்படி யி
எந்தை	என்ஸ்வாமியானவன்,	நாங்கூர்த்திருமணிக் கூடத்தானே.	

http://acharya.org

வ்யா.—(பாவமும்) நிஷித்தாநுஷ்டாநமும், விஹிதாநுஷ்டாநமும், மோக்ஷமும், ஸுகமும், இதுதான் நிலைநில்லாமையாலே வரக்கடவதான் துக்கமும், அறிவுடையார்க்கு த்யாஜ்யமானகோபமும், ப்ரஸாதமும்; மற்றும் ஸத்வாதி குணங்களுமெல்லாம் தாமென்று சொல்லலாம்படி யிருக்கிற வென்ஸ்வாமி.

(மூவரில்) ப்ரஹ்மாதிகளுக் கந்தராத்மாவாய் நின்றும் ஸ்வேந ரூபேண நின்று ரக்ஷித்தும் போருகையாலே ஜகத்துக்கு ப்ரதாநராய்த் தோற்றுகிற மூவரில் ஸத்வப்ரசுரரானவெங்களுக்கு ஆஶ்ரயணீயனிவனென்று, ஸநகாதிகளோடே தேவர்கள் வந்தாஶ்ரயிக்கும்படி நிற்கிற.

அ௫.—ஒன்பதாம் பாட்டு. (பாவமு மித்யாதி) சேதநர் ஸம்சயாதிகளோடே கூடியிருக்கும்படி கர்மாநுகுணமாக ஈஶ்வரனே யவற்றுக்கெல்லாம் நிர்வாஹகனைக்கு மூலமான க்ரியைகளுக்கும் தத்பலங்களுக்கும் நிர்வாஹகராரென்னும் சங்கையிலே; சேதநப்ரதம ப்ரயத்நாபேக்ஷையக்கொண்டு அவற்றுக்கு மவனே நிர்வாஹகனென்னு மர்த்தத்தை யருளிச்செய்கிறாரென்னும் ஸங்கதியை ஸூசிப்பிக்கிறார் (நிஷித்தாநுஷ்டாந மித்யாதி). ... ... (௯)

மூ.—திங்கள் தோய் மாட நாங்கூர்த் திருமணிக்கூடத்தானை
மங்கையர்தலைவன் வண்டார் கலியன் வாயொலிகள் வல்லார்
பொங்கு நீருலகமாண்டு பொன்னுலகாண்டு பின்னும்
வெங்கதிர்ப் பருதிவட்டத் தூடுபோய் விளங்குவாரே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
திங்கள்	சகதரமண்டலத்திலே (போய்)	மங்கையர்	திருமங்கையிலுள்ளார்க்கு
		தலைவன்	ராஜாவாய்
தோய்	படிந்திருக்கிற	வண்	ஸுந்தரமான
மாடம்	க்ருஹங்களையுடைய	தார்	மாலையையுடையரான
நாங்கூர்	திருநாங்கூரிலுள்ள	கலியன்	ஆழ்வார்
திருமணிக்கூடத்தானை	திருமணிக் கூடமென்கிற திவ்யதேசத்திலெழுந்தருளியிருக்கிற எம்பெருமான் விஷயமாக,	வாய்	அருளிச்செய்த
		ஒலிகள்	சப்த ஸந்தர்ப்பமான இந்தப் பத்துப்பாட்டையும்
		வல்லார்	அப்யஸிக்க வல்லவர்கள்,

http://acharya.org

பொங்கு	வ்ருத்தியடையாநின்ற	பின்னும்	அதுக்குமேலே
நீர்	ஜலத்தையுடையஸமுத்ரத்தினால் சூழப்பட்ட	வெம்கதிர்	ஸூர்யனது
உலகம்	பூமியை	பருதிவட்டத்	மண்டலத்தினுடையது
ஆண்டு	பரிபாலநம்பண்ணி	ஊடுபோய்	நடுவழியாக(அர்ச்சிராதி மார்க்கமாகப்) போய்
பொன் உலகு	ஸ்வர்க்கலோகத்தை	விளங்குவார்	(பரமபதத்தில்) உஜ்ஜ்வலராவர்கள்.
ஆண்டு	அநுபவித்து		

வ்யா.—பத்தாம்பாட்டு. (திங்கள்) சந்த்ரபதத்தளவும் செல்லவோங்கின மாடங்களையுடைத்தான திருநாங்கூரில் திருமணிக்கூடத்திலேவந்து ஸந்நிஹிதனானவனை. (மங்கையர்) திருமங்கையிலுள்ளார்க்கு ப்ரதாநர், வண்மையையுடைத்தான தாரையுடையரான ஆழ்வாரருளிச்செய்தவித்தை வல்லவர்கள், கடல்சூழ்ந்த பூமியையாண்டு, ஸ்வர்க்கத்தை நிர்வஹித்து, அதுக்குமேலே ஆதித்யமண்டலத்தின் நடுவிட்டு அர்ச்சிராதிமார்க்கமேபோய் பரமபதத்திலேசென்று ஸ்வஸ்வரூபத்தைப்பெற்று உஜ்ஜ்வலராவர். ... ... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—பத்தாம்பாட்டு. (திங்களித்யாதி) இத்திருமொழியில் ப்ரமேயம்-ஸர்வநிர்வாஹகனானவன், ஸர்வாபேக்ஷிதப்ரதன், விரோதி நிரஸநசீலன் என்கிறவை யாகையாலே, அந்தவந்த வதிகாரிகளுக்கு விரோதி நிவ்ருத்தி பூர்வக பலப்ரதத்வம் சொல்லவேணுமென்று அதிகாரி பேதத்தைப் பற்ற வருளிச்செய்கிறார் (கடல்சூழ்ந்த வித்யாதி). ... ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

நாலாம்பத்து அஞ்சாந்திருமொழி முடிந்தது.

http://acharya.org

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

நாலாம்பத்து - ஆறும் திருமொழி

தாவளந்து ப்ரவேசம்.

வ்யா.— ஸுகுமாரராயிருப்பார் வழிபோகப்புக்கால் நீர்கண்டவிடமெங்கும் மேலே யேறிட்டுக்கொள்ளுமாபோலே, இவரும், தம்முடைய மார்த்தவத்தாலே அவனையொழியச் செல்லாமையாலே ஸம்ஸாரத்தில் பொருந்தாமையுமுடையராய், இவ்விரோதியைப்போக்கி அவனைப்பெறுகைக் குடலாகப் பலகாலும் ப்ரபத்திபண்ணுகிற்பராய்த்து. கடுக பலிப்ப தோருபாயத்தைப்பற்ற வேணுமிறே; ஒரு வ்யபிசாரமாதல் விளம்பமாதலில்லாத ஸாதநத்தைப் பரிக்ரஹிக்கவேணுமிறே. அதாகிறது-(க) "త్వమేవోపాయభూతో మే భవ- த்வமேவோபாயபூதோமேபவ" என்கையிறே. (க) "అహమస్మ్యపరాధానామాలయః, అకిఞ్చనః - அஹமஸ்ம்யபராதாநாமாலய:, அகிஞ்சந:" என்கையாலே - தானுமுபாயமல்லாமை சொல்லிற்று; "அகதி:" என்கையாலே - பிறருபாயமாக மாட்டார்களென்றது. தன்னை முற்படச்சொல்லுவானென்னென்னில்; தன்னனர்த்தத்துக்கு ஹேது தானேயிறே. இவ்வளவும் வர ஸம்ஸரிக்கைக்குக் கார்யம்பார்த்தான் தானேயன்றோ, இனி பிறர்தானே அநுக்ரஹம் பண்ணுவாரைப்போலே யிருந்து அநர்த்தத்தை விளைக்குமத்தனையல்லது ரக்ஷகராகமாட்டார்களே. பித்தோபஹதன் உணர்த்தியுண்டான வளவிலே "நானே என் தலைமயிரைப் பறித்துக்கொள்ளுதல் கண்ணைக் கலக்கிக்கொள்ளுதல்செய்து என்விநாசத்தைச் சூழ்த்துக்கொள்ளுவன், அவ்வளவில் நீ எனக்கு ரக்ஷகனாகவேணும்" என்று தெளிந்திருப்பா னொருவன்கையிலே தன்னைக் காட்டிக்கொடுக்குமாபோலே யிருப்பதொன்றிறே ப்ரபத்திபண்ணுகையாவது தான். மத்யமபதத்தாலே தன்னைக்கழித்திறே ப்ரபத்திபண்ணுவது; ஆகையாலே, நானு மெனக்கில்லை, பிறருமெனக்கில்லை, நீயே ரக்ஷகனாகவேணும் என்று, திருக்காவளம்பாடி நாயனார்திருவடிகளிலே சரணம் புகுகிறாராயிருக்கிறது.

(க) பாஞ்சரா-

http://acharya.org

கீழ்த் திருமொழியோடிதுக்குச் சேர்த்தியென்னென்றால்; சரண்யனானவன் பிராட்டிமாரோடேகூடத் திருமணிக்கூடத்திலே வர்த்தியாநின்றானென்றார்; லக்ஷ்மீபதியிறே ஆஶ்ரயணீயனாவான், இங்கே சரணம்புகுகிறார். ... ... *

அரு.—தாவளந்தின் ப்ரவேசம்.—திருநாங்கூர்திருமணிமாடக் கோயில்துடங்கி இவ்வளவு மநுபவித்துக்கொண்டு வந்தவர், இங்கே திருக்காவளம்பாடியிலே "களைகணீயே" என்று சரணம் புகுகைக்கு ஸங்கதியென்னென்னு மாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார் (ஸுகுமாரராயித்யாதி). (மார்த்தவத்தாலே) என்றது-விரஹாஸஹிஷ்ணுத்வத்தாலே என்கை. இத்தால்-அவயவங்கள்தோறு மநுபவிப்பாரைப்போலே அநுபவியாநிற்கச் செய்தே, அதின் மிகுதியாலே, இங்கே "இது நமக்குத் தொங்கப்புகுகிறதோ" என்னு மதிசங்கையாலே சரணம் புகுகிறரென்றதாய்த்து. அதிசங்கையாலே கலங்கினால் ஸாதநாநுஷ்டாநங்களைப் பண்ணலாகாதோ, ப்ரபத்தி பண்ணவேணுமோ வென்ன வருளிச்செய்கிறார் (கடுகவித்யாதி). விவரணம் (ஒருவித்யாதி). (அதாகிறது) என்றது-அந்த ஸாதநமாகிறதென்றபடி. "த்வமேவ" என்கிற அவதாரணத்தின் கருத்தை ப்ரமாணமுகேந வெளியிடுகிறார் (அஹமித்யாதி). ப்ரபத்தியின் ஸ்வரூபந்தன்னை ஸத்ருஷ்டாந்த முபபாதிக்கிறார் (பித்தோபஹத னித்யாதி). இந்த வர்த்தத்துக்கு மூலமானப்ரமாணம் காட்டுகிறார் (மத்யமேத்யாதி). திருமொழியின் ப்ரமேயத்தைக் காட்டுகிறார் (ஆகையாலே யித்யாதி).

சரணம் புகுகிறராகில் பிராட்டி முன்னாகவிறே சரணம் புகுருவது, மந்த்ரரத்நத்திலங்ஙனேயிறே யிருப்பதென்னு மதிசங்கை தீரவேணுமென்று திருவுள்ளம்பற்றி, கீழ்த் திருமொழியோடித் திருமொழிக்கு விசேஷஸங்கதியை ப்ரஸ்நப்ரதிவசந ரூபேண தர்சிப்பிக்கிறார் (கீழ்த்திருமொழியோடித்யாதி). கீழ்த்திருமொழியில் அஞ்சாம்பாட்டில் "தன்னொடும் பிரிவிலாத திருமகள்" என்றநுஸந்தித்தாரிறே என்று கருத்து. இத்திருமொழியில் அஞ்சாம்பாட்டிலே "மடவரல் மங்கைதன்னை" என்றிருக்கிறதே யென்னில்; முதற்பாட்டிலே "கண்ணனேகளைகணீயே" என்று சரணம்புகுருகைக்கு முன்பேயன்றோ பிராட்டியை முன்னிடவேணுமென்று திருவுள்ளம். ... ... *

ஓ.—தாவளந்துலக முற்றும் தடமலர்ப் பொய்கை புக்கு
நாவளநவின்றங்கேத்த நாகத்தின் நடுக்கம் தீர்த்தாய்
மாவளம் பெருகி மன்னு மறையவர் வாழும் நாங்கைக்
காவளம்பாடிமேய கண்ணனே களைகணீயே. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
உலகம்முற்று	(ஸ்ரீ கஜேந்த்ராழ்வா	நடுக்கம்	பயத்தை
ம்	ன்) எல்லா லோகங்	தீர்த்தாய்	போக்கினவனே!
	களையும்	மாவளம்	அதிக ஸம்பத்தானது
தாவளந்து	தாவித்திரிந்து (அப்	பெருகி	வ்ருத்தியடைந்து
	பொழுது காணப்	மன்னு	பொருந்தியிருக்கிற
தடம்	பெரிதான [பட்ட)	மறையவர்	ப்ராஹ்மணர்கள்
மலர்	பூவையுடைய	வாழும்	ஸுகமாகவர்த்திக்கிற
பொய்கை	(ஒரு) மடுவிலே	நாங்கை	திருநாங்கூரிலுள்ள
புக்கு	இழிந்து	காவளம்பா	திருக்காவளம்பாடி
அங்கு	அந்தப் பொய்கையி	டி	யென்னும் திவ்யதே
	லே (இருந்து)		சத்திலே
நா	நாவுக்கு [நாமத்தை	மேய	பொருந்திவர்த்திப்
வளம்	அலங்காரமான திரு		பவனை
நவின்று	சொல்லி [திக	கண்ணனே	க்ருஷ்ணனே!
ஏத்த	ஸ்தோத்ரம் செய்யா	நீயே	ஆஸ்ரித பக்ஷபாதியா
நாகத்தின்	(அந்த) ஆனையினுடை		ன நீயே
	ய	களைகண்	ரக்ஷகனுமாவேனும்.

வ்யா.—முதற்பாட்டு. (தாவளந்தித்யாதி) முதலையாலே யிடர்பட்ட ஆனை தன்னை நோக்கிக்கொள்ளுதல், அம்முதலை இத்தை நோக்குதல் செய்ததோ; பாதக (बाधक) மானது ரக்ஷகமாகமாட்டாதே. அந்த ஆனையினுடைய ஸ்த்தாநேயாய்த்து நான்; முதலையினுடைய ஸ்த்தாநேயாய்த்து பிறர். (தாவளந்துலகமுற்றும்) என்கிற விது தன்னையும் ஆனை தனக்கேயாக்கி-ஓரிடத்திலே யொருபூமலர் காணுமையாலே பூமிப்பரப்படங்கலும் தாவித்திரிந்ததென்னவுமாம்; அன்றிக்கே, திருவுலகளந்தருளினபடியையாக்கி, பூமிப்பரப்படங்கலும் அநாயாஸேந அளந்து கொண்டானென்னுதல். நீ பூமியளந்துகொள்ளுகைக்கு அந்த பூமியிலுள்ளார் தாங்களேதேனும் யத்நித்ததுண்டோ? (தாவளந்தித்யாதி) "ஒருபூமலர் காணலாமோ" என்னுமாசையாலே பூமிப்பரப்படங்கலும் தட்டித்திரிந்து, பின்பு ஒருப்ரதேசத்திலே பெரியமலரையுடைத்தாயிருப்பதொரு பொய்கையைக்கண்டு, அதிலே முதலையுண்டென்றறியாதே போய்ப்புக்கு அதின்வாயிலே யகப்பட்டு ஒருபோக்கடியறியாதே தடுமாறி, முள்பாய்ந்தால் "அம்மே" என்னுமாபோலே பூர்வஜந்மவாஸநையாலே, நாவுக்கலங்காரமான திருநாமத்தைச்

http://acharya.org

சொல்லி. (க) "நாவாயிலுண்டே நமோநாரணவென்று ஓவாதுரைக்கு முரையுண்டே" என்னக்கடவதிறே. அதுவும் (உ) "நாராயணவோ" என்றிறே கூப்பிட்டது. (அங்கு) தானகப்பட்ட பொய்கையிலே நின்று, திருநாமத்தைச்சொல்லுகிற ஆனையினுடைய அச்சத்தைப் போக்கினவனே! ஆனை தான் தனக்குதவுதல் முதலே யுதவுதல் செய்ததோ நீயேயன்றோ மடுவின்கரையிலே அரைகுலையத் தலைகுலைய வந்துதவினாய்.

(மாவளம்) நிரவதிக ஸம்பத்தானது, ஆற்றுவாயில்நீர் மேன்மேல் நெடுகுமாபோலே பெருகிவாராநிற்பதாய், அது தனக்கொரு விச்சேத மின்றிக்கே யிருக்கிற ப்ராஹ்மணர், வேதைகஸமதிகம்யனானவனைக் கண்ணாலேகண்டு வர்த்திக்கிற திருநாங்கூரில் திருக்காவளம்பாடியிலே நித்யவாஸம்பண்ணுகிற க்ருஷ்ணனானவனே! (மேய) அவதாரங்களில் வ்யாவ்ருத்தி. ஓரோகாலவிசேஷங்களிலேயாய் தீர்த்தம் ப்ரஸாதித்த தென்னுமே, நித்யவாஸம் பண்ணுகிற. (கண்ணனேகளைகண்நீயே) உன்னை யுகந்தாரைவிடமாட்டாதே வர்த்திக்கிற நீயே ரக்ஷகனுமாகவேணும். அவன் (க) "ஸம்ஸேவ - மாமேகம்" என்றவார்த்தை இவர்தாமே யருளிச்செய்கிறார். .... (க)

அரு.—முதற்பாட்டு. (தாவளந்தித்யாதி) "கண்ணனே களைகணீயே" என்று சரணம் புகுகிறவிடத்தில் ஸ்ரீகஜேந்த்ரரக்ஷணம் சொல்லுகைக்கு உபயோகம் காட்டுகிறார் (முதலேயாலே யித்யாதி). (பிறர்)என்றவநந்தரம், ஆகையாலே நீயே களைகணென்கிறார் என்று கூட்டுவது.

திருவுலகளந்த வபதாநத்தைச் சொன்னதுக்கு ப்ரக்ருதோபயோகம் காட்டுகிறார் (நீபூமியித்யாதி). நாவுக்கலங்காரமோ திருநாமமென்ன வருளிச்செய்கிறார் (நாவாயிலித்யாதி). வாயில் நாவுண்டே அதுக்குத்தான் உரையுண்டே என்று தோற்றுகையாலே நாவுக்கலங்காரமாமென்று திருவுள்ளம். ஸ்ரீகஜேந்த்ராழ்வானும் ஆதிமூலமென்று கூப்பிட்டதென்றன்றோ ப்ரஸித்தி, நாராயணசப்தத்தாலே கூப்பிட்டதோ வென்ன வருளிச்செய்கிறார் (அதுவு மித்யாதி).

"மன்னும்" என்றதின் பொருளருளிச்செய்கிறார் (அது தனக்கித்யாதி). "கண்ணன்" என்றத்தால்-நீ சொன்னவர்த்தத்தையே யுனக்கு நான் உபதேசிக்க வேண்டிற்றே! என்னும் தாத்பர்யத்தை ஸ்புரிப்பிக்கிறார் (அவனித்யாதி) ... ... (க)

(க) க-திரு-கூடு. (உ) சிறிய திரு-கூ0.
(ங) கீ-கஅ-சுசு.

http://acharya.org

மூ.—மண்ணிடந்தேனமாகி மாவலி வலி தொலைப்பான்
விண்ணவர் வேண்டச் சென்று வேள்வியிற் குறையிரந்தாய்
துண்ணெனமாற்றார் தம்மைத் துலைத்தவர் நாங்கைமேய
கண்ணனே காவளந்தண் பாடியாய் களைகணீயே. (உ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஏனமாகி	ஆதிவராஹ மாய்க்	துலைத்தவர்	ஸம்ஹரித்த வீரர்கள்
	கொண்டு		வர்த்திக்கிற
மண்	அண்டபித்தியி லழுந்	நாங்கை	திருநாங்கூரில்
	தின பூமியை	காவளந்தண்	திருக்காவளம் பாடி
இடந்து	குத்தியெடுத்து,	பாடியாய்	யென்னும் திவ்ய
மாவலி	மஹாபலியினுடைய		தேசத்தில் ஸந்நிஹி
வலி	பலத்தை		தனாயிருப்பவனே!
தொலைப்பான்	போக்குகைக்காக	மேய	(அந்த திவ்ய தேசத்தி
விண்ணவர்	தேவர்கள்		ல்) நித்யவாஸம் ப
வேண்ட	ப்ரார்த்திக்க		ண்ணுமவனை
சென்று	போய் [தில்	கண்ணனே	க்ருஷ்ணனே! [னும்
வேள்வியில்	(அவனுடைய) யாகத்	நீயேகளைகண்	நீயே ரக்ஷகனாகவே
குறை	தனக்குக் குறையாயி	காவளந்தண்பாடி	யென்று-கா-சோ
	ருந்த பூமியை		லைகளுடைய, வளம்-ஸம்ருத்தி
இரந்தாய்	யாசித்தவனே!		யினாலே, தண்-குளிர்ந்திருக்கி
துண்ணென	சீக்ரமாக		ற, பாடி - திவ்யதேசம் என்று
மாற்றார்தம்	சத்ருக்களை		சப்தார்த்தம் கண்டுகொள்
மை .			வது. (உ)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (மண்ணிடந்தேனமாகி) காவலாக இட்டுவைத்த கடல்தானே பாதக ([illegible]) மானவாறே நீருக்கும் சேற்றுக்கு மிறுயாத வடிவைக்கொண்டு பூமியை யிடந்தெடுத்து. (மாவலி வலிதொலைப்பான்) மஹாபலி பக்கலிலே ஔதார்யமென்றொரு குணம் கிடக்கையாலே, ராவணாதிகளைப்போலே தலையை யறுக்கவேண்டிற்றில்லை; ஆனாலும், தேவர்களை நெருக்குகையாலே, ராவணன்செயலுண்டாயிருந்தது; நிரஸிக்கவேண்டி யிருக்கச்செய்தே மாட்டிற்றிலன்; அவனை யழிக்கமாட்டாதே தன்னையழித்தானாய்த்து. கொடுத்து வளர்ந்தகையைக்கொண்டு தானிரந்தானாய்த்து. மஹாபலியினுடைய மிடுக்கை யழிக்கைக்காக, அவனாலே நோவுபட்ட தேவர்களர்த்திக்க. (சென்று) அவனுடைய யஜ்ஞவாடத்திலேசென்று. (வேள்வியில்)

http://acharya.org

தனியிருப்பிலன்றிக்கே. (குறையிரந்தாய்) அவாப்த ஸமஸ்தகாமனான தான் குறைப்பட்டிரந்தானாய்த்து. தேவர்கள் குறை கண்டவாறே, தான் குறைவாளனாயிரந்தானாய்த்து.

(துண்ணெனவித்யாதி) அவ்வூரிலுள்ளார்க்கு இந்த்ராதிகள் படியில்லையாய்த்து. அவனை இரப்பாளனாக்கித் தாங்கள் வயிறு வளரார்களாய்த்து. மஹாராஜரைப்போலே தங்களை யழியமாறிநோக்குவர்கள். (க) “అథహరివరనాథః ప్రాప్య సఙ్గ్రామకీర్తిం నిశిచరపతి మాజౌ యోజయిత్వా శ్రమేణ - அதஹரிவரநாத: ப்ராப்ய ஸங்க்ராமகீர்த்திம் நிசிசரபதி மாஜௌ யோஜயித்வா ஶ்ரமேண” அவன் கண்டறியாத பயத்தோடே துணுக்கென்னும்படி பண்ணி. (காவளந்தண்பாடியாய்களைகணீயே) அவ்வூரிலுள்ளாரிலே யொருவனாய்ப் புகுந்திருக்கிற நீயே யெனக்கு ரக்ஷகனாகவேணும். ... ... (உ)

அரு.—இரண்டாம்பாட்டு. (மண்ணிதித்யாதி) கீழ்ப்பாட்டிலே - ஸ்ரீகஜேந்த்ரரக்ஷணம் பண்ணுமத்தை யநுஸந்தித்தார்; அது தானும், பெரிய திருவடியை மேற்கொண்டு கையுந் திருவாழியுமாய் தன் திறம் குலையாமே யுதவினதாயிருந்தது; தம்மார்த்தியின் மிகுதியாலே தன்னை யழிய மாறிச்செய்த ஆபத்ரக்ஷணங்களைச் சொல்லிக்கொண்டு மீளவும் சரணம் புகுகிறாரென்று ஸங்கதி.

ராவணாதிகளைப்போலே முடிக்கவொண்ணாதோ, வலிதொலைப்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (மஹாபலியித்யாதி). தன்னை யழிக்கையாவதென்னென்ன வருளிச்செய்கிறார் (கொடுத்தித்யாதி).

துண்ணென - சீக்ரமாக, மாற்றார்தம்மை - சத்ருக்களை, துலைத்தவர் - ஸம்ஹரித்தவரென்று சப்தார்த்தமாய், தாத்பர்ய மருளிச்செய்கிறார் (அவ்வூரிலித்யாதி). விவரிக்கிறார் (அவனை யித்யாதி வாக்யத்வயத்தாலே) ... ... (உ)

மூ.—உருத்தெழு வாலி மார்வி லொருகணை யுருவ வோட்டிக்
கருத்துடைத்தம்பிக்கின்பக் கதிர் முடி யரசளித்தாய்
பருத்தெழு பலவும் மாவும் பழம் விழுந்தொழுகு நாங்கைக்
கருத்தனே காவளந்தண்பாடியாய் களைகணீயே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
எழு	வ்ருத்தியடையாநின்ற	வாலி	வாலியினுடைய
உருத்து	கோபத்தை யுடையனை	மார்வில்	மார்பில்
		ஒருகணை	ஒருபாணத்தை

(க) ரா-யு-௯௦-உ௯.

உருவ	நன்றாகத் தைக்கும்படியாக	பருத்து	பருமனையுக்கொண்டு
ஓட்டி	ப்ரயோகித்து	எழு	முளையாநின்ற [வும்
கருத்துடை	உன் திருவுள்ளத்துக்கு விஷயமாய்	பலவும்	பலாமரத்தி னுடைய
தம்பிக்கு	(அந்த வாலியினுடைய) தம்பியானமஹாராஜர்க்கு	மாவும்	மாமரங்களுடையவும்
இன்பம்	ஸுகாவஹமாய்	பழம்	பழங்களானவை
கதிர்	தேஜஸ்ஸை யுடைத்	விழுந்து	கீழே விழுந்து
முடி	கிரீடத்தையும் [தான	ஒழுகும்	தேன் வெள்ளமிடாநின்ற
அரசு	ராஜ்யத்தையும் [னே!		நாங்கைக் காவளந்தண பாடியாய்!
அளித்தாய்	க்ருபை பண்ணினவ	கருத்தனே	ஸமர்த்தனானவனே!
			களைகண்நீயே. (௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (உருத்தித்யாதி) உருவென்று - சீற்றம். (௧) வெஞ்சினத்தவேழ வெண்மருப்பொசித்துருத்தமாகஞ்சனைக்கடந்து" என்றதிறே. மிக்கசீற்றத்தை யுடையனாய், "அகாலத்திலே வந்துஅறைகூறுகிறவன்றானோ" என்று பெரிய கிளர்த்தியோடே வந்து தோற்றின. (வாலிமார்விலொருகணையுருவவோட்டி) விட்டார் விட்டவம்புகளடங்கலும் வாய்மடிந்து போமித்தனையாய், தனக்கோரழிவில்லாதபடியிருக்கிற வாலியுடைய திண்ணிய மார்விலே (௨) "ஏகேந மஹேஷுணா-ஏகேந மஹேஷுணா" என்கிறபடியே-கைக்கெட்டிற்றோ ரம்பைவாங்கி மறுபாடுருவத் தைக்கும்படி விட்டு. ஓசழக்காக விட்டவம்புதானே மறுபாடுருவும்படி நடத்தி. (கருத்தித்யாதி) வாலிசெலுத்திப்போந்த ராஜ்யத்தை அப்படி நடத்துகைக்கீடான கருத்தையுடையவனென்னுதல்; வாலிபேர்கேட்க வநமடைந்து கிடந்த ஸுக்ரீவன்றன்னையே. (௩) "த்வந்நாதேந விஜயம் க்ருஷ்ணா-த்வந்நாதேந விஜயம் க்ருஷ்ண" என்னச் செய்தேயிறே பின்னையுமவர்களை ஜயிப்பித்தது. உன்திருவுள்ளமுடைய மஹாராஜர்க்கென்றுமாம். (௪) [தத்ராஜ்யே - தத்ராஜ்யே] வலிம்ஹமநின்ற முழஞ்சிலே மான்பேடையைக் கொடுபுக்கு நிறுத்தினாப்போலே யாய்த்து. [ராகவ:-ராகவ:] அளவுடையார் அளவில்லாதார் என்றொருவாசியின்றிக்கே, ஆரேனுமாகத் தாங்கள் கொடுத்தாரது ராஜ்யமாம்படி மதிப்புடைய குடியிலே பிறந்தவர்.

(௧) தி-௪-வி-௬௩. (௨) ரா-பா-௧-௬௬. (௩) கீ-௧-௩௨. (௪) ரா-பா-௧-௭௦.

http://acharya.org

(க) "ஸ்ரீமதா ராஜராஜேந லங்காயாமபிஷேசித: - ஸ்ரீமதாராஜராஜேந லங்காயாமபிஷேசித:" என்றார்களிறே அவன்றன் பரிகரமான சுக ஸாரணர் தாங்களே. [ஸ்ரீமதா - ஶ்ரீமதா] உனக்கு முடிதந்த ப்ரஹ்மாதிகளுடைய ஐஶ்வர்யம் போலன்றிக்கே, ஊற்றுமாறு தஸம்பத்துடையவனாலேகாண் அவன் முடிபெற்றது. [ராஜராஜேந-ராஜராஜேந] உனக்கு முடிதந்தவர்களுக்கு முடிகொடுக்கப் பிறந்தவனாலே காண். [லங்காயாமபிஷேசித: - லங்காயாமபிஷேசித:] இனி உனக்கு ஒருகுடியிருப்புத் தேடிக்கொள்ளாய். அவன்பரிகரமாயிருந்துவைத்து அவன் மிடுக்கையும் ஐஶ்வர்யத்தையும் காணுகிற்கச்செய்தே இப்படி சொல்லுகைக் கடி-அவர் கையும் வில்லும் கண்டுபோந்த நாளனுமையாலே; "இக்கொசுகு நம்மை என்செய்யப்புகாநின்றதோ" என்று இவன் மதிப்பற நினைத்திருந்தபடியாலே. (இன்பக்கதிர் முடியரசளித்தாய்) இன்பத்தை விளைப்பதாய் ஆநந்தாவஹமாய் மதிப்புடைத்தான முடியையும் அதுக்கு விஷயமான ராஜ்யத்தையும் கொடுத்தருளினாய்.

(பருத்தித்யாதி) ஸ்ரீவாமநன்படியாய்த்து அங்குள்ளவையெல்லாமிருப்பது. அதாவது-தோற்றத்தில் காரியப்பாடுண்டா யிருக்கை. (பழம்) போ (போ) க்யம் குறைவற்று போக்தாக்கள் தேட்டமாயாய்த்திருப்பது. (கருத்தனே) அசக்தன்சக்தனையன்றோ அபாஶ்ரயமாகப் பற்றுவது. (காவளந்தண்) இப்படி சக்தனை நீயே ஸந்நிஹிதனை பின்பு நீயே ரக்ஷகனாகவேணும் ... ... (ந)

அரு.—மூன்றாம்பாட்டு. (உருத்தித்யாதி) ஶ்ரீகஜேந்த்ராழ்வானுடைய ஆர்த்தியும் மண்ணினுடைய விலக்காமையும் இந்த்ரனுடைய விலக்காமையும் பற்றுசாகரக்ஷித்தவளவன்றிக்கே, விரோதியான வாலியின் ப(ப)லமும் பெருமாளுடைய ஸௌகுமார்யமும்கண்டு இவர் ரக்ஷகராகமாட்டாரென்றிருந்த மஹாராஜருக்கும், ‡ மழுவேந்திக்கொடுத்தாகிலும் அவர் விரோதியைப்போக்கின வபதாநத்தைச் சொல்லிக்கொண்டு சரணம் புகுகிறாரென்று ஸங்கதி.

"உருத்து" என்றது சீற்றத்தைச் சொன்னவிடமுண்டோ வென்ன வருளிச்செய்கிறார் (வெஞ்சினத்த வித்யாதி). வாலிமாளக் கணையைப் பொகட்டென்னாதே, "மார்வில்" என்றும் "ஒருகணை" என்றும் விசேஷித்ததுக்குக் கருத்து (விட்டாரித்யாதி). (ஓசழக்காக) அஶ்ரத்தையாக. யோஜநாந்தர மருளிச்செய்யக் கோலி தாத்பர்ய மருளிச்செய்கிறார் (வாலியித்

(க) ரா-யு-உ-அ-உ-அ.   ‡ மழுவேந்துகை-ஸத்யம்பண்ணுகை.

http://acharya.org

யாதி). (தன்னையே) என்ற வசநத்தரம், ஆளாக்கி ஜயிப்பித்தாய் என்று சேஷம். இதுக்குத்ருஷ்டாந்தம் (நகாங்க்ஷே விஜயமித்யாதி). அர்த்தாந்தரந்தன்னை யருளிச்செய்கிறார் (உன்னித்யாதி). இந்த விரண்டாமர்த்தத்துக்கு ப்ரமாணம் காட்டுகிறார் (தத்ராஜ்ய இத்யாதி). "ஸுக்ரீவமேவ தத்ராஜ்யே ராகவ: ப்ரத்யபாதயத் - ஸுக்ரீவமேவ தத்ராஜ்யே ராகவஃ ப்ரத்யபாதயத்".

வாசிவையாதே தமக்கிஷ்டமானாரை ராஜ்யத்தில் வைத்தமைகண்டவிடமுண்டோ வென்ன (ஸ்ரீமதேத்யாதி). (அடி) என்ற வசநத்தரம், என்னென்னில் என்று சேஷம். "சதிர்" தேஜஸ்ஸாய், அத்தாலே-மதிக்கப்பட்டவென்று பலித்த வர்த்தத்தை யருளிச்செய்கிறார் (மதிப்புடைத்தான) என்று.

முளைத்தன்றோ பருக்கவேண்டுவது, பருத்த முளைகூடுமோ வென்ன வருளிச்செய்கிறார் (ஶ்ரீவர்மந னித்யாதி). தோற்றத்தில் காரியப்பாடுண்டாகையாவது-வாமநன்றான் பிறந்தவுடனே வளர்ந்தாப்போலே, இவையும் முளைத்தவுடனே ப(ஃ)ல பர்யந்தமாகை.... ... ... (௩)

மூ.—முனைமுகத்தரக்கன்மாளமுடிகள் பத்தறுத்து வீழ்த்தாங்
கனையவற் கிளையவற்கே யரசளித்தருளினானே
சுனைகளில் கயல்கள் பாயச்சுரும்பு தேனுகருநாங்கைக்
கனைகழல் காவளந்தண்பாடியாய் களைகணீயே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
முனைமுகத்து	போர்முகத்திலே	சுனைகளில்	நீர்நிலைகளில்
அரக்கன்	ராவணன்	கயல்கள்	மத்ஸ்யங்கள்
மாள	முடியும்படியாக	பாய	(பயந்து) அப்புறத்தே ஓடும்படியாக
பத்துமுடிகள்	(அவனுடைய) பத்துத்தலைகளையும்	சுரும்பு	வண்டுகளானவை
அறுத்து	சேதித்து	தேன்	மதுவை
வீழ்த்து	கீழே விழும்படிபண்ணி	நுகரும்	(ஆரவாரத்துடனே) பாநம் பண்ணுகின்ற
ஆங்கு	அந்தவிடத்திலே	நாங்கைக்காவளந்தண்பாடியாய்!	
அனையவற்கு	அப்படிப்பட்ட ராவணனுக்கு	கனை	ஒலியாநின்ற
இளையவற்கே	தம்பியான விபீஷணனுக்கே	கழல்	வீரத்தண்டையை யுடையவனே!
அரசு	ராஜ்யத்தை	களைகண்நீயே. (௪)	
அளித்தருளினானே	க்ருபை பண்ணினவனே!		

http://acharya.org

வ்யா.—நாலாம்பாட்டு. — (முனைமுகத்து) பூசல் நெற்றியிலே (அரக்கன்மாள) வஞ்சநத்தாலே பொருதழிக்கப் பார்க்குமவர்கள் தங்களைப்போலன்றியே, பூசல்நெற்றியிலே அவனழியும்படியாக.(முடிகள் பத்தறுத்து வீழ்த்து) தலைகளையறுத்து ஹோமம்பண்ணி அவ்வழியாலே பூண்கட்டின தலைகளையறுத்து விழவிட்டு. (ஆங்கு) அந்தயுத்த பூமிதன்னிலே, உயிரையுமுடலையும் பிரித்தாப்போலே இருவரு மிப்ண்டிடத்திலேயாம்படி ப்ராதிகூல்யத்திலே கைவளர்ந்த அப்படிப் பட்டவனுக் கிளையவனுக்கே. (அரசளித்தருளினனே) ராஜத்ரோஹத்தைப்பார்த்தால் ஸம்பந்தமுள்ள விடமெங்கு மழியச்செய்யவேண்டியிருக்க, அவன்தம்பிக்கே கொடுத்தானுப்த்து. அவன்றானும், தோஷத்துக்கு (க) "ஶஸ்த்ரஹமஸ்ஜ் ஊ்ராதா-தஸ்யாஹ மநுஜோ ப்ராதா" என்றிறே சொல்லுவது. மஹாராஜருளப்பாடிட்ட வநந்தரம் அந்த ப்ரீதியிலே நெஞ்சு செல்லாதே, "ஆர்பின்னே பிறந்தவென்னை இப்படி யருளப்பாடிடுவது" என்று அதிலே தரைப்பட்டானிறே.

(சுனை)சுனைகளிலே வர்த்தியாநின்றுள்ள கயல்களானவை, சுரும்புகள் மதுபாநம் பண்ணுகிறபோதை ஆர்ப்பரவத்தை யநுஸந்தித்து, தன்மேலே விழுகிறனவாகக்கொண்டு பாயாநின்றுள்ள திருநாங்கூரிலே. (கனையித்யாதி) ஆபரணவொலியைச் சொல்லுதல்; செறிந்த வீரக்கழலை யுடையவென்னுதல். (உ) "ஏதத்வ்ரதம் மம - ஏதத்வ்ரதம் மம" என்கிறபடியே ரக்ஷிக்கைக்கீடாக வீரக்கழலிட்டு அதுக்கீடாக ஸந்நிஹிதனுமாயிருக்கிற உன்னையொழிய வெனக்கபாஶ்ரயமுண்டோ? ... ... (௪)

அரு.—நாலாம்பாட்டு. (முனையித்யாதி) வாலியை யெதிரிடாதே ஒளியம்பாலேயழித்து அவன் தம்பிக் கரசளித்த வளவன்றியே, எதிரம்பு கோத்துப்பூசல் தலையிலே வெற்றிபெற்று அவன்தம்பிக் கரசளித்த வபதாநத்தை யநுஸந்தித்து சரணம் புகுகிறரென்று ஸங்கதி.

அரக்கன் மாளப்பண்ணி என்ன வமைந்திருக்க, "முடிகள் பத்தறுத்து வீழ்த்து" என்று இத்தனை யருளிச்செய்கையாலே தோற்றின துஷ்கரத்தையை யுபபாதிக்கிறார் (தலைகளை யித்யாதி). "ஆங்கனையவற்கு" என்றதுக்கு-அந்த யுத்தரங்கத்தில் நின்ற தம்மோடொத்தவற்கென்று சப்தார்த்தமாய், அதாவது-தாமவனுடைய உடலையு முயிரையும் பிரித்தாப்போலே (க) "ப்ராணேப்யோ ஸ்ப்ரியஸீம்-ப்ராணேப்யோ பிரியஸீம்"என்னும்படி

(க) ரா-யு-கஎ-கஉ. (உ) ரா-யு-க௮-௩௩. (௩) ரா-கி-உஎ-௩௪.

http://acharya.org

யான பிராட்டியையும் தம்மையும் பிரித்த ராஜத்ரோஹிக்கென்று கருத்தாய், அத்தை யருளிச்செய்கிறார் (அந்த வித்யாதி). (க) "விபீஷணஸ்து தர்மாத்மா - விபீஷணஸ்து தர்மாத்மா" என்று அவரைக் கொண்டாடி யிருக்க, குற்றந்தோன்ற தத்ஸம்பந்தத்தை முன்னிட்டுச் சொல்லுகை சேருமோ வென்ன வருளிச்செய்கிறார் (அவன்றானுமித்யாதி). தாம் சரணம்புகுகிறவ ராகையாலே தமக்கு த்ருஷ்டாந்த பூதரிடத்தில் குணந்தன்னைச் சொல்லாநிறே; அவர் கருத்தையே சொல்லவடுக்குமென்று கருத்து. தோஷாநுஸந்தாநமானவழி எங்ஙனே, ஸ்வரூபகதநமாக வொண்ணாதோ வென்ன வருளிச்செய்கிறார் (மஹாராஜரித்யாதி). அபயப்ரதாநாநந்தரம் தத்ஸம்பந்தத்தைச் சொல்லுகைக்கு தோஷாநுஸந்தாநம் விநா சொல்லவொண்ணாதென்று திருவுள்ளம்.

சுரும்புகள்-வண்டுகள். கனையாநின்றுள்ள, கழல்-திருவடிகளை யுடையவென்று கிழருளிச்செய்த பதத்வயத்துக் கர்த்தாந்தரம் (செறிந்தவித்யாதி). ... ... (௪)

மூ.—படவரவுச்சிதன்மேல் பாய்ந்து பன்னடங்கள்செய்து
மடவரல்மங்கை தன்னை மார்வகத்திருத்தினானே
தடவரை தங்கு மாடத் தகு புகழ் நாங்கைமேய
கடவுளே காவளந்தண் பாடியாய் களைகணீயே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
படம்	(விரிக்கப்பட்ட)படங்களையுடைய ஞன	இருத்தினானே	நித்யமாக வைத்தவனே!
அரவு	காளியனுடைய	தடம்	விசாலமான
உச்சிதன்மேல்	சிரஸ்ஸில்	வரை	பர்வதங்கள் போன்ற
பாய்ந்து	குதித்து	மாடம்	மாளிகைகள்
பல்நடங்கள்	அநேக விதங்களான நர்த்தநங்களை	தங்கு	தங்காநிற்பதாய்
செய்து	பண்ணி [வளாய்	தகு	தகுதியான
மடவரல்	மடப்பத்தை யுடைய	புகழ்	கீர்த்தியானது
மங்கைதன்னை	நித்யயௌவந முடையளான பெரிய பிராட்டியை	மேய	சேர்ந்திருக்கிற
		நாங்கைகாவளந்தண்பாடியாய்!	
		கடவுளே	ஸர்வாதிகனே!
மார்வகத்து	திருமார்பிலே	களைகண்நீயே. (ரு)	

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (படவரவித்யாதி) மடுவின்கரையிலே சென்று உவப்புத்தட்டி ஆர்த்துக்கொண்டபோது, "ஆர்தான் என்கல

(க) ரா-ஆர-கஎ-௨௪.

http://acharya.org

விருக்கையில் நின்று என்னைத் துரந்துவருகிறவன்" என்று சீறி, படம் விரித்துக்கொண்டு வந்துதோற்றின காளியனுடைய உச்சியிலே இலக்காகப்பாய்ந்து, பரதசாஸ்த்ரத்தில் இத்தைக்கொண்டே இன்னும் வேண்டும் லக்ஷணங்களெழுதிக்கொள்ளலாம்படி பலவகைப்பட்ட கூத்துக்களையாடி. (மடவரல்மங்கைதன்னை) ஆச்ரிதஸம்ரக்ஷணத்துக்கும் அநாச்ரிதஸம்ஹாரத்துக்கு முறுப்பாகப் பிராட்டியோடே நித்யஸம்ச்லேஷமாய்ச் செல்லாநிற்கும்; அன்றியே, அவளோடணைகைக்கீடான ஸௌகுமார்யத்தை யுடையவன்கிடீர் ப்ரதிகூலனான காளியன் தலையிலே பாய்ந்தானென்னுதல். ஆத்மகுணோபேதையாய் நித்ய யௌவந ஸ்வபாவையான பெரியபிராட்டியாரைத் திருமார்விலே வைத்தவனே!

(தடவரையித்யாதி) அவ்வூரில் மாடங்களைக்கண்டால் குலகிரிகள் நீஸ்த்த (நீஸ்஥) மாம்படியிருக்குமாய்த்து. அன்றிக்கே, தடவரைபோலே யிருந்துள்ள மாடங்கள் தங்காநிற்பதாய், சொன்னசொன்ன ஏற்றங்களெல்லாம் தகும்படி யிருக்கிற திருநாங்கூரில். (கடவுளே) கடவுளென்று - பரதேவதையென்றபடியாய், ஸர்வாதிகனான ஸர்வேச்வரனே! ஸர்வாதிகனான நீயே ஸந்நிஹிதனுமாயிருக்க நான் வேறொருவரைத் தேடிப்போகவோ? ... ... (௫)

அரு.—அஞ்சாம்பாட்டு. (படவரவித்யாதி) கீழெல்லாம்-ஆச்ரிதர்க்கு விரோதிகளைப்போக்கி ரக்ஷித்தபடி சொன்னார்; அவ்வளவன்றிக்கே, எதிரிட்ட ஜந்துவே சரணமடையும்படி பண்ணி அதுக்கு சரண்யனானயென்று அவ்வபதாநத்தைச் சொல்லிக்கொண்டு சரணம்புகுகிறாரென்று ஸங்கதி.

அரவானபோதே படமுண்டாயிருக்க, விசேஷித்ததுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (மடுவித்யாதி). (உவப்புத்தட்டி) ஹர்ஷித்துக்கொண்டு. (துரந்து) துடர்ந்து. உச்சிமேலென்றதே, "உச்சிதன்மேல்" என்கையாலே அதின் நடுவே யென்று தோற்றி, அதின் பலிதார்த்தம் (இலக்காக) என்றது. ... ... (௫)

சூ.—மல்லரை யட்டு மாளக் கஞ்சனை மலைந்து கொன்று
பல்லரசவிந்து வீழப் பாரதப்போர் முடித்தாய்
நல்லரண் காவின் நீழல் நறை கமழ் நாங்கைமேய
கல்லரண் காவளந்தண் பாடியாய் களைகணீயே. (சு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மல்லரை	சாணூராதி மல்லவர்க்கத்தை	அரண்	அழகை (நிழலை) யுடைத்தான
அட்டு	யுத்தம்பண்ணி	காவின்	சோலைகளுடைய
மாள	முடியச்செய்தும்	நீழல்	நிழலிலே
கஞ்சனை	கம்ஸனை	நறை	பரிமளமானது
மலைந்து	எதிரிட்டு	கமழ்	வாஸியாநின்ற
கொன்று	ஸம்ஹரித்தும்	நாங்கை	திருநாங்கூரிலே
பல் அரசு	அநேகக்ஷத்ரியர்களை	மேய	பொருந்தி வர்த்திக்கிற
அவிந்து வீழ	நசித்துப்போம்படியாக	கல்	த்ருடமான
பாரதப்போர்	பாரதயுத்தத்தை	அரண்	ரக்ஷையையுடையனாய்க் கொண்டு
முடித்தாய்	நிறைவேற்றினவனே!	காவளந்தண்பாடியாய்!	களைகண் நீயே. (ள)
நல்	விலக்ஷணமான (நெருங்கிய)		

வ்யா.—ஆறும்பாட்டு. (மல்லரையட்டுமாள) பெரிய கிளர்த்தியோடேவந்து தோற்றின சாணூரமுஷ்டிகாதி மல்லவர்க்கத்தைப் பொருது, இளைப்பித்து விடுகையன்றிக்கே முடியும்படி யழியச்செய்து, மல்லர் முடிந்தார்களென்று கேட்டவநந்தரம், பெரியசீற்றத்தோடே வந்து தோற்றின கம்ஸனை யெதிரிட்டுச் சென்றுகொன்று. இது பருவம் நிரம்புவதற்கு முன்பு செய்த காரியம்; இனிமேல் பருவம் நிரம்பினபின்பு செய்தகாரியம் சொல்லுகிறது.(பல்லரசித்யாதி) துர்வர்க்கமடையக்கூடு கொண்டதாய்த்து. துர்யோதநாதிகளோடே க்ஷத்ரியரென்று பேர்பெற்றாரடங்கலும் முடிந்துபோம்படியாக பாரதஸமரத்தை நடத்தி பூபாரத்தைப் போக்கினவனே!

(நல்லரணித்யாதி) செறிந்த நிழலையுடைத்தான சோலைநிழலிலே (க)"ஸர்வகந்த:_ஸர்வகந்த:" என்கிறவஸ்து நித்யவாஸம் பண்ணுகிற தேசமென்று தோற்றும்படி மிக்க பரிமளத்தையுடைத்தா யிருக்கிற திருநாங்கூரில். (கல்லரண்) இவருடைய உபாயம் ஸுரக்ஷிதமாகப்பெற்றதாய்த்து. ஸுரக்ஷிதமான உபாயத்தைவிட்டு வேறேயொன்றைத் தேடிப்போகவோ? ... ... (ள)

அரு.—ஆறும்பாட்டு. (மல்லரையித்யாதி) ஒரு காளியரக்ஷணம் மாத்ரமன்றியே,பொறைக்கு உவாத்தாய் குற்றங்களைக்காட்டக்கடவளல்லாத ஸர்

(க) சாந்தோ-ங-கச.

http://acharya.org

வம் ஸஹைக்கும் பொறுக்கவொண்ணாதபடி ஸ்வாமித்ரோஹிகள்மிக்கபடி யாலே தானே சென்று முறையிட்ட பூமிக்காக வந்து பிறந்து, இளம்பரு வமே பிடித்துச்செய்த வபதாநங்களைச் சுருக்கி யநுஸந்தித்துக்கொண்டு, "கண்ணனே களைகண்" என்றத்தை ஸ்த்திரீகரித்து சரணம்புகுகிருரென்று ஸங்கதி.

நல்லவரணுயிருக்கிற காவினுடைய நிழலில், நிறை-பரிமளமானது, கமழாநின்றுள்ள நாங்கையென்று சப்தார்த்தமாய், தாத்பர்ய மருளிச் செய்கிருர் (செறிந்த வித்யாதி). ... ... (௬)

மூ.—மூத்தவற்கரசுவேண்டி முன்பு தூதெழுந்தருளி
மாத்தமர் பாகன்வீழ மதகரி மருப்பொசித்தாய்
பூத்தமர் சோலையோங்கிப் புனல் பரந்தொழுகு நாங்கைக்
காத்தனே காவளந்தண் பாடியாய் களைகணீயே. (எ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மூத்தவற்கு	பெரியோரான தர்ம புத்ரனுக்கு	மருப்பு	கொம்பை
அரசுவேண்டி	ராஜ்யத்தை (கொடுக்க) இச்சித்து	ஒசித்தாய்	முறித்தவனே!
முன்பு	முதலிலே	பூ அமர்	பூக்கள்நிறைந்த
தூது எழுந் தருளி	தூதுபோயும்	சோலை	சோலைகள்
மாத்து	ஆனையின்மேல்	ஓங்கி	உயர்ந்து
அமர்	பொருந்தியிருக்கிற	புனல்	ஜலமானது
பாகன்	ஆனைக்காரன்	பரந்து	(அச்சோலையைச் சுற்றி) வ்யாபித்து
வீழ	விழுந்து முடியும்படி	ஒழுகும்	பாயாநின்ற
மதம்	கொழுப்படைந்த	நாங்கைக்காவளந்தண்பாடியாய்!	
கரி	குவலயா பீடத்தினுடைய	காத்தனே	ரக்ஷகனே!
		களைகண் நீயே.	(எ)

வ்யா.—ஏழாம்பாட்டு. (மூத்தவற்கித்யாதி) "ப்ராப்தனானவனிருக்க அப்ராப்தன் தலையிலே முடியை வைக்கவொண்ணாது,ஜ்யேஷ்டனானவனுக்கு ராஜ்யம்வேணும்" என்று அதுக்காக முன்பு தூது போயருளி. த்ருதராஷ்ட்ரன் ஜ்யேஷ்டனாயிருக்கச்செய்தே ராஜ்யம் பண்ணுகைக்கு யோக்யதையில்லாதபடி அவயவத்திலே வைகல்யம் பிறந்திருக்கையாலே பாண்டு ராஜ்யம் பண்ணிப்போந்தான், அவனு

http://acharya.org

டைய வநந்தரத்திலே "எங்களதிறே ராஜ்யம்" என்று தாங்கள் பண்ணத் துடங்கினார்கள். "அங்ஙன் மர்யாதாபங்கம்பண்ணவொண்ணாது, பிதாவினுடைய ராஜ்யம் புத்ரன் பண்ணவேணும்" என்று அதுக்காகத்தூதெழுந்தருளினான். (மாத்தமரித்யாதி) தான்முடிந்தாலும் ஆனைக்கழுத்திலிருப்பு இளகாதபடி அதிலே மிகவும் பொருந்தினபாகனானவன் விழுந்து முடிந்துபோம்படி, மதமுதிதமாயிருந்துள்ள குவலயாபீடத்தின் கொம்பை அநாயாஸேந முறித்தாய்!

(பூத்தமரித்யாதி) மிக்க பூக்களையுடைத்தாய் ஓங்கியிருந்துள்ள சோலையும், அத்தை வளர்க்கைக்கீடான ஜலமும் பரந்துபாயாநின்றுள்ள திருநாங்கூரில். (காத்தனே) (௧) "ஏதத் வ்ரதம் மம"என்கிறபடியே-இத்தையடைய ரக்ஷிக்கைக்காகக் காவல்பூண்டிருக்கிறவனே! (காவளமித்யாதி) ரக்ஷிக்கக்கடவதாக ஏறிட்டுக்கொண்டு அஸந்நிஹிதனாயிருக்கை யன்றிக்கே, திருக்காவளம்பாடியிலே ஸந்நிஹிதனான நீயே எனக்கு ரக்ஷகனாகவேணும். ... ... (எ)

அரு.—ஏழாம்பாட்டு. (மூத்தவற்கித்யாதி) பாரதப்போர் முடிக்கைக்கு முன்செய்த ஆஸ்ரித பாரதந்த்ர்யத்தையும், மல்லரை யட்டதுக்கு முன்பான குவலயாபீட நிரஸநத்தால் தோற்றின விரோதி நிவர்த்தகத்வத்தையு மநுஸந்தித்து சரணம் புகுகிறாரென்று ஸங்கதி.

மூத்தவரான பாண்டுபுத்ரற்கு ராஜ்யம்வேண்டி என்று சப்தார்த்தம் விவக்ஷித்தருளிச் செய்கிறார் (ப்ராப்தனானவனிருக்க வித்யாதி). பாண்டு மகனாகையாலே ப்ராப்தனென்று கருத்து. த்ருதராஷ்ட்ரனன்றோ பாண்டுவுக்கு மூத்தவன், அவன் ஸந்ததிக்கு ப்ராப்தியில்லையோ வென்ன வருளிச்செய்கிறார் (த்ருதராஷ்ட்ர னித்யாதி). "மா" என்று-ஆனையாய், "அத்து"-ஸப்தம்யர்த்தத்திலேயாய், ஆனையிலமர்ந்த பாகனென்றாய், பாகனைபோதே ஆனையின் மேலிராநே, இங்ஙன் விசேஷித்ததுக்குக் கருத்தென்னென்ன வருளிச்செய்கிறார் (தானித்யாதி). (இளகாதபடி) நழுவாதே.(எ)

௮.—ஏவிளங் கன்னிக்காகி யிமையவர்கோனைச் செற்றுக்
காவளம் கடிதிறுத்துக் கற்பகங்கொண்டு போந்தாய்
பூவளம் பொழில்கள் சூழ்ந்த புரந்தரன் செய்த நாங்கைக்
காவளம்பாடி மேய கண்ணனே களைகணீயே. (அ)

---

(௧) ரா-யு-௧அ-௩௩.

http://acharya.org

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஏவு	யுத்தத்திலே	கொண்டு	கொண்டுவந்தவனே!
இளங்கன்னிக் காகி	பாலையான ஸத்யபாமைக்காக	போந்தாய்	
இமையவர் கோனை	தேவேந்த்ரனை	வளம்	ஸௌந்தரமான
செற்று	நிரஸித்து	பூ	புஷ்பங்களையுடைய
கா	தோட்டத்தினுடைய	பொழில்கள்	சோலைகளாலே
வளம்	அழகை	சூழ்ந்த	சூழப்பட்டதாய்
கடிது	சீக்ரமாக	புரந்தரன்	இந்த்ரனாலே
இறுத்து	அழியச்செய்து	செய்த	நிர்மிக்கப்பட்டதான
கற்பகம்	கற்பகவ்ருக்ஷத்தை	நாங்கை காவளம்பாடி மேயகண்ணனே களைகணீயே! (அ)	

வ்யா.—எட்டாம்பாட்டு. (ஏவிளங்கன்னியித்யாதி) ஏவிலே-யுத்தத்திலே; (இளங்கன்னிக்காகி) எல்லாம்பட்டும் அபேக்ஷிதம்செய்துகொடுக்க வேண்டும்படியிருக்கிற ஸ்ரீஸத்யபாமைப் பிராட்டிக்காகவென்னுதல்; அன்றிக்கே, சசி (ஶசி) யும் ஸத்யபாமைப்பிராட்டியுங்கூடவிருக்கச்செய்தே கல்பக வ்ருக்ஷத்தின் பூ வந்ததாய், அத்தை அவள் கையிலேவாங்கி, தேவஸ்த்ரீயான வபிமாநம்தோற்ற, "நீங்கள் மநுஷ்யரிறே, உங்களுக்கிதுபொருந்து, தலைநோம்" என்றாப்போலே சில அநாதரோக்திகளைப்பண்ண, அநந்தரம் அவளும்போந்து "இப்படிசெய்தாள்" என்ன, "நீயிப்போதே அந்த கல்பகவ்ருக்ஷத்தைக்கொடுவந்து என்முற்றத்திலே நட்டுத்தரவேணும்" என்று அவளேவ என்னவுமாம். (இமையவர்கோனைச்செற்று) தேவஜாதிகளுக்கெல்லாம் நியாமகனாயிருக்கிற இந்த்ரனை யழியச்செய்து, சோலையழகைச் சடக்கென வழியச்செய்து, கல்பகவ்ருக்ஷத்தைக் கொண்டுபோந்தாய்.

(பூவளமித்யாதி) தர்சநீயமான பூக்களையுடைத்தான பொழிலாலே சூழப்பட்ட இந்த்ரனேற்றின திருநாங்கூரில். ஸ்வர்க்கத்திலுண்டான வேண்டப்பாடு பூமிக்குமுண்டாகவேணும் என்று அக்கட்டளையிலே இந்த்ரனாலே சமைக்கப்பட்டது திருநாங்கூரென்று சொல்லக்கடவது. அன்றப்படி ஸத்யபாமைப்பிராட்டிக்குதவினது, எல்லார்க்குமொக்க உதவுகைக்காகத் திருக்காவளம்பாடியிலே வந்து ஸந்நிஹிதனை நீயே ரக்ஷகனாகவேணும். ... ... (அ)

http://acharya.org

அரு.—எட்டாம்பாட்டு. (ஏவிளமித்யாதி). பூமிப்பிராட்டி இரக்க பூபாரநிரஸநார்த்தமாக அவதரித்து ஆச்ரித பரதந்த்ரனாய்ப் பல்லரசவிந்து வீழப்பண்ணின வளவன்றியே, ஸ்ரீஸத்யபாமைப் பிராட்டிக்காக தேவர்களுடைய துர்மாநத்தைப் போக்கினாய்! நீயே ரக்ஷகனாகவேணுமென்று சரணம் புகுகிறாரென்று ஸங்கதி.

"ஏவிளங்கன்னி" என்றவிடத்தில் வகாரம் குறைந்திருக்கிறதாய்த் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (அன்றிக்கே யித்யாதி). (அழியச்செய்து) என்றது-கர்வபங்கம் பண்ணியென்றபடி.

பாரிஜாதத்தைக் கொடுத்தாப்போலே ஆச்ரித பாரிஜாதத்தைக் கொடுக்கவந்தாயென்று ப்ரக்ருதோபயோகத்தைக் காட்டுகிறார் (அன்றப்படியித்யாதி.) ... ... (அ)

மூ.—சந்தமாய்ச் சமயமாகிச் சமயவைம்பூதமாகி
அந்தமா யாதியாகி யருமறை யவையு மானாய்
மந்தமார் பொழில்கடோறும் மடமயிலாலு நாங்கைக்
கந்தமார் காவளந்தண்பாடியாய் களைகணீயே. (கூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
சந்தமாய்	ச(ஞ்)ந்தஸ்ஸுக்கு நியாமகனாய்	அரு	அர்த்தமறிவதற்கு அஸக்யமான
சமயமாகி	(அந்த சந்தஸ்ஸுக்களுடைய ஆறெழுத்து எட்டெழுத்தென்கிற) வ்யவஸ்தைக்கு நியாமகனாய்	மறையுமானாய்	வேதங்களுக்குநிர்வாஹகனானவனே!
		மந்தம்	மந்தார வ்ருக்ஷங்கள்
		ஆர்	நிறைந்திருக்கிற
		பொழில்கள் தோறும்	சோலைகளெங்கும்
சமயம்	வ்யவஸ்திதஸ்வபாவங்களான	மடம்மயில்	மடப்பத்தை யுடைய பெண் மயில்களானவை [ற
ஐம்பூதமாகி	பஞ்சபூதங்களுக்கு நியாமகனாய்	ஆலும்	நர்த்தனம் பண்ணுகின்
அந்தமாய்	லயத்துக்குக் காரணபூதனாய் [பூதனாய்	நாங்கை	திருநாங்கூரிலே
		கந்தம் ஆர்	பரிமளம் மிக்கிருந்துள்ள
ஆதியாகி	ஸ்ருஷ்டிக்குக்காரண		
அவை	அவ்வர்த்தங்களை ப்ரதிபாதிக்கிற		காவளந்தண் பாடியாய் களைகண்நீயே. (கூ)

http://acharya.org

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (சந்தமாய்) ச (ஶ) ந்தஸ்ஸுக்கு நியந்தாவாய். (சமயமாகி) இன்னதனை அக்ஷரங்கள் கூடினது அநுஷ்டுப், த்ருஷ்டுப், ஜகதி என்றுப்போலே சொல்லப்படுகிற இந்த வ்யவஸ்த்தைக்கு நியாமகனாய். (சமயவைம்பூதமாகி) எல்லாவற்றுக்குமடியாய் வ்யவஸ்த்தித ஸ்வபாவமான ப்ருதிவ்யாதி பூதபஞ்சகத்துக்கும் நியாமகனாய். (அந்தமாய்) இவ்வருகுண்டான கார்யவர்க்கமடைய அழிந்து கிடந்தவன்று, (க) "ஸதேவ-ஸதேவ" என்கிறபடியே இவையடங்கத் தன் பக்கலிலே லயித்துத் தானொருவனுமே என்னும்படி யிருக்குமவனுமாய்; இவற்றையடங்க விபக்தமாக்கிக் கார்யங்கொள்ள நினைத்தவன்றைக்கு, அப்படி கார்யங்கொள்ளலாம்படி இவற்றுக்கடங்கலும் காரணபூதனுமாய். ஆத்யந்தங்களுக்கு நியாமகனுயென்றபடி. (அருமறையவையுமானாய்) இப்படி கார்யாவஸ்த்தமாயும் காரணவஸ்த்தமாயும் போருகிறது ப்ரஹ்மமொன்றுமே என்று வேதங்களாலே ப்ரதிபாதிக்கப்படுமவனுமாய். (மந்தமார்)‡ (மந்தாரமார்ந்த) பொழில்களெங்கும் பேடைமயிலானது ஆலியாநின்றுள்ள திருநாங்கூரில். (கந்தமார்) (உ) "ஸர்வகந்தஃ - ஸர்வகந்தஃ" என்கிறவஸ்து நித்யவாஸம்பண்ணுகிற தேசமென்று தோற்றும்படி யிருக்குமாய்த்து, (களைகணீயே) இப்படி நிரதிசயபோக்யனான நீயே ரக்ஷகனுகவேணும். ... ... (கூ)

அ௫.—ஒன்பதாம்பாட்டு. (சந்தமித்யாதி). சரணுகதிக் கபேக்ஷிதங்களான சரண்யனவனுடைய விரோதி நிரஸந அபேக்ஷித பலப்ரதத்வங்களுக்கு உபயுக்தங்களான வப்தாநங்களாலே - கார்யாபாதக குணங்களையும், "காவளம்பாடி மேயகண்ணனே" என்கையாலே-ஸௌகர்யாபாதக குணங்களில் ஸௌலப்யத்தையு மருளிச்செய்தாராய், இப்பாட்டில்-நிகரில் புகழான வாத்ஸல்யத்தை யநுஸந்திக்கைக்காக, தத்கார்யமான ஸர்வாந்தராத்மதையை யநுஸந்திக்கிறுரென்று ஸங்கதி.

"அந்தம்" நாசமாய், "ஆதி" உத்பத்தியாய், அதுக்கு நியாமகனைபடியை யருளிச்செய்கிறுர் (இவ்வருகுண்டான வித்யாதி). "மந்தம்" என்று - மந்தாரவ்ருக்ஷமாய், "ஆர்தல்" மிகுதியாய், அருளிச்செய்கிறுர் (பொழில்களித்யாதி). ... ... (கூ)

௰.—மாவளம்பெருகி மன்னு மறையவர் வாழு நாங்கைக்
காவளம்பாடிமேய கண்ணனைக் கலியன் சொன்ன

(க)சாந்தோ-௬-உ-க. ‡குண்டலிதம் ப்ரக்ஷிப்தம். (உ)சாந்தோ-௩-கச-உ.

http://acharya.org

பாவளம் பத்தும் வல்லார் பார்மிசை யரசராகிக்
கோவிளமன்னர் தாழக் குடை நிழல் பொலிவர்தாமே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
மாவளம்	பெரியஸம்பத்தானது	வளம்	அழகியதான
பெருகி	வ்ருத்தியடைந்து	பாபத்தும்	பாசுரங்கள்பத்தையும்
மன்னும்	பொருந்தியிருக்கிற	வல்லார்	அப்யஸிக்க வல்லவர்கள்,
மறையவர்	ப்ராஹ்மணோத்தமர்		
வாழும்	ஸுகமாகவர்த்திக்கிற	பார்மிசை	பூமியிலே
நாங்கை	திருநாங்கூரிலே	அரசராகி	ராஜாக்களாயிருந்து,
காவளம்பாடி	திருக்காவளம்பாடி என்னும் திவ்யதேசத்திலே [ற	கோ	பூமியில் [ளும்
		இளமன்னர்	யுவராஜாக்க ளடங்க
		தாழ	கிழ்ப்படும்படியாக
மேய	பொருந்தி வர்த்திக்கி	குடைநிழல்	குடையின்நிழலிலே
கண்ணனை	க்ருஷ்ணன் விஷய [மாக	பொலிவர்	ஸம்ருத்தரா யிருப்பர்கள். (௧௦)
கலியன்	ஆழ்வார்		
சொன்ன	அருளிச்செய்ததாய்,		

வ்யா.—பத்தாம்பாட்டு. (மாவளமித்யாதி) நிரவதிகமான ஸம்பத்து மேன்மேலன் கரை புரண்டு அதொருநாள்வரையிலே மாறுகையன்றிக்கே நித்யமாய்ப்போருகிற ப்ராஹ்மணர் வேதார்த்தபூதனை ஸர்வேஶ்வரனைக் கண்ணாலேகண்டு வாழாநின்றுள்ள திருநாங்கூரில் திருக்காவளம்பாடியிலே வந்து நித்யவாஸம்பண்ணுகிற க்ருஷ்ணனை க்ருஷ்ணாவதாரம் பரதசையோடொக்கச் சொல்லலாம்படியிறே இங்குத்தை ஸௌலப்யம். "ஆழ்வாரருளிச்செய்த விதுதன்னை வாயாலே சொல்லுமதுதானே ப்ரயோஜநமாகப்போரும்" என்னும்படி நல்ல ச(ஃ)ந்தஸ்ஸையுடைத்தான இப்பத்தையும் வல்லவர். பாவளமென்றது-பாவினமென்றபடி. பாவளம் பத்தும் வல்லார் பூமியிலே அரசராகி. (கோவிளமன்னர் தாழவித்யாதி) "மோக்ஷத்தை ப(ஃ)லமாகச் சொல்லில் அதிகாரிகளைக் கிடையாது" என்று, "அபிமதஸாதநமென்னவே கற்பர்கள், பின்னை மோக்ஷத்திலே கொடுபோய் மூட்டுகிறோம்" என்று, ஐஶ்வர்யத்தை ப(ஃ)லமாகச் சொல்லிற்று. ... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

http://acharya.org

அரு.—பத்தாம்பாட்டு. (மாவளமித்யாதி). "பாவளம்" - வளமான பா - அழகிய சந்தஸ்ஸென்று திருவுள்ளம்பற்றி, அழகின்படியை யருளிச் செய்கிறார் (ஆழ்வாரித்யாதி). "வளம்" என்று-ஸ்ம்ருத்தியாய், ‡ இனம் முற்றின ஸம்ருத்தியாக வர்த்தாந்தர மருளிச்செய்கிறார் (பாவளமென்ற தித்யாதி). ... ... (௧0)

ஜீயர் திருவடிகளே சரணம்.

நாலாம்பத்து ஆறுந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

நாலாம்பத்து - ஏழாம் திருமொழி

கண்ணார்கடல் ப்ரவேசம்.

வ்யா.— "காவளம்பாடிமேய கண்ணனேகளைகணீயே" என்று சரணம்புக்கவிடத்திலும், ஸம்ஸாரத்திலே சப்தாதிவிஷயங்கள் நடையாடுகிற விடத்தில் தம்மையிருக்கக்கண்டார்; (௧) "ப்ரியம்ஜநமபச்யந்தீம் பச்யந்தீம் ராக்ஷஸீகணம் । ஸ்வகணேந ம்ருகீம் ஹீநாம் ச்வகணைராவ்ருதாமிவ- ப்ரியஞ்ஜந மபச்யந்தீம் பச்யந்தீம் ராக்ஷஸீகணம்! ஸ்வகணேந ம்ருகீம்ஹீநாம் ச்வகணைராவ்ருதாமிவ" என்னும்படியே - இழக்கிறது - நித்யஸூரிகளோடேகூட விருக்கிறவிருப்பையும், பெறுகிறது - சப்தாதி விஷயங்களையும் அவற்றுக்குப்பணிசெய்து திரிகையுமாயிராநின்றது. "நீ அசக்தனாயிருந்து என்னபிமதமிழக்கிறேனென்று, நீசக்தனாயிருக்க நானிழப்பதே!" என்ன; "உனக்கபிமதமேது"? என்ன; த்வத்ப்ராப்தி விரோதியான ப்ரக்ருதி ஸம்பந்தத்தை யறுத்துத் தரவேணுமென்கிறார். ... ... *

அரு.—கண்ணார் கடலின்ப்ரவேசம்.— "கண்ணனே களைகணீயே" என்று சரணம் புக்காராகில் இனி அநிஷ்ட நிவ்ருத்தி பூர்வ கேஷ்டப்ராப்தி பண்ணிக் கொடுக்கை அவன் கார்யமாயிருக்கத்தானே செய்யாதோ, "இடரைக் களையாயே" என்று இவர் ப்ரார்த்திப்பானென்னென்கிற சங்

(௧) ரா-ஸு-௧௫-உ௪. ‡ இது ஸந்திக்தம்.

http://acharya.org

கையிலே; வ்ருத்த வர்த்திஷ்யமாண கதந பூர்வகம் ஸங்கதியை யருளிச் செய்கிருர் (காவளமித்யாதி). இவ்வாழ்வார், (௧) வாடி துடங்கி திருமந்த்ரத்தைப் பெற்ற ஹர்ஷத்தாலே, தத்த்தாரு ஸந்தாந பூர்வகமாகத் திருப்பிரிதி முதலாய் திருமலைநடுவாகத் திருநாங்கூரளவும் தமக்கு ப்ராப்யதயா திருவுள்ளம் பற்றியும், இத்திருப்பதிகளில் மண்டின ஸ்ரீ வைஷ்ணவர்களையே ப்ராப்யமாக வெண்ணியும், திருவுள்ளத்தைக் குறித்து மற்றும் ஸம்ஸாரிக ளறியும்படி உபதேசித்துக்கொண்டுவந்தவர், பதறி, திருக்காவளம்பாடியிலே ஒருகால் சொன்னப்போலே ஒன்பதின்கால் சரணம்புக்கு, அவன் (௧) „ஸா மேகம் ஶரணம்வ்ரஜ-மாமேகம் சரணம்வ்ரஜ" என்ற வர்த்தத்தை அவன் திருவுள்ளத்திலே படுத்த; அவனும், ஸர்வஜ்ஞனகிலும் இவர்பாசுரம்கேட்டு உகக்குமவனுகையாலே, "இத்தனைநாளும் திவ்யதேசங்களிலே மண்டியிருந்த உமக்கு வேறு அபிமதமேது" என்னும் ப்ரஸ்நரூபத்தாலே (௧) „ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி - ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி" என்ற வர்த்தத்தை இவரையிட்டு வெளியிடப் பண்ணுகிருனென்று திருவுள்ளம். ... . (௧)

மூ.—கண்ணார் கடல்போல் திருமேனி கரியாய்
நண்ணார் முனை வென்றி கொள்வார் மன்னு நாங்கூர்த்
திண்ணார் மதிள்சூழ் திருவெள்ளக்குளத்து
ளண்ணு வடியே னிடரைக் களையாயே. (௧)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கண் ஆர்	இடமுடைத்தான	திண் ஆர்	த்ருடமான
கடல்போல்	ஸமுத்ரம்போன்ற(அழகையும் காம்பீர்யத்தையு முடைய)	மதிள்	ப்ராகாரங்களாலே
		சூழ்	சூழப்பட்ட
		திருவெள்ளக் குளத்துள்	திருவெள்ளக் குளமென்கிற திவ்யதேசத்திலெழுந்தருளியிருக்கிற [வனே!
திருமேனி	திவ்ய விக்ரஹத்தையுடைய வனை		
கரியாய்	கண்ணனே!		
நண்ணார்	சத்ருக்களுடைய	அண்ணு	நிருபாதிக பந்துவான
முனை	யுத்தத்திலே	அடியேன்	அநந்யகதியான அடியேனுடைய
வென்றிகொள்வார்	(சத்ருக்களை) ஜயிக்க வல்லரான ப்ராஹ்மணோத்தமர் [கிற	இடரை	துக்கங்களை (ப்ரக்ருதி ஸம்பந்தத்தை)
மன்னு	நித்யவாஸம் பண்ணு	களையாய்	அறுத்துத்தரவேணும்.
நாங்கூர்	திருநாங்கூரில்,		

(௧) ௧-௧-௧. (௨) கீதை-௧௮-௬௬.

http://acharya.org

வ்யா.—முதற்பாட்டு. (கண்ணாரித்யாதி) இவ்வடிவையநுபவிக்கையை யிழக்கப்போமோ. வைத்த கண் வாங்கப் போகாதபடியான, கடல்போலேயிருக்கிற திருமேனியை யுடையவனே! அன்றிக்கே, இடமுடைத்தான கடல்போலே யிருந்துள்ள திருமேனியை யுடையவனே என்றுமாம். ஒருகால், அழகிலே, ஒருகால், காம்பீர்யஸ்வபாவத்திலே. — (நண்ணார்முனைவென்றிகொள்வார் மன்னுநாங்கூர்) சத்ருக்களுடைய யுத்தத்திலே முதுகு காட்டாதே வென்றிகொண்டல்லது மீளாதவர்கள் மன்னுகிற திருநாங்கூர். (திண்ணார்மதிளித்யாதி) பயப்ரஸங்கமில்லாத தேசத்திலே யிருக்கிற திருபாதிகபந்துவே! (அடியேன்) புறம்பு புகலுண்டென்றிருக்கிலன்றோ ஆறியிருக்கலாவது; அநந்யகதியாயிருக்கிற என்னிடரைக் களையாய். ... ... (௧)

அரு.—முதற்பாட்டு. (கண்ணாரித்யாதி). இத்தால் காம்பீர்யம் தோற்றுமென்று திருவுள்ளம்; இப்போது நான் "களைகணீயே" என்னச்செய்தேயும் நீ கம்பீரனாயிருக்கையாலே உன்திருவுள்ள மறியப்போகிறதில்லை, அடியேனிடரைக் களையாயே என்கிறாரென்று தாத்பர்யம்.... (௧)

மூ.—கொந்தார் துளவ மலர் கொண்டணிவானே
நந்தாத பெரும் புகழ் வேதியர் நாங்கூர்ச்
செந்தாமரை நீர்த் திருவெள்ளக்குளத்து
ளெந்தா யடியே னிடரைக் களையாயே. (௨)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கொந்து ஆர்	பூங்கொத்துக்கள் நிறைந்திருக்கிற	வேதியர்	ப்ராஹ்மணோத்தம ருடைய
துளவம்	திருத்துழாயினுடைய	நாங்கூர்	திருநாங்கூரில்,
மலர்கொண்டு	புஷ்பங்களை மாலையாகக்கட்டி	செந்தாமரை	செந்தாமரைப் பூக்களையுடைய
அணிவானே	(திருமுடியில்) சாத்தியருளுமவனே!	நீர்	தடாகங்கள் சூழ்ந்த
நந்தாத	அழிவில்லாத	திருவெள்ளக் குளத்துள்	திருவெள்ளக் குளத்தி லெழுந்தருளி யிருக்கிற
பெரும்	அபரிச்சிந்நமான	எந்தாய்	என்னுடைய ஸ்வாமியே!
புகழ்	கீர்த்தியையுடைய	அடியேனிடரைக் களையாயே.	(௨)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (கொந்தாரித்யாதி) ரக்ஷணத்துக்கு வளையம்வைத்திருக்கிறேயே. திருக்குழலில் ஸ்பர்சத்தாலே கொந்தாரகின்றுள்ளதுளவமலரை யணிந்தவனே! (நந்தாத பெரும்புகழித்

யாதி) விச்சேதியாதே ஸாவதியன்றிக்கே யிருந்துள்ள புகழையுடைய ப்ராஹ்மணருடைய திருநாங்கூர். அவ்வூரிலுள்ளார்படி யுனக்கு வேண்டாவோ வென்கை. (செந்தாமரைநீரித்யாதி) திருமேனிக்கும் அவயவசோபைக்குமொப்பாயிராநின்றது ஊரில்பொய்கையில்நீரும் தாமரையும். ... ... (உ)

அரு.—இரண்டாம்பாட்டு. (கொரந்தாரித்யாதி) அவன் திருமேனியழகை யிழக்கமாட்டாதே "அண்ணா வடியேனிடரைக் களையாய்" என்னச் செய்தேயும், இவர் இன்னும் சொல்லும் வார்த்தை கேட்கவேணுமென்றிருக்க; இவர், நீரக்ஷணத்துக்குத் தனிமாலையிட்டு ஆச்ரிதரக்ஷணத்தால் புகழ்படைத்தார் நடுவேயிருக்கிறுயே என்று சொல்லுகிறுரென்றுஸங்கதி.

(புகழை) என்றது-ஆச்ரித ரக்ஷணத்தால் வந்த கீர்த்தியை என்றபடி.

மூ.—குன்றால் குளிர் மாரி தடுத்துகந்தானே
நன்றாய பெரும்புகழ் வேதியர் நாங்கூர்
சென்றார் வணங்கும் திருவெள்ளக்குளத்துள்
நின்றாய் நெடியா யடியேனிடர் நீக்கே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
குன்றால்	கோவர்த்தந மலையை யெடுத்து	வணங்கும்	ஆச்ரயியாநின்ற
குளிர்மாரி	வவ்வலிடப் பண்ணுவதான மழையை	திருவெள்ளக் குளத்துள்	திரு வெள்ளக்குளத்திலே [மவனே!
தடுத்து	நிரோதித்து	நின்றாய்	எழுந்தருளி யிருக்கு
உகந்தானே	ஸந்தோஷித்த வனே!	நெடியாய்	அபரிச்சிந்ந ஸ்வரூப குணாதிக ளுடைய வனே! [கத்தை
நன்றாய	விலக்ஷணமான		
பெரும்புகழ் வேதியர் நாங்கூர்,		அடியேனிடர்	அடியேனுடைய துக்கத்தை
சென்றார்	போமவர்க ளெல்லாரும்	நீக்கு	போக்கி யருளவேணும். (௩)

வ்யா,—மூன்றாம்பாட்டு. (குன்றாலித்யாதி) இன்னத்தாலே இன்னத்தைக் காப்பதென்னும் நியதியில்லை, மலையைக் குடையாகக் கொண்டு மழையைக்காத்து, "இவற்றுக்குறுப்பாகப்பெற்றோம்!" என்று உகந்தவனே! மழையிலகப்பட்ட இடையரிடருக்கும் என்னிடருக்கும் வாசிபார்த்துக்கொள்ளாய். (நன்றாயவித்யாதி) ஸர்வேச்வரனுக்கு ஹேயப்ரத்யநீகமாய் கல்யாணைகதாநமான புகழாயிருக்கும்; அப்படியே அவ்வூரில் ப்ராஹ்மணர் புகழும்.

http://acharya.org

(சென்றூர்வணங்குமித்யாதி) (௧) "யதார்ஹம் கேசவே வ்ருத்தி மவசாঃ ப்ரதிபேதிரே" - யதார்ஹம் கேசவே வ்ருத்தி மவசாঃ ப்ரதிபேதிரே" துர்யோதநன், பாண்டவர்கள்பக்கல் பக்ஷபாதத்திலே க்ருஷ்ணன் வாராநின்றானென்று, தானும் தன்னுடைய பரிகரமுமாக ஒப்பித்துக்கொண்டிருந்து, ஒருத்தனெழுந்திருத்தல் வணங்குதல் செய்யக்கடவதன்றென்று வ்யவஸ்த்தை பண்ணிக்கொண்டிருக்க, தந்தாம்வசமன்றிக்கே வணங்கினார்கள். சருகெல்லாம்கூடி "காற்றடித்தால் பறக்கக்கடவோமல்லோம்" என்று பண்ணும் வ்யவஸ்த்தைபோலேயிறே சேஷிமுன்பு சேஷபூதர் "அநுகூலிக்கக் கடவோமல்லோம்" என்னும் வ்யவஸ்த்தை; அப்படியே, சென்றாரெல்லாரும் வணங்காநின்ற திருவெள்ளக்குளத்துள்நின்றாய். (நெடியாய்) ஸ்வரூப ரூபகுணங்களா லெல்லை காணவொண்ணாதவனே! (அடியேனிடர்நீக்கே) இரண்டுதலையுமொக்க ஆற்றாமை யுண்டாகிலன்றோ ஆறியிருப்பது. ... (௩)

அரு.—மூன்றாம்பாட்டு. (குன்றாலித்யாதி) நான் ரக்ஷணத்துக்குத்தனிமாலை யிட்டிருந்தமை நீரென்கொண்டு சொல்லுகிறீரென்னவருளிச் செய்கிறாரென்று ஸங்கதி.

இவ்வபதாநத்தை யிங்குச் சொன்னதுக்கு உட்கருத்தருளிச்செய்கிறார் (மழையிலித்யாதி).

(ஆறியிருப்பது) என்றது - அடியேனறியிருப்பதென்றபடி. (௩)

மூ.—கானார் கரி கொம்ப தொசித்த களிறே
நாநாவகை நல்லவர் மன்னிய நாங்கூர்
தேனார் பொழில்சூழ் திருவெள்ளக்குளத்து
ளானா யடியேனுக் கருள் புரியாயே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கான்	காட்டிலே	களிறே	மத்தகஜமே!
ஆர்	பருவம் நிரம்பியிருக்கிற (எப்போதும் காட்டிலே ஸஞ்சரியாநின்ற) [டைய	நாநாவகை	எல்லாப்ரகாரங்களாலும் பரிபூர்ணமாயிருக்கிற
கரி	குவலயாபீடத்தினு	நல்லவர்	வைலக்ஷண்யத்தையுடைய ஸத்புருஷர்கள் [ற
அதுகொம்பு	அப்படி பெருமை பொருந்திய கொம்	மன்னிய	பொருந்தி வர்த்திக்கி
ஒசித்த	முறித்த [பை	நாங்கூர்	திருநாங்கூரிலே,

---

(௧) பாரதம்.

தேன் ஆர்	வண்டுகள் நிறைந்த	ஆனாய் மத்தகஜம் போன்ற வனே!
பொழில்	சோலைகளாலே	அடியேனுக்கு அடியேனிடத்தில்
சூழ்	சூழப்பட்ட	அருள்புரியாய் க்ருபைபண்ணி யரு
திருவெள்ளக் குளத்துள்	திருவெள்ளக்குளத்தி லெழுந்தருளி யிருக்கிற	ளவேணும். (ச)

வ்யா.—நாலாம்பாட்டு. (கானார்கரியித்யாதி) (க)"பொற்றையுற்ற முற்றல்யானை" என்னும்படியே - புகும் வயஸ்ஸெல்லாம் காட்டிலே புக்கு மனிச்சரோடே முகம்பழகாதே யிருக்கிற ஆனையினுடைட கொம்பை முறித்தகளிறே! ஒருமத்தகஜம் ஓராளையின் கொம்பை முறித்தது.

(நாநாவகையித்யாதி) ஜந்மத்தால், வ்ருத்தத்தால், ஜ்ஞாநத்தால், ஆண்பிள்ளைத்தனத்தால், எல்லாவற்றாலும் கரைபுரண்டுவருகிற நன்மையையுடையவர்கள் மன்னுகிற திருநாங்கூர். (தேனாரித்யாதி) வண்டுகளார்ந்த பொழில் சூழ்ந்திருந்துள்ள திருவெள்ளக்குளத்தானாய்! செல்லநின்றதுவும் வரநின்றதுவு மாகர்ஷகமாயிருக்கைக்கும், கிட்டினார் குற்றம் காணக் கண்ணிட்டிருக்கும்படியாலேயும், (ஆனாய்) என்கிறார் அடியேனுக்கருள்புரியாயே. ... ... (ச)

அரு —நாலாம்பாட்டு. (கானாரித்யாதி) இடையரிடர் தீரமாரிதடுத்தவளவோ, மதயானையைவென்ற சக்திமானல்லையோ, என்னிடத்தில் ஆறியிராதே க்ருபையைச் சொரியவேணுமென்று ப்ரார்த்திக்கிறாரென்று ஸங்கதி. நீரக்ஷணத்துக்குத் தனிமாலையிட்டதுக்கு கோவர்த்தநோத்தரணமாத்ரமன்றியே இதுவுமொரு ஸாஹசமன்றோ வென்கிறாரென்று கருத்து.

பொற்றையை - காட்டை, உற்ற - அடைந்து அங்கேதானே முற்றின ஆனையென்று சப்தார்த்தம். கானிலே, ஆர் - வயஃபூர்த்தியுடையவென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (புகுமித்யாதி). "கொம்பது" என்கையாலே- அந்தக் கொம்புக்குப் பெருமைதோற்றுகையால், அத்தை இக்களிறு ஒசித்தபடி எங்ஙனேயென்ன வருளிச்செய்கிறார் (ஒருவித்யாதி).

"வேதியர்" என்ற பதத்தையும், "நண்ணார்முனைவென்றிகொள்வார்" என்றத்தையு முட்கொண்டு நாநார்த்தந் தன்னையருளிச்செய்கிறார் (ஜந்மத்தாலித்யாதி). கீழே "களிறே" என்றுவைத்து, இங்கு மீளவும் "ஆனாய்" என்கைக்குக் கருத்தென்னென்ன வருளிச்செய்கிறார் (செல்லநின்றதுவு மித்யாதி). ஆனையினுடைய கமநாகமநங்களுடைய ஆகர்ஷகத்வத்தாலும்,

(க) தி-ச-வி-ருஉ.

மத்தமாயிருக்கையாலே ஒன்றும் தெரியாதிருக்கையாலும், த்ருஷ்டாந்தமாக மீளவும் சொன்னரென்றபடி. ... ... (௪)

மூ.—வேடார் திருவேங்கடம் மேய விளக்கே
நாடார் புகழ் வேதியர் மன்னிய நாங்கூர்
சேடார் பொழில் சூழ் திருவெள்ளக்குளத்தாய்
பாடா வருவேன் வினையாயின பாற்றே. (௫)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வேடு ஆர்	வேடர்களாலே நிறைந்திருக்கிற	திருவெள்ளக்குளத்தாய்	திருவெள்ளக் குளத்துள் எழுந்தருளியிருக்குமவனே!
திருவேங்கடம்	திருவேங்கட மலையில் [கிற	பாடா	(உன்னை)ப் பாடிக் கொண்டு
மேய	நித்யவாஸம் பண்ணு		
விளக்கே	ஸ்வயம் ப்ரகாசனானவனே!	வருவேன்	வாராநின்ற என்னுடைய
நாடு ஆர்	தேசமெங்கும் நிறைந்திருக்கிற	வினையாயின	பாபங்களெல்லாவற்றையும்
புகழ்	கீர்த்தியையுடைய	பாற்று	ஓடவடித்தருளவேணும் (நசிப்பிக்கவேணும்). (௫)
வேதியர் மன்னியநாங்கூர்,			
சேடு ஆர்	தளிர்கள் நிறைந்த		
பொழில் சூழ்	சோலைகள் சூழ்ந்த		

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (வேடாரித்யாதி) பரிவுக்கும் ஆண்பிள்ளைத்தனத்துக்கும் குறைவற்று, திருமலையில் நின்றும் பூமியிலே இழியில் குடிப்பழியாயிருக்கும் திருவேடுவராலே நிறையப்பட்ட திருமலையிலே மேவின விளக்கே! தன் ஸ்வரூப ரூப குணங்களுக்குத் தானே ப்ரகாசகனானவனே!

(நாடாரித்யாதி) குளப்படியிலே கடலை மடுத்தாப்போலே, அவ்வூரில் ப்ராஹ்மணருடைய புகழுக்கு பூமியிலிடம் போராதென்கை. (சேடாரித்யாதி) சேடு- திரட்சியும், தளிரும். (பாடாவருவேன்) உன்னுடைய குணங்கள் பாடிவருகிற வென்னுடைய வினைகளை. (பாற்றே) அவயவியாய்க் காணப்போகாதபடி சிதறப்பண்ணு. அன்றிக்கே, (பாடாவருவேன்) நீ எதிர்சூழல்புக்குத் திரியாநின்றால், இருயாதே பாங்காக வருவேன். ... ... (௫)

http://acharya.org

அந.—அஞ்சாம்பாட்டு. (வேடாரித்யாதி) நான் விபவமா யிருந்த போது செய்தவற்றைக் கொண்டு நீர் வீளக்கிறதென், திரு வெள்ளக்குளத்தில் ஜந்ம வ்ருத்தாதிகளால் குறைவற்றார்க்கு முகங்காட்டிக்கொண்டிருக்கு மவனன்றோ; நீரு மவர்களைப் போலே சில தர்மங்களைச் செய்து விரோதியைப் போக்கிக்கொள்ள வொண்ணாதோவென்ன; கானமும் வாநரமும் வேடுமானவற்றுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருந்தவனல்லே யோ, நீ என்னுடைய விரோதிகளையெல்லாம் போக்கவேணு மென்கிறாரென்று ஸங்கதி.

வேடு-வேடுவருடைய ஜாதியானது; ஆர்-பொருந்தியிருக்கும்படி. யிருக்கிற திருவேங்கடமென்றாய், அவர்க ளங்கே பொருந்துகைக்கு ஹேது வான பரிவையும், ஜாதிப்ரயுக்தமான சௌர்யத்தையும், பொருந்தியிருக்கையினெல்லே நிலத்தையும் விவக்ஷித்தருளிச்செய்கிறார் (பரிவுக்கு மித்யாதி).

"பாடாவரு" - பாடிக்கொண்டு வருகிறவென்றும், பாடு - பார்ஶ்வத்திலே, ஆம்படி வருகிறவென்றும் இரண்டர்த்த மருளிச்செய்கிறார் (உன்னுடைய வித்யாதி). ... ... —(௫)

மூ.—கல்லால் கடலை யணைகட்டி யுகந்தாய்
நல்லார் பலர் வேதியர் மன்னிய நாங்கூர்ச்
செல்வா திருவெள்ளக்குளத் துறைவானே
எல்லாவிடரும் கெடுமாறருளாயே. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கல்லால்	மலைகளினாலே	திருவெள்ளக் குளத்து	திருவெள்ளக் குளத்தில்
கடலை	ஸமுத்ரத்தை [ணி	உறைவானே	நித்யவாஸம் பண்ணு மவனே!
அணைகட்டி	ஸேதுபந்தநம் பண்	செல்வா	ஶ்ரீமானே!
உகந்தாய்	ஸந்தோஷித்தவனே!	எல்லா இடரும்	ஸமஸ்த பாபங்களும்
நல்லார்	ஆந்ருசம்ஸ்யமான நன்மையை யுடையராய்	கெடுமாறு	நசிக்கும்படி
பலர்	அநேகரான	அருளாய்	அருள்புரியவேணும்.
வேதியர் மன்னிய நாங்கூர்,			

வ்யா.—ஆறும்பாட்டு (கல்லால் கடலையணைகட்டியுகந்தாய்) நீரிலாழும் கல்லாலே கடலிலே யணைகட்டி, "ஸம்ஸாரிகளுக் குறுப்பாகச் செய்யப்பெற்றோம்!" என்றுகந்தாய். (நல்லார்பலர் வேதியர் மன்னியநாங்கூர்) பரஸம்ருத்த்யைக ப்ரயோஜநராய் ஆந்ருசம்ஸ்ய ப்ர தா

http://acharya.org

நரான ப்ராஹ்மணர் மன்னுகிற திருநாங்கூர். (செல்வாவித்யாதி)(எல்லாவிடரும்) அவித்யா கர்ம வாஸநா ருசி பகவதபசாராதிகள், ப்ராரப்தகர்மம், இவை துடக்கமான வெல்லாவிடரும் கெடுமாறருளாயே. (சு)

அ௫.—ஆரும்பாட்டு. (கல்லாலித்யாதி). "திருவேங்கடத்தில் வேடுவர் பாபவிநாசம் முதலான புண்யதீர்த்தங்களாலே நிரஸ்தபாபராகையாலே அவர்களுக்கு முகங்கொடுத்த தித்தனை போக்கி, உம்முடைய விரோதிகளைப் போக்குகை யரிதன்றோ" என்று, இவர் சொல்லுமது கேட்கமீளவும் "இது நமக்கரிது" என்ன; "கல்லைநீரிலே மிதக்கப்பண்ணின உனக்கு ஒன்று அரிதுண்டோ? ஸமஸ்த ப்ரதிபந்தகங்களையும் போக்கி யருளவேணும்" என்கிறுரென்று ஸங்கதி.

(ஸம்ஸாரிகளுக்குறுப்பாக) என்றது-ஸேது தர்சநாதிகளாலே ஸம்ஸாரிகளுக்குப் பாபம் போக்கிக்கொள்ளுகைக்காக வென்றபடி ... (சு)

மூ.—கோலால் நிரை மேய்த்த வெங் கோவலர் கோவே
நாலாகிய வேதியர் மன்னிய நாங்கூர்
சேலார் வயல்சூழ் திருவெள்ளக்குளத்துள்
மாலே யென வல்வினை தீர்த்தருளாயே. (எ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கோலால்	கோலை ஸாதநமாகக் கொண்டு	சேல் ஆர்	சேல் என்னும் மத்ஸ்யங்கள் நிறைந்திருந்துள்ள
நிரைமேய்த்த	பசுக்களை மேய்த்தவனாய்க்கொண்டு	வயல்சூழ்	கழனிகள் சூழ்ந்த
எம்	என்னை வசமாக்கிக் கொண்ட	திருவெள்ளக் குளத்துள்	திருவெள்ளக்குளத்திலெழுந்தருளியிருக்கிற
கோவலர் கோவே	கோபால ஶ்ரேஷ்டனே!	மாலே	பெரியோனே!
நால் ஆகிய	நாலுவகைப்பட்ட	எனவல்வினை	என்னுடைய க்ரூரமான பாபங்களை
வேதியர்	வேதங்களை யோதின ப்ராஹ்மணோத்தமர்கள்	தீர்த்தருளாய்	போக்கியருளவேணும். (எ)
மன்னியநாங்கூர்,			

வ்யா.—ஏழாம்பாட்டு. (கோலாலித்யாதி) ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களை ஸங்கல்பத்தாலே செய்யும் நீ, அந்த ஈஶ்வரத்வப்பிடாராலன்றிக்கே, கையிலே கோலைக்கொண்டு ஜாத்யுசிதமான வ்ருத்தியைச் செய்

http://acharya.org

தாயென்று இடைச்சாதியாக வெழுதிக்கொடுத்திருக்குமத்தாலே என்னை அநந்யார்ஹனாகப் பண்ணினவனே!

(நாலாகியவித்யாதி) நாலுவகைப்பட்ட வேதத்தைக் கரைகண்டிருக்கிற ப்ராஹ்மணர் மன்னுகிற திருநாங்கூர். (சேலாரித்யாதி) நீர்மாறுமையாலே சேல்களார்ந்திருந்துள்ள வயல்சூழ்ந்த திருவெள்ளக்குளத்திலே நிற்கிற பெரியோனே! (எனவல்வினை தீர்த்தருளாயே) என்னால் பொறுக்கவொண்ணாத பாபத்தைப்போக்கி யருளாய். ... (எ)

அநு.—எழாம்பாட்டு. (கோலாலித்யாதி) திருவணை யணித்தாயிருந்தால் நீருமங்கே சென்று தவிர்த்துக்கொள்ள வொண்ணாதோ, என்னையே "எல்லாவிடரும் கெடுமாறருள்" என்கிறதென்? நான்முனத்தனை யெளியனோ என்று மேன்மையைக் காட்ட; இவர், நாட்டார்க்குச் சிலகிடக்கச் சில போக்குமாபோலே எனக்காக வொண்ணாது; அது ஸகல விரோதி நிவ்ருத்திக்கு முறுப்பாகமாட்டாது, நீ இடையர் கையில் கோலைக்கொடுத்துப் பசு மேய்க்கப்போக விட்டால் போனவனல்லையோ, நான் சொல்லிற்றுக் கேட்கலாகாதோ என்று ப்ரார்த்திக்கிறாரென்று ஸங்கதி.

"மாலே" என்றதை யுட்கொண்டு "கோலால்" என்று விசேஷித்து துக்குக் கருத்தருளிச் செய்கிறார் (ஸ்ருஷ்டி யித்யாதி).

சேல்கள்—மத்ஸ்யங்கள். ... ... (எ

மூ.—வாராகமதாகி யிம்மண்ணை யிடந்தாய்
நாராயணனே நல்லவேதியர் நாங்கூர்ச்
சீரார் பொழில்சூழ் திருவெள்ளக்குளத்து
ளாராவமுதே யடியேற் கருளாயே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அது	அப்படி விலக்ஷணமான		வேதியர் நாங்கூர்,
வாராகமாகி	வராஹாவதாரமெடுத்தவனுக்கொண்டு	சீர் ஆர்	செல்வம் நிறைந்த
இம்மண்ணை	இந்த பூமியை		பொழில்சூழ் திருவெள்ளக்குளத்துள்
இடந்தாய்	(அண்டபித்தியில் நின்றும்) குத்தியெடுத்தவனே!	ஆராவமுதே	த்ருப்திபிறவாத (நிரதிசயமான) போக்யபூதனே!
நாராயணனே	(ப்ராணிகளிடத்தில்) வாத்ஸல்யமுடையவனே!	அடியேற்கு	தாஸபூதனான எனக்கு
நல்ல	ஆசாரப்ரதாநரான	அருளாய்	க்ருபை பண்ணவேணும். (அ)

http://acharya.org

வ்யா.— எட்டாம்பாட்டு. (வாராகமித்யாதி) பூமியை ப்ரளயம் கொள்ள, பிறப்பே பூமியையிடக்கவல்ல வராஹமாய் பூமியை யிடந்தாய்!(நாராயணனே)ப்ரஜை அறியாதேயிருக்கக்கட்டிக்கொண்டு கிடக்கும் தாயைப்போலே, ஸம்ஸாரிகளறியாதேயிருக்க வத்ஸலனானவனே! (நல்லவேதியர்) ஆசாரப்ரதாநரான ப்ராஹ்மணர் வர்த்திக்கிற திருநாங்கூர். (சீராரித்யாதி) ஊரிலைஸ்வர்யத்தைக் கோட்சொல்லாநின்ற பொழில்சூழ்ந்த திருவெள்ளக்குளத்திலே அபூர்வவத் போக்யனானவனே! (அடியேற்கருளாயே) ஆருடைய வஸ்து இங்ஙனலமாக்கிறது. ... ... (அ)

அரு.—எட்டாம்பாட்டு. (வாராகமித்யாதி). இடையரும் இங்குள்ள ப்ராஹ்மணருமிவ்விபூதியி லிருந்தாப்போலே நீரும் நம்மை யநுபவித்துக் கொண்டிருக்கலாகாதோ, நீரித்தனை பதறுகைக்குக் காரணமென்னென்ன; பூமியை ப்ரளயங்கொண்டாப்போலே என்னை ஸம்ஸார ப்ரளயங்கொண்டது, என்னையெடுக்கவேணும், நீ வத்ஸலனல்லையோ வென்கிறாரென்று ஸங்கதி. இடையர் உன் குணசேஷ்டிதங்களைக் கண்டு மண்டியிருந்தார்கள், ப்ராஹ்மணர் வேதங்களைக் கரைகண்டவராகையாலே மன்னியிருந்தார்கள், எனக் கங்ஙனொரு நிடரில்லாமையால் ஸம்ஸார ப்ரளயத்தில் மக்நனானேனென்று கருத்து.

(இடக்கவல்ல) - ஒட்டு விடுவிக்கவல்ல. ... ... (அ)

மூ.—பூவார் திருமாமகள் புல்கிய மார்பா
நாவார்புகழ் வேதியர் மன்னிய நாங்கூர்த்
தேவா திருவெள்ளக் குளத்துறைவானே
ஆவா வடியானிவ னென்றருளாயே. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பூ ஆர்	கமலப்பூவில் பொருந்தி வஸிக்கிற	புகழ்	கீர்த்தியையுடையரான
திருமாமகள்	பெரிய பிராட்டியார்		வேதியர் மன்னியநாங்கூர்,
புல்கிய	ஸம்ஶ்லேஷித்த		திருவெள்ளக் குளத்துறைவானே!
மார்பா	திருமார்பை யுடையவனே!	தேவா	ஸௌசீல்யத்தால்விளங்கா நின்றவனே!
நா ஆர்	(லோகத்தாருடைய) நாவிலே நிறைந்திருக்கிற	இவன்	இந்த
		அடியான்	தாஸபூதன்

ஆ ஆ	ஐயோ! ஐயோ! (ஸம்ஸாரத்தில் நலிவுபடாநின்முன்)	என்று அருளாய்	என்று க்ருபை பண்ணி யருளவேணும்.

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (பூவாரித்யாதி) பூவிலேபிறந்தவள், பூ அடிக்கொதித்து விரும்பி யணைக்கும்படி மார்வுபடைத்தவனே! (நாவாரித்யாதி) கண்டபோது புகழ்ந்து, காணுதபோது "என்செய்தோம்" என்றுவெருந்நே, "இவர்கள் குணங்களைப்புகழப்பெற்று நாப்படைத்தப்ரயோஜநம் பெற்றோம்" என்னும்படியான ப்ராஹ்மணர் வர்த்திக்கிற திருநாங்கூர். (தேவாவித்யாதி) பரமபதத்தில் நின்றும் வந்து ஸம்ஸாரிகள்பக்கலிலே உறைகையாலே தீப்யமாநனுயிருக்கிறவனே! (ஆவாவித்யாதி) ஸம்ஸாரத்திலே வர்த்திக்கிறேன்! ஐயோ! ஐயோ! என்றருள்புரியாயே. ... ... (௯)

அரு —ஒன்பதாம்பாட்டு. (பூவாரித்யாதி). ஸம்ஸார ப்ரளயம் தீர்க்க வல்லனாய் வத்ஸலனான நாராயணனை ஶ்ரீமானாக வநுஸந்தித்து, (க) "ஸீதோவாச - ஸீதாமுவாச" என்னுமாபோலே *அலர்மேல் மங்கையை முன்னிட்டு ப்ரார்த்திக்கிறுரென்று ஸங்கதி.

லோகத்தார் நாவிலே பொருந்தும்படியான புகழையுடைய ப்ராஹ்மணரென்று சப்தார்த்தம் விவக்ஷித்தருளிச் செய்கிறுர் (கண்டபோதித்யாதி). ... ... (௯)

மூ.—நல்லன் புடை வேதியர் மன்னிய நாங்கூர்ச்
செல்வன் திருவெள்ளக்குளத் துறைவானைக்
கல்லின் மலி தோள் கலியன் சொன்னமாலை
வல்லரென வல்லவர் வானவர்தாமே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
நல் அன்புஉடை	பரமபக்தி யுக்தரான	திரு வெள்ளக்குளத்து	திரு வெள்ளக்குளமென்னும் திவ்யதேசத்தில்
வேதியர்	ப்ராஹ்மணோத்தமர்		
மன்னிய	வர்த்திக்கிற	உறைவான்	நித்யவாஸம் பண்ணுமவனை
நாங்கூர்	திருநாங்கூரிலே		

(க) ரா-அயோ-௧௧-௨.

http://acharya.org

செல்வனை	ஸ்ரீமான் விஷயமாக		டையும்
கல்லில்	மலையைக் காட்டிலும்	வல்லர் என	அப்யஸிக்க வல்லவர்கள் என்று
மலி	அதிசயித்த (பலமுடைய) [ன	வல்லவர்	(பிராகுல்) சொல்லத்தக்கவர்கள்
தோள்	புஜங்களை யுடையரா		
கலியன்	ஆழ்வார்	வானவர்	நித்யஸூரிகளுடைய
சொன்ன	அருளிச்செய்த		கோஷ்ட்டியில் ஒருவராகப் பெறுவர்.
மாலை	சப்த ஸந்தர்ப்பமான இப்பத்துப் பாட்		

வ்யா.—பத்தாம்பாட்டு. (நல்லன்புடையித்யாதி) பரமபக்தியுக்தரான ப்ராஹ்மணர் வர்த்திக்கிற திருநாங்கூர்ச்செல்வன், திருவெள்ளக்குளத்துறைவானை. (கல்லின்மலியித்யாதி) தோள்வலிபோலே கவிபாடவல்ல வலியும். (வல்லரெனவித்யாதி) தங்களுக்குப் போய்த்தில்லையாகிலும் பிறர்போமென்னும்படியாக வல்லவர்கள், நித்யஸூரிகளோடொரு கோவையாவர்கள். ... ... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—பத்தாம்பாட்டு. (நல்லன்புடை யித்யாதி). கல்-மலையாய், மலையில் மிக்க தோள்பலமுடைய வாழ்வாரென்று இப்போது விசேஷித்ததுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (தோளித்யாதி). (போய்த் தில்லையாகிலும்) விசதமாக வாராதே போனலும். ... ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

நாலாம்பத்து ஏழாந்திருமொழி முடிந்தது.

http://acharya.org

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

நாலாம்பத்து - எட்டாந் திருமொழி

கவளயானை ப்ரவேசம்.

வ்யா.—திருவடிகளிலே விழுந்து சரணம்புக்கு, "அடியேனிடரைக் களையாய்" என்று - தேவரோட்டை யநுபவத்துக்கு விரோதியைப்போக்கித் தரவேணுமென் றபேக்ஷித்தார்; அவனு மப்படியே செய்வானாக வொருப்பட, அது பற்றாமல், ப்ராப்யத்தி லுண்டான த்வரையாலே, தாமான தன்மைபோய் எம்பெருமானோடே இயற்கையிலே, கலந்து பிரிந்து பிரிவாற்றாமையாலே நோவுபட்டு அவன் படிகளை யநுஸந்தித்து ‡வாய்புலத்துகிற வொருபிராட்டி தசையை யநுஸந்தித்த திருத்தாயார் பாசுரமாகச் செல்லுகிறது. ... *

அரு.—கவளயானையின் ப்ரவேசம்.—கீழிரண்டு திருமொழியி[illegible]ர மேயத்தையு மநுவதித்துக்கொண்டு ஸங்கதி யருளிச்செய்கிறார் (திருவடிகளிலே யித்யாதி). (செய்வானாக வொருப்பட) என்றது - (க)"மாகவைகுந் தம் காண்பதற் கென்மன மேகமெண்ணும்" என்று ஆழ்வார்க்கு அதிலே உத்கடேச்சை பிறந்தாப்போலே, இவர்க்கு உகந்தருளின நிலங்களில் உத்கடேச்சை யுண்டாயிருக்கையாலே, பரமபத ப்ராப்தியிலே உத்கடமாக இச்சை பிறப்பித்துக்கொடுப்போமென்று உத்யோகிக்க என்றபடி.

மூ.—கவளயானை கொம்பொசித்த கண்ணனென்றும் காமருசீர்க்
குவளை மேகமன்னமேனி கொண்டகோனென்னானை யென்றும்
தவளமாட நீடுநாங்கைத் தாமரையாள் கேள்வனென்றும்
பவளவாயா ளென்மடந்தை பார்த்தன்பள்ளி பாடுவாளே. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பவளம்	பவழம்போல் ஸுந்தரமான	கவளம்	க்ராஸத்தை யுடைத்தான (அதிகமாத பக்ஷிக்கவல்ல)
வாயாள்	அதரத்தையுடைய		
என்மடந்தை	என்னுடைய பெண்ணானவள்	யானை	குவலயாபீடத்தினுடைய

(க) தி-வாய்-கூ-கூ-எ. ‡ (பா) வாய்புலற்றுகிறாள்.

http://acharya.org

பாலிற்காட்டிலென்னுதல்; பாலோடொத்தவென்னுதல். தன்பேச்சி னினிமையிலே தோற்று அவன் வாய்வெருவ விருக்கக்கடவனிவள், இப்போது தான் அவனிருந்த ஊரைச்சொல்லி வாய்வெருவாநின்றாள். (க) ‘‘மதுரா மதுராலாபா- மதுராமதுராலாபா’’ என்று இவள் பேச்சு க்கேட்டு வாய்வெருவுவானவனிறே. ... ... (சு)

அரு.—ஆரும்பாட்டு. (ஞாலமித்யாதி) ஸ்ரீஜநகராஜன் திருமகளுக்கு ஸ்வஜநமின்றிக்கே லங்கையில் ராக்ஷஸர்கையி லகப்பட்டபடியாலே உதவி ஞன், உனக்கித்தனைபேர் நாங்களிருக்க உனக்கென்ன இத்தனைவாய் புல த்துவா னென்னென்ன; ‘‘ஜகத்துக்கெல்லாம் வந்த ப்ரளயாபத்தோ டொ வ்வாதோ அவன் கோலமேனி காணாத வெனக்கு’’ என்னுமிடங்தோன்ற, அவனுடைய ஆபத்ஸகத்வத்தைச் சொல்லுகிறாளென்கிறாளென்று ஸங் கதி.

கீழ் தாத்பர்ய மருளிச்செய்து வாக்யார்த்த மருளிச்செய்கிறார் (வரை யாதே-யித்யாதி). சேஷித்வம் ஹேதுவென்னு மத்தை லோகந்யாயத்தா லே ஸ்த்திரீகரிக்கிறார் (உடையவனித்யாதி).

‘‘மேலெழுந்து’’ என்று விசேஷிக்கையாலே - நீர்சுடும் என்னும்படி யான குளிர்த்தியை யுடைய நிலவண்மையைச் சொல்லுகிறவளுக்கு, உங்க ளோடிருக்கை எனக் கடிக்கொதிப்பாம்படி அவன் வர்த்திக்கிற தேச மெனக்கு ஸ்ரமஹரமாயிருந்ததீ என்னு மபிப்ராயம் ஸ்புரிக்கும்படி ப்ர க்ருதோபயோகம் காட்டுகிறார் (ஜலசரேத்யாதி). (ஸத்வங்களுங்கூட) என்ற சகாரம் - இவ்வர்த்தத்துக்கெல்லாம் ஸூசகம் ... ... (சு)

௭.—நாடியென்றனுள்ளங்கொண்ட நாதனென்றும் நான்மறைகள்
தேடியென்றுங்காணமாட்டாச்செல்வனென்றும்சிறைகொள்வண்டு
சேடுலவு பொழில்கொள் நாங்கைத் தேவதேவனென்றென்றோதிப்
பாடகம்சேர் மெல்லடியாள் பார்த்தன் பள்ளிபாடுவாளே. (எ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பாடகம்	பாடகமென்னும் பாதாபரண மானது	என்றன்உள் ளம்	என்மநஸ்ஸை
சேர்	பொருந்தியிருக்கிற	கொண்ட	வசமாக்கிக்கொண்ட
மெல்	ம்ருதுவான	நாதன்என்று	ஸ்வாமியென்றும்,
அடியாள்	ஸ்ரீபாதங்களை யுடையபெண்ணானவள்,	ம்	
		நான்மறைகள்	நாலுவகைப்பட்ட வேதங்களானவை
நாடி	தேடிக்கொண்டு வந்து	என்றும்	ஸர்வகாலமும்

(க) ரா-ஸு-சு-சு-கடு.

http://acharya.org

தேடி	ஆராய்ந்துபார்த்து	சேடு	ஸமூஹமானது
காணமாட்டா	காணப்போகாதபடியான	உலவு	ஸஞ்சரியாநின்ற
செல்வனென்றும்	ஸ்ரீமான் என்றும்,	பொழில்கொள்	சோலைகளையுடைய
சிறைகொள்	ப்ராசஸ்தமான இறகு[களையுடைய	நாங்கைத் தேவதேவ னென்றென்றோதி பார்த்தன்பள்ளி பாடுவாளே.	(எ)
வண்டு	வண்டுகளுடைய		

வ்யா.—ஏழாம்பாட்டு. (நாடி) எதிர்சூழல் புக்கு என்னைத்தேடி என்னெஞ்சைத் தனக்காக்கிக்கொண்ட சேஷியென்றும். (நான்மறை) என்னைத் தேடிவருந்தித் தனக்காக்குகிறவன், தன்னை வேதங்கள் தேடிக்காணப்போகாத ஸ்ரீயை யுடையவனென்றும். (சிறைகொள்) சிறகை யுடைத்தாயிருந்துள்ள வண்டுகள் சோலைத் தலையிலே உலாவாநின்ற திருநாங்கையிலே வர்த்திக்கிற தேவதேவனென்றென்றோதி. (பாடகம்) காலும் பாடகமும் பொருந்தினபடியை அவன் பாடவிருக்குமவள், அவனூரைப் பாடாநின்றாள். ... ... (எ)

அந.—ஏழாம்பாட்டு. (நாடியித்யாதி) ஜகத்துக்கு வந்த ஆபத்தை அவன்றானேவந்து போக்கினாப்போலே உனக்கு மவனேவந்து உதவு மத்தனையும் நெஞ்சை வருந்தி ஆறியிருக்க வொண்ணாதோ, நீ வாய்புலத்துவானென்னென்ன; என்னை யங்ஙனிருக்க வொட்டாதபடி நெஞ்சைக் கைக்கொண்டான், வேதங்களவனைப் புலத்துமாபோலே நானும் புலம்பா நின்றேனென்னு மிடம் தோற்றச்சொல்லா நின்றாளென்கிறாளென்று ஸங்கதி.

(ஸ்ரீயை) ஸம்பத்தை. சிறைகொள் வண்டுகளினுடைய, சேடு - திரட்சியானது, உலாவாநின்றுள்ள பொழிலென்று சப்தார்த்தம் திருவுள்ளம் பற்றி அருளிச்செய்கிறார் (சிறகையித்யாதி). ... ... (எ)

மூ.—உலகமேத்துமொருவனென்று மொண்சுடரோடும்பரெய்தா
நிலவுமாழிப்படையனென்றும்நேசனென்றும்தென்திசைக்குத்
திலதமன்னமறையோர்நாங்கைத்தேவதேவனென்றென்றோதிப்
பலருமேசவென்மடந்தை பார்த்தன் பள்ளிபாடுவாளே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
என்மடந்தை	என்பெண்ணானவள்,	ஒருவனென்றும்	அத்விதீயனென்றும்,
உலகம்	லோகமெல்லாம்	ஒள்	அழகிய [டுகூட
ஏத்தும்	ஸ்தோத்ரம் பண்ணத் தருந்தவனை	சுடரோடு	சந்த்ரஸூர்யர்களோ

http://acharya.org

உம்பர்	தேவர்களால்	தென்திசைத்	தெற்கு திக்குக்கு
எய்தா	கிட்டப்போகாதபடி	திலதம்அன்ன	திலகம்போலேயிருக்கிற
நிலவும்	ப்ரகாசியாநின்ற	மறையோர்	ப்ராஹ்மணர்களுடைய
ஆழி	திருவாழியை	நாங்கைத்தேவதேவ னென்றென்றோதி	
படையன் என்றும்	திவ்யாயுதமாக உடையன் என்றும்	பலரும்	எல்லாரும்
நேசன் என்றும்	ஆஶ்ரிதர் பக்கல் ஸ்நேஹமுடையவன் என்றும்,	ஏச	பழிக்கும்படியாக
		பார்த்தன்பள்ளி பாடுவாளே. (அ)	

வ்யா.—எட்டாம்பாட்டு. (உலகமித்யாதி) லோகமாக ஆஶ்ரயிக்கைக்கு அத்விதீயனான ஸர்வஸமாஶ்ரயணீயனென்றும். (ஒண்சுடர்) சந்த்ராதித்யர்களோடேகூடின தேவர்களால் கிட்டப்போகாதே யிருக்கிற திருவாழியை, (க) "எப்போதும் கைகழலாநேமியான்" என்னும்படி உடையனாயிருக்கிறவனென்றும். (நேசனென்றும்) ஆஶ்ரிதர்பக்கல் ஸ்நேஹம் ஒருவடிவு கொண்டவனென்றும். (தென்திசை) தெற்குதிக்குக்குத் திலகபூதரான ப்ராஹ்மணர் வர்த்திக்கிற திருநாங்கையிலே நின்றருளின தேவதேவனென்றென்றோதி. (பலருமேச) பலரும் தன்னைப்பழிக்க, அவர்களைத் தனக்குக் கூட்டென்று அவனாரைப்பாடுவாளானாள். ... ... (அ)

அரு.—எட்டாம்பாட்டு. (உலகமித்யாதி) அவன் உள்ளங்கொண்டான் என்று நீயவனைப் புலம்பினால் லோகத்தார் உன்னை ஏசார்களோ, இந்நன் நெஞ்சழிந்து புலம்ப வொண்ணுமதென்ன; நானொருத்தியோ அவனைப் பற்றினது, ஸர்வரு மவனை ஏத்தவில்லையோ, ப்ரஹ்மாதிகளால் கிட்டக்கூடாத ஆழியானையும் ஸ்நேஹிக்கு மவனன்றோ, அவனைப் பிரிந்திருக்கக்கூடுமோ என்னும் தாத்பர்யம் தோற்றச்சொல்லுகிறாளென்கிறாளென்று ஸங்கதி.

(க) "ஊரவர்கவ்வை யெருவிட்டு" என்கிறபடியே பலரு மேசுகை பாடுகைக்குடலென்னு மது தோன்ற அருளிச்செய்கிறார் (அவர்களை யித்யாதி). ... ... (அ)

மூ.—கண்ணனென்றும் வானவர்கள் காதலித்துமலர்கள்தூவும்
எண்ணனென்று மின்பனென்று மேழுலகுக் காதியென்றும்
திண்ணமாட நீடுநாங்கைத் தேவதேவனென்றென்றோதிப்
பண்ணினன்னமென் மொழியாள் பார்த்தன் பள்ளிபாடுவாளே.

(க) பெரியதிருவ-அ௭. (௨) திருவாய்-௩-௩-௭.

http://acharya.org

பதம்.	உரை.
பண அன்ன	கானத்தோடொத்த
மெல்	ம்ருதுவான
மொழியாள்	சொல்லையுடைய இப் பெண்ணானவள்
கண்ணன் என்றும்	ஶ்ரீக்ருஷ்ண னென்றும்,
வானவர்கள்	தேவர்கள்
காதலித்து	ஸ்நேஹத்தை யுடையவர்களாய்
மலர்கள்	புஷ்பங்களை
தூவும்	ஸமர்ப்பிக்கும்படியாக

பதம்.	உரை.
எண்ணன் என்றும்	எ (அவர்களுடைய) எண்ணத்திலே வஸிக்குமவனென்றும்,
இன்பனென்றும்	ஸுகப்ரதனென்றும்,
ஏழ்உலகுக்கு	ஸப்த லோகங்களுக்கும்
ஆதியென்றும்	காரணபூதன் என்றும்,
திண்ணம்	த்ருடமான
மாடம்நீடுநாங்கைத் தேவதேவனென்றென்றோதி பார்த்தன் பள்ளிபாடுவாளே. (௯)	

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (கண்ணனித்யாதி) க்ருஷ்ணனென்றும், ப்ரஹ்மாதிகள் ஸ்நேஹத்தைப்பண்ணி புஷ்பாத்யுபகரணங்களைக் கொண்டாஶ்ரயிக்கும்படியாக அவர்கள் மநோரதத்தே நிற்கிறவனென்றும். (இன்பனென்றும்) ஆநந்தாவஹனென்றும். (ஏழுலகுக்காதியென்றும்) ஜகத்காரணபூதனென்றும். (திண்ணமித்யாதி) திண்ணமான மாடங்கள் நீடின நாங்கையிலேவர்த்திக்கிற தேவதேவனென்றென்றோதி. ... ... (௯)

அ௩.—ஒன்பதாம்பாட்டு. (கண்ணனித்யாதி) இவன் நேசனென்று நீ கண்டதெங்கே, உலகர்தானிவனை யாஶ்ரயித்தார்களோ, ஆஶ்ரயிக்கைக்கு ஹேதுதானென்னென்று, ஏசவந்த பலரும் கேட்க; அவர்களுக்கும் தெரியும்படி பெண்பித்த னென்ன ப்ரஸித்தனை க்ருஷ்ணன்றன்னையே (௧) "க்ருஷ்ணஏவஹி லோகாநா முத்பத்தி ரபிசாப்யய: - க்ருஷ்ணஏவஹி லோகாநா முத்பத்தி ரபிசாப்யய:" என்றதில்லையோ என்று தம் துறையான க்ருஷ்ணாவதாரத்தை மீளவும் பிதற்றுகிறாளென்று சொல்லுகிறாளென்று ஸங்கதி.

"எண்ணன்" என்றதினர்த்தம் (மநோரதத்தே நிற்கிறவன்) என்றது.
(நீடின) - நீண்டிருக்கிற. ... ... (௯)

மூ.-பாருள்நல்லமறையோர்நாங்கைப்பார்த்தன்பள்ளிச்செங்கண்மாலை
வார்கொள் நல்லமுலைமடவாள் பாடலைத்தாய் மொழிந்தமாற்றம்

(௧) பார-ஸபா-ராஜஸூய-௩௮-௨௩.

http://acharya.org

கூர்கொள் நல்லவேற்கலியன் கூறுதமிழ்பத்தும் வல்லார்
ஏர்கொள் நல்ல வைகுந்தத்து ளின்பநாளுமெய்துவாரே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.
பாருள்	பூமியிலே
நல்ல	விலக்ஷணராயுள்ள
மறையோர்	ப்ராஹ்மணோத்தமர் வர்த்திக்கிற
நாங்கை	திருநாங்கூரில்
பார்த்தன்பள்ளி	பார்த்தன் பள்ளியென்னும் திவ்ய தேசத்தில் எழுந்தருளியிருக்குமவனாய்
செம்கண்	(வாத்ஸல்யத்தால்) சிவந்த கண்களை யுடையனாய்
மாலை	ஆஶ்ரித வ்யாமுக்தனான ஸர்வேஶ்வரன் விஷயமாக,
வார்கொள்	கச்சையுடைத்தாய்
நல்ல	விலக்ஷணமான
முலை	ஸ்தநங்களையுடைய
மடவாள்	பெண்ணானவள் (பாடின)

பதம்.	உரை.
பாடலை	ஶ்ரீஸூக்திகளை
தாய்	தாயாரானவள்
மொழிந்த	சொன்ன
மாற்றம்	உக்தியின் ப்ரகாரத்தை,
கூர்கொள்	கூர்மையாய்
நல்ல	ஶ்லாக்யமான
வேல்	வேலாயுதத்தையுடைய
கலியன்	ஆழ்வார்
கூறும்	அருளிச்செய்த
தமிழ்	த்ராவிடரூபமான
பத்தும்	இப்பத்துப்பாட்டுகளையும்
வல்லார்	அப்யஸிக்க வல்லவர்கள்,
ஏர்கொள்	அழகுபொருந்தி
நல்ல	அவிஶ்லேஷமாகிற நன்மையையுடைய
வைகுந்தத்து	ஶ்ரீவைகுண்டத்தில்
நாளும்	ப்ரதிதினமும்
இன்பம் எய்துவார்	ஸௌகிக்கப் பெறுவர்கள். (௧௦)

வ்யா.—பத்தாம்பாட்டு. (பாருள்நல்ல) பூமியில் நல்லவிலக்ஷண ப்ராஹ்மணரெல்லாம் திரண்ட திருநாங்கையில் பார்த்தன் பள்ளியிலே வர்த்திக்கிற வாத்ஸல்யத்தையும் வ்யாமோஹத்தையுமுடையனானவனை. (வார்கொள்நல்ல) ப்ராப்தயௌவனையானவள் பாடலைத்தாயார் சொன்னமாற்றத்தை. (கூர்கொள்) அப்பிராட்டி தசைவந்து ஆழ்வாரருளிச்செய்த விப்பத்தும் வல்லவர். (ஏர்கொள்) ஒருத்தி வாய்வெருவ ஒருத்தி கூப்பிட்ட எளிவரவுதீர, ஒருநாளும் பிரியவேண்டாதே இருக்கிற தேசத்திலே இருக்கப்பெறுவர். ... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

http://acharya.org

அந.—பத்தாம்பாட்டு. (பாரித்யாதி) "செங்கண்" என்றத்தாலே - வாத்ஸல்யம். "மாலை - மொழிந்த - பாடலை" என்று இங்கும் கூட்டுவது. கூர்மைமிக்க வேலையுடைய கலியனென்று சப்தார்த்த முட்கொண் டருளிச்செய்கிறார் (அப்பிராட்டி யித்யாதி). ... ... (க0)

ஜீயர் திருவடிகளே சரணம்.

நாலாம்பத்து எட்டாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

நாலாம்பத்து ஒன்பதாந் திருமொழி

நும்மைத்தொழுதோம் ப்ரவேசம்.

வ்யா.—பெறவேணுமென்னு மபேக்ஷையில் கண்ணழிவில்லாமை சொல்லிற்றிறே - கீழிற்றிருமொழியிலே; "பார்த்தன் பள்ளிபாடுவாள்" என்று உகந்தருளின நிலங்களைச்சொல்லி வாய்வெருவுகைக்கு மேற்படவில்லையிறே அபேக்ஷைக்கு; (க) "மாகவைகுந்தங் காண்பதற்கென் மனமேகமெண்ணும்" என்றும், (௨) கண்ணன் விண்ணூர் தொழவே சரிகின்றன சங்கம்" என்றும் சொல்லுகிறவையடைய இவர்க்கு உகந்தருளின நிலங்களிலே யாய்த்து; ஆகையாலே, "பரமபதம் கலவிருக்கையாயிருக்க அவ்விடத்தைவிட்டு ஆஸ்ரிதர்க்கு ஸர்வாபேக்ஷித ப்ரதனைக்காகத் திருவிந்தளூரிலேவந்து ஸந்நிஹிதனானன், நாமங்கேபோய்ப்புகவே நினைத்த வகைகளெல்லாம் பெறலாம்"என்று பெரியபாரிப்போடே போய்ப்புக்க விடத்து, ஒரு ஸ்ரீபுண்டரீகன் அக்ரூரன் என்றாப்போலே சொல்லுகிற இவர்கள்பக்கல் பண்ணின விசேஷகடாக்ஷத்தைத் தம்பக்கலிலேயும் பண்ணி, திருக்கண்களாலே குளிரநோக்குதல், அணைத்தல், வினவுதல், இவர் (௩) "வழுவிலாவடிமை செய்யவேண்டுநாம்" என்று பாரித்துக்கொடு புக்கபடியே அடிமையிலே ஏவுதல் செய்யக்கண்டிலர், அத்தாலே மிகவுமவஸந்நராய், ஒரு(௪)*மின்னிடைமடவார்(ரு)*காதில் கடிப்பில் பிராட்டிமார் தசை

(க) தி-வாய்-கூ-௩-எ. (௨) தி-வி-௪எ. (௩) தி-வாய்-௩-௩-க.
(௪) தி-வாய்-சு-௨, (ரு) க0-அ.

http://acharya.org

பிறந்தால் ப்ரணய கலஹத்தாலே கிலாய்த்துச் சொல்லும் பாசுரமுடைய ஆழ்வார் தாமான தன்மையிலே சொல்லலாம்படியான பா(ஶு)வம்பிறந்து, ஸந்நிதியு முண்டாய், எனக்கபேக்ஷையிலும் கண்ணழிவற்று ப்ராப்தனுமாயிருக்க என்னை அடிமை கொள்ளாதொழிவதே! என்னுமின்னாப்புடனே சிவிட்குப் பிறந்து வார்த்தை சொல்லுகிறார். ... ... *

அரு. — நம்மையின் ப்ரவேசம்.—*தாவளந்துலகில் - சரணம்புக்கு, *கண்ணார்கடலில்-ப்ரக்ருதி ஸம்பந்தத்தை யறுத்துத்தரச்சொல்லி, ப்ராப்யத்வரையாலே உகந்தருளின நிலத்தில் உத்கடமான அபேக்ஷையைக் கிழில்திருமொழியிலே அருளிச்செய்தவர்க்குத் திருவிந்தளூரில் ஊடல் தலையெடுக்கைக்கு ஸங்கதியிடுகிறார் (பெறவேணுமித்யாதி). (பெறவேணும்) என்றதுக்கு முன்னே, ப்ராப்யத்தை என்று கூட்டுவது. ப்ரக்ருதி ஸம்பந்தத்தை யறுத்துத் தரவேணுமென்று ப்ரார்த்தித்தவர்க்கு முன்புபோலே உகந்தருளின நிலத்திலே தானே ப்ராவண்யம் பிறக்கையாலே, இவரபேக்ஷித்தபடியே கொடுக்கக்கடவனாய் சரீராந்தத்தில் ப்ரக்ருதி ஸம்பந்தத்தை நிவர்த்திப்பிக்க நினைத்து திவ்யதேசத்தில் நிலையைக்காட்டிக் கொடுக்க; இவனர்ச்சாவ்யவஸ்த்தையாலே வாய்திறவாதிருக்கையை எண்ணியிராதே, ஆசையாலே, "ஸர்வாபேக்ஷித ப்ரதனன்றோ, என்னபேக்ஷையும் தலைக்கட்டிற்றாகாதோ" என்று கிலாய்க்கிறாரென்று கருத்து. அபேக்ஷை பரமபதத்திலே யன்றோ பிறக்கவேண்டுவது, இங்குப் பிறப்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (மாகமித்யாதி). (க) "பண்டைநாளாலே" என்கிற திருவாய்மொழியில் ஆழ்வார்க்குப் பிறந்தாப்போலே அர்ச்சாவதாரத்தில் சில பரிமாற்றங்களை யாசைப்பட்டு "நம்மை யொரு கால்காட்டி நடந்தால்" என்று ப்ரார்த்திக்கை யுண்டாகையாலே, அதில், (க) "சோதிவாய்திறந்துன் தாமரைக்கண்களால் நோக்காய்" (உ) "நின் பாதபங்கயமே தலைக்கணியாய்" இத்யாதி பரிமாற்றத்திலாசை இவர்க்கு மர்த்தவஸித்த மென்றருளிச்செய்கிறார் (திருக் கண்களாலே யித்யாதி). (ஏவுதல்) என்றது-"கருமமருளி" என்றத்தைப்பற்ற. (தாமானதன்மையிலே) என்கையால்-இவ்விடத்தில் தாமாயிருந்து ஊடுகை ப்ராப்யத்திலுத்கடேச்சாக்ருதமான கலக்கத்தின் மிகுதியின் கார்யமென்கை. ...

ஶ்ரீ.-நம்மைத்தொழுதோம்நந்தம்பணிசெய்திருக்கும்நம்மடியோம்
இம்மைக்கின்பம் பெற்றோமெந்தா யிந்தளூரீரே

(க) தி-வாய்-௯-உ-க.   (உ) தி-வாய்-௯-உ-உ.

எம்மைக்கடிதாக் கருமமருளி யாவாவென்றிரங்கி
நம்மையொருகால் காட்டிநடந்தால் நாங்களுய்யோமே. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நும்மை	தேவரீரை [தோம்;	எம்மை	என்விஷயத்தில்
தொழுதோம்	உபாயமாக ஆஶ்ரயித்	கடிதா	சீக்ரமாக
நுந்தம்	தேவரீருடைய	கருமம்	பரம ப்ரயோஜநமான கைங்கர்யத்தை
பணி	கைங்கர்யத்தை		
செய்து	அநுஷ்டித்தே [க	அருளி	க்ருபைபண்ணி [று
இருக்கும்	தரித்திருக்கும் படியா	ஆவாவென்று	ஐயோ! ஐயோ! என்
நும் அடியோம்	தேவரீருக்குதாஸபூதரானோம்;	இரங்கி	இரக்கமுற்று,
		நம்மை	நம்மைக்குறித்து
இம்மைக்கு	இப்பொழுது	ஒருகால்	ஒருகாலத்திலே
இன்பம் பெற்றோம்	ஜ்ஞாநலாபமாகிற ஸுகத்தைப் பெற்றோம்;	காட்டி	உம்முடைய திவ்யமங்கள விக்ரஹத்தைக்காட்டி
இந்தளூரீர்	திருவிந்தளூரிலே எழுந்தருளி யிருக்கிற	நடந்தால்	எழுந்தருளினால்
		நாங்கள்	அநந்ய ப்ரயோஜநரான நாங்கள்
எந்தாய்	எனக்குத் தாய்போன்றவரே!	உய்யோமோ	உஜ்ஜீவிக்க மாட்டோமா? (க)

வ்யா.—முதற்பாட்டு. (நும்மைத்தொழுதோம்) இதரதேவதைகளுக் கந்தர்யாமியாயிருக்கிற நிலையை புத்திபண்ணித்தொழுதோமோ ஆறியிருக்கைக்கு. (க) "യോ യോ യാം യാം തനും ഭക്തഃ - யோயோ யாம்யாம் தநும்பக்த:" இத்யாதி. "இந்த்ராதிதேவர்கள் அவனுக்கு தநுபூதர், அவர்களுக் கிவனந்தர்யாமி" என்று ஆஶ்ரயித்தால், அவ்வவருடைய அதிகாரத்தளவிலே ப(ஃ)லமாகையால் விளம்பம் பிறந்திருக்கவு மாமிறே. அன்றிக்கே, (நும்மைத்தொழுதோம்) படுகுலைப் பட்டோமென்னவுமாம். அதாவது - பிரிந்தாலும் ஒருசூது சதுரங்கத்தாலே போதுபோக்கித் தரிக்கலாவதொரு விஷயத்தை யாஶ்ரயிக்கப் பெற்றிலோமே. (தொழுதோம்) முன்பெல்லா மீரரசென்றிருந்து கார்யகாலத்திலே கைங்கர்யமே யமையுமென் றிருப்பார்க்கன்றோ தாழ்த்திருக்க லாவது.

(க) கீதை-எ-உக.

http://acharya.org

பாலிற்காட்டிலென்னுதல்; பாலோடொத்தவென்னுதல். தன்பேச்சிலினிமையிலே தோற்று அவன் வாய்வெருவ விருக்கக்கடவவிவள், இப்போது தான் அவனிருந்த ஊரைச்சொல்லி வாய்வெருவாநின்றாள். (௧) ‘‘மதுரா மதுராலாபா- மதுராமதுராலாபா’’ என்று இவள் பேச்சுக்கேட்டு வாய்வெருவுவானவனிறே. ... ... (௬)

அரு.—ஆறும்பாட்டு. (ஞாலமித்யாதி) ஸ்ரீஜநகராஜன் திருமகளுக்கு ஸ்வஜநமின்றிக்கே லங்கையில் ராக்ஷஸிகளையி லகப்பட்டபடியாலே உதவினான், உனக்கித்தனைபேர் நாக்களிருக்க உனக்கென்ன இத்தனைவாய் புலத்துவா னென்னென்ன; "ஜகத்துக்கெல்லாம் வந்த ப்ரளயாபத்தோ டொவ்வாதோ அவன் கோலமேனி காணாத வெனக்கு" என்னுமிடந்தோன்ற, அவனுடைய ஆபத்ஸகத்வத்தைச் சொல்லுகிறா ளென்கிறானென்று ஸங்கதி.

கீழ் தாத்பர்ய மருளிச்செய்து வாக்யார்த்த மருளிச்செய்கிறார் (வரையாதே யித்யாதி). சேஷித்வம் ஹேதுவென்னு மத்தை லோகந்யாயத்தாலே ஸ்த்ரீகரிக்கிறார் (உடையவனித்யாதி).

‘‘மேலெழுந்து’’ என்று விசேஷிக்கையாலே - நீர்சுடும் என்னும்படியான குளிர்த்தியை யுடைய நிலவண்மையைச் சொல்லுகிறவளுக்கு, உங்களோடிருக்கை எனக் கடிக்கொதிப்பாம்படி அவன் வர்த்திக்கிற தேசமெனக்கு ஸ்தமஹாரமாயிருந்ததீ என்னு மபிப்ராயம் ஸ்ப்புரிக்கும்படி ப்ரக்ருதோபயோகம் காட்டுகிறார் (ஜலசரேத்யாதி). (ஸத்வங்களுங்கூட) என்ற சகாரம் - இவ்வர்த்தத்துக்கெல்லாம் ஸூசகம் ... ... (௬)

௭.—நாடியென்றனுள்ளங்கொண்ட நாதனென்றும் நான்மறைகள்
தேடியென்றுங்காணமாட்டாச்செல்வனென்றும்சிறைகொள்வண்டு
சேடுலவு பொழில்கொள் நாங்கைத் தேவதேவனென்றென்றோதிப்
பாடகம்சேர் மெல்லடியாள் பார்த்தன் பள்ளிபாடுவாளே. (௭)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பாடகம்	பாடகமென்னும் பாதாபரண மானது	என்றனுள்ளம்	என்மநஸ்ஸை யெல்லாம்
சேர்	பொருந்தியிருக்கிற	கொண்ட	வசமாக்கிக்கொண்ட
மெல்	ம்ருதுவான	நாதனென்றும்	ஸ்வாமியென்றும்,
அடியாள்	ஸ்ரீபாதங்களை யுடையபெண்ணானவள்,	நான்மறைகள்	நாலுவகைப்பட்ட வேதங்களானவை
நாடி	தேடிக்கொண்டு வந்து	என்றும்	ஸர்வகாலமும்

(௧) ரா-ஸு-சு௬-கடு.

தேடி	ஆராய்ந்துபார்த்து	சேடு	ஸமூஹமானது
காணமாட்டா	காணப்போகாதபடியான	உலவு	ஸஞ்சரியாநின்ற
செல்வனென்றும்	ஸ்ரீமான் என்றும்,	பொழில்கொள்	சோலைகளையுடையள்
சிறைகொள்	ப்ரசஸ்தமான இறகு[களையுடைய	நாங்கைத் தேவதேவனென்றென்றோதி	
வண்டு	வண்டுகளுடைய	பார்த்தன்பள்ளி பாடுவாளே. (எ)	

வ்யா.—ஏழாம்பாட்டு. (நாடி.) எதிர்சூழல் புக்கு என்னைத்தேடி என்நெஞ்சைத் தனக்காக்கிக்கொண்ட சேஷியென்றும். (நான்மறை) என்னைத் தேடிவருந்தித் தனக்காக்குகிறவன், தன்னை வேதங்கள் தேடிக்காணப்போகாத ஸ்ரீயை யுடையவனென்றும். (சிறைகொள்) சிறகை யுடைத்தாயிருந்துள்ள வண்டுகள் சோலைத் தலையிலே உலாவாநின்ற திருநாங்கையிலே வர்த்திக்கிற தேவதேவனென்றென்றோதி. (பாடகம்) காலும் பாடகமும் பொருந்தினபடியை அவன் பாடவிருக்குமவள், அவனாரைப் பாடாநின்றாள். ... ... (எ)

அரு.—ஏழாம்பாட்டு. (நாடியித்யாதி) ஜகத்துக்கு வந்த ஆபத்தை அவன்றானேவந்து போக்கினாப்போலே உனக்கு மவனேவந்து உதவு மத்தனையும் நெஞ்சை வருந்தி ஆறியிருக்க வொண்ணாதோ, நீ வாய்புலத்துவானென்னென்ன; என்னை யங்ஙனிருக்க வொட்டாதபடி நெஞ்சைக் கைக்கொண்டான், வேதங்களவனைப் புலத்துமாபோலே நானும் புலம்பாநின்றேனென்னு மிடம் தோற்றச்சொல்லா நின்றாளென்கிறா ளென்று ஸங்கதி.

(ஸ்ரீயை) ஸம்பத்தை. சிறைகொள் வண்டுகளினுடைய, சேடு - திரட்சியானது, உலாவாநின்றுள்ள பொழிலென்று சப்தார்த்தம் திருவுள்ளம் பற்றி அருளிச்செய்கிறார் (சிறகையித்யாதி). ... ... (எ)

மூ.—உலகமேத்துமொருவனென்று மொண்சுடரோடும்பரெய்தா
நிலவுமாழிப்படையனென்றும்நேசனென்றும்தென்திசைக்குத்
திலதமன்னமறையோர்நாங்கைத்தேவதேவனென்றென்றோதிப்
பலருமேசவென்மடந்தை பார்த்தன் பள்ளிபாடுவாளே. (அ)

பதம்.	உரை.	பதம்	உரை.
என்மடந்தை	என்பெண்ணானவள்,	ஒருவனென்றும்	அத்விதீயனென்றும்,
உலகம்	லோகமெல்லாம்	ஒள்	அழகிய [டுகூட
ஏத்தும்	ஸ்தோத்ரம் பண்ணத் தகுந்தவனை	சுடரோடு	சந்த்ரஸூர்யர்களோ

உம்பர்	தேவர்களால்	தென்திசைத்	தெற்கு திக்குக்கு
எய்தா	கிட்டப்போகாதபடி	திலதம்அன்ன	திலகம்போலேயிருக்கிற
நிலவும்	ப்ரகாசியாநின்ற	மறையோர்	ப்ராஹ்மணர்களுடைய
ஆழி	திருவாழியை	நாங்கைத்தேவதேவ னென்றென்றோதி	
படையன் என்றும்	திவ்யாயுதமாக உடையன் என்றும்	பலரும்	எல்லாரும்
நேசன் என்றும்	ஆஶ்ரிதர் பக்கல் ஸ்நேஹமுடையவன் என்றும்,	ஏச	பழிக்கும்படியாக
		பார்த்தன்பள்ளி பாடுவாளே. (அ)	

வ்யா.—எட்டாம்பாட்டு. (உலகமித்யாதி) லோகமாக ஆஶ்ரயிக்கைக்கு அத்விதீயனான ஸர்வஸமாஶ்ரயணீயனென்றும், (ஒண்சுடர்) சந்த்ராதித்யர்களோடேகூடின தேவர்களால் கிட்டப்போகாதே யிருக்கிற திருவாழியை, (க) "எப்போதும் கைகழலாநேமியான்" என்னும்படி உடையனாயிருக்கிறவனென்றும். (நேசனென்றும்) ஆஶ்ரிதர்பக்கல் ஸ்நேஹம் ஒருவடிவு கொண்டவனென்றும். (தென்திசை) தெற்குதிக்குக்குத் திலகபூதரான ப்ராஹ்மணர் வர்த்திக்கிற திருநாங்கையிலே நின்றருளின தேவதேவனென்றென்றோதி. (பலருமேச) பலரும் தன்னைப்பழிக்க, அவர்களைத் தனக்குக் கூட்டென்று அவனாரைப்பாடுவாளானாள். ... ... (அ)

அரு—எட்டாம்பாட்டு. (உலகமித்யாதி) அவன் உள்ளம்கொண்டான் என்று நீ யவனைப் புலம்பினால் லோகத்தார் உன்னை ஏசார்களோ, இங்ஙன் நெஞ்சழிந்து புலம்ப வொண்ணுமோ? என்ன; நானொருத்தியோ அவனைப் பற்றினது, ஸர்வரு மவனை ஏத்தவில்லையோ, ப்ரஹ்மாதிகளால் கிட்டக்கூடாத ஆழியானையும் ஸ்நேஹிக்கு மவனன்றோ, அவனைப் பிரிந்திருக்கக்கூடுமோ என்னும் தாத்பர்யம் தோற்றச்சொல்லுகிறாளென்கிறதென்று ஸங்கதி.

(க) "ஊரவர்கவ்வை யெருவிட்டு" என்கிறபடியே பலரு மேசுகை பாடுகைக்குடலென்னு மது தோன்ற அருளிச்செய்கிறார் (அவர்களை யித்யாதி). ... ... (அ)

மூ.—கண்ணனென்றும் வானவர்கள் காதலித்துமலர்கள்தூவும்
எண்ணனென்று மின்பனென்று மேழுலகுக் காதியென்றும்
திண்ணமாட நீடுநாங்கைத் தேவதேவனென்றென்றோதிப்
பண்ணினன்னமென் மொழியாள் பார்த்தன் பள்ளிபாடுவாளே.

(க) பெரியதிருவ-அ௭. (உ) தி-வாய்-௫-௬-௪.

http://acharya.org

பதம்.	உரை.	பதம்	உரை.
பண் அன்ன மெல் மொழியாள்	காநத்தோடொத்த ம்ருதுவான சொல்லையுடைய இப் பெண்ணானவள்	எண்ணன் என்றும்	(அவர்களுடைய) எண்ணத்திலே வஸிக்குமவனென்றும்,
கண்ணன் என்றும்	ஸ்ரீக்ருஷ்ணனென்றும்,	இன்பனென்றும்	ஸுகப்ரதனென்றும்,
வானவர்கள்	தேவர்கள்	ஏழ்உலகுக்கு	ஸப்த லோகங்களுக்கும்
காதலித்து	ஸ்நேஹத்தை யுடையவர்களாய்	ஆதியென்றும்	காரணபூதன் என்றும்,
மலர்கள்	புஷ்பங்களை	திண்ணம்	த்ருடமான
தூவும்	ஸமர்ப்பிக்கும்படியாக	மாடம்நீடுநாங்கைத் தேவதேவனென்றென்றோதி பார்த்தன் பள்ளிபாடுவாளே.	(கூ)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (கண்ணனித்யாதி) க்ருஷ்ணனென்றும், ப்ரஹ்மாதிகள் ஸ்நேஹத்தைப்பண்ணி புஷ்பாத்யுபகரணங்களைக் கொண்டாஸ்ரயிக்கும்படியாக அவர்கள் மநோரதத்தே நிற்கிறவனென்றும். (இன்பனென்றும்) ஆநந்தாவஹனென்றும். (ஏழுலகுக்காதியென்றும்) ஜகத்காரணபூதனென்றும். (திண்ணமித்யாதி) திண்ணமான மாடங்கள் நீடின நாங்கையிலேவர்த்திக்கிற தேவதேவனென்றென்றோதி. ... ... (கூ)

அரு.—ஒன்பதாம்பாட்டு. (கண்ணனித்யாதி) இவன் நேசனென்று நீ கண்டதெங்கே, உலகர்தானிவனை யாஸ்ரயித்தார்களோ, ஆஸ்ரயிக்கைக்கு ஹேதுதானென்னென்று, ஏசவந்த பலரும் கேட்க; அவர்களுக்கும் தெரியும்படி பெண்பித்த னென்ன ப்ரஸித்தனை க்ருஷ்ணன்றன்னையே (க) “𑌕𑍃𑌷𑍍𑌣 𑌏𑌵 𑌹𑌿 𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌮𑍁𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌰𑌪𑌿 𑌚𑌾𑌪𑍍𑌯𑌯𑌃 - க்ருஷ்ணஏவஹி லோகாநாமுத்பத்திரபிசாப்யய:” என்றதில்லையோ என்று தம் துறையான க்ருஷ்ணாவதாரத்தை மீளவும் பிதற்றுகிறாளென்று சொல்லுகிறாளென்று ஸங்கதி.

“எண்ணன்” என்றதினர்த்தம் (மநோரதத்தே நிற்கிறவன்) என்றது. (நீடின) - நீண்டிருக்கிற. ... ... (கூ)

மூ.-பாருள்நல்லமறையோர்நாங்கைப்பார்த்தன்பள்ளிச்செங்கண்மாலை
வார்கொள் நல்லமுலைமடவாள் பாடலைத்தாய் மொழிந்தமாற்றம்

(க) பார-ஸபா-ராஜஸூ-ப-௩௮-௨௩.

http://acharya.org

கூர்கொள் நல்லவேற்கலியன் கூறுதமிழ்பத்தும் வல்லார்
ஏர்கொள் நல்ல வைகுந்தத்து ளின்பநாளுமெய்துவாரே. (க0)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

—oo;o;oo—

பதம்.	உரை.	பதம்.	உரை.
பாருள்	பூமியிலே	பாடலை	ஸ்ரீஸூக்திகளை
நல்ல	விலக்ஷணராயுள்ள	தாய்	தாயாரானவள்
மறையோர்	ப்ராஹ்மணோத்தமர்	மொழிந்த	சொன்ன [தை,
	வர்த்திக்கிற	மாற்றம்	உக்தியின் ப்ரகாரத்
நாங்கை	திருநாங்கூரில்	கூர்கொள்	கூர்மையாய்
பார்த்தன்பள்	பார்த்தன் பள்ளியெ	நல்ல	ப்லாக்யமான [ய
ளி	ன்னும் திவ்ய தே	வேல்	வேலாயுதத்தையுடை
	சத்தில் எழுந்தரு	கலியன்	ஆழ்வார்
	ளியிருக்குமவனாய்	கூறும்	அருளிச்செய்த
செமகண	(வாத்ஸல்யத்தால்) சி	தமிழ்	த்ராவிடரூபமான
	வந்த கண்களை யு	பத்தும்	இப்பத்துப்பாட்டுகளை
	டையனாய்		யும் [கள்,
மாலை	ஆஶ்ரித வ்யாமுக்த்த	வல்லார்	அப்யஸிக்க வல்லவர்
	னை ஸர்வேஶ்வ	ஏர்கொள்	அழகுபொருந்தி
	ரன் விஷயமாக,	நல்ல	அவிஶ்லேஷமாகிற
வார்கொள்	கச்சையுடைத்தாய்		நன்மையையுடைய
நல்ல	விலக்ஷணமான	வைகுந்தத்து	ஸ்ரீவைகுண்டத்தில்
முலை	ஸ்தநங்களையுடைய	நாளும்	ப்ரதிதிநமும்
மடவாள்	பெண்ணானவள் (பா	இன்பம் எய்	ஸுகிக்கப் பெறுவர்
	டின)	துவார்	கள். (க0)

வ்யா.—பத்தாம்பாட்டு. (பாருள்நல்ல) பூமியில் நல்லவிலக்ஷண ப்ராஹ்மணரெல்லாம் திரண்ட திருநாங்கையில் பார்த்தன் பள்ளியிலே வர்த்திக்கிற வாத்ஸல்யத்தையும் வ்யாமோஹத்தையு முடையனானவனை. (வார்கொள்நல்ல) ப்ராப்தயௌவனையானவள் பாடலைத்தாயார் சொன்னமாற்றத்தை. (கூர்கொள்) அப்பிராட்டி தசைவந்து ஆழ்வாரருளிச்செய்த விப்பத்தும் வல்லவர். (ஏர்கொள்) ஒருத்தி வாய்வெருவ ஒருத்தி கூப்பிட்ட எளிவரவுதீர, ஒருநாளும் பிரியவேண்டாதே இருக்கிற தேசத்திலே இருக்கப்பெறுவர். ... (க0)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

—oo;o;oo—

http://acharya.org

அரு.—பத்தாம்பாட்டு. (பாரித்யாதி) "செங்கண்" என்றத்தாலே - வாத்ஸல்யம். "மாலை - மொழிந்த - பாடலை" என்று இங்கும் கூட்டுவது. கூர்மைமிக்க வேலையுடைய கலியனென்று சப்தார்த்த முட்கொண் டருளிச்செய்கிறார் (அப்பிராட்டி யித்யாதி). ... ... (க0)

ஜீயர் திருவடிகளே சரணம்.

நாலாம்பத்து எட்டாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

நாலாம்பத்து ஒன்பதாந் திருமொழி

நும்மைத்தொழுதோம் ப்ரவேசம்.

வ்யா.—பெறவேணுமென்னு மபேக்ஷையில் கண்ணழிவில்லாமை சொல்லிற்றிறே - கீழிற்றிருமொழியிலே; "பார்த்தன் பள்ளிபாடுவாள்" என்று உகந்தருளின நிலங்களைச்சொல்லி வாய்வெருவுகைக்கு மேற்படவில்லையிறே அபேக்ஷைக்கு; (க) "மாகவைகுந்தங் காண்பதற்கென் மனமேகமெண்ணும்" என்றும், (உ) கண்ணன் விண்ணூர் தொழவே சரிகின்றன சங்கம்" என்றும் சொல்லுகிறவையடைய இவர்க்கு உகந்தருளின நிலங்களிலே யாய்த்து; ஆகையாலே, "பரமபதம் கலவிருக்கையாயிருக்க அவ்விடத்தைவிட்டு ஆஶ்ரிதர்க்கு ஸர்வாபேக்ஷித ப்ரதனைக்காகத் திருவிந்தளூரிலேவந்து ஸந்நிஹிதனானான், நாமங்கேபோய்ப்புகவே நினைத்த வகைகளெல்லாம் பெறலாம்" என்று பெரியபாரிப்போடே போய்ப்புக்க விடத்து, ஒரு ஸ்ரீபுண்டரீகன் அக்ரூரன் என்றாப்போலே சொல்லுகிற இவர்கள்பக்கல் பண்ணின விசேஷகடாக்ஷத்தைத் தம்பக்கலிலேயும் பண்ணி, திருக்கண்களாலே குளிரநோக்குதல், அணைத்தல், வினவுதல், இவர் (௩) "வழுவிலாவடிமை செய்யவேண்டுநாம்" என்று பாரித்துக்கொடு புக்கபடியே அடிமையிலே ஏவுதல் செய்யக்கண்டிலர், அத்தாலே மிகவுமவஸந்நராய், ஒரு(௪)*மின்னிடைமடவார்(ரு)*காதில் கடிப்பில் பிராட்டிமார் தசை

(க) தி-வாய்-கூ-௩-எ. (உ) தி-வி-௪எ. (௩) தி-வாய்-௩-௩-க.
(௪) தி-வாய்-அ-க. (ரு) க0-அ.

பிறந்தால் ப்ரணய கலஹத்தாலே கிலாய்த்துச் சொல்லும் பாசுரமுடைய ஆழ்வார் தாமான தன்மையிலே சொல்லலாம்படியான பா(ஞ)வம்பிறந்து, ஸந்நிதியு முண்டாய், எனக்கபேக்ஷையிலும் கண்ணழிவற்று ப்ராப்தனுமாயிருக்க என்னை அடிமை கொள்ளாதொழிவதே! என்னுமின்னாப்புடனே சிவிட்குப் பிறந்து வார்த்தை சொல்லுகிறார். ... ... *

அரு. — நும்மையின் ப்ரவேசம்.—*தாவளந்துலகில் - சரணம்புக்கு, *கண்ணார்கடலில்-ப்ரக்ருதி ஸம்பந்தத்தை யறுத்துத்தரச்சொல்லி, ப்ராப்யத்வரையாலே உகந்தருளின நிலத்தில் உத்கடமான அபேக்ஷையைக் கீழில்திருமொழியிலே அருளிச்செய்தவர்க்குத் திருவிந்தளூரில் ஊடல் தலையெடுக்கைக்கு ஸங்கதியிடுகிறார் (பெறவேணுமித்யாதி). (பெறவேணும்) என்றதுக்கு முன்னே, ப்ராப்யத்தை என்று கூட்டுவது. ப்ரக்ருதி ஸம்பந்தத்தை யறுத்துத் தரவேணுமென்று ப்ரார்த்தித்தவர்க்கு முன்பு போலே உகந்தருளின நிலத்திலே தானே ப்ராவண்யம் பிறக்கையாலே, இவரபேக்ஷித்தபடியே கொடுக்கக்கடவனாய் சரீராந்தத்தில் ப்ரக்ருதி ஸம்பந்தத்தை நிவர்த்திப்பிக்க நினைத்து திவ்யதேசத்தில் நிலையைக்காட்டிக் கொடுக்க; இவனர்ச்சாவ்யவஸ்தையாலே வாய்திறவாதிருக்கையை எண்ணியிராதே, ஆசையாலே, "ஸர்வாபேக்ஷித ப்ரதனன்றோ, என்னபேக்ஷையும் தலைக்கட்டிலாகாதோ" என்று கிலாய்க்கிறரென்று கருத்து. அபேக்ஷை பரமபதத்திலே யன்றோ பிறக்கவேண்டுவது, இங்குப் பிறப்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (மாகமித்யாதி). (க) "பண்டைநாளாலே" என்கிற திருவாய்மொழியில் ஆழ்வார்க்குப் பிறந்தாப்போலே அர்ச்சாவதாரத்தில் சில பரிமாற்றங்களை யாசைப்பட்டு "நம்மை யொருகால்காட்டி நடந்தால்" என்று ப்ரார்த்திக்கை யுண்டாகையாலே, அதில், (க) "சோதிவாய்திறந்துன் தாமரைக்கண்களால் நோக்காய்" (உ) "நின் பாதபங்கயமே தலைக்கணியாய்" இத்யாதி பரிமாற்றத்திலாசை இவர்க்கு மர்த்தவித்த மென்றருளிச்செய்கிறார் (திருக் கண்களாலே யித்யாதி). (ஏவுதல்) என்றது-"கருமமருளி" என்றத்தைப்பற்ற. (தாமான தன்மையிலே) என்கையால்-இவ்விடத்தில் தாமாயிருந்து ஊடுகை ப்ராப்யத்திலுத்கடேச்சாக்ருதமான கலக்கத்தின் மிகுதியின் கார்யமென்கை. ... *

மூ.- நும்மைத்தொழுதோம் நுந்தம்பணிசெய்திருக்கும் நும்மடியோம்
இம்மைக்கின்பம் பெற்றோமெந்தா யிந்தளூரீரே

(க) தி-வாய்-௯-உ-௧. (உ) தி-வாய்-௯-உ-உ.

எம்மைக்கடிதாக் கருமமருளி யாவாவென்றிரங்கி
நம்மையொருகால் காட்டிநடந்தால் நாங்களுய்யோமே. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நும்மை	தேவரீரை [தோம்;	எம்மை	என்விஷயத்தில்
தொழுதோம்	உபாயமாக ஆஶ்ரயித்	கடிதா	சீக்ரமாக
நுந்தம்	தேவரீருடைய	கருமம்	பரம ப்ரயோஜநமான
பணி	கைங்கர்யத்தை		கைங்கர்யத்தை
செய்து	அநுஷ்டித்தே [க	அருளி	க்ருபைபண்ணி [று
இருக்கும்	தரித்திருக்கும் படியா	ஆவாவென்று	ஐயோ! ஐயோ! என்
நும் அடியோ	தேவரீருக்கு தாஸபூத	இரங்கி	இரக்கமுற்று,
ம்	ராஞோம்;	நம்மை	நம்மைக்குறித்து
இம்மைக்கு	இப்பொழுது	ஒருகால்	ஒருகாலத்திலே
இன்பம் பெற்	ஜ்ஞாந லாபமாகிற	காட்டி	உம்முடையதிவ்யமங்
றோம்	ஸுகத்தைப் பெற்		கள விக்ரஹத்தை
	றோம்;		க்காட்டி
இந்தளூரீர்	திருவிந்தளூரிலே எ	நடந்தால்	எழுந்தருளினால்
	ழுந்தருளி யிருக்	நாங்கள்	அநந்ய ப்ரயோஜநரா
	கிற		ன நாங்கள்
என்தாய்	எனக்குத் தாய்போ	உய்யோமோ	உஜ்ஜீவிக்க மாட்
	ன்றவரே!		டோமா? (க)

வ்யா.—முதற்பாட்டு. (நும்மைத்தொழுதோம்) இதரதேவதை களுக் கந்தர்யாமியாயிருக்கிற நிலையை புத்திபண்ணித்தொழுதோமோ ஆறியிருக்கைக்கு. (க) "𑌯𑍋𑌯𑍋 𑌯𑌾𑌂𑌯𑌾𑌂 𑌤𑌨𑍁𑌂 𑌭𑌕𑍍𑌤𑌃 - யோயோ யாம்யாம் தநும்பக்த:" இத்யாதி. "இந்த்ராதிதேவர்கள் அவனுக்கு தநுபூதர், அவர்களுக் கிவனந்தர்யாமி" என்று ஆஶ்ரயித்தால், அவ்வவருடைய அதிகாரத்தளவிலே ப(ஃ)லமாகையால் விளம்பம் பிறந்திருக்கு மாமிறே. அன்றிக்கே, (நும்மைத்தொழுதோம்) படுகுலைப் பட்டோமென்னவுமாம். அதாவது - பிரிந்தாலும் ஒருசூது சதுரங்கத்தாலே போதுபோக்கித் தரிக்கலாவதொரு விஷயத்தை யாஶ்ரயிக்கப் பெற்றிலோமே. (தொழுதோம்) முன்பெல்லா மீரரசென்றிருந்து கார்யகாலத்திலே கைங்கர்யமே யமையுமென் றிருப்பார்க்கன்றோ தாழ்த்திருக்க லாவது.

(க) கீதை-எ-உக.

(நுந்தம்பணிசெய் திருக்கும்நம்மடியோம்) கைங்கர்யத்தை யொழியச்செல்லுவதாதல், கைங்கர்யம் பண்ணுகைக்கீடான ப்ராப்தியின்றிக்கே யொழிதல் செய்யிலன்றோ தரித்திருக்கலாவது. தேவரீர் திருவடிகளிலுண்டான கைங்கர்யத்தைப் பண்ணி அது பெறில் ஜீவித்தல் இல்லையாகில் முடிதல் செய்யும்படி தேவர்க்கநங்யார்ஹர். (க) [नचसीतेत्यादि - நசஸீதேத்யாதி] தேவரை யொழிந்தவன்று பிராட்டியுமுளளாகாள், அடியேனுமுளனுகேன். தேவரை யொழிந்தவன்று முதலிலே ஜீவிக்குமதுதானில்லை. [अपिजीवावः - அபிஜீவாவ:] यदिजीवावः- யதிஜீவாவ:, [मुहूर्तम् - முஹூர்த்தம்] ஒருக்ஷணகாலம். [जलान्मत्स्याविव - ஜலாந் மத்ஸ்யாவிவ] ஜலத்தைப்பிரிந்த மத்ஸ்யம்ஜீவிப்பது அந்நீர் நசையறுமளவுமிறே; அப்படியே, நில்லென்று சொன்னவார்த்தை உம்முடைய திருவுள்ளத்திலேயு முண்டென்றறியு மளவுங்காணும் நாங்கள் ஜீவிப்பது. இவருடைய ஸத்தையுண்டு-உண்மை, அது நிலா தென்றல் சந்தநம் தண்ணீர்போலே பரார்த்தமாயாய்த்து இருப்பது; சேஷிக்கதிசயத்தைப் பண்ணியாய்த்து இவர்க்கு ஸ்வரூபஸித்தி. (அடியோம்) அத்தலைக்கதிசயத்தைப் பண்ணுகையே ஸ்வரூபமாம்படியாய்த்து ப்ராப்தியிருப்பது.

(இம்மைக்கின்பம்பெற்றோம்) அடிமையாலே ஸ்வரூபலாபமாம்படியிருக்கிற எங்களுக்கு, அழகிதாக விடாய்த்தவிடத்தே தண்ணீர் வார்த்தீர். அன்றிக்கே, ஜ்ஞாநலாபத்தாலே வந்ததரிப்பைச்சொல்லிற்றாகவுமாம். அலாபத்தையே சொல்லாநிற்க இப்போது இந்த த்ருப்திகூடுமோவென்னில்; இந்த ஜ்ஞாநலாபந்தானிறே கிலாய்க்கப் பண்ணுகிறது, இல்லையாகில் அல்லாதாரோபாதி உண்டுடுத்துப் போது போக்கித் திரியலாமே.

(எந்தாயித்யாதி) அதுக்கடியாக ஸ்ரீவைகுண்டத்தைவிட்டுத் திருவிந்தளூரிலே வந்து ஸந்நிதிபண்ணின ஸ்வாமீ! "இவ்வஸ்து உனக்கு சேஷம்" என்னுமிம்முறையை அறிவித்தவனே! இன்றிப்படி ஆறியிருக்கிற நீ முன் தீம்புசெய்து ஸம்பந்தஜ்ஞாநத்தை எனக்குப்பிறப்பிப்பானென்?

ஸம்பந்தஜ்ஞாநத்தைப் பிறப்பித்தோமென்றீர், பெற்ற திவ்வம்சமாகில் நீர் பெறாததாகச் சொல்லுகிற தெவ்வம்சமென்ன, (எம்மைக்

(க) ரா-அயோ-ருக-ருக.

கடிதாக்கருமமருளி) சேஷத்வ ஜ்ஞாநத்தைப் பிறப்பித்தருளிற்று; அந்த சேஷத்வாநுரூபமான வ்ருத்தியை என்னைக் கொண்டருளவேணும். (எம்மை). "க்ரமத்திலே ஒரு தேசவிசேஷத்தே கொடுபோய்க் காரியம் செய்கிறோம்" என்றுறியிருக்கலாம்படியோ என்தசை. (க) "க்ஷிப்ரம் நிவேதயத மாம்" என்னுமாபோலே ராவணபவநத்தில் பொருந்தாமையும், ராமகோஷ்ட்டியில் புகுரப் பெறாமையும், இரண்டாலும் நோவுபட்ட ஸ்ரீவிபீஷணாழ்வானைப்போலே, ஜ்ஞாநலாபத்தாலே ஸம்ஸாரத்தில் பொருந்தாமை யுண்டாகப் பெறுவது, ப்ராப்திபலமான கைங்கர்யத்தில் அந்வயிக்கப் பெறுதொழிவதாய் நோவுபடுகிறபடி. (கடிதாக்கருமமருளி) ஸர்வஜ்ஞனவனுக்குமறிவிக்கவேண்டும்படி யிருக்கிறதுகாணும் க்ரமப்ராப்தி பற்றாதபடியான இவருடைய ஸௌகுமார்யம். அது செய்யுமிடத்திலும் (ஆவாவென்றிரங்கி) "அடிமை பெறாமையாலே உறுவின அகிஞ்சநன், அநந்யகதி" என்று என்னுடைய தயநீய தசையை புத்திபண்ணி, ஐயோ! ஐயோ! என்று க்ருபைபண்ணியருளி. "தொழுதோம்" என்று வளைப்பிடவொண்ணாது காணும், அபிமதம் பெறும்போது அவனுடைய இரக்கமே வேணும்.

(நம்மை) உம்மை நீர் கண்ணடிப்புறத்திலே கண்டறியாமையில்லையே; "நம்மைப் பிரிந்தார் பிழையார்கள்" என்றிருக்கவேண்டாவோ. (ஒருகால் காட்டிநடந்தால்) ஒருகால்காட்டினால் பின்னையிவன் வளைப்பிடுகிறானென்றிருக்கவேண்டா; ஜ்வரஸந்நிபதிதர் "ஒருகால் நாக்கு நனைக்கவமையும்" என்னுமாபோலே. (காட்டி) (உ) "ஏஷ ஸர்வஸ்வ பூதஸ்து - ஏஷ ஸர்வஸ்வ பூதஸ்து" என்கிறபடியே-"நாமிருந்தபடிகண்டாயே!" என்று வடிவைக்காட்டி. (நடந்தால்) என்கிறது-போனாலென்கிறதல்ல, என் முன்பே நாலடியிட்டு நடந்து காட்டினால். (௩) "அக்ரதஃ ப்ரயயௌ ராமஃ - அக்ரதஃ ப்ரயயௌ ராமஃ" என்கிறபடியே-பிராட்டிக்கிட்ட விருந்திடவேணுங் காணுமிவர்க்கு. இப்படி நடந்தாற் பெறும்பேறென்னென்னில். (நாங்களுய்யோமே) போனவுயிர் மீளும். உறுவினபயிரிலே ஒருபாட்டம் மழைவிழுந்தால் அது ஜீவிக்கச் சொல்லவேணுமோ? ... ... (க)

(க) ரா-யு-௧௭-௧௧. (உ) ரா-யு-௧-௧௩. (௩) ரா-ஆர-௧௧-௧.

http://acharya.org

அரு.—முதற்பாட்டு. (நும்மை யித்யாதி). "இந்தளூரீரே" என்ற பதத்தைக் கடாக்ஷித்து 'நும்மை" என்றதுக்கு ப்ராபகத்வ விவக்ஷயாதாத்பர்ய மருளிச்செய்கிறார் (இதரேத்யாதி). அஸாதாரண விக்ரஹ விசிஷ்டதை தோற்றுகையாலே ஸாதாரணமான அந்தர்யாமித்வ வ்யாவ்ருத்தி தோற்றுமென்று திருவுள்ளம். அந்தர்யாம்யாஶ்ரயணம் பண்ணினவனுக்கு விளம்பம் ஸித்தமாமென்று ஆறியிருக்கவேணுமோவென்ன வருளிச்செய்கிறார் (யோயோயாம் யாமித்யாதி). கர்மயோக நிஷ்டன் அக்நீந்த்ராத் யந்தர்யாமியைத் தன்னுடைய பலார்த்தமாகத் தொழுகையால், அந்த கர்மயோகந்தானும் பக்தித்வாரக மாகையாலும், வஸ்வாத்யுபாஸநம் பண்ணினவனுக்கு வஸ்வாத்யதிகாராநந்தரத்திலே பலமாக வேண்டுகையாலும், விளம்பம்ஸித்தமென்று கருத்து. "எந்தாய்" என்றத்தால் தோற்றின சேஷத்வ நிபந்தநமான ப்ராப்யத்வம் "நும்மை" என்றதுக்கர்த்தமாக விவக்ஷித்தருளிச்செய்கிறார் (படுகுலையித்யாதி). (பெற்றிலோமே) என்ற வநந்தரம், என்கைஎன்று சேஷம். "தொழுதோம்" என்கிற பூத நிர்த்தேசத்தாலே-(௧) "அடியேனடைந்தேன் முதல் முன்னம்" என்கிறபடியே அநாதியாகத் தொழுதோ மென்கை தோற்றுகையாலே, ஈஶ்வரனையும் தன்னையும் சேஷியென்று புத்திபண்ணி தத்விஷயத்தில் கைங்கர்யத்தை ஸ்வார்த்தமாக்கி, ஸ்வாதிசயத்தைப்பெற விருப்பாராய், இன்றாஶ்ரயித்திருக்கும் ப்ரபந்நரை வ்யாவர்த்திக்கிறதென்கிறார் (முன்பெல்லா மித்யாதி). *மயர்வற்றவராகையாலே அவனுக்கே சேஷமாயிருக்கும் வஸ்துவென்று தெளியக் கண்டாரென்று கருத்து.

நம்மையே ப்ராபகமாகவும் ப்ராப்யமாகவு மெண்ணி அநாதியான ஸம்ஸாரம் தவிர்த்தீராகில் நம்மைக் கிலாய்க்கைக்கடி ஏதென்னு மாகாங்க்ஷையிலே "நுந்தம்" இத்யாதி யருளிச்செய்கிறாரென்று திருவுள்ளம் பற்றி யருளிச்செய்கிறார் (கைங்கர்யத்தை யித்யாதி). கைங்கர்யாலாபத்தில் தரிக்கமாட்டாமையாலே கிலாய்க்கிறேனென்கிறாரென்று கருத்து. வாக்யார்த்தந்தன்னை யருளிச்செய்கிறார் (தேவரீத்யாதி). பணிசெய்தால் தரிக்கையும் அதில்லாவிட்டா லில்லாதபடியுமா யிருக்குமோ ஸ்வரூபமென்ன வருளிச்செய்கிறார் (நசேத்யாதி). "அஹமபி" என்கிறவிடத்தில், அபி-சார்த்தகமாய், ஸீதாத்வயாஹீநாந-அஹஞ்சத்வயாஹீநோந" என்று விவக்ஷித்து, ஸ்வரூபஸ்த்திதியைப் பற்ற வருளிச்செய்கிறார் (தேவரை யித்யாதி வாக்யத்வயத்தாலே). இனி சகாரத்வய மிருக்கையாலே - "த்வயாஹீநாஸீதா நஜீவதி, அஹஞ்ச நஜீவாமி" என்னுமர்த்தம் ஸ்புரிக்கையாலே, அத்தை யருளிச்செய்கிறார் (தேவரையொழிந்த வித்யாதி). இளையபெருமாளைப்போலே இவ்வாழ்வாருடைய ஸ்வரூபமும் பரார்த்தமா யிருக்குமோ வென்ன வருளிச்செய்கிறார் (இவருடைய வித்யாதி). பரார்த்தமாக

(௧) தி-வாய்-௨-௩-௬.

http://acharya.org

வேண்டுவா னென்னென்ன வருளிச்செய்கிறார் (சேஷிக்கித்யாதி). "நும்மைத் தொழுதோம், பணிசெய்திருக்கும்" என்றத்தாலே ஸித்தமாயிருக்க, "அடியோம்" என்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (அத்தலேக்கித்யாதி).

பரார்த்தமான கைங்கர்யமே புருஷார்த்தமாகில் நமக்கு வேண்டும்போது கைக்கொள்ளுகிறோ மென்னு மபிப்ராயத்தின்மேலே கிலாய்ப்புப் பிறந்து சொல்லுகிறாரென்னு மிடம்தோன்ற விபரீத லக்ஷணயா தாத்பர்ய மருளிச்செய்கிறார் (அடிமையாலே யித்யாதி). விபரீதலக்ஷணையாகாமல் யதாவஸ்த்திதத்துக்கே தாத்பர்ய மருளிச்செய்கிறார் (அன்றிக்கே யித்யாதி).

(அதுக்கு) அந்தஜ்ஞாநலாபத்துக்கு. (எந்தாய்) என்று முழுச்சொல்லாய்; ஸ்வாமிவாசகமாக வருளிச்செய்து, என்னுடைய, தாய் - தாயைப்போலே உபகரித்தவனே என்றர்த்தாந்தர மருளிச்செய்கிறார் (இவ்வஸ்து வித்யாதி).

"என் தசை" என்றத்தை விவரிக்கிறார் (க்ஷிப்ரமித்யாதி). *கழிதுக்குத்தாத்பர்ய மருளிச்செய்கிறார் (ஸர்வஜ்ஞனித்யாதி). "கரும மருளி" என்றால் போராதோ, "ஆவாவென்றிரங்கி" என்ன வேணுமோவென்ன (தொழுதோ மித்யாதி). அன்றிக்கே, கிலாய்க்கும்போது இங்ஙன் சொல்லுகிறதென்னென்ன வருளிச்செய்கிறாராகவுமாம்.

நம்மைக்குறித்து ஒருகால் வடிவைக்காட்டி நடந்தாலென்று சப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி, வடிவுஇத்தனை போக்யமா யிருந்ததோ என்னு மாகாங்க்ஷயில் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (உம்மை யித்யாதி). ... (௧)

மூ.—சிந்தைதன்னுள் நீங்காதிருந்த திருவே மருவினிய
மைந்தா வந்தணாலி மாலே சோலே மழகளிறே
நந்தா விளக்கின் சுடரே நறையூர்நின்ற நம்பீ யென்
னெந்தா யிந்தளூரா யடியேற்கிறையு மிரங்காயே. (உ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
சிந்தைதன்னு	நெஞ்சிலே	அம்	ஸுந்தரமாய்
ள்	[மல்	தண்	குளிர்ந்திருக்கிற
நீங்காது	எப்போதும் பிரியா	ஆலி	திருவாலியில் எழுந்த
இருந்த	வாஸம்பண்ணுகின்ற		ருளி யிருக்கிற
திருவே	ஸம்பத்தே!	மாலே	ஆஸ்ரித வ்யாமுக்தனே! [ரிக்கிற
மருவ இனிய	அநுபவிக்க அநுபவிக்க போக்யனாயிருக்	சோலே	சோலைகளிலே ஸஞ்ச
	[கிற	மழ களிறே	ஆனைக்குட்டிபோன்ற
மைந்தா	யுவாவானவனே!	நந்தா	அவியாத [வனே!

விளக்கின் சுடரோ	தீபத்தினுடைய தேஜஸ்ஸுபோலே உஜ்ஜ்வலனானவனே!	என் எந்தாய்	எனக்கு ஸ்வாமியானவனே!
நறையூர்	திருநறையூரில்	அடியேற்கு	தாஸபூதனான எனக்கு
நின்ற	எழுந்தருளியிருக்கிற	இறையும்	(அடிமை கொள்ளுகையாகிற) இவ்வல்பத்தையும்
நம்பீ	பூர்ணனே!	இரங்காய்	க்ருபை பண்ணுகிறிலை (உ)
இந்தளூராய்	திருவிந்தளூரிலே எழுந்தருளி யிருந்தவனைக் கொண்டு		

வ்யா.— இரண்டாம்பாட்டு. (சிந்தை தன்னுள் நீங்காதிருந்த திருவே) அகவாயில் ப்ரகாசிக்கிற இதுக்கு நானேதேனும் க்ருஷிபண்ணிற்றுண்டாகிலன்றோ ப்ராப்திக்கென்றால் க்ருஷி பண்ணலாவது. ஹ்ருதயத்திலே எப்போதுமொக்க ப்ரகாசியா நின்றானாய்த்து. (திருவே) இவருடைய ஸம்பத்து அவனாய்த்து; (க) *திருவுக்கும் திருவிறே. (மருவினிய) அவ்விருப்புத் தானிவர்க்கினிதாகிறபடி. மருவ மருவ விட்டுப் பற்றவேண்டும்படி யிருக்கையன்றிக்கே நிரதிசயபோக்யனாக நின்றானாய்த்து. (மைந்தா) நித்யமான யௌவநத்தை யுடையவனே! தர்சநீயமாய் ஸ்ரமஹரமான திருவாலியிலே நித்யவாஸம்பண்ணி வ்யாமோஹத்தைத் தெரிவித்தவனே! (சோலையித்யாதி) சோலைக்குள்ளே வளர்ந்ததொரு இளவானைக் கன்றுபோலே யாய்த்து செய்ததடைய இனிதாயிருக்கிறபடி.

(நந்தா விளக்கித்யாதி) ஒரு விச்சேதமில்லாத தீபத்தில் திரியுமெண்ணெயும் புகையுமான அழுக்கின்றிக்கே, புகர்தானொருவடிவு கொண்டாப்போலே யிருக்கிற ஸ்வரூபத்தை யுடையவனே! (நறையூரித்யாதி) திருநறையூரிலே வந்து ஸந்நிஹிதனாய், "ஆஸ்ரயணீய வஸ்துவுக்கு இன்னமொன்று ‡கூட்டுப்பெற்றதில்லை" என்னும் குறைதீரும்படி யிருக்கிற பூர்ணனே! (என்னெந்தா யிந்தளூராய்) திருவிந்தளூரிலே வந்து ஸந்நிதிபண்ணி, எனக்கு ஸம்பந்த ஜ்ஞானத்தைப் பிறப்பித்தவனே! (அடியேற்கித்யாதி) ஸம்பந்தஜ்ஞானத்தைப் பிறப்பித்த உனக்கு, என்னுடைய ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தி விசேஷத்தைக் கொள்கையாகிற இம்மாத்ரமித்தனையும் செய்கை பெரிய பணியோ. ... ... (உ)

(க) ௭-௭-௧. † (பா) கூடப்பெற்றதில்லை.

அ௩.—இரண்டாம்பாட்டு. (சிந்தையித்யாதி) "நும்மடியோம்" என்று வைத்து, "நம்மை யொருகால் காட்டி நடக்கவேணும், இல்லையாகில் நாங்களுய்யோம்" - என்று இங்ஙனே நம்மைக் கிலாய்க்கைக்கடியென்? வேணுமாகில் பேற்றுக்கொரு கைம்முதல் செய்துகொள்ளலாகாதோ என்னும் பகவதபிப்ராயத்தின்மேலே, நிரதிசய போக்யனாயிருக்கு மிருப்பை நீயே காட்டினாய், இனி நானொன்று செய்யவேணுமோ, குறையும் நீயே செய்தருளவேணுமென்று ப்ரார்த்திக்கிறாரென்று ஸங்கதி.

"மருவினிய" என்றது கடைக்குறைத்தலாய்க் கிடக்கிறதென்று திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (மருவ வித்யாதி). அம் - அழகியதாய், தண்-குளிர்ந்த, ஆலி நகரிலிருக்கிற, மாலே-(க)"கள்வன்கொல்" என்னும்படி கைப்பிடித்து வ்யாமோஹத்தை யறிவிப்பித்தவனே! என்றுவிவக்ஷித்தருளிச்செய்கிறார் (தர்சநீயேத்யாதி).

(உ) "நண்ணு நறையூர் நான்தொழுது மெழுநெஞ்சமே" என்று இவர் ப்ராபகத்வேந பற்றப்போகிறாராகையாலே அத்தைத் திருவுள்ளத்திலே வைத்துக்கொண்டு, ஸித்தோபாயத்தினுடைய ஸஹாயாந்தர நைரபேக்ஷ்யம் *நம்பி பதத்துக்குப் பொருளாக விவக்ஷித்தருளிச் செய்கிறார் (திருநறையூரிலே யித்யாதி). திருவாலியானைக் கைப்பிடித்தவனாகவும், திருநறையூரானை உபாயபூதனாகவும், திருவிந்தளூரானை சேஷித்வஸம்பந்தத்தை யறிவிப்பித்தவனாகவும் விவக்ஷித்து "எந்தாய்" என்றதுக்குத் தாத்பர்யத்தை யருளிச்செய்கிறார் (திருவிந்தளூரிலே யித்யாதி). இத்திருமொழியில் ஸம்பந்தஜ்ஞாநம் குறைவற்றபடியாலே கிலாய்த்தாகிலும் பேறுபெறவேணுமென்று த்வரைபிறந்ததென்று திருவுள்ளம். ... ... (உ)

மூ.—பேசுகின்றதிதுவே வைய மீரடியாலளந்த
மூசி வண்டு முரலும் கண்ணி முடியீருமைக் காணு
மாசையென்னும் கடலில் வீழ்ந்திங்கயர்த்தோமயலாரு
மேசுகின்றதிதுவே காணு மிந்தளூரீரே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
இந்தளூரீரே	திருவிந்தளூரிலே எழுந்தருளி யிருக்கு[மவரே!	முரலும்	சப்தியாநின்ற
		கண்ணி	மாலையை
வையம்	பூமியை	முடியீர்	திருவபிஷேகத்தில் சூ[டினவரே
ஈரடியால்	இரண்டடியினால்	உம்மை	உம்மை
அளந்த	ஆக்ரமித்தவராய்க்கொண்டு,	இங்கு	இந்தலோகத்தில்
		காணும்	காணவேணுமென்கிற
வண்டு	வண்டுகளானவை	ஆசையென்னும்	ஆசையாகிற
மூசி	மொய்த்துக்கொண்டு		

(க) ௬-எ-க. (உ) சா-ரு-க.

http://acharya.org

கடலில்	ஸமுத்ரத்தில்	இதுவே	இந்த விஷயத்தைப் பற்றியே
வீழ்ந்து	விழுந்து	ஏசுகின்றது	பழிசொல்லுகிறது,
அயர்த்தோம்	அறிவுகெட்டோம்;	நான்	நானும் [பற்றியே
அயலாரும்	அண்டையி லுள்ளவர்களும்	இதுவே	இந்த விஷயத்தைப்
		பேசுகின்றது	சொல்லுகிறதும். (௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (பேசுகின்றதிதுவே) உமக்கு வருமவத்யத்தைப் பரிஹரிக்கவேணு மென்னுமிதுவே நாங்கள் சொல்லுகிறது. (வையம்) நீர் குணோர்ஜ்ஜநம் பண்ணுகைக்குப் பட்டபாடெல்லாமறிவீரே; இப்போதொரு வ்யக்தியிலே அல்பம் நெகிழநின்று அப்பெரிய குணமெல்லா மிழக்கவன்றோ புகுகிறீர்; வரையாதே நோக்கின உமக்கு இப்போது ஒருவனை நெகிழநின்றீரென்றால் குணஹாநி விளையாதோ? பூமிப்பரப்பை ஈரடியாலே யளந்துகொண்ட. மூசுகையாவது - மொய்க்கை. வண்டுகளானவை மதுபாநம்பண்ணி அத்தாலே ஆளத்தி வையா நின்றுள்ள மாலையை யுடைய திருவபிஷேகத்தை யுடையீர்! உம்முடைய வடிவு பரார்த்தமென்றன்றோ ப்ரஸித்தி; நீர் ஸர்வரக்ஷகராயன்றோ முடிசூடிற்று.

அதெல்லாமப்படியே, அதுக்கிப்போது வந்ததென்னென்ன; அதுக்கு வந்ததன்றோவிது; (உம்மை) உம்மைக் காணவேணுமென்றாசைப்பட்டுப் பெருமையாலே சிலர் முடிந்தார்களென்றால், உமக்கிதுபோக்கி அவத்யமுண்டோ? உம்மைக் காணவேணுமென்கிற ஆசையாகிற பெருங்கடலிலே புக்கு அகப்பட்டு அறிவுகெட்டோம். இத்தால் நமக்கு வருவதோரவத்யமுண்டோ வென்ன, (அயலாரித்யாதி) புறம்புள்ளார், "அழகியதாக ஆசைப்பட்டான், ஆசைப்பட்டவனுக் கழகிதாக முகங்கொடுத்தார், இதுவோதான் சில ராசைப்பட்டால் ப(ஃ)லிக்கும்படி" என்று உம்மைப் பழிசொல்லாநின்றார். அயலாரு மேசுகின்றதிதுவே, நான் பேசுகின்றதுமிதுவே. (இந்தளூரீரே) உகவாதார்சொல்லும் பழியைப் பரிஹரிக்கைக்கும், உகப்பார் நினைத்த வகைகளெல்லாம்பரிமாறுகைக்குமாகவன்றோ திருவிந்தளூரிலே வந்து நித்யவாஸம் பண்ணுகிறது... ... ... (௩)

அரு.—மூன்றாம்பாட்டு. (பேசுகின்ற தித்யாதி) ஸம்பந்த ஜ்ஞாநத்தையும் நானே யுண்டாக்கி உபாயோபேயங்களும் நானேயாய் உம்முடைய திருவுள்ளத்தில் நீங்காதிருந்தேனுகவும் சொல்லிவைத்தீர், "இறையு மிரங்காய்" என்கிறதென்? உம்மைக்கண்டு பரமபதத்திற்போலே இங்கே பரி

http://acharya.org

மாறக்கூடுமோ, அப்படியாகில் நமக்கவத்யமன்றோ என்னு மபிப்ராயத்திலே, உமக்கு வருமவத்யத்தைப் பரிஹரிக்கைக்காகவே நானிங்கச் சொல்லுகிறே னென்கிறாரென்று ஸங்கதி.

கிழ்தாத்பர்ய மருளிச்செய்து சப்தார்த்த மருளிச்செய்கிறார் (பூமியித்யாதி). வண்டுகளைச்சொல்லி கண்ணியை விசேஷித்ததுக்கு ப்ரக்ருதோபயோகம் காட்டுகிறார் (உம்முடைய வித்யாதி). வண்டுக்காகக் கண்ணியிருக்குமாபோலே யன்றோ எங்களுக்காக நீரிருக்கும்படி யென்கை. "முடியீர்" என்றதுக்கு பா(ஞ)வம் (நீரித்யாதி).

நீர் காணவாசைப்பட்டு நீரயர்த்தால் இது நமக்கவத்யமாமோ, இத்தைச் சொல்லுவார்தானுண்டோ வென்னும் சங்கையை யநுவதிக்கிறார் (இத்தாவித்யாதி). இப்படி வரும்பழிக்கு நாமஞ்சுகிறோமோ வென்ன; இந்தளூரீரே யென்கிறாரென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (உகவாதாரித்யாதி) ... ... (௫)

மூ.—ஆசைவழுவாதேத்து மெமக்கிங்கிழுக்காய்த் தடியோர்க்குத்
தேசமறிய வுமக்கே யாளாய்த் திரிகின்றோமுக்குக்
காசினொளியில் திகழும் வண்ணம் காட்டீரெம்பெருமான்
வாசிவல்லீரிந்தளூரீர் வாழ்ந்தே போம் நீரே. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
இங்கு	இந்த உம்முடைய விஷயத்தில்	ஆளாய்	தாஸபூதராய்
ஆசை	உம்மை ஸேவிக்கவேணுமென்னும் ஆசையானது	திரிகின்றோமுக்கு	திரிகிற எங்களுக்கு
வழுவாது	தவருமல் (விச்சேதியாமல்)	காசின்	(உருக்கின) பொன் காசினுடைய
ஏத்தும்	ஸ்தோத்ரம் பண்ணும் ஸ்வபாவத்தை யுடையவராய் [ன	ஒளியில்	ப்ரகாசத்தைக் காட்டில்
அடியோர்க்கு	உமக்கு தாஸபூதரா	திகழும்	விளங்காநின்ற
எமக்கு	எங்களுக்கு	வண்ணம்	வடிவழகை
இழுக்காய்த்து	(ஸ்தோத்ரம் பண்ணுகை) அவத்யமாய்த் தலைக்கட்டிற்று;	காட்டீர்	காட்டுகிறிலீர்;
தேசம்	தேசமெல்லாம்	எம்பெருமான்	எமக்குஸ்வாமியாய்க் கொண்டு
அறிய	அறியும்படியாக	இந்தளூரீர்	திருவிந்தளூரிலெழுந்தருளி யிருக்குமவரே! [ரான
உமக்கே	சேஷியான உமக்கே	வாசிவல்லீர்	தாரதம்யமறியுமவ
		நீரே	நீரே
		வாழ்ந்துபோம்	ஸுகித்திரும் (௬)

வ்யா.—நாலாம்பாட்டு. (ஆசையித்யாதி) நமக்கவத்யம் வருமென்றிறே நீர்தாமிப்படிபடுகிறது, நாம் அத்தைப்பொறுக்கிறோமென்ன; உமக்குப் பொறுக்கவொண்ணாதது பொன்றுண்டு, எங்களுக்கு மவத்யமென்கிறார்; (க) † "ந தேநஸூர்ஸ:-நதேநுரூபஃ" என்னக்கடவதிறே.

(ஆசையித்யாதி) நாட் செல்ல நாட்செல்ல (உ) "அப்ஸ்ஸ ஹநிவர்த்தே - அஹஹ்யஹநி வர்த்ததே" என்கிறபடியே ஆசையானது கரைபுரண்டு, ஏத்துகையே ஸ்வபாவமாம்படியான மஹாபாபத்தைப் பண்ணின எங்களுக்கு இழுக்காய்த்து. (அடியோர்க்கு) சேஷபூதன் சேஷியை ஆசைப்பட்டு ஏத்துகை முறையன்றோ என்றிருக்கை யன்றிக்கே, இது தன்னை அவத்யமாக உபபாதிக்கும்படியாய் வந்து விழுந்தது. (எமக்கு) உமக்கு வருமதில் வேணுமாகிலாறியிருக்கிறீர், எங்களுக்கு வருமதில் உமக்காறி யிருக்கப்போமோ? (தேசமித்யாதி) பாவியோம் விழுக்காடறியப்பெற்றிலோம். இப்படி விளைவதறிந்தோமாகில் நீரும் நாங்களு மறிந்ததறிவாக ஸ்நேஹித்துவிடலாய்த்தே. லோகமடங்க இருந்ததே குடியாக வழியும்படி உமக்கே யாளாய்த்திரிகின்றோமுக்கு. இன்னமும் வேறேயொரு ரக்ஷகனுண்டாய் அவன் வாசலிலேசென்று தான் தன்காரியம் குறையும் தலைக்கட்டிக் கொள்ளுகிறுனென்று தான் ஆறி யிருக்கிறீரோ.

(காசித்யாதி) உமக்கே அநந்யார்ஹராயிருக்கிற எங்களுக்கு, (௩) "சுட்டுரைத்த நன்பொன்னுன் திருமேனியொளி யொவ்வாது" என்கிறபடியே-பொன்னெளியிற் காட்டிலும் விளங்காநின்றுள்ள வடிவழகைக்காட்டுகிறீர். (எம்பெருமான் வாசிவல்லீர்) உம்முடைய வடிவில் வீறும் ஆசைப்பட்ட எங்கள் சிறுமையும் நோக்கக் கணக்கிடவல்லீர். (இந்தளூரீர்) நித்யஸூரிகளுக்குப் படிவிடும் வடிவை ஸம்ஸாரிகளுக்கு மொக்கப் படிவிடுகைக்காகவன்றோ திருவிந்தளூரிலே வந்து நிற்கிறது. வாசியற முகங்கொடுக்க வந்துநிற்கிற விடத்தே வாசிவையாநின்றீர். (வாழ்ந்தே போம்நீரே) உம்முடைய உடம்பு உம்மை ஆசைப்பட்டார்க்காகக் கண்ட தென்றிருந்தோம், அங்ஙனன்றுகில், அத்தை நீர் கட்டிக்கொண்டு வாழும். ... ... (௪)

அரு.—நாலாம்பாட்டு. (ஆசை யித்யாதி) கீழ்ப்பாட்டோடே ஸங்கதி தன்னைக் காட்டுகிருர் (நமக்கித்யாதி). (பொறுக்கவொண்ணாதும்) என்ற

(க) ஸ்தோ-ர-உ௫. † (பா) நாதேரூபம்.

http://acharya.org

து-அன்பற்றரைப் பின்பற்றித் திரிகிறனென்று எங்களைச் சொல்லுகிறது உமக்குப் பொறுக்கவொண்ணுது; உம்மை அன்பற்றரென்று நாட்டார் சொல்லுகிறது எங்களுக்கவத்யம், அது எங்களுக்குப் பொறுக்கவொண்ணு தென்றபடி. ஆஸ்ரிதபரிபவம் பொறுக்கவொண்ணுதோ வென்ன வருளிச்செய்கிறுர் †(நதேருபஃ) என்று. ஸ்வரூபாதிகளெல்லாம் ஆஸ்ரிதரிட்ட வழக்காம்படி பண்ணியிருக்கு மவனுக்குப் பொறுக்கப்போமோ வென்று கருத்து.

காசு-பொற்காசு. "நீரே-வாழ்ந்துபோம்" என்றங்வயம் திருவுள்ளம் பற்றி யருளிச்செய்கிறுர் (உம்முடைய வித்யாதி). ... ... (௪)

மூ.—தீ யெம்பெருமான் நீரெம்பெருமான் திசையு மிருநிலனு
மா யெம்பெருமானாகி நின்றாலடியோம் காணேமால்
தாயெம்பெருமான் தந்தைதந்தை யாவீரடியோமுக்
கே யெம்பெருமானல்லீரோ நீரிந்தளூரீரே. (௫)

பதம்.	உரை.
தீ	அக்நிக்கந்தர்யாமியாய்
எம்பெருமான்	அதுக்கு நிர்வாஹகஞய்
நீர்	ஜலத்துக்கந்தர்யாமியாய்
எம்பெருமான்	அதுக்கு நிர்வாஹகஞய்
திசையும்	திக்குக்களுக்கும்
இரு	விசாலமான
நிலனும்	பூமிக்கும்
ஆய்	அந்தர்யாமியாய்
எம்பெருமான் ஆகி	அவற்றுக்கும் நிர்வாஹகஞய்க்கொண்டு
நின்றால்	(நீர்) எழுந்தருளியிருந்தீராகிலும்
அடியோம்	தாஸபூதரான நாங்கள்
காணேமால்	ஸேவியாதொழிந்தோமாகில் (என்ன உபயோகமுண்டு);
தாய்	மாதாவாகவும்
எம்பெருமான்	ஸ்வாமியாகவும்
தந்தை தந்தை யாவீர்	பிதாவுக்கும் பிதாவுமானவராய்க் கொண்டு (குலநாதனாய்க் கொண்டு)
இந்தளூரீர்	திருவிந்தளூரிலே யெழுந்தருளியிருக்குமவரான
நீர்	தேவரீர்
அடியோமுக்கு	அநந்யகதிகளான எங்களைக் கைங்கர்யம் கொள்ளுமவரான
எம்பெருமானல்லீரோ	ஸ்வாமியன்றோ. (௫)

வ்யா —அஞ்சாம்பாட்டு. (தீயித்யாதி) இங்கே ஸந்நிஹிதராஞேமாகில், ஜகத்காரணஞயிருக்கிற விருப்பைக் காட்டித் தந்தோமாகில், நாமும்முடைய விஷயத்திலே யொன்றும் செய்யாதோமாக நீரிங்ஙனே கிடந்து படாநிற்கிற தென்னென்ன; கண்ணுலே குளிரநோக்கி வாயாலே வினவி அடிமை கொள்ளவேணு மென்றுசைப்பட்ட எனக்கு நித்தா லென்செய்ததாய்த் தென்கிறுர்.

† (பா) நாதேருப மித்யாதி.

வ்யா.—(தீயெம்பெருமான் நீரெம்பெருமான்) இவையிரண்டும் ஐந்துக்கு முபலக்ஷணமாய், இத்தாலே - காரணவர்க்கத்தை யடைய நினைத்து, காரணபூதனை யிருக்கு மிருப்பைச் சொல்லுகிறது. (திசையு மிருநிலனுமாய்) இத்தால் கார்யவர்க்கத்தை நினைக்கிறது. இப்படி காரணபூதனையும் கார்யபூதனையு மிருக்கிற இவ்வாகாரத்தாலே நீ உன்னுடைய ஸ்வாம்யத்தை நிர்வஹிப்பதாக வொருப்பட்டால். (அடியோம் காணுமால்) தேவரோடே கலந்தநுபவிக்க வேணுமென்றாசைப்பட்ட அடியோங்கள் என்பெற்றோ மாவுதோம். (தாயெம்பெருமான்) தேவர் நெகிழவிருந்தால் புறம்பு போகைக்கோ ரிடமுண்டோ? (தந்தை தந்தையாவீர்) இதுதான் என்னளவிலேயு மாயிருந்ததோ? (அடியோமித்யாதி) அநந்யகதிகளாயிருக்கிற எங்களுக்கு ருசிபிறந்தபோதே நினைத்தபடிகளெல்லா மநுபவிக்கைக்காகவன்றோ தேவர் திருவிந்தளூரிலே வந்து கிட்டி நிற்கிறது. பூவலரும் போதைச் செவிப்பார்த்துப் பறித்துக்கொடுவாராநிற்பாரைப்போலே, ருசிபிறந்தபோதே அடிமைகொள்ளுகைக் கீடாகக் காலம்பார்த்தன்றோ தேவர் இங்கேவந்து நிற்கிறது. பரத்வம், நித்யஸூரிகளுக் கநுபாவ்யமாயிருக்கும்; வ்யூஹம், ப்ரஹ்மாதிகளுடைய கூக்குரல் கேட்கைக் கீடாயிருக்கும்; ராமக்ருஷ்ணாத்யவதாரம், தசரத வஸுதேவாதிகளுடைய பாக்யபலமாயிருக்கும்; உகந்தருளின நிலங்கள், தங்களுக்கு ஹித மின்னதென்று மறியாதே ஸம்ஸாரம் த்யாஜ்யமென்று மறியாதே ஸர்வேஶ்வரன் ப்ராப்யனென்று மறியாதே யிருக்கிற ஸம்ஸாரிகளுக்கே முகங்கொடுக்கைக்காகவாயிருக்குமிறே. குருடர்க்கு வைத்த இறையிலியில் விழித்தார்க்கு ப்ராப்தி யில்லையிறே; (க)"பின்னானார் வணங்கும் சோதி" என்னக்கடவதிறே. ... ... (௫)

அநு.—அஞ்சாம்பாட்டு. (தீயித்யாதி) நீரே வாழ்ந்துபோமென்னவே இவரை பஹுமுகமாக ஸமாதாநம்பண்ண வொருப்பட்ட எம்பெருமானபிப்ராயத்தை வெளியிடாநின்று கொண்டு ஸங்கதியை யருளிச்செய்கிறார் (இங்கே யித்யாதி).

நான் ஜகதாகாரன், இருந்ததெல்லாம் என் ஸ்வாம்யத்தை நிறுத்திக்கொண்டவளவேயாய் நீரொன்றும் காணாதே போனீராகில் பெற்றார் வளர்த்தா ரண்டைகொண்டிருக்கலாகாதோ, நம்மைக் கிலாய்ப்பானென்னென்கிற சங்கையில் உத்தரார்த்தமென்று திருவுள்ளம்பற்றித் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (தேவரித்யாதி). ... ... (௬)

(க) தி-நெ-௧௦.

மூ.—சொல்லாதொழியகில்லே னறிந்த சொல்லில் நும்மடியா
ரெல்லாரோடு மொக்க வெண்ணியிருந்தீரடியேனை
நல்லாரறிவீர் தீயாரறிவீர் நமக்கிவ்வுலகத்து
எல்லாமறிவீரீதே யறியீரிந்தளூரீரே. (௬)

பதம்.	உரை.
இந்தளூரீரே	திருவிந்தளூரிலெழுந்தருளியிருக்கும் ஸ்வாமியே!
சொல்லாது	(தேவரீரை நிர்ப்பந்தித்துச்) சொல்லாமல்
ஒழியகில்லேன்	இருக்கமாட்டுகிறிலேன்,
அறிந்த சொல்லில்	(நான்) அறிந்தவற்றை சொல்லப்புகில்
அடியேனை	பிரிவாற்றமாட்டாத என்னை
நும் அடியார்	தேவரீருடைய தாஸபூதர்களான
எல்லாரோடும் ஒக்க	மற்றை எல்லாரோடும் ஸமாநமாக
எண்ணியிருந்தீர்	நினைத்திருக்கிறீர்;
நல்லார்	தேவரீருடைய விரஹாஸஹிஷ்ணுத்வமாகிற நன்மையையுடையவர்களுடைய ப்ரக்ருதியையும்
அறிவீர்	அறிந்திருப்பீர்;
தீயார்	தேவரீருடைய விரஹஸஹிஷ்ணுத்வமாகிற தீமையையுடையவர்களுடைய ப்ரக்ருதியையும்
அறிவீர்	அறிந்திருப்பீர்,
இவ்வுலகத்து	இந்த லோகத்தில்
எல்லாம்	மற்றை யெல்லாவற்றையும்
அறிவீர்	அறிந்திருப்பீர்,
நமக்கு	விரஹாஸஹிஷ்ணுக்களாகிற எங்களுக்குள்ள
ஈதே யறியீர்	இந்த மார்த்தவமொன்றையுமே அறியமாட்டீர். (௬)

வ்யா.—ஆறும்பாட்டு. (சொல்லாதொழிய கில்லேன்) சேஷிஸந்நிதியில் சேஷபூதன் பரிமாறும் முறையில் பரிமாற க்ஷமனாகிறிலேன். சேஷிசெய்தபடி கண்டிருக்கைக்கு மேற்பட சேஷபூதன் நிர்பந்திக்கக் கடவனன்றிறே; இப்படியிருக்க மாட்டுகிறிலேன். (அறிந்த சொல்லில்) அறிந்தவற்றைச் சொல்லில். முறை செய்யக்கடவதல்லதாகப் பார்த்தபின்பு இனி அதுக்கீடாக ப்ரதிபந்நங்களைச் சொல்லில். (உம்மடியாரித்யாதி) உம்மைப்பிரிந்து பின்னையும் "காணலாம்" என்னும் நசையாலே பத்துமாஸம் தரித்திருக்கைக் கீடான எலும்பு முற்றின பிராட்டியோபாதியாக நினைத்திராநின்றீர்; உம்மை அரைக்ஷண

http://acharya.org

மும் காணுவிடில் ஜீவிக்கமாட்டாத அடியேனையும். அவள் முன்னாகப் பற்றினார்க்கு இத்தனைவாசியுண்டு போலேகாணும். ஜீவிக்கிலும் சில நாள் தரித்திருக்கும்படி ஜீவித்து, பட்டினிவிடிலும் சிலநாள் பொறுக்கவல்லாரைப்போலேயாய்த்து நம்மாழ்வார் போல்வார் ப்ராக்ருதி; உண்ணவும் பொறுது பட்டினி விடவும் பொறுது என்னும் ஸுகுமாரரைப்போலே யாய்த்து இவருடைய ஸௌகுமார்யம். தூதுவிடப் புக்கு விட்டதூது அத்தலைப்பட்டு மீளுவதற்கு முன்பே பற்றுமை தாம்கிடந்து கூப்பிடுகிறாரிறே (க) *தூவிரிய மலருழக்கியிலே.

(நல்லாரறிவீ ரித்யாதி) தேவரை யொழியச்செல்லாதார் ப்ரக்ருதியு மறிவீர்; தேவரை யொழியவும் ஜீவித்திருப்பார் ப்ரக்ருதியுமறிவீர். இங்ஙன் தனித்தனி பிரித்துச்சொல்லுகிறதென், (இவ்வுலகத்தெல்லா மறிவீர்) (உ) "அஜ்ஞாதம் நாஸ்தி தே கிஞ்சித் த்ரிஷு லோகேஷு ராகவ" இந்த லோகத்தில் உம்முடைய ஜ்ஞாநத்துக்கு அவிஷயமா யிருப்பதொன்றில்லை. (ஈதே யறியீர்) ஸர்வஜ்ஞனையும் அஜ்ஞனாக்க வேண்டும்படி காணும் இவருடைய ப்ரக்ருதி மார்த்தவம். (இந்தளூரீரே) "நம்மை ஆசைப்பட்டார் பருவமறிந்து முகங்காட்டிற்றிலர்" என்னு மவத்யத்தைப் பரிஹரிக்கைக்காக வன்றோ நீர் திருவிந்தளூரிலே வந்து நிற்கிறது; போந்த காரியத்தை மறக்கிறதென்? ... ... (கூ)

அநு.—ஆறும்பாட்டு. (சொல்லாதித்யாதி). நீரே வாழ்ந்துபோமென்பது, "அடியோமுக்கே எம்பெருமானல்லீரோ" என்பது, இப்படி நீர் ஸ்வரூபத்துக்குச் சேராதவற்றைச் சொல்லக்கடவீரோ வென்ன வருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

இவருடைய ம்ருதுப்ருக்ருதித்வத்துக்குச் சேர கிலாய்ப்பில் தளர்த்தி தோற்ற அநுதபிக்கிறாராக விவக்ஷித்துத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (சேஷி ஸந்நிதியி லித்யாதி). கீழ்வாக்ய விவரணம் (சேஷியித்யாதி). (எலும்பு முற்றின) சக்தையான என்றபடி. பிராட்டியைக்காட்டிலும் நீர் தரியாமைக்கு ஹேதுவென்னென்ன வருளிச்செய்கிறார் (அவள் முன்னாக வித்யாதி). அவள் ஏகாந்தசேஷியாகையாலே அவள் அவன் ஸ்வாதந்த்ர்யத்தைஅறிந்து வேறு கடக (஘டக) ரில்லாமையாலும் அவனே வரவேணுமென்று ஆறியிருக்கவேணும், இவர்க்கது வேண்டாவிறே என்று கருத்து. "எல்லாரோடும்" என்று சொன்னதுக்கு - ஒரு பிராட்டியை வ்யாவர்த்

(க) ங-கூ- (உ) ரா-

திப்பித்தமை போராமையாலே, மற்றை யாழ்வாரையும் வ்யாவர்த்திப்பிக்கிறார் (ஜீவிக்கிலும்) ஸம்ஶ்லேஷிக்கிலும் என்றபடி. இவர் ப்ரக்ருதி இதுவென்று நாமறியும்படி எங்ஙனே யென்ன வருளிச்செய்கிறார் (நூதித்யாதி). ... ... (கூ)

மூ.—மாட்டீரானீர் பணி நீர் கொள்ள வெம்மைப்பணியறியா
வீட்டீ ரிதனை வேறே சொன்னோ மிந்தளூரீரே
காட்டீரானீர் நுந்தமடிக்கள் காட்டி லுமக்கிந்த
நாட்டேவந்து தொண்டரான நாங்களுய்யோமே. (எ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
இந்தளூரீரே	திருவிந்தளூரிலெழுந்தருளியிருக்கும் ஸ்வாமியே!	நுந்தம்	தேவரீருடைய
நீர்	தேவரீர்	அடிக்கள்	திருவடிகளை
பணிகொள்ள	(எங்கள்) கைங்கர்யத்தை ஸ்வீகரிக்க	காட்டீரானீர்	காட்டாமல் போனீர்,
மாட்டீரானீர்	இச்சியாமல்போனீர்,	காட்டில்	காண்பித்தீராகில்
எம்மை	எங்களை	இந்நாட்டே	சேஷத்வத்துக்கிசையாத இந்த லோகத்திலே
பணி	கைங்கர்ய ரஸத்தை	வந்து	இசைந்துவந்து
அறியா	அறியும்படி பண்ணி	உமக்கு	தேவரீருக்கு
வீட்டீர்	கைவிட்டு விட்டீர்;	தொண்டரான	அடிமையிலுற்றவர்களான
இதனை	இத்தை	நாங்கள்	நாங்கள்
வேறே	தனியே (வ்யாவ்ருத்தமாக)	உய்யோமே	ஜீவிக்கமாட்டோமோ? (எ.
சொன்னோம்	விண்ணப்பம் செய்தோம்;		

வ்யா.—ஏழாம்பாட்டு. (மாட்டீர்) நமக்கொருகுற்றமுமில்லையாக வன்றோ (க) ''யஸ்ஸர்வஜ்ஞ ஸர்வவித் - யஸ்ஸர்வஜ்ஞ ஸ்ஸர்வவித்'' இத்யாதி ப்ரமாணங்கள் சொல்லுகிறது, நம்மை ''ஸர்வஜ்ஞன், ஸர்வசக்தி' என்று ப்ரமாணங்கள் சொல்லாநிற்க நீர்நமக்கு ஜ்ஞானசக்திகளில் வைகல்யம் சொல்லுகிறதென்கொண்டென்னில்; அதொரு வ்யக்தியிலே பலிக்கக் கண்டேனென்கிறார். பருவமறிந்து வந்து முகங்காட்டாமையைக்கொண்டு ஸர்வஜ்ஞனை அஜ்ஞனாக உபபாதித்தார்; தம்தசைக்கிடாக உதவாமையைக்கொண்டு ஸர்வசக்தியை அசக்தனாக உபபாதிக்கிறார்.

(க) முண்ட-க-க,

வ்யா.—(மாட்டீரானீர்பணிநீர்கொள்ள) சேஷத்வத்தை இப்போது உம்மாலே உண்டாக்குதல் ஒழித்தல் செய்யவொண்ணுதே! இதினுடைய ஸ்வரூபாநுரூபமான வ்ருத்திவிசேஷத்தைப் பண்ணுவித்துக் கொள்ள மாட்டீரானீர். (எம்மைப்பணியறியாவீட்டீர்) உம்மையொழியச்செல்லாத ஸ்வபாவத்தையுடைய எங்களை, உம்முடைய திருவடிகளிலடிமைச்சுவட்டையறிவித்துப்பொகட்டீர்.(இதனை வேறேசொன்னோம்) இத்தை அல்லாதவைபோலன்றியே வ்யாவ்ருத்தமாகச்சொன்னோம். (சொன்னோம்) நம்மாற்றுமைக்கு வேண்டுமளவன்றியே கண்ணுஞ்சுழலையிட்டு இனி இவ்வஸ்துவைப் பிறர் நம்பாதபடி தொட்டோம். (இந்தளூரீரே) பரமபதம் கலவிருக்கையாயிருக்க அடிமை கொள்ளுகைக் கிடாகத் திருவிந்தளூரிலே வந்து ஸந்நிதிபண்ணின உம்மையன்றோ நானிவ்வார்த்தை சொல்லுகிறது. இவ்வுபகார ஸ்ம்ருதி மறுவர்த்தியாநின்றதாகில் பின்னை நீரிப்படி சொல்லுவானென்னென்னில்; அதுக்கு ஹேதுவுண்டு. (காட்டீர்னீர் நந்தமடிக்கள்) பரார்த்தமான வஸ்துவை உமக்கென்றிராநின்றீர். உம்முடைய திருவடிகளைக்காட்டாமையே ஸ்வபாவமாம்படியானீர். அவ்வுபிஸந்தியைக் குலைத்து அத்தை யப்படிசெய்யப் பெறில். (இந்நாட்டேவந்து தொண்டரான நாங்களுய்யோமே) "நாமுபேக்ஷித்தால் தான் இவற்றுக்கவ் வருகு போக்குண்டோ, ஆனபின்பு நாம் நினைத்தபோது காரியம் செய்கிறோம்" என்றுறியிருக்கைக்கு உம்முடைய பரமபதத்தில் நித்யஸூரிகளோ; மருபூமியில் தண்ணீர்போலே உம்மையொழிய உண்டுடுத்துப் போதுபோக்குகிற இஸ்ஸம்ஸாரத்திலே உம்மாலல்லது செல்லாதபடியிருக்கிற நாங்களுமுஜ்ஜீவியோமோ. ... ... (௭)

அரு.—ஏழாம்பாட்டு. (மாட்டீரித்யாதி) கீழ்ப்பாட்டோடிப் பாட்டுக்கு ஸங்கதியைக் காட்டுகிறுர் (நமக்கித்யாதி). கீழ்வாக்ய விவரணம் (பருவமித்யாதி),

"நீர்-பணி-கொள்ள-மாட்டீர்" என்றந்வயித்து வ்யாவ்ருத்தி பூர்வகம் தாத்பர்ய மருளிச்செய்கிறுர்(சேஷத்வேத்யாதி). பணி யறியாநிற்கச் செய்தே, "எம்மை-வீட்டீர்" என்றந்வயித்துத்தாத்பர்ய மருளிச்செய்கிறுர்(உம்மையொழிய வித்யாதி).(இத்தை) என்றது-"அறியீர்" என்றும் "மாட்டீர்" என்றும் "வீட்டீர்" என்றும் சொன்னவற்றை யென்றபடி. வ்யாவ்ருத்தமாகச்சொன்னபடியைக் காட்டுகிறுர் (நம்மித்யாதி).(தொட்டோம்)பிறர்க் கர்ஹமாகாதபடி ஸ்பர்சித்தோம்.குற்றம் சொன்னோமென்றபடி. நீரிந்த

http://acharya.org

ளூர்ராய் வந்திருக்கச்செய்தே இங்ஙன் சொன்னது தப்பச்சொன்னோமெ ன்றபடி.

இப்படியறிந்த நீர் முன்னே அப்படி சொன்னதுக் கடியென்னென்னும் சங்கையை யநுவதிக்கிறார் (இவ்வுபகாரேத்யாதி). தாத்பர்ய மருளிச் செய்து, சப்தார்த்த மருளிச்செய்கிறார் (உம்முடையவித்யாதி). "காட்டில்" என்றதுக்கர்த்தம் (அவ்வபிஸந்தியை யித்யாதி). "இந்த நாட்டேவந்து தொண்டர்" என்று விசேஷித்ததுக்கு உட் கருத்தருளிச் செய்கிறார் (நா மித்யாதி). இத்தால் - நீர் (க) "अवाक्यनादरः-அவாக்யநாதரஃ" என்று இங்கிருந்தால், நாங்கள் ஸ்வரூபஜ்ஞாநத்தாலே அதிலே துவக்குண்டு, கண்டுகொண்டிருக்க மாட்டோமே, வாய்திறந்து சொல்லிக் காரியம் கொள் உஜ்ஜீவிப்போமென்றதாய்த்து ... ... (எ)

மூ.—முன்னைவண்ணம் பாலின்வண்ணம் முழுதும் நிலைநின்ற
பின்னைவண்ணம் கொண்டல்வண்ணம் வண்ணமெண்ணுங்கால்
பொன்னின் வண்ணம் மணியின்வண்ணம் புரையும் திருமேனி
இன்னவண்ணமென்று காட்டீரிந்தளூரீரே. (அ)

பதம்.	உரை	பதம்.	உரை
இந்தளூரீரே!		மணியின் வண்ணம்	(பின்பு த்வாபரயுகத்தில் வடிவழகு) நீலமணியினுடைய வர்ணத்தை யுடைத்தாயிருக்கும்,
வண்ணம்	(தேவரீருடைய) வடிவழகை	முழுதும்	ஸர்வகாலத்திலும்
எண்ணுங்கால்	நினைக்கப்புகில்,	நிலைநின்ற	ஸ்த்திரமாயிருக்கிற
முன்னை வண்ணம்	முன்பு க்ருதயுகத்திலுள்ள வடிவழகு	வண்ணம்	வடிவழகானது
பாலின் வண்ணம்	பாலினுடைய நிறமான வெண்மையாயிருக்கும்,	கொண்டல் வண்ணன்	மேகத்தினுடைய நிறமாயிருக்கும்,
பின்னை வண்ணம்	பின்பு த்ரேதாயுகத்திலுண்டான வடிவழகு	புரையும்	(இப்படி நாலுவர்ணங்களோடு) சேர்ந்திருக்கிற
பொன்னின் வண்ணம்	பொன்னினுடைய சிவந்த வர்ணத்தை யுடைத்தாயிருக்கும்,	திருமேனி	திவ்ய விக்ரஹத்தை
		இன்ன வண்ணம் என்று	இப்படிப்பட்ட நிறத்தையுடையதென்று
		காட்டீர்	காட்டியருளீர். (அ)

வ்யா.—எட்டாம்பாட்டு. (முன்னையித்யாதி) சேதநருகந்தத்தையே நிறமாகக்கொள்ளும் ஸ்வபாவரான நம்பக்கல் உம்முடைய அபேக்ஷிதம் பெற்றுப்போகையில் குறையுண்டோ, உம்முடைய அபேக்ஷித

(க) சாந்தோ-௩-௧௪.

ந்தன்னைச் சொல்லீரென்ன; நீ உகந்தாருகந்தவடிவுகளைக் கொண்டு வந்து அவர்களுக்குக் காட்டிக்கொடுத்தாயே யாகிலும், உன்னுடைய இச்சாக்ருஹீதமான அஸாதாரண விக்ரஹத்தை "இதுகாணிருக்கும்படி" என்று கொடுவந்து எனக்குக் காட்டவேணுமென்கிறார்.

(முன்னை வண்ணம் பாலின்வண்ணம்) க்ருதயுகத்தில் புருஷர்கள் ஸத்வப்ரசுரராகையாலே வெளுத்த நிறத்தை யுகப்பர்களென்று, அதுக்காக வெளுத்த நிறத்தைக் கொண்டானாய்த்து, அவர்களுகந்தத்தை நாம் செய்யவே "நாமுகந்தத்தை இவன் செய்தான், நாமுமிவன் றன்னை யுகப்போம்" என்றுதரிப்பார்களென்று பார்த்து; அவ்வழியாலே, அநந்தரத்திலுள்ளார்க்கு ரஜோகுண மளாவியிருக்கையாலே அவர்களுகந்த சிவந்த நிறத்தையுடையனானான்; அதுக்கநந்தரம், மணியின் வண்ணத்தையுடையனானான். (வண்ணமெண்ணுங்கால்) இவனுடைய வடிவை ஆராயப்புக்கால், நித்யமான அஸாதாரண விக்ரஹம் நீர் கொண்டெழுந்த காளமேகம்போலே யாய்த்திருப்பது. "இவன் யுகங்கள்தோறும் அவ்வவருகந்த வடிவுகளைக் கொள்ளும், இவனுடைய அஸாதாரண விக்ரஹம் காளமேகம்போலே யிருக்கும்" என்று சாஸ்த்ரங்களிலே கேட்டுப் போகையன்றியே, "நீ இப்படி சாஸ்த்ரங்களிலே கேட்டுப் போந்தவடிவு தானிருக்கும்படி இதுகாண்" என்றொருவார்த்தை யருளிச்செய்து, அவ்வடிவைக் காட்டவேணும். (இந்தளூரீரே) நீர் கொள்ளும் வடிவுகளுக்கெல்லாம் சாஸ்த்ரங்களில்லையோ, "ப்ரமாணங்களிலே கேட்டுப்போக வொண்ணாது, நம்முடையார்க்கு, 'இவ்வடிவு தான் இது காணுங்கோள்' என்று காட்டவேணும்" என்று அதுக்காகவன்றோ நீர் திருவிந்தளூரிலே வந்து நிற்கிறது. (அ)

அ௬.—எட்டாம்பாட்டு. (முன்னையித்யாதி) இந்தளூரில் வந்ததெல்லாம் நம்மைக் காட்டவேயன்றோ! நீர் "காட்டீரானீர்" என்று சொல்லுகைக்கு உமக்கு இது வன்றிக்கே அபேக்ஷிதமுண்டோ? என்னும் ப்ரஸ்நத்தின்மேல் இப்பாட்டு நடக்கிறதென்னு மிடந்தோன்ற ஸங்கதி யருளிச்செய்கிறார் (சேதநரித்யாதி).

"வண்ண மெண்ணுங்கால் - முன்னை வண்ணம் பாலின் வண்ணம், பின்னை வண்ணம்-பொன்னின் வண்ணம், அதுக்குப் பின்னை வண்ணம் - மணியின்வண்ணம், ஸ்வாபாவிகமான வண்ணம்-முழுதும் நிலைநின்ற-கொண்டல் வண்ணம், புரையும் திருமேனி-நாலுவண்ணத்தோடொத்திருக்கிற திருமேனியை, சாஸ்த்ரங்களிலே கேட்டுப் போகையன்றிக்கே, இன்ன

http://acharya.org

வண்ணமென்று காட்டீர்" என்றந்வயம் விவக்ஷித்தர்த்த மருளிச்செய்கிறார் (க்ஷேத்பாதி). தாமஸப்ரக்ருதிகளுக்கு (க) "நநமே ய..." என்கிற ...க்கையேஸ்வபாவமாய் பகவத்விஷயத்தில் ருசிபிறக்கைக்கு யோக்யதையில்லாமையாலே, (உ) *பாசியின்பசும் புறம்போலும் நீர்மையாய், ஜ்ஞாநவிபாக கார்யமான அஜ்ஞாநத்தாலே இருண்டு கலங்குமவருக்கும்படி (ஙு) "மல்லாண்டதிண் டோள்மணிவண்ணு" என்னும்படி கருடப்பச்சையுான மணிவண்ணத்தைக் கொண்டானென்று திருவுள்ளத்தில் கொண்டுக்கொண் டருளிச்செய்கிறார் (அதுக்கநந்தர மித்யாதி). ... (அ)

மூ.—எந்தை தந்தை தம்மானென்று‡ எமரேழுளவும்
வந்து நின்ற தொண்டரோர்க்கே வாசிவல்லீரால்
சிந்தைதன்னுள் முந்திநிற்றிர் சிறிதும் திருமேனி
இந்தவண்ணமென்று காட்டீரிந்தளூரீரே. (கூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
இந்தளூரீரே!		தொண்டரோர்க்கே	அடியோங்கள் விஷயத்திலேயே
எந்தை	எனக்கும் என்னுடைய தகப்பனுக்கும்	வாசிவல்லீர்	(வேஸவைஷம்யமிக்கவொண்ணுதென்று) விசாரியா நின்றீர்;
தந்தை	அவருடைய தகப்பனுக்கும் (இப்படி எங்கள் குலத்துக்கெல்லாம்)	சிந்தைதன்னுள்	(என்) நெஞ்சுக்குள்ளே
தம்மான்	ஸ்வாமியானவன்	முந்தி	சிரகாலமாகவும்)
என்று	என்று சொல்லிக்கொண்டு [ருஷர்கள்	நிற்றிர்	நில்லாநின்றீர், (ஆகி
எமர்	எங்களுடைய பூர்வபு	திருமேனி	திவ்ய விக்ரஹத்தை
ஏழளவும்	ஏழு தலைமுறையாக	இந்தவண்ணம் என்று	இவ்விதமானவர்ணத்தை யுடையதென்று
[illegible]	(தேவருடைய) கைங்கர்யத்துக்கிசைந்து	சிறிதும்	அல்பமும்
	வந்து	காட்டீர்	காட்டுகிறிலீர். (கூ)
நின்ற	[illegible] பட்டுநின்ற		

[illegible] — [illegible]ம்பாட்டு. (எந்தையித்யாதி) என்னுடைய [illegible] எழுபடிகால் தேவர் திருவடிகளில் கைங்கர்யத்தை [illegible] வந்துநிற்கிற எங்களுக்கே நேராகக் கணக்கிட [illegible] நின்றீர். (சிந்தை தன்னுள் முந்திநிற்றிர்) "அணுக்கைக் கீடாகக் கைக்கெட்டாதே யிருக்கிற நீர் இத்தைப்போர வளர்க்கிறவித்

(க) ரா-யு-ருகூ-கக. (உ) தி-ச-வி-சச. (ஙு) தி-பல்லா-க.
‡ (பா) என்றெமரேழுளவும், எமரேழேழுளவும்.

ன்?'' என்று பிள்ளான். நாமென்ன† வாசிவைத்தோமாகத் தான் இப்படி சொல்லுகிறதென்ன; இவருக்கு ஹ்ருதயப்ரகாசமே அமையும் என்று அறியிராதே, நெஞ்சிலே ப்ரகாசிக்கிற வோபாதி அணைக்கைக்கு மெட்டுதல், அணைக்கைக் கெட்டாதாப்போலே ஹ்ருதயத்திலே ப்ரகாசியாதிருத்தல் செய்யப்பெற்றிலோம். (சிறிதும்) கொஞ்சமும் குறைவறக் காட்டுகிறுப்போலே யாய்த்து கண்ணுக்கு ஒன்றும் காட்டாதொழிகிறபடி. பண்டொரு ராஜா விஷய ப்ரவணனாய் நாட்டுக்கு காட்சி கொடாதொழிய, இவனுடைய ஸத்பாவத்திலே அதிசங்கை பண்ணின ராஜலோகத்தைக் கண்ட மந்த்ரிகள் வாசலிலே வந்து கூப்பிட, ஜாலகத்வாரத்தாலே காலே நீட்டிவிட்டானிறே. (இந்தருளிரோ) நெஞ்சில் ப்ரகாசத்தை யொழியவே, நித்யஸூரிகளுக்குக் காட்சி கொடுக்கும் வடிவை அங்குள்ளாரோபாதி முழுக்கக் காட்சி கொடுக்கைக்காக வன்றோ இங்கு வந்து நிற்கிறது. ... ... (௯)

அ௫.—ஒன்பதாம்பாட்டு. (எந்தை யித்யாதி) அவ்வவ காலாநுகுணமாக அவர்களுகந்தபடிக்கெல்லாம் காட்டவேணுமோ, உம்முடைய பேராசை ஒருவரா லாற்றப்போமோ, உமக்காக ஆஶ்ரிதரிட்ட வழக்காக்கிக்கொண்டு நின்ற அர்ச்சாவதாரத்தைக் காட்டிக்கொடுத்திருக்கவும் த்ருப்தியின்றிக்கே யிருந்தீரே என்ன: நீர் ப்ரயோஜநாந்தர பரர்க்காக (க)*மீனாயாமையுமாய் நரசிங்கமுமாய்க் குறளாய்க் காநேரனமுமாய்ப் பிறக்கலா மித்தனை போக்கி, *குடி குடியாட் செய்யும் தொண்டரான எங்களுக்குக் காட்டக்கூடுமோ, ஆநல் நெஞ்சிலே நீர் ப்ரகாசிப்பானென் என்னுசை வளரும்படி என்று கிலாய்த்து, சிறிதும் காட்டாதே போனீரென்கிறுரென்று ஸங்கதி,

எந்தைக்கும் தந்தைக்கும் தம்மான ஸ்வாமியென்றெண்ணி என்று சப்தார்த்தமா யருளிச்செய்கிறுர் (என்னுடைய வித்யாதி). (கணக்கெட வல்லீர்) என்றது-என்னெஞ்சில் தோற்றுகை போக்கி அத்தைக் கண்ணுக்குக் காட்டவொண்ணுதென்று விசாரிக்க வல்லீரென்கை. (இத்தைப்போர வளர்க்கிறதென்) பேராசையை வளர்க்கிற தென்னென்றபடி. கீழ்ச்சொன்ன ஸம்வாதாநுகுணமாக ப்ரஶ்ந ப்ரதிவசந முகேந அர்த்த மருளிச்செய்கிறுர் (நாமென்ன வித்யாதி). (ஹ்ருதய ப்ரகாசமே) என்றது - அந்தர்யாமியா யிருக்கையே யென்கை; (நெஞ்சிலே ப்ரகாசிக்கிற) என்றது-(உ)*அரவத்தமளிப்படியே ஸ்விக்ரஹனாய் விளங்குகை யென்கை. அன்றிக்கே, ஹ்ருதயப்ரகாச மென்றதும் - ஸவிக்ரஹ ப்ரகாசமேயாய், அவ்வ

† (பா) வாசியறிந்தோ மாகத்தான். வாசி யடித்தோமாகத்தான்.
(க) தி-வாய்-நி-௩-௫. (உ) பெரி-திரு-நி-உ-௫௦.

http://acharya.org

ளவு போருமென்றிராதே யென்று பகவதபிப்ராயத்தைச் சொன்னபடியா கவுமாம். சிறிது காட்டிலுல் போருமென்கைக்கு ஸம்வாதம் காட்டுகிறு (பண்டொருவித்யாதி). ... ... (௬

வ்யா.—ஏரார்பொழில் சூழிந்தளூரிலெந்தை பெருமானைக்
காரார்புறவில் மங்கை வேந்தன் கலியனொலிசெய்த
சீரரின் சொல் மாலை கற்றுத் திரிவாருலகத்து
ஆராரவரே யமரர்க்கென்று மமரராவாரே. (௧௦

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஏர் ஆர்	அழகு மிக்கிருந்துள்	மாலை	சப்தஸந்தர்ப்பரூபமான இப்பத்துப் பாசுரத்தையும்
பொழில்	சோலைகளாலே [ள		
சூழ்	சூழப்பட்ட		
இந்தளூரில்	திருவிந்தளூரி லெழுந்தருளியிருக்கிற	கற்று	அப்யஸித்து
எந்தை	எனக்கு ஸ்வாமியான	திரிவார்	நிர்ப்பயமாக ஸ்வைரஸஞ்சாரம் பண்ணு
பெருமானை	ஸர்வேஶ்வரன் விஷயமாக, [ருக்கிற	உலகத்து	லோகத்தில் [மவர்கள்
கார் ஆர்	மேகங்கள் நிறைந்தி	ஆர் ஆர்	எவர் (எவர்கள், ஏதேனும் ஜந்மவ்ருத்தாதிகளை யுடையராயினும்),
புறவில்	பர்யந்த ப்ரதேசங்களோடு கூடிய		
மங்கை	திருமங்கைக்கு		
வேந்தன்	ராஜாவாகிய	அவரே	அவர்களே
கலியன்	ஆழ்வார்	அமரர்க்கு	நித்யஸூரிகளுக்கு
ஒலிசெய்த	அருளிச்செய்ததாய்,	என்றும்	ஸர்வகாலத்திலும்
சீர் ஆர்	பகவத்குணங்கள் நிறைந்திருப்பதாய்,	அமரர் ஆவார்	கொண்டாடத் தகுந்தவர்களா யிருப்பர்கள். (௧௦)
இன்சொல்	மதுரமான ஸூக்தியை யுடையதாய்,		

வ்யா.—பத்தாம்பாட்டு. (ஏரார்) அழகுமிக்கிருந்துள்ள பொழிலாலே சூழப்பட்ட திருவிந்தளூரிலே வந்து ஸந்நிஹிதனாய் எனக்கு ஸ்வாமியான ஸர்வேஶ்வரனைக் கவிபாடிற்று. (காராரித்யாதி) நிரந்தர மேக ஸஞ்சாரத்தை யுடைத்தான பர்யந்தத்தோடு கூடின திருமங்கைக்கு நிர்வாஹகரான ஆழ்வாருளிச்செய்தார். கவிதானேவென்றுக்க

http://acharya.org

(சீராரித்யாதி) பகவத்குணங்களை நிறையத்தொடுத்த தொடை. (க) "அஹம் வக்தா பவாந் ஶ்ரோதா வாச்யோயோகோ விமுக்தித:" (உ) [ரகுவம்ஶசரிதம் - ரகுவம்சரிதம்] ரகுகுலத்தில் ரக்ஷகரான பெருமாளுடைய வ்ருத்தாந்தம் சொல்லிற்று. [முநிப்ரணீதம் - முநிப்ரணீதம்] ஆப்ததமனானவனைய்த் துச் சொன்னன். [தசசிரஸ்ஸம்வதம் - தசசிரஸ்ஸம்சவதம்] நாட்டுக்குக் களையறுத்துக் கொடுத்தபடியாய்த்துச் சொல்லிற்று. (கற்றுத்திரி வார்) இவற்றை அப்யஸித்து, அந்த கர்வத்தாலே யமாதிகள் தலைமே லே அடியிட்டுத் திரியுமவர்கள். (ஆரார்) இவற்றை அப்யஸிக்கு மித் தனையே வேண்டுவது; அவர்களுக்கு ஜந்மவ்ருத்தாதிகளோதேனுமாக வுமாம். (அவரே யமரர்க்கென்று மமரராவாரே) அந்த ஜந்மத்திலே அந்த வ்ருத்தத்திலே அந்த ஜ்ஞாநத்திலே அந்த ஜந்மாதிகளால் வரு முத்கர்ஷம் வேண்டாதே, ஸ்வதஃ உத்கர்ஷத்தை யுடையரான நித்ய ஸூரிகளே சிரஸா வஹிக்கப் பெறுவர்.... ... ... (கo)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அந.—பத்தாம்பாட்டு. (ஏராரித்யாதி) ப்ரபந்த ப்ரதிபாத்ய தத்வக் த்ரு வைலக்ஷண்யங்களைச் சொல்லுவாருண்டோ வென்ன வருளிச்செய்கி ருர் (அஹமித்யாதி). (ங) "நமன்றமர் தலைகள்மீதே நாவலிட்டுழிதருகின் றோம்" என்றத்தை யுட்கொண்டு, "திரிவார்" என்றதுக் கர்த்த மருளிச் செய்கிருர் (இவற்றை யித்யாதி). ... ... (கo)

ஜீயர் திருவடிகளே சரணம்.

நாலாம்பத்தில் ஒன்பதாந்திருமொழி முடிந்தது.

(க) (உ) ரா-பா-உ-சச- (ங) தி-மா-க,

http://acharya.org

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

நாலாம்பத்து பத்தாந் திருமொழி.

ஆய்ச்சியர் ப்ரவேசம்.

வ்யா.—"நினைத்த வகைகளெல்லாம் பரிமாறப் பெற்றிலோம்" என்றின்னதானார் - கீழ்; நீரிப்படி இன்னதாகிற தென்? நம்மை ஆசைப்பட்டார்க்கு நினைத்த வகைகளெல்லாம் பரிமாறலாம்படி ராம க்ருஷ்ணாத்யவதாரங்களைப் பண்ணி முகங்கொடுத்த நாமன்றோ திருவெள்ளியங்குடியிலே வந்து ஸந்நிஹிதரானோம், ஆனபின்பு நினைத்த வகைகளெல்லாம் பரிமாறத்தட்டென்? என்று ஸமாதாநம்பண்ண, ஸமாஹிதராய் அவனைப்பேசி அநுபவிக்கிறார். (க)"ஶ்ரீதேவகீஸாயகஃ ப்ரஸாதாயச ஜாயதே-ததேவ கோபாய யதஃ ப்ரஸாதாயச ஜாயதே" இறே.

அரு.—ஆய்ச்சியின்ப்ரவேசம். கீழு மிங்கு மர்ச்சாவதாரமாகை ஒத்திருக்க, அங்கே வெறுப்பும் இங்கே ஸந்தோஷமும் கூடுமோ வென்ன வருளிச்செய்கிறார் (ததேவேத்யாதி). ஒரு குணவிஷ்காரத்தைத் தோற்றுவித்தா னென்கை. ... ... (க)

மூ.—ஆய்ச்சியரழைப்ப வெண்ணெயுண்டொருகா
லாலிலை வளர்ந்தவெம்பெருமான்
பேய்ச்சியைமுலையுண்டிணை மருதிறுத்துப்
பெருநிலமளந்தவன்கோயில்
காய்த்த நீள் கமுகும் கதலியும் தெங்கு
மெங்குமாம் பொழில்களின்நடுவே
வாய்த்த நீர் பாயும் மண்ணியின் தென்பால்
திருவெள்ளியங்குடி யதுவே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஆய்ச்சியர்	இடைச்சிகள்	ஆலிலை	ஆலந்தளிரில்
அழைப்ப	முறையிடும்படியாக	வளர்ந்த	கண்வளர்ந்தருளினவ னைக்கொண்டு
வெண்ணெய்	வெண்ணெயை		
உண்டு	அமுதுசெய்து,	எம்பெருமான்	எனக்கு ஸ்வாமியான வனாய்,
ஒருகால்	ஒருகாலத்திலே (ப்ரளயகாலத்திலே)	பேய்ச்சியை	பூதனையினுடைய

(க)

http://acharya.org

முலை	ஸ்தநத்தை
உண்டு	அமுதுசெய்தும் (அவளை முடித்து)
இணை	சேர்ந்திருக்கிற
மருது	மருதமரங்களை
இறுத்து	முறித்தும்,
பெருநிலம்	விசாலமானபூமியை
அளந்தவன்	(மஹாபலியி னிடத்தில் நின்றும்) அளந்துகொண்டவனுமான ஸர்வேஶ்வரன் நித்யவாஸம் பண்ணுகிற
கோயில்	திவ்யதேசமானது,
காய்த்த	காயாநின்றுள்ள
நீள்	உயர்த்தியை யுடைய
கமுகும்	பாக்குமரங்களும்
கதலியும்	வாழைமரங்களும்
தெங்கும்	தென்னைமரங்களும்
எங்குமாம்	எங்கும் நிறைந்திருக்கிற
பொழில்களின்	சோலைகளினுடைய
நடுவே	நடுவில்
வாய்த்த	ஸம்ருத்தமான
நீர்	ஜலமானது
பாயும்	பாயாநின்றுள்ள
மண்ணியின்	மண்ணியாற்றினுடைய
தென்பால்	தென் கரையிலிருக்கிற
திருவெள்ளியங்குடி	திருவெள்ளியங்குடியென்கிற
அதுவே	அந்த திவ்யதேசமேயாம். (௧)

வ்யா.—முதற்பாட்டு. (ஆய்ச்சியரழைப்ப) பஞ்சலக்ஷம் குடியில் இடக்கை வலக்கை வாசியறியாத இடைச்சிகள் கையெடுத்துக் கூப்பிடும்படி வெண்ணெயை யமுதுசெய்து. (ஒருகாலாலிலைவளர்ந்த) அப்பருவத்தில் ஜகத்தை யடங்கலும் வயிற்றிலேவைத்து, கூப்பிடுகைக்கு மொருவரில்லாத ஸமயத்திலே, ஒருபவனான ஆலந்தளிரிலே கண்வளர்ந்தருளின. (எம்பெருமான்) ஆஶ்ரித ஸ்பர்சமுள்ள த்ரவ்ய மொழியச்செல்லாமையையும், அகடித கடநாஸாமர்த்யத்தையும் காட்டி என்னை அநந்யார்ஹனாக்கினவன். (பேய்ச்சியை) துரபிஸந்தியோடே வந்த பூதனையுடைய முலையையுண்டு அவளை முடித்து, பொல்லாத அபிஸந்தியை யுடைத்தாய் தன்னிலே புணர்ந்துநின்ற மருதுகளை முறித்து. (பெருநிலமித்யாதி) மஹாபலியாலே அபஹ்ருதமான பூமிப்பரப்பையடைய அநாயாஸேந அளந்துகொண்டவன் வர்த்திக்கிறதேசம்.

(காய்த்த) "ஆஶ்ரயணீய வஸ்து ஸந்நிஹிதமான விடம்" என்று தோற்றும்படியாய்த்து அத்தேசத்தில் போக்யதை யிருப்பது. எல்லா மெங்குமொக்க பக்வமாயாய்த்து அங்கிருப்பது. (வாய்த்த நீர்பா

http://acharya.org

யும்) சேர்ந்து குளிர்ந்த தண்ணீரே குடிக்கும் செருக்கரைப்போலே யாய்த்து. (திரு வெள்ளியங் குடியதுவே) அவன் கோயிலதுவே என்கையாலே - ஆஸ்ரயணீயஸ்த்தலமதுவே என்கை. ... (க)

அரு. — முதற்பாட்டு (ஆய்ச்சியரித்யாதி) யசோதாஸ்தநந்தயமும் வடதளசிசுவும் திருக்குறளனும் ஒத்தவடிவும் செயலுமாயிருப்ப ராகையாலே, தமக்குக் கீழ்த்திருமொழி லிலாய்ப்பெல்லாம் தீரும்படி பரிவுபிறந்து தம்மை யெழுதிக்கொடுத்து, அவன் வந்திருக்கிற தேசத்தைப் பற்றுகிறுரென் றவதாரிகை.

வெண்ணெயுண்டு என்னவே யமைந்திருக்க, "ஆய்ச்சியரழைப்ப" என்று மவர்க்குக் கருத்தென்னென்ன வருளிச்செய்கிறுர் (பஞ்சலக்ஷமித்யாதி). ஆக்களையிட்டுச் சொல்லும்படியான ஆயருடைய ஸ்த்ரீகளகப்படப் பரிந்து (க) "வயிறு பிள்ளை பரமன்று" என்று கூப்பிடும்படி யுண்டானென்று, தம்பரிவாலே அங்ஙனே விசேஷித்துச் சொன்னுரென்று கருத்து. வெண்ணெயுண்டபோது பரிவருண்டாய்க் கூப்பிடுவாருண்டாய்த்து, மண்ணையெல்லா முண்ணும்போது பரிவரில்லாத காலமாய்த்தென்னும் கருத்தாலே "ஒருகால்" என்கிறுரென் றருளிச்செய்கிறுர் (அப்பருவத்திலித்யாதி). மண்ணையுண்டபோது ஒருவருமில்லாமை துஷ்டரில்லை யென்றுறி யிருக்கலாமென்று அத்தைவிட்டு, மீளவும் இளம்பிள்ளையாய் முலையுண்டதிலேயும், இருவராய் க்ருதஸங்கேதரான விரோதிகளை முடித்த செயலிலு மாறியிருக்க வொண்ணுதென்று சொல்லுகிறுரென்று விவக்ஷித்தருளிச் செய்கிறுர் (துரபிஸந்தி யித்யாதி). விரோதியென்று நிரஸிக்கவும் கூடாதே தன்னைச் சிறுக்கி யிரக்க வேண்டும் செயலாகையாலே அத்தையருளிச்செய்கிறுரென்று விவக்ஷித்தருளிச் செய்கிறுர் (மஹாபலி யித்யாதி). ... ... (க)

மூ.—ஆனிரைமேய்த்தன் றலைகடலடைத்திட்
டரக்கர்தம் சிரங்களை யுருட்டிக்
கார் நிறைமேகம் கலந்ததோருருவக்
கண்ணனூர் கருதிய கோயில்
பூ நிரைச் செருந்தி புன்னை முத்தரும்பிப்
பொதும்பிடை வரி வண்டு மிண்டித்
தேனிரைத்துண்டங் கின்னிசை முரலும்
திருவெள்ளியங்குடி யதுவே. (உ)

(க) கா.எ.ந.

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஆநிரை	பசுக்கூட்டங்களை	செருந்தி	செருந்தி மரங்களினு டையவும்
மேய்த்து	ரக்ஷித்தவனாய்,	அரும்பி	அரும்பு விடாநின்ற (மேல்மேல் உண்டாகாநின்ற) [தான
அன்று	அந்த ராமாவதாரகாலத்தில்	முத்து	முத்துக்களை யுடைத்
அலை	அலைமோதாநின்ற	புன்னை	புன்னை மரங்களினு டையவும்
கடல்	ஸமுத்ரத்தை	பொதும்பு	பொந்துக்களுடைய
அடைத்திட்டு	அணைசெய்து	இடை	நடுவிலே
அரக்கர்தம்	பலிஷ்ட்டரான ராக்ஷஸர்களுடைய	வரி	ரேகைகளையுடைய (ஸுந்தரமான)
சிரங்களை	தலைகளை [ளாய்	வண்டு	வண்டுகள்
உருட்டி	அறுத்துத்தள்ளினவ	மிண்டி	நெருங்கியிருந்து
கார்	வர்ஷாகாலத்தில்	தேன்	மதுவை
நிரை	அடர்ந்திருக்கிற	இரைத்து	சப்தித்துக்கொண்டு
மேகம்கலந்து	மேகத்தோடொத்திருக்கிற	உண்டு	புஜித்து
ஓர்	அத்விதீயமான	அங்கு	அவ்விடத்திலே
உருவம்	வடிவையுடையனான	இன்	மதுரமாக
கண்ணனார்	ஸ்ரீக்ருஷ்ணன்	இசை	கானத்தை
கருதிய	விரும்பி வர்த்திக்கிற	முரலும்	பாடாநின்ற
கோயில்	திவ்யதேசமானது,	திருவெள்ளியங் குடியதுவே. (௨)	
நிரை	கொத்துக்கொத்தாக		
பூ	புஷ்பியாநின்ற		

வ்யா.—இரண்டாம்பாட்டு. (ஆநிரை) கோரக்ஷணம்பண்ணி, க்ஷோபி(பி)தமான கடலை அணைசெய்து, வரபலத்தாலே திண்ணிதான ராக்ஷஸருடைய தலைகளையுருட்டி. (கார்நிரை) கார்காலத்தில் நிறைந்த மேகம்போலே யிருக்கிற வடிவையுடைய க்ருஷ்ணன், "ரக்ஷணத்துக்குப் பாங்கானவிடம்" என்று திருவுள்ளம்பற்றி வர்த்திக்கிறகோயில்.

(பூநிரை) நிரை நிரையான பூக்களையுடைத்தான செருந்தி, அரும்பின முத்தையுடைத்தான புன்னை, இவற்றினுண்டான, பொதும்புகளிலே - த்வாரங்களிலே, தர்ஶநீயமான வடிவையுடைய வண்டுகள் நெருங்கிக்கொண்டு, மதுவநத்திற்புக்க முதலிகளைப்போலே பெரிய ஆரவாரத்தோடே மது பாநத்தைப்பண்ணி, உள்ளுப்புக்க த்ரவ்யம் இருந்தவிடத்தி லிருக்கவொட்டாதே ஆளத்தியையாநிற்கும்-ஸ்வேச்சையிலே பாடாநிற்குமாய்த்து. ... ... (௨)

http://acharya.org

அரு.—இரண்டாம்பாட்டு. (ஆஸ்ரையித்யாதி) அகடிதகடநம் பண்ணின ஸ்ரீவாமநாவதாரத்தோடும் வடதளசாயியோடும் சேர்த்து க்ருஷ்ணாவதாரத்தைத் திருவெள்ளியங்குடியிலே அநுபவித்தவர், க்ருஷ்ணாவதாரத்தை, அப்படி'ய, நீரில் கல் மிதக்கும்படி அகடிதகடநம் பண்ணினீரென்று, விரோதி நிரஸநசீலனான சக்ரவர்த்தித் திருமகனாக அநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

"அரக்கர் தம்" என்று-தாமான தன்மை சொல்லுகையாலே அத்'ந்த அருளிச் செய்கிறார் (வரபலத்தாலே யித்யாதி).... ... ... (உ)

மூ.—கடுவிடமுடைய காளியன்தடத்தைக்
கலக்கி முன்னலக்கழித்தவன்றன்
படமிறப் பாய்ந்து பன் மணி சிந்தப்
பல்நடம் பயின்றவன் கோயில்
படவரவல்குல் பாவை நல்லார்கள்
பயிற்றிய நாடகத் தொலிபோய்
அடைபுடை தழுவி யண்டநின்றதிரும்
திருவெள்ளியங்குடியதுவே. (ந)

பதம்.	உரை.
முன்	முற்காலத்திலே
கடு	க்ரூரமான [ன
விடம்உடைய	விஷத்தை யுடையனா
காளியன்	காளியனுடைய
தடத்தை	மடுவை
கலக்கி	சேறுக்கி(அவனை)[ணி
அலக்கழித்து	க்லேசப் படும்படிபண்
அவன்றன்	அந்தக்காளியனுடைய
படம்	படமானது
இற	முறியும்படியாக
பாய்ந்து	குதித்து
பல்மணி	(அவன்தலைகளிலுள்ள) அநேகமான மணிகளும்
சிந்த	சிதறும்படியாக
பல்நடம்	அநேகவிதமான நர்த்தநங்களை
பயின்றவன்	பண்ணுகின்ற ஸ்ரீக்ருஷ்ணன் வர்த்திக்கிற

பதம்.	உரை.
கோயில்	திவ்யதேசமானது,
படம்	அகன்றபடத்தை யுடைய
அரவு	ஸர்ப்பம்போன்ற
அல்குல்	ஜகநப்ரதேசத்தை யுடையராய்
நல்லார்	விலக்ஷணரான
பாவைகள்	ஸ்த்ரீகள்
பயிற்றிய	அப்யஸிக்கிற
நாடகத்து ஒலி	நாடகத்திலுண்டான சப்தமானது
போய்	உயரப்போய்
அடைபுடை	அஹோராத்ரம்
தழுவி	சேர்ந்திருந்து
அண்டம்	ஆகாசத்திலே
நின்று	ஒருபடிப்பட்டிருந்து
அதிரும்	கோஷியாநின்ற
திருவெள்ளியங்குடியதுவே! (ந)	

வ்யா.—மூன்றாம்பாட்டு. (கடுவிடமுடைய) நாலைந்துயோஜநத்துக்கவ்வருகே பறக்கிற பக்ஷிகள் சிறகற்று விழும்படி க்ரூரமான விஷத்

http://acharya.org

தையுடைய காளியனுடைய தடாகத்திலே மதியாதே போய்ப்புக்கு, அது குழம்பாம்படிபண்ணி, அலமந்து க்லேசப்படும்படியாக்கி. (அவன்றன்படமிறப்பாய்ந்து) கரையிலேநிற்கிற கடம்பினுச்சியிலே போயேறி, அவனுடைய பணங்களிறும்படியாகப்பாய்ந்து, அதிலுண்டான பலவகைப்பட்ட ரத்நங்கள் சிதறும்படி. (பல்நடம்பயின்றவன்கோயில்) அன்றுதுடங்கி பரதசாஸ்த்ரத்துக்கு வேண்டும் லக்ஷணங்களெல்லா மெழுதிக்கொள்ளலாம்படி பலவகைப்பட்ட ந்ருத்தங்களைப்பண்ணினவன் வந்து வர்த்திக்கிறதேசம்.

(படவரவித்யாதி) படத்தை யுடைத்தான பாம்போடொத்திருக்கிற நிதம்பப்ரதேசத்தையுடைய ஸ்த்ரீகள் சிரமஞ்செய்கிறபோதை நாடக த்வநியானது போய். (அடைபுடைதழுவி) அஹோராத்ரமணைந்து ஆகாசத்திலே நின்று கோஷியாநிற்குமாய்த்து. ... (௩)

அரு — மூன்றாம்பாட்டு. (கடுவித்யாதி) மற்றோரவதாரத்திலே போகவொட்டாதபடியான அகடித கடநமான காளிய நிரஸநத்தை யநுபவிக்கிருரென்றவதாரிகை.

"முன்-பூர்வகாலத்திலே, நடம் பயின்றவன்" என்றந்வய முட்கொண்டு வாக்யார்த்த மருளிச்செய்கிறார் (நாலைந்தித்யாதி). மேலே சொன்ன* பாவை நல்லாருடைய நடநத்துக்கு இவன் நடநம் ஹேதுவென்னுமிடம் தோன்ற பாவ மருளிச்செய்கிறார் (அன்றித்யாதி).

(சிரமம்செய்கை) பழகுகை. ... ... (௩)

மூ.—கறவை முன் காத்துக் கஞ்சனைக் காய்ந்த
காளமேகத் திருவுருவன்
பறவைமுன்னுயர்த்துப் பாற்கடல்துயின்ற
பரமனார் பள்ளிகொள் கோயில்
துறைதுறைதோறும் பொன்மணி சிதறும்
தொகு திரை மண்ணியின்தென்பால்
செறி மணி மாடக் கொடி கதிரணவும்
திருவெள்ளியங்குடியதுவே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கறவை	பசுக்களை [லே	காய்ந்த	சீறி யருளினவனுமாய்
முன்	க்ருஷ்ணவதாரத்தி	காளமேகம்	கறுத்த மேகம் போ
காத்து	ரக்ஷித்தும்,	திரு	ஸுந்தரமான [ன்ற
கஞ்சனை	கம்ஸனை	உருவன்	நிறத்தை யுடையவனுமாய்,

முன்	முற்காலத்திலே	மணி	ரத்நங்களையும்
பறவை	பெரிய திருவடியை	சிதறும்	கொழியாநின்ற
உயர்த்து	கொடியாக எடுத்துக் கட்டி	தொகு	சேர்ந்துவருகிற
		திரை	அலைகளையுடைய
		மண்ணியின்தென்பால்,	
பாற்கடல்	திருப்பாற்கடலிலே		
துயின்ற	கண்வளர்ந்தருளினவனுமாய்,	செறி	நெருங்க இழைக்கப்பட்ட [த்தான
பரமனார்	ஸர்வாதிகனுமான ஸர்வேச்வரன்	மணி	மாணிக்கங்களையுடை
		மாடம்	க்ருஹங்களிலே கட்டின
பள்ளிகொள்	கண்வளர்ந்தருளுகிற		
கோயில்	திவ்யதேசமானது,	கொடி	த்வஜங்களானவை
துறை துறை தோறும்	எல்லாத் துறைகளிலும்	கதிர்	ஸூர்யமண்டலத்தை
		அணவும்	அளாவியிருக்கிற
பொன்	ஸுவர்ணங்களையும்		திருவெள்ளியங்குடி யதுவே. (௫)

வ்யா.—நாலாம்பாட்டு. (கறவை) கோரக்ஷணத்தைப் பண்ணி, அந்த கோவம்ருத்தியைப் பொறுத கம்ஸனை யழியச்செய்த. (காள மேகத் திருவுருவன்) அழிவுக்கிட்ட வடிவுதானிருக்கிறபடி. ரக்ஷணத் துக்கீடாகப் பெரியதிருவடியை த்வஜமாகவெடுத்து, ப்ரஹ்மாதிகள் கூக்குரல் கேட்கும்படியாக அடுத்தணித்தாகத் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளின ஸர்வாதிகன் வந்து சாய்ந்தருளின கோயில்.

(துறைதுறையித்யாதி) துறைகள்தோறும் துறைகள்தோறும் பொன்மணிகள் கொழித்துக்கொடுவந்து எறடாநின்றுள்ள திரண்ட திரைகளை யுடைத்தான மண்ணியின்தென்பால், செறிய அழுத்தின மணிகளையுடைத்தான மாடங்களிலே கட்டின கொடிகளானவை ஆதித்யபதத்தளவும் சென்று அவனுக்கு இதஸ்ததஃ ஸஞ்சரிக்கவொண்ணாதபடி தகையாநிற்குமாய்த்து. ... ... (௪)

அரு.—நாலாம்பாட்டு. (கறவையித்யாதி) (க) ‹‹ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந:›› - ஏஷநாராயண ஶ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந:" என்கிறபடியே-க்ருஷ்ணவதாரத்துக் கடியான க்ஷீரார்ணவ சாயித்வத்தையுங் கூட்டி யநுஸந்திக்கிறாரென் றவதாரிகை.

(அழிவுக்கிட்ட) * கரியதிருமேனி வாடப்பசு மேய்க்கைக் கிட்ட. (மண்ணியின்) மண்ணியென்கிற நதியின்... ... ... (௪)

(க) ஹரிவம்சம்-௧௧௩-௬௨.

http://acharya.org

மூ.—பாரினையுண்டு பாரினையுமிழ்ந்து
பாரதம் கையெறிந்தொருகால்
தேரினையூர்ந்து தேரினைத்துரந்த
செங்கண்மால் சென்றுறைகோயில்
ஏர் நிரை வயலுள் வாளைகள் மறுகி
எமக்கிடமன்றிதென்றெண்ணிச்
சீர்மலிபொய்கை சென்றணைகின்ற
திருவெள்ளியங்குடியதுவே. (ரு)

பதம்.	உரை.
பாரினை	பூமியை
உண்டு	(ப்ரளயகாலத்தில்) அமுதுசெய்தும்
பாரினை	பூமியை
உமிழ்ந்து	(ஸ்ருஷ்டிகாலத்தில்) வெளிப்படுத்தியும்
ஒருகால்	க்ருஷ்ணவதாரத்தில்
பாரதம்	பாரதயுத்தத்திலே
கையெறிந்து	ஸேனையை வகுப்பு வகுப்பாகப் பிரித்தும், [தேரை
தேரினை	அர்ஜுநனுடைய
ஊர்ந்து	நடத்தியும், [தேரை
தேரினை	பீஷ்மாதிகளுடைய
துரந்த	பின்னே ஓடும்படி துடர்ந்தவனுமாய்
செம்கண்	(வாத்ஸல்யத்தாலே) சிவந்தகண்களை யுடையவனுமாய்
மால்	ஆஶ்ரித வ்யாமுக்தனுமான ஸர்வேஶ்வரன்

பதம்.	உரை.
சென்று	வந்து [கிற
உறை	நித்யவாஸம் பண்ணு
கோயில்	திவ்யதேசமானது,
ஏர்	உழுகிற ஏர்களுடைய
நிரை	வரிசைகளை யுடைத்தா
வயலுள்	கழனிகளிலுள்ள [ன
வாளைகள்	வாளை மத்ஸ்யங்களா
மறுகி	பயந்து [னவை
இது	இந்த வயலானது
எமக்கு	நாம் வாஸம் பண்ணுகைக்கு
இடம் அன்று	நிலம் அன்று
என்று எண்ணி	என்று நினைத்து,
சீர்	அழகாலே
மலி	ஸம்ருத்தமாயிருக்கிற
பொய்கை	தடாகங்களை
சென்று	கிட்டி
அணைகின்ற	அடையாநின்ற
திருவெள்ளியங்குடியதுவே. (ரு)	

வ்யா.— அஞ்சாம்பாட்டு. (பாரினையுண்டு இத்யாதி) பரப்பையுடைத்தான பூமியைத் திருவயிற்றிலே வைத்து, உள்ளுக்கிடந்து தளராதபடி வெளிநாடு காணப்புறப்படவிட்டு, பாரதஸமரத்திலே கையுமணியும்வகுத்து, ஒருகாலாஶ்ரிதன்பக்கல் வாத்ஸல்யத்தாலே

http://acharya.org

ஸாரத்யம்பண்ணி, அதிரத† (மஹாரத)ரான பீஷ்மாதிகள் தேரை விட்டோடும்படி துடர்ந்த. (செங்கண்மால் சென்றுறைகோயில்) ஆஶ்ரிதவாத்ஸல்யமடங்கலும் கண்ணிலே தோற்றும்படியிருப்பானும், ஆஶ்ரித வ்யாமுக்தனானவன் வந்து வர்த்திக்கிறதேசம்.

(ஏர்நிரை) ஏரினுடைய நிரையையுடைத்தான வயலிலுண்டான வாளைகளஞ்சி, எப்போதும் மாறாதே உழப்புக்கவாறே "இப்படி ஸாபாயமானவிடம் நமக்கு வாஸஸ்த்தாநமல்ல" என்றெண்ணி, நிரபாயமாக வர்த்திக்கலாம்படியான தேசத்திலே போய்ப் புகுவோமென்று, சீர்மலிபொய்கை சென்றணையுமாய்த்து; ஏர்களவிட்டுக் கொடுபோய்ப் பொய்கைகளிலுழுவாரில்லையே. "ஸம்ஸார மநித்யம்; துக்கம்" என்று அத்தைவிட்டு விரஜையைச்சென்று பற்றுவாரைப்போலே. (ரு)

அரு.—அஞ்சாம்பாட்டு. (பாரித்யாதி) க்ருஷ்ணாவதாரத்துக்கு ப்ரதாந ப்ரயோஜநமான பூபார (भूभार) நிரஸநத்தைச் சொல்லப்புக்கு, பூமிக்கு உபகரித்தபடியும் சொல்லுகிறாரென்று ஸங்கதி.

பீஷ்மர் தேரைவிட்டோடினதில்லையாகிலும், இங்ஙன் போகவேணுமென்று தொடர்ந்த துண்டாகையைப்பற்ற வருளிச்செய்கிறார் (அதிரதேத்யாதி).

ப்ரஹ்ம ருத்ராதிகளான வ்ருஷபங்களை அதிஷ்டித்து கர்மபாசங்களைக் கொண்டு கட்டியுழுகிற ஸர்வேஶ்வரன் ஸ்ருஷ்டிக்கிற லீலாவிபூதியைவிட்டு, பகவத்க்ருபா ஜலஜங்களான பாகவதர் நிரபாயமான விரஜா ஜலத்தில் போகையை யுட்கொண்டருளிச்செய்தாரென்னு மிடம் தோன்ற வருளிச்செய்கிறார் (ஸம்ஸாரமித்யாதி). ... ... (ரு)

சு.—காற்றிடைப்பூளை கரந்தனவரந்தை
யுறக்கடலரக்கர் தம் சேனை
கூற்றிடைச்செல்லக் கொடுங்கணைதுரந்த
கோலவில்லி ராமன்றன்கோயில்
ஊற்றிடை நின்ற வாழையின்கனிகள்
ளூழ்த்துவீழ்ந்தன வுண்டு மண்டிச்
சேற்றிடைக்கயல்களுகள் திகழ் வயல்சூழ்
திருவெள்ளியங்குடியதுவே. (சு)

---

† குண்டலிதம் க்வாசித்கம்,

பதம்.	உரை.	பதம்.	உரை.
காற்றிடை	பெருங்காற்றிலே	கோயில்	திவ்யதேசமானது,
பூளை	பூளைப்பூவானது	ஊற்றிடை	நீரூற்றுக்களுள்ள நிலங்களிலே
கரந்தன	உருமாய்ந்து போமா போலே	நின்ற	முளைத்திருக்கிற
கடல்	ஸமுத்ரம்போன்ற	வாழையின்	வாழை மரங்களினுடைய
அரக்கர்தம்	ராக்ஷஸர்களுடைய		
சேனை	ஸைந்யமானது	ஊழ்த்து	(கனியப்பழுத்து) இ
அரந்தைஉற	துன்பமுறும்படியாகவும்	வீழ்ந்தன	ஙிழேஉதிர்ந்த [ற்று
		கனிகள்	பழங்களை
கூற்றிடை	யமாலயத்தை	மண்டி	மேல்விழுந்து
செல்ல	கிட்டும்படியாகவும்	உண்டு	புஜித்து [வை
கொடு	க்ரூரமான	கயல்கள்	கயல் மத்ஸ்யங்களான
கணை	பாணங்களை	சேற்றிடை	சேற்று நிலங்களிலே
துரந்த	ப்ரயோகித்த	உகள்	துள்ளா நின்றுள்ளன
கோல	ஸௌந்தரமான	திகழ்	விளங்காநின்ற [வாய்
வில்லி	தநுஸ்ஸையுடைய	வயல்	கழனிகளினுலே
ராமன் தன்	சக்ரவர்த்தித் திருமகனுடைய	சூழ்	சுற்றப்பட்ட
		திருவெள்ளியங் குடியதுவே. (௬)	

வ்யா.—ஆரும்பாட்டு. (காற்றிடையித்யாதி) பெருங் காற்றிலே பூளையானதுபறந்து உருமாய்ந்து போமாபோலே. (அரந்தையுற) துன்பமுற. ஓதங்கிளர்ந்த கடல்போலே மிகைத்து வந்து தோற்றின ராக்ஷஸஸேனையெல்லாம். (கூற்றிடைச்செல்ல) முன்பு யமனைத்†திறைகொண்டு பரதந்த்ரனுக்கி வர்த்தித்தவர்கள், இப்போது அவனுக்குக்குடிமக்களாக. திக்விஜயம் பண்ணுகிறபோது முந்துற அழியச்செய்தது யமனையிறே. (கொடுங்கணைதுரந்த) பெருமாள் கண்பார்க்கிலும் கண்பாராத க்ரௌர்யத்தையுடைய அம்பைவிட்ட. (கோலவில்லிராமன்றன்கோயில்) கையில் விற்பிடித்த பிடியிலே முடிந்துபோகிற ராக்ஷஸரடங்க "இவன்கையிலே நாம் பட்டுப்போனுலாகாதோ" என்னும்படி தர்ஶநீயமான வில்லையுடைய சக்ரவர்த்தித் திருமகன் வர்த்திக்கிறகோயில். (க) "రఞ్జనీయస్య విక్రమైః - ரஞ்சநீயஸ்ய விக்ரமை:" என்றுனிறே. (உ) [చాపఞ్చ ముమోచ - சாபஞ்சமுமோச] கறுவி வேணுமென்று பொகடுவாரைப்போலே. அங்ஙனேயாக வேணுமிறே பொகட்டவிடத்திலே [వీరః - வீர:] என்னும்போது.

(க) ராயு-௧௦௬-௬. (உ) ரா-யு-௫௬-௧௪௦.

† திறைகொண்டு-ஜயித்து.

http://acharya.org

(ஊற்றிடையித்யாதி) நீர் நிலங்களிலேநின்ற வாழைகளானவை முற்றிப்பழுத்து அந்தப்பழங்கள் பேர்ந்துவிழுப்; ஆமிஷமானது கிடந்தவிடத்தே வந்துகிட்ட, அத்தை மேல்விழுந்து புஜித்து, சேற்றிலே யுண்டான வாளைகளானவை தன்செருக்குக்குப் போக்குவிட்டு உகளா நின்றுள்ள விளங்குகின்ற வயலாலே சூழப்பட்ட. நீர் நிலத்திற்போலேயாய்த்து சேற்றிலும் ஸஞ்சரிக்கும்படி, ப்ரளயத்தில் விடிலும் சேருக்கவற்றுய்த்து இவைதான் தன்செருக்காலே. ... (௬)

அ௫ — ஆறும்பாட்டு. (காற்றிடையித்யாதி). திருவெள்ளியங்குடியிலிருந்த கோலவில்லிராமனை க்ருஷ்ணபதாநங்களாலே அநுபவித்துக் கொடுவந்து, இரண்டாம்பாட்டில் * அரக்கர் சிரங்களுருட்டினபடி தன்னைக்காட்டிக்கொண்டு, அத்திவ்யதேசத்தி லெம்பெருமானை யநுபவிக்கிறு ரென்று ஸங்கதி.

பூளையானது - பூளைப்பூவானது. (துன்பமுற) என்றது - அலைந்துபோம்படி துக்கப்பட வென்றபடி. (கண்பார்க்கிலும்) தயை பண்ணிலும். வில்லுக்குக் கோலமாவது - பிடித்த பிடியிலே எதிரி மண்ணுண்ணும்படி யிருக்கை. வஜ்ராதிகளுக்கு அசங்காதவன்றுனே *ப்ருசார்த்தனும் சலிக்கும்படி காண்கையாலே. பெருமாள் விற்பிடியிலழகைக்கண்டு "நான் விற்பிடித்தது மொருபடியோ" என்று தன்னைத்தானே கறுவி வில்லையெறிந்து பொகட்டானென்று விவக்ஷித்து ப்ரமாணந்தர மருளிச்செய்கிறுர் (சாபஞ்சேத்யாதி). (கறுவி) என்றது-அவர் விற்பிடித்த வழகைக்கண்டு, "இவர் முன்னே நாம் என்ன விற்பிடித்தோம்" என்று "சீ" என்று வில்லைப் பொகட்டானென்கை. இப்படி அழகிலே ஈடுபட்டானென்கைக்கு ஜ்ஞாபகமென்னென்ன வருளிச்செய்கிறுர் (அங்ஙனே யித்யாதி) (க) "யோவஜ்ரபாத" இத்யாதியாலே - வீரத்வம் சொல்லி, ப்ருசார்த்தனுனென்றும் சொல்லி, புநஃ "வீரஃ" என்னும்போது - அவர் விற்பிடித்த பிடியில் சாதுர்யம் தன்னிடத்திலே தானே காணுமையாலே உகந்து தன்னை வெறுத்துவிட்டானென்னத் தட்டில்லை என்று கருத்து. "வில்லைக் காற்கட்டென்று பொகட்டான்" என்று நம்மாசார்யர்கள் அருளிச்செய்ததத்தோடு சேராதே யென்னில்; இதுவுமொரு யோஜனையென்று கொள்வது.

ஊழ்த்து - இற்று, வீழ்ந்தபழங்களென்று சப்தார்த்தம் விவக்ஷித்தருளிச்செய்கிறுர் (நீரித்யாதி). மீன்கள் சிறியவற்றைப் பெரியவை தின்னுமென்று ப்ரஸித்தியுண்டாகையாலே, வாழைப்பழங்களை யு மவையாக புத்திபண்ணி உண்ணுநின்றன வென்னுமிடந்தோன்ற வருளிச்செய்கிறுர்

(க) ரா-யு-௩௬-௧௪௦.

(ஆமிஷமித்யாதி).வாளைகளை "சேற்றிடை" என்பானென், நீரில் என்னவொண்ணாதோ வென்ன; மத்ஸ்யங்களுடைய மிடுக்குத் தோற்றவேண்டி விசேஷித்தாரென்றொரு பரிஹார மருளிச்செய்கிறார் (நீர்நிலத்திலித்யாதி). நீரிலே என்று தான்சொல்ல வழியில்லை, இவை இருந்தவிடமெல்லாம் தானே சேறுக்குகையாலே என்றொருபரிஹாரமருளிச்செய்கிறார் (ப்ரளயத்திலித்யாதி). ... ... (சா)

மூ.—ஒள்ளிய கருமம் செய்வனென்றுணர்ந்த
மாவலி வேள்வியிற்புக்குத்
தெள்ளியகுறளாய்மூவடி கொண்டு
திக்குற வளர்ந்தவன் கோயில்
அள்ளியம்பொழில் வாயிருந்து வாழ்குயில்க
ளரியரியென்றவையழைப்ப
வெள்ளியார்வணங்க விரைந்தருள்செய்வான்
திரு வெள்ளியங்குடியதுவே. (எ)

பதம்.	உரை.
ஒள்ளிய	அழகியதான
கருமம்	ஸர்வஸ்வதாநமாகிற கர்மத்தை
செய்வன்	செய்யக்கடவேன்
என்று உணர்ந்த	என்று நினைத்த
மாவலி	மஹாபலியினுடைய
வேள்வியில்	யாகத்திலே
தெள்ளிய	தெளிவை (த்ருடமான நிஸ்சயத்தை) யுடைத்தான
குறளாய்	வாமநனாய்க் கொண்டு
புக்கு	ப்ரவேசித்து
மூவடி	(அந்த மஹாபலியினிடத்தில் நின்றும்) மூன்றடி பூமியை
கொண்டு	தாநம்வாங்கி
திக்கு உற	எல்லாத் திக்குக்களிலும்சேரும்படியாக
வளர்ந்தவன்	திருமேனியிலே வளர்ந்தவனுடைய

பதம்.	உரை.
கோயில்	திவ்யதேசமானது,
அள்ளி	தாதுகளையுடையதாய்
அம்	ஸுந்தரமான
பொழில்வாய்	சோலைகளிலே
இருந்து	வாஸம் செய்து கொண்டு
வாழ்	ஸுகியாநின்ற
அவை குயில்கள்	அந்தக் குயில்களானவை
அரிஅரி என்று	ஹரி: ஹரி: என்று
அழைப்ப	அழைக்கும்படி யிருப்பதாய்
வெள்ளியார்	ஸத்வ ஸ்வபாவமானவர்கள்
வணங்க	வணங்காநிற்க
விரைந்து	அதிசீக்ரமாக
அருள்செய்வான்	அவர்களுக்கு க்ருபை செய்யாநின்ற ஸர்வேஸ்வரனுடையதான

திருவெள்ளியங் குடியதுவே. (எ)

http://acharya.org

வ்யா.—ஏழாம்பாட்டு. (ஒள்ளியகருமம்) யாகமென்றொரு வ்யாஜத்தையிட்டு "என்னுடைய ஸர்வதநத்தையும் பரார்த்தமாக்கக் கடவேன்" என்றநுஸந்தித்த மஹாபலியுடைய வென்னுதல். (உணர்ந்து) என்றாகில், "என்னை இரந்த இந்த்ரனுக்காக நானென்னை இரப்பாளனுக்குவன்" என்று மஹாபலி யஜ்ஞவாடத்திலே போய்ப்புக்கு. (தெள்ளியகுறளாய்) சுக்ரன்மற்றையார் "இவன் தேவகார்யம் செய்யவந்தா னித்தனை, அகப்படாதேகிடாய்" என்று உபதேசித்தால், "நான்கொண்டல்லதுபோகேன், புக்ககாரியம் தலைக்கட்டாதே மீளுவனோ" என்னும் தெண்மையையுடைய வாமநனாய். அவன் க்ரோதித்தாலும், இவன் "கொடேன்" என்றாலும், தான் "கொண்டல்லது போகேன்" என்று போய்ப் புக்கானாய்த்து. "மூன்றடி தரவேணும்" என்றபேக்ஷித்து அநந்தரம் திக்குக்களை யடையத் தன்வடிவாலே பாரித்தானாய்த்து.

(அள்ளி யித்யாதி) அள்ளியொன்று - அல்லியாய - தாதுகளையுடைத்தாய், அழகிதாயிருந்துள்ள பொழிலிடத்திலே யென்னுதல்; அன்றிக்கே, அளியை - அள்ளியென்றதாய், அத்தாலே - தண்ணளியாய், குளிர்ந்து தர்ஸநீயமான பொழிலிடத்திலேயிருந்து அங்குள்ள ப(ஷ்)லாதிகளைபுஜித்து வர்த்திக்கிற குயில்களானவை, ஸத்வநிஷ்டர் ப்ராஹ்மமுஹூர்த்தத்திலே எழுந்திருந்து "ஹரி:, ஹரி: - ஹரி:, ஹரி:" என்னுமாபோலே திருநாம ஸங்கீர்த்தநம் பண்ணுமாய்த்து. ப்ராஹ்மணருடைய யாத்ரையாயிருக்குமாய்த்து அங்குத்தை திர்யக்குக்களுக்கும். (வெள்ளியார்) சுத்தபாவரானவர்களாஸ்ரயிக்கிற வென்னுதல்; அன்றிக்கே, சுக்ரன் அத்தேசத்தை உபாஸித்தான் என்றொரு ப்ரஸித்தியுண்டு, அத்தைச் சொல்லிற்றாகவுமாம். வெள்ளியாரென்கிறது - அவனை ஆதரித்துச் சொன்னபடி. (வெள்ளியார் வணங்க) ருத்ரன் வந்தாஸ்ரயிக்க, (க) "ஸ்வப்நலப்தம் தநம்யதா - ஸ்வப்நலப்த்தம் தநம்யதா" என்கிறபடியே - சடக்கென அவன் பாதகத்தைப் போக்கினவன். (விரைந்தருள்) வணங்கி யெழுந்திருப்பதுக்கு முன்னே அவர்களுக்கு பலத்தைக் கொடுக்குமாய்த்து. ... ... (எ)

அரு.—ஏழாம்பாட்டு. (ஒள்ளியவித்யாதி) *கோலவில்லி ராமன்றனே பெருமில மளந்தவனாக முதற்பாட்டிலே ப்ரஸங்கித்தாராகையாலே, அளந்த ப்ரகாரத்தை இங்கே விசதமாக வநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

http://acharya.org

"உணர்ந்த" என்று பாடம் விவக்ஷித்து ப(ஃ)லிக்கு விசேஷணமாக அருளிச்செய்து, "உணர்ந்து" என்று ல்யபந்தமாக பாடமான பக்ஷத்திலே ஸ்ரீவாமநனுக்கு விசேஷணமான படியை யருளிச்செய்கிறார் (உணர்ந்தித்யாதி). நான் கொண்டல்லது போகேனென்று நிஸ்சயரூப ஜ்ஞாநத்தை "தெளிவு" என்று விவக்ஷித்து, கலக்குவார் நூறாயிரம் பேரிருந்தாலும் இவன் கார்யத்தில் ஸம்சயத்தாலே கலங்காம லிருந்தானென்றருளிச் செய்கிறார் (சுக்ரனித்யாதி). (அவன்) சுக்ரன். (இவன்) மஹாபலி.

வெள்ளி மலையை யுடையவனென்றாய், மூன்றாமர்த்த மருளிச்செய்கிறார் (ருத்ரனித்யாதி). ... ... (௭)

மூ.—முடியுடையமரர்க்கிடர் செய்யுமசுரர்
தம்பெருமானை யன்றரியாய்
மடியிடைவைத்து †மார்வை முன்கீண்ட
மாயனார் மன்னியகோயில்
படியிடை மாடத்தடியிடைத்தூணில்
பதித்த பன்மணிகளி னொளியால்
விடிபகலிரவென் றறிவரிதாய
திரு வெள்ளியங்குடி யதுவே. (௮)

பதம்.	உரை.	பதம்.	உரை.
முடியுடை	கிரீடம்பூண்டு(அபிமானித்து) இருக்கிற	மாயனார்	ஆஸ்சர்யபூதரான ஸர்வேஸ்வரன்
அமரர்க்கு	தேவர்களுக்கு	மன்னிய	பொருந்தியிருக்கிற
இடர்	துன்பத்தை	கோயில்	திவ்யதேசமானது,
செய்யும்	விளையாநின்ற	படியிடை	பூமியிலே யுண்டான
அசுரர்தம்	அஸுரர்களுக்கு	மாடத்து	க்ருஹங்களிலே
பெருமானை	ராஜாவாகிய ஹிரண்யனை,	அடியிடை	நாட்டியிருக்கிற
அன்று	ப்ரஹ்லாதன் நலிவுபட்ட அக்காலத்தில்	தூணில்	ஸ்தம்பங்களில்
அரியாய்	நரஸிம்ஹமாய்க் கொண்டு	பதித்த	இழைக்கப்பட்ட
முன்	முன்னமே	பல்	நாநாவிதமான
மடியிடை	மடியிலே	மணிகளின்	ரத்நங்களுடைய
வைத்து	ஏறிட்டுக்கொண்டு	ஒளியால்	காந்திகளாலே
மார்வை	அவனுடைய மார்வை	விடி	விடிவுகாலமென்றும்
கீண்ட	கிழித்துப் பொகட்ட	பகல்	பகல்காலமென்றும்
		இரவு என்று	ராத்ரிகாலமென்றும்
		அறிவுஅரிதாய	அறிகைக்கு அசக்யமான
		திருவெள்ளியங்குடியதுவே.	(௮)

† (பா) மார்வம்.

வ்யா —எட்டாம்பாட்டு.(முடியித்யாதி)"ஸம்வரோஹம்"என்று அபிமாநித்திருக்கிற தேவஜாதிக்கு க்லேசத்தை விளைக்கிற, அஸுரேந்த்ரனுண்டு - ஹிரண்யன், அவனை. (அன்று) சிறுக்கனுக்கு அவன் நலிவைப்பண்ணினவன்று, நரஸிம்ஹமாய். (மடியிடைவைத்து) பிராட்டிபோல்வாரை ஏறிட்டுக்கொள்ளக்கடவ மடியிலே, துஷ்ப்ராக்ருதியான ஹிரண்யனை ஏறிட்டு. "(க)'தன்னுடைய தாள்மேல் கிடாத்தி' என்கிற விடத்துக்கு பட்டரருளிச்செய்ய நான் கேட்டேன்" என்று பிள்ளையருளிச்செய்வர்; "ப்ரதிகூலனான ஹிரண்யனைவிட்டு, ஆசையுடைய வென்னையன்றோ அம்மடியிலே ஏறிட்டுக்கொள்ள வடுப்பது" என்று தம்மைப் பார்த்தருளிச் செய்தாராக. அவனுடைய பரந்த மார்வைக் கிழித்துப் பொகட்ட ஆச்ரிதவ்யாமோஹத்துக்கு அவதியில்லாதவர் நித்யவாஸம் பண்ணுகிறதேசம்.

(படி) பூமியிலே யுண்டான மாடங்களில் நட்ட தூணடியிலே அழுத்தின நாநாவான ரத்நங்களினொளியாலே அங்குள்ளார்க்கு திவாராத்ர விபாகம் பண்ணவொண்ணாதபடி யாயிருக்குமாய்த்து. இவை தான் ஒரு காலவிசேஷங்களிலே யுண்டாகையால் சொல்லிற்றாகவுமாம். அன்றியே, இவருடைய உகப்புக்கு அவதியில்லாமையாலேயாகவுமாம். உகந்த விஷயங்களில் எல்லா நன்மைகளு முண்டாகத் தோற்றுமிறே. ... ... (அ)

அரு.—எட்டாம்பாட்டு. (முடியித்யாதி) ஸ்ரீவாமநன்படியநுஸந்திக்க, அது ஒரு படியன்றிக்கே இருபடியாலே படியெல்லா மளக்க, இப்படி இன்ன மொருபடியுண்டோ வென்றுராய, ஒருபடி இருபடியான நரஸிம்ஹத்தின்படியை யநுபவிக்கிறாரென்று ஸங்கதி. பலபடியநுபவிப்பார்க்கு ஒருஸங்கதி படவேணுமே.

"அரியாய் - மார்வை - கீண்ட" என்ன வமைந்திருக்க "முன் - மடியிடைவைத்து" என்று விசேஷிக்க வேணுமோவென்ன வருளிச்செய்கிறார் (பிராட்டி யித்யாதி). இப்படி "மடி" என்றத்தாலே கருத்தாக வேணுமோ, வரபலத்தால் தரையில் கொல்லக்கூடாமையாலே வைத்தானென்கிறு ரென்றதாறுலோ வென்ன; இவர்க்கிப்படி விவக்ஷிதமாகலாமென்கைக்கு ஸ்தலாந்தரத்தில் பாசுரத்துக்குத் தாத்பர்யம் ஆப்தோபதிஷ்டமாய்த் தாகையாலே,ப்ரேமபரவசர்க்குத் தம்மைப்போல்வாரிருக்கத்தக்க மடியிலே முந்துற ஏறப்பெறுவதே என்ற அம்சம் புருஷார்த்தமாகத் தோற்றுமென்று ஸம்வாதந் தன்னை யருளிச்செய்கிறார் (தன்னுடையவித்யாதி).

(க) பெரியதிருமடல்

(இடாத்தி) ஏறிட்டு. (தம்மைப்பார்த்து) ஆழ்வார் தாமே தம்மைப்பார்த்து அருளிச்செய்தாரென்கை. ... ... (அ)

மூ.—குடிகுடியாகக் கூடி நின்றமரர்
குணங்களேபிதற்றி நின்றேத்த
அடியவர்க்கருளி யரவணைத்துயின்ற
வாழியானமர்ந்துறை கோயில்
கடியுடைக்கமல மடியிடைமலரக்
கரும்பொடு பெருஞ் செந்நெலசைய
வடிவுடையன்னம் பெடையொடுஞ்சேரும்
வயல் வெள்ளியங் குடியதுவே. (கூ)

பதம்.	உரை.
அமரர்	ப்ரஹ்மாதிதேவர்கள்
குடிகுடியாக	பார்யாபுத்ராதிஸஹிதராய்
கூடிநின்று	சேர்ந்திருந்து
குணங்களே	(தன்) கல்யாணகுணங்களையே
பிதற்றிநின்று	சொல்லிக்கொண்டு
ஏத்த	ஸ்தோத்ரம் பண்ணாநிற்க,
அடியவர்க்கு	தாஸபூதரான அவர்களுக்கு
அருளி	க்ருபைபண்ணிக்கொண்டு
அரவணை	அநந்தசயநத்தில்
துயின்ற	கண்வளர்ந்தருளினவனாய்
ஆழியான்	திருவாழி ஏந்தினவனான ஸர்வேஶ்வரன்
அமர்ந்து	பொருந்தி
உறை	நித்யவாஸம் பண்ணுகிற
கோயில்	திவ்யதேசமானது,

பதம்.	உரை.
கடியுடை	பரிமளத்தை யுடைத்தான
கமலம்	தாமரைப் பூவானது
அடியிடை	கரும்பி னுடையவும் செந்நெ லுடையவும் அடியிலே
மலர	விகஸியாநிற்க (அதினால்)
கரும்பொடு	கரும்போடேகூட
பெரும்	பெருத்த
செந்நெல்	செந்நெல் தாந்யமானது
அசைய	அசையாநிற்க,
வடிவுடை	ஸௌந்தரமான ஆகாரத்தை யுடைத்தான
அன்னம்	ஹம்ஸமானது
பெடையொடும்	தன் பேடையோடுகூட
சேரும்	அந்தத்தாமரைப்பூவில் வாஸம் பண்ணாநின்ற
வயல்	கழனிகளையுடைய

வெள்ளியங்குடியதுவே. (கூ)

வ்யா. — ஒன்பதாம்பாட்டு. (குடியித்யாதி) ப்ரஹ்மாதிகள், (க) "உமயா ஸார்த்தமீஶாந: - உமயாஸார்த்தமீசாநः" என்கிறபடியே - பார்யாபுத்ராதிகளோடே திரண்டு, "நாங்க ளாபங்நரானவன்றைக்கு

(க)

தேவரை யொழிய ஒரு புகலிடமுண்டோ" என்று அவன் குணங்களைச்சொல்லி நின்றேத்த, தன் திருவடிகளில் அஸாதாரணராயிருப்பார் பக்கலிலே க்ருபையைப்பண்ணி இவர்கள் கூக்குரல் கேட்கைக்கு அடுத்தணித்தாகத் திருப்பாற்கடல் சோயிலிலே கண்வளர்ந்தருளினவ னென்னுதல்; (ஆழியான்) அன்றிக்கே, ரக்ஷணத்துக்குப் பரிகரமான திருவாழியை யுடையவன் பொருந்தி வர்த்திக்கிற தேசமென்னுதல்.

(கடி) பரிமள ப்ரசுரமான தாமரையானது, கரும்புக்கும் செந்நெல்லுக்கு மடியிலே மலர, அத்தாலே கரும்பும் பெருஞ் செந்நெலு மசைய, அதின்மேலே. தர்சநீயமான வடிவை யுடைத்தான அன்னம் பேடையோடே வர்த்திக்கிறபோது, ஓங்கின ஸிம்ஹாஸநத்தின் மேலே சாமரமிரட்ட மஹிஷியோடேகூட யிருக்கும் ராஜபுத்ரனைப்போலே யிராநின்ற தாய்த்து. ... ... (௯)

அ௫.—ஒன்பதாம்பாட்டு. (குடியிசயாதி) * கோலவில்லி ராமன்றன்னை நாலாம்பாட்டில் "பாற்கடல் துயின்ற" என்றது பவித்திருந்தவர், இப்பாட்டில் - * அமரர்க் கிடர்செய்த வஸுரர்களை நிரஸித்தமையை யநுஸந்தித்தார்; அந்த ப்ரஸங்கத்திலே, அமர ரேத்தும்படியை ஸப்ரகாரமாக உபபாதித்துக்கொண்டு, திருப்பாற்கடலானை அநுபவிக்கிறரென்று ஸங்கதி.

"ஆழியான்" என்றதுக்கு - ஸமுத்ரத்தை யுடையவனென் றர்த்த மருளிச்செய்து, அர்த்தாந்தர மருளிச்செய்கிறார் (அன்றிக்கே யித்யாதி). இரட்ட) வீச. ... ... (௯)

மூ.—பண்டு முனேனமாகி யன்றொருகால்
பாரிடந்தெயிற்றினிற் கொண்டு
தெண்டிரை வருடப் பாற்கடல் துயின்ற
திருவெள்ளியங்குடியானை
வண்டறைசோலை மங்கையர்தலைவன்
மானவேற்கலியன் வாயொலிகள்
கொண்டிவைபாடும் தவமுடையார்கள்
ஆள்வரிக்குரைகடலுலகே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.
பண்டு	வராஹகல்பத்தின் ஆதியிலே
முன்	பூமியழிந்துபோவதற்கு முன்னே
ஏனமாகி	மஹா வராஹமாய்க்கொண்டு
அன்றுஒருகால்	ப்ரளயார்ணவங்கொள்க்கும் காலத்தில் (நான் உதவப்பெற்றிலேன் என்றதிருவுள்ளத்துடன்)
பார்	பூமியை
இடந்து	குத்தியெடுத்து
எயிற்றினில்	தந்தத்தின்மேலே
கொண்டு	வைத்துக்கொண்டு,
தெள்	நிர்மலமான
திரை	அலைகளானவை
வருட	(திருவடிகளை) ஸ்பர்சிக்கும்படி
பாற்கடல்	திருப்பாற்கடலிலே
துயின்ற	கண்வளர்ந்தருளின
திருவெள்ளியங் குடியானை	திருவெள்ளியங்குடி என்னும் திவ்யதேசத்தில் எழுந்தருளியிருக்கும் ஸர்வேச்வரன்விஷயமாக

பதம்.	உரை.
வண்டு	வண்டுகளானவை
அறை	ஒலியாநின்றன
சோலை	சோலைகளையுடைத்தான
மங்கையர்	திருமங்கையிலுள்ளவர்களுக்கு
தலைவன்	நிர்வாஹகராய்
மானம்	வைஷ்ணவாபிமானத்தைப் பிறப்பிக்கவல்ல
வேல்	வேலாயுதத்தையுடையரான
கலியன்	ஆழ்வாருடைய
வாயொலிகள்	ஸ்ரீஸூக்திகளான
இவை	இப்பத்துப் பாசுரத்தையும்
கொண்டு	ஆதரித்துக்கொண்டு
பாடும்	அப்யஸியாநின்ற
தவமுடையார்	பாக்யவான்கள்,
குரை	சப்தியாநின்ற
கடல்	ஸமுத்ரத்தாலே சூழப்பட்ட
இவ்வுலகு	இந்தலோகத்தை
ஆள்வர்	பரிபாலநம் பண்ணப்பெறுவர்கள். (கo)

வ்யா.—பத்தாம்பாட்டு. (பண்டு) வராஹகல்பத்தினுதியிலே. (முன்) அண்டபித்தியிலே யொட்டின பூமி உருமாய்வதற்கு முன்னே, மஹாவராஹமாய். (அன்று) அன்றைக்கு நான் உதவப்பெற்றிலேனென்னு மார்த்தத்திலே. பூமியை இடந்து, திருவெயிற்றிலே கொண்டு, அந்த ப்ரமபாறும்படியாக, கடல்திரைகளில் குறுந்திவலைகள் துடைகுத்தி உறக்கத் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளினவனைத் தத்திருவெள்ளியங்குடியிலே ஸந்நிஹிதனானவன்.

(வண்டித்யாதி) மதுபாந மத்தமான வண்டுகள் த்வநியாநின்றுள்ள சோலையையுடைத்தாய் திருமங்கையிலுள்ளார்க்கு நிர்வாஹகன். (மானவேல்) அளவுடைய வேலென்னுதல்; வைஷ்ணவாபிமானத்தை

http://acharya.org

ப்பண்ணிக்கொடுக்கும் வேலென்னுதல். (கொண்டித்யாதி) இவற்றை ஆதரித்துக்கொண்டு அப்யஸிக்கைக்கீடான பாக்யாதிகர், கடல்சூழ்ந்த பூமியைத் தாங்களிட்ட வழக்காம்படி ஆளப்பெறுவர். பரிந்து பாக வதசேஷமாக்கப் பெறுகையாலே, ஐஶ்வர்யத்தைத் தாம் புருஷார்த்த மாக நினைத்தார்; அத்தாலே-இது கற்றார்க்கு மப்படிகூடில் இதுதானே யமையும் என்றிருந்தபடியாலே ராஜ்யஶ்ரீயைப் பெறுவரென்கிறார். அன்றிக்கே, இதுதன்னை ஸர்வாதிகாரமாக்குகைக்காகச் சொல்லிற்றாக வுமாம். ஐஶ்வர்யகாமரில்லையாகில் இத்தை அதிகரியார்களே; அவர்க ளிழக்கவொண்ணாது என்னுமுகப்பாலே சொல்லுகிறார். ... (௰)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—பத்தாம்பாட்டு. (பண்டித்யாதி). "பண்டு" என்றும் "முன்" என்றும் புநருக்தமாகையாலே அர்த்தபேதம் காட்டுகிறார் (வராஹேத்யா தி). மீளவும் "அன்றொருகால்" என்றால் இதுக்குப்பொருளென்னென்ன; ஸர்வேஶ்வர ஸீடுபாட்டாலே அர்த்தோக்தி சொன்னானென்று விவக்ஷித் து, "உதவப்பெற்றிலேன்" என்று இவ்வளவும் கூட்டிக் கருத்தருளிச் செ ய்கிறார் (அன்றைக்கித்யாதி). (அன்றைக்கு) ப்ரளயம் வந்தவன்றைக்கு. ப்ரளயார்ணவமக்நையான பின்பு (க) * மானமிலாப் பன்றியாயிருந்த போது திருவுள்ள மீடுபட்டிருக்குமென்று திருவுள்ளமென்று கருத்து. (அ ர்த்தத்திலே) என்ற வநந்தரம், கிடக்கிறது என்று சேஷம்.

(சோலையையுடைத்தாய்) என்றவநந்தரம், இருக்கிற என்று சே ஷம். (௰)

ஜீயர் திருவடிகளே சரணம்.

நாலாம்பத்தில் பத்தாந்திருமொழி முடிந்தது.

நாலாம்பத்து ஸம்பூர்ணம்.

(க) நா-தி-௪௧-அ.

http://acharya.org